வெளியீடு 11-4-2001 Issued 11-4-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 27, 2000 – தொகுதி 99 – எண் 2

**Thursday the 27th April, 2000 – Volume 99 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai-600 009**

விலை ரூ. *3.00*] **[Price Rs. 3.00**

116
2002

## 27-4-2000

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | **வினாக்கள்-விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 283-323 |
| 2. | **சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| | கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கக் கோரிக்கை. | 323-332 |
| | டாக்டர் தே. குமாரதாஸ் | 324-325 |
| | *திரு. இரா. தாமரைக்கனி | 326 |
| | *திரு. லா. சந்தானம் | 326-327 |
| | திரு. சி. வேலாயுதன் | 327 |
| | திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன் | 327-328 |
| | *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 328-332 |
| | திரு. ச. அழகிரி | 332 |
| 3. | **கவன ஈர்ப்பு—** | |
| | கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு, ஏழுதேசம் பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் | 333-338 |
| 4. | **அறிக்கை அளித்தல்—** | |
| | பொது நிறுவனங்கள் குழு | 338-339 |

22334


| | பக்கங்கள் |
|---|---|
| 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | 339-448 |
| (அ) கோரிக்கை எண் 13 — நீதி நிருவாகம் | |
| (ஆ) கோரிக்கை எண் 14 — சிறைச்சாலைகள் | |
| (இ) கோரிக்கை எண் 37 - சுற்றுச்சூழல் | |
| *மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 354,363,373-377,390,391, 393,422-439 |
| *மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி | 371,413-422 |
| திரு. சி. ஞானசேகரன் | 355-366,412 |
| *திரு. ரா. சேதுநாதன் | 366-370 |
| *திரு. கே. சுப்பராயன் | 371-379 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 379-386,400 |
| திரு. மா. இராமச்சந்திரன் | 387-389 |
| *திரு. இரா. தாமரைக்கனி | 390-396 |
| *திரு. சி. அன்பரசன் | 397-399 |
| *திரு. அ.லெ. சுப்பிரமணியன் | 400-403 |
| *திரு. ஏ.வி.ஏ. நாசர் | 403-405 |
| திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் | 406-412 |
| 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— | 448 |


# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 15, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2031**

**2000 ஏப்ரல் 27, வியாழக்கிழமை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)

இறையென்று வைக்கப் படும்."

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றுப்படுவான்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 401, திரு. அ. மாரிமுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**401—**

### கண்ணாடித் தொழிற்சாலை

***8537—திரு. அ. மாரிமுத்து:**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வானூர் தொகுதியில் உள்ள அனுமந்தை, வட அகரம் போன்ற இடங்களில் வெள்ளை மணல் கிடைப்பதைக் கொண்டு கண்ணாடித் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

[2000 ஏப்ரல் 27

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இப்பகுதியில் சிலிகா மணல் சுரங்கம் அமைக்கும் திட்டம் இலாபகரமாக அமைய வாய்ப்பில்லை என்பதால் இப்பகுதியிலே கண்ணாடித் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

**திரு அ. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனது தொகுதியில் சிலிகா மணல் சுரங்கம் அமைக்கும் திட்டம் இலாபகரமாக அமைய வாய்ப்பு இல்லை என்பதால் அப்பகுதியில் கண்ணாடித் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை என்று கூறியுள்ளார்கள். அப்பகுதி மக்களுடைய நீண்ட நாளைய கோரிக்கையான இதனை தொடர்ந்து பலமுறை அரசுக்கு வலியுறுத்தி வருவதாலும் பின்தங்கிய தொகுதியாக இதுவரை தொழிற்சாலைகள் உருவாகாத பகுதியாக அது இருப்பதாலும் இலாப நட்டம் கருதாமல் மக்களின் நன்மைக்காகப் பல பாலங்கள், பல சாலைகளைச் சீரமைத்து மக்களின் துன்பத்தைப் போக்கி வருகின்ற நமது அரசு, இந்தத் தொழிற்சாலையை இலாப நோக்கம் கருதாமல் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அங்கு உருவாக்கிட மீண்டும் பரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, அந்தப் பகுதியிலே கிடைக்கின்ற வெள்ளை மணலும் குறைவானது. அதைத் தரப்படுத்துவதற்காகச் சுத்திகரிப்புச் செய்கின்ற செலவும் அதிகமாகும்; சிரமமும் அதிகமாகும். எனவே எந்த வகையிலும் அந்தப் பகுதியிலே கண்ணாடித் தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 402 திரு. கு. மனோகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**402—**

## மகளிர் கல்லூரி

***22458—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 27]

தருமபுரியில் மகளிர் கல்லூரி ஒன்றைப் புதிதாகத் தொடங்கிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒரு சிறு திருத்தத்தோடு இந்த விடையைத் தருகிறேன். அரசு ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட கொள்கை அடிப்படையில் தருமபுரியில் அரசு மகளிர் கல்லூரி தொடங்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கிய மாவட்டம். தருமபுரி மாவட்டத்தில் இருக்கும் கல்லூரியில் பெண்களுக்கு 30 சதவீதம் இட ஒதுக்கீடு இப்போது அளிக்கப்பட்டு வருகிறது. அந்த இட ஒதுக்கீட்டுக்காக ஒரு வருடத்திற்கு மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் விண்ணப்பிக்கிறார்கள். அந்தக் கல்லூரியில் சுமார் 170 இடங்கள்தான் மகளிருக்குக் கிடைக்கின்றன. மீதி 2800-க்கு மேற்பட்ட மாணவிகளுக்கு இடம் கிடைக்காமல் மேல் படிப்பைத் தொடர முடியாத ஓர் அவல நிலை ஏற்படுகிறது. தருமபுரியிலுள்ள பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள அந்த ஏழை மாணவிகளின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒன்றரைக் கோடி ரூபாய் கூட அளிக்கத் தயாராக இருக்கிறோம். அதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பெற்றுக்கொண்டு அங்கே கல்லூரியைக் கொடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற ஒரு முயற்சி கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்னாலே தொடங்கப்பட்டு, இரண்டு இடங்களிலே கல்லூரிகள் தொடங்கினார்கள் அவர்களே அந்த ஒரு கோடி ரூபாயிலே 75 இலட்சம் ரூபாய் அளவுக்குத்தான் வழங்கினார்கள். ஒரு கல்லூரியை நடத்துவதற்கு ஓர் ஆண்டுக்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் நடைமுறைச் செலவு ஏற்படுகின்ற நிலையில் அதனுடைய வளர்ச்சிப் பணிகள் தடைப்பட்டிருக்கின்றன. எனவே வளர்ச்சிக்கான வசதிகளைப் பெறுவதற்கான வாய்ப்புப் பெற வேண்டுமானால்—நான் சொல்வது தவறாக இருக்குமானால் அவை மன்னிக்க வேண்டும்— யாராவது பெரிய செல்வந்தர்கள் தங்களுடைய பெயரோடு அங்கே கல்லூரியை அமைக்க

10 கோடி ரூபாய் வழங்குவதற்கு முன்வந்தால், அதுபற்றி ஆலோசிக்கலாம். என்னிடத்திலே திரு. மனோகரன் அவர்கள் கேள்வி கேட்டதைவிட அப்படிப்பட்டவர்களை அந்த மாவட்டத்திலே அவர் தேடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 403, திரு. பி. இராசமாணிக்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**403—**

### மேல்நிலைப் பள்ளி

***25539*—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு தொகுதி, திருமங்கலக்கோட்டை கிழக்கில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1999-2000 ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம், கீழையூர், திருமங்கலக்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மேம்படுத்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

முற்பகல் 9-35

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலக்கோட்டை கீழையூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தந்தமைக்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த நான்கு ஆண்டுகளில் மூன்று உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தியதற்காகத் தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் நன்றி தெரிவித்து காலம் எல்லாம் நன்றியோடு இருப்போம் என்பதை உணர்த்திக் கொள்கிறேன். பேரையூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆண்டு



அதையும் மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெரிவித்த நன்றியைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்குப் பின்னர் அதுபற்றிக் கருதப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 404, திரு. இரா. தாமரைக்கனி, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**404—**

### நகராட்சிகளின் வருமானம்

***4700*—திரு. இரா. தாமரைக்கனி:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வருமானம் இல்லாத நகராட்சிகளின் வருமானத்தைப் பெருக்க அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இம்மாநிலத்தில் வருமானம் இல்லாத நகராட்சிகள் ஏதும் இல்லை. வருமானம் குறைவாகவும் தேவைகள் அதிகமாகவும் உள்ள நகராட்சிகள் பல உள்ளன. மாநில நிதிக் குழு மற்றும் மத்திய பத்தாவது நிதிக் குழு பரிந்துரைகளின் அடிப்படையிலும் அடிப்படை வசதி மேம்பாட்டிற்காக அனைத்து நகராட்சிகளுக்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இத்தொகை வழங்கும்போது பற்றாக்குறை உள்ள நகராட்சிகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மேலும் வருமானம் தரத்தக்க பல்வேறு வகையான திட்டங்களைச் செயல்படுத்த நகராட்சிகளுக்குக் கடனுதவியும் செய்யப்படுகிறது. உதாரணமாக நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர வளர்ச்சித் திட்டம் போன்ற திட்டங்களில் கடைகள், சந்தைகள், பேருந்து நிலையம் கட்ட நிதியுதவி தரப்படுகிறது. நகராட்சிகளின் வருவாயைப்

பெருக்கும்பொருட்டு சொத்து வரி திருத்தம் செய்து 1-10-1998 முதல் திருத்திய வரி விதிப்பு மதிப்பீடும் செய்யப்படுகின்றது. தொழில் வரியில் ஏற்பட்ட, நிர்வாகத்தில் இருந்த, சிக்கல்களை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்த்துவைத்து இவ்வினத்தின் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கின்ற வழிவகைகளும் செய்யப்பட்டுள்ளன.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நகராட்சிகளில் 90 சதவீதத்திற்கு மேல் வரி வசூல் செய்யும் ஊழியர்களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் வழங்காத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்களை முழுமையாக வழங்காத நிலை ஏற்பட்டுள்ளது. அரசினால் வழங்கப்படும் Development funds மூன்று மாதத்திற்கு ஒருமுறை வழங்க வேண்டிய நிதி முழுமையாக நகராட்சிக்கு வழங்க முடியவில்லை. காரணம் நகராட்சி செலுத்த வேண்டிய கடன்களுக்கு ஈடு செய்யப்படுகிறது. ஆகவே இதனால் நகராட்சிக்கு நிதிநெருக்கடி ஏற்படுகிறது. எனவே அரசால் வழங்கப்படும் .... (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்து விட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. வினாவாகக் கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** விரிவாகச் சொன்னால்தான் அது கேள்வி பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேசுகிறபோது இடையிலே பேசக்கூடாது. இவ்வளவு மூத்த உறுப்பினர் துணை வினாவைப் படிக்கக்கூடாது. கீழே வைத்துவிட்டுப் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** குறிப்பை வைத்துக்கொண்டு படிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறிப்புதான் என்கிறீர்கள். ஆனால் பூராவையும் அப்படியே படிக்கிறீர்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆகவே இதனால் நகராட்சிக்கு நிதிநெருக்கடி ஏற்படுகிறது. எனவே அரசால் வழங்கப்படும். Development Funds-ஐ நலிவுற்ற நகராட்சிகளுக்கு அதிகப்படுத்தி, நகராட்சிக்குப் போதிய நிதி வசதி செய்யப்பெறும் வரை இதர காரணங்களுக்காக ஈடு செய்யப்படாமல், முழுமையாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு அரசின் மூலம் ஒதுக்கப்படுகிற நிதியையும் அதேபோல நகராட்சிகளே வருவாயைத் தேடிச் சேமித்து வைத்திருக்கிற நிதியையும் முறையாக எந்தெந்தத் திட்டத்திற்காக நிதிநிலை அறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்களோ, அதற்கு மாறுபடாமல் முறைப்படி செலவழிப்பார்களேயானால், அதையும் தாண்டி அந்த நகராட்சிக்கு அவர் கூறுவதைப்போல பற்றாக்குறைகள் ஏற்படுமானால், அப்போது அரசு அதில் தலையிட்டுப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சோளபுகாதேவி தொகுதியிலே ஏழு பேரூராட்சி மன்றங்கள் இருக்கின்றன. அதிலே மேலச்செவல், கோபாலசமுத்திரம், முக்கூடல், பத்தமடை, சேரன்மகாதேவி ஆகிய பஞ்சாயத்துக்களுக்கு சுத்தமாக வருமானமே கிடையாது. அடிப்படை வசதியான குடிதண்ணீரைக் கூட விஸ்தரிக்கின்ற பகுதிகளுக்குக் கொடுக்க முடியாத நிலை உள்ளது. அதனாலே சிறப்பு நிதியாக ஏதாவது கூடுதலாக இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கி, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நகராட்சியைப் பற்றியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளினுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னால் திருமண மண்டபங்களைக் கட்டுவது என்ற ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அது முழுமை பெறாமல் கைவிடப்பட்டது. குறிப்பாக சில நகராட்சிகளின் எல்லை என்பது பஞ்சாயத்துடன் ஒட்டியிருக்கிறது. அந்த பஞ்சாயத்தோடு ஒட்டியிருக்கின்ற இடத்திலே தியேட்டர் இருக்கிறது. ஆனால் அதனுடைய entrance நகராட்சிதான். அவை வரும் நகராட்சி வழியாகத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே அதனுடைய வருமானத்தில் பாதியாகிலும் நகராட்சிக்குத் தருவதன் மூலமாக வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும். அந்தவகையிலே குழித்துறை நகராட்சிக்கு அருகில் இருக்கின்ற பஞ்சாயத்தினுடைய சில பகுதிகளை விஸ்தரித்துக் கொள்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

[2000 ஏப்ரல் 27

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற நகராட்சிகள் சட்டத் திருத்தத்தில் அப்படி வகை செய்வதற்கு வழியில்லை. தேவைப்பட்டால் அவற்றையெல்லாம் பரிசீலித்து அப்படிச் செய்வது நலம் எனக் கருதினால் சட்டத் திருத்தத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அணுக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசிபுரம் நகராட்சியைப் பொறுத்தவரையில் அங்கே ஒரு bypass சாலை அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடம் பலமுறை முறையிட்டிருக்கிறேன். அந்த bypass சாலையை அமைப்பதற்கு நிதி உதவி வேண்டும். அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக அரசு நிதியைப் பயன்படுத்த முடியாது என்ற நிலை இருந்தாலும் நானே நேரில் வந்து அந்த நிலத்தைக் கையகப்படுத்தி எந்தவிதத்திலே நடவடிக்கை எடுக்க ஆவன செய்ய முடியுமோ அவற்றையெல்லாம் செய்வேன் என்று இரண்டு மூன்று வருடங்களாகச் சொல்லிக்கொண்டே இருக்கின்றார் அமைச்சர். அரசும் அதற்கு நிதி ஒதுக்கவில்லை. மிக நெரிசல் நிறைந்த பகுதி ராசிபுரம் நகராட்சி. ஆகவே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி ராசிபுரம் நகராட்சியில் bypass road அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியை ஒட்டியதாக இல்லாவிட்டாலும் திரு. சுந்தரம் கேட்பதற்காகச் சொல்கிறேன். அவர் என்னிடத்திலே அணுகிக் கேட்டது உண்மை. அவர் கேட்டதை மட்டும் சொல்கிறார். நான் சொன்னதை இங்கே நினைவுபடுத்தவில்லை. கூடுமானவரையில் நிதியாதாரம் திரட்டுவது ஒருபுறம் இருந்தாலும் அங்கே மாற்றுவழி bypass அமைப்பதற்கான நிலம் தனியார் நிலமாக இருக்கிறது. அரசாங்கம் நிர்ணயிக்கிற விலைக்கு அவர்கள் கொடுக்கிறபோது அவர்களிடத்தில் பெற்றுக்கொண்டு அதைச் செய்வற்குத் தயாராக இருக்கிறோம். அவர்களிடத்தில் acceptance letter வாங்கித் தருவதாக என்னிடத்திலே சொன்னார். இதுவரை அவர் முயற்சிக்கவில்லை; அதைச் செய்து கொடுக்கவும் இல்லை. அப்படிச் செய்து கொடுத்தால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 ஏப்ரல் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பக்கத்தில் உள்ள பஞ்சாயத்துகளையெல்லாம் சேர்த்து நாகர்கோயில் நகராட்சியை மாநகராட்சியாக்குவதற்கு அரசு பரிசீலித்து வருகிறது. அது எந்த அளவில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவது எனக்குத் தெரியவில்லை. மாநகராட்சியாகத் தகுதி உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக எனக்கு ஒன்றும் தகவல் இல்லை. அது தேவையானதும் இல்லை. அது முடியவும் முடியாது. அதற்கான தகுதியும் அதற்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுடைய வருமானத்தைப் பெருக்குவதற்குப் பல்வேறு திட்டங்களை அளித்துவரக்கூடிய நம்முடைய அரசு சந்தை போன்ற இடங்களை ஏலம் விடுகின்றபோது, முன்பு ஏலம் எடுத்தவர்களே நீதிமன்றத்தில் தடையாணை பெற்று ஏலம் நடைபெறவிடாமல் செய்துவிடுகிறார்கள். அதன் காரணமாக நகராட்சிக்கு வரக்கூடிய பெரும் தொகை வராமல் இழப்பு ஏற்படுகிறது. இதுசம்பந்தமாக அரசு சட்டத் திருத்தம் ஏதும் கொண்டுவந்து — இப்போது பிராந்திக் கடையில் ஏலம் விடுகின்றபோதே ஒவ்வொரு ஆண்டுக்கும் அந்த முன் பணத்தை முன்பே செலுத்துவது போல் இருக்கின்ற வகையிலே ஒரு திட்டத்தை அறிவித்து — அதன் மூலம் வருமானத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும். அரசு அதைப் பரிசீலிக்குமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற சட்டத்தின் அடிப்படையிலே பல சந்தைகளை ஏலம் எடுத்த பல நிறுவனங்கள் உயர்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருந்தும் அவை எல்லாம் ரத்து செய்யப்பட்டு இருக்கின்றன. அதுபோலவே இப்படி ஏதாவது இருந்தால் அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் என்னிடத்திலே தெரிவித்தால் அரசு வழக்கறிஞரிடத்தில் தெரிவித்து தனிக் கவனம் செலுத்தி அதன் மீது விரைவாக நடவடிக்கை எடுத்து அப்படிப்பட்ட தடையாணையை நிவர்த்தி செய்கின்ற முயற்சியில் அரசு ஈடுபடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். மூக்கையா.

**திரு. எல். மூக்கையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் நகராட்சியில் இருக்கக்கூடிய பேருந்து நிலையம் மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாகக் கிடக்கின்றது. பெரியகுளம் நகராட்சி, வருமானம் இல்லாத ஒரு நகராட்சி. எனவே அரசு அந்தப் பேரூராட்சியின் பணிகளைச் செப்பனிட, சிமெண்ட் concrete தளம் அமைத்துத் தர நிதியுதவி அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும்போதே நான் குறிப்பிட்டிருக்கிறேன்; அரசு வருமானத்தைப் பெருக்குவதற்கு சந்தைகள், பேருந்து நிலையங்கள், வணிக வளாகங்கள் இப்படிப்பட்டவற்றைப் புதுப்பிப்பதற்கோ அல்லது சீர் செய்வதற்கோ அரசு கடன் பெற்றுத் தருவதற்குத் தயாராக இருக்கிறது. அவையெல்லாம் வருமானத்திற்குரிய இனங்களாக இருப்பதால் நிச்சயமாக அரசாங்கம் அதிலே முயற்சிக்கும். அப்படிப்பட்ட நிலையை நகராட்சியின் மூலம் அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்.

**திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை நகராட்சிக்குச் சொந்தமான இடம் இல்லாததனால் அங்கு வரும் பேருந்துகள் எல்லாம் தற்போது நகராப் பூங்காவிலே நிறுத்தப்பட்டு இருக்கின்றன. அதற்கு இடம் கிடைக்கவில்லை. ஆனால், ஒரு இடத்தை அமைச்சர் அவர்களும் நேரிலே பார்த்தார்கள். தர்மபுரம் ஆதீனத்திற்குச் சொந்தமான அந்த நிலத்தை வாங்கிக் கொடுக்கும்படியாகக் கேட்டதற்கு, தர்மபுரம் ஆதீனம் விலையை அதிகமாகச் சொல்கிறார்கள். அந்த விலைக்கு வாங்குவதற்கு நகராட்சியிலே நிதிநிலைமை சரியாக இல்லை. ஆகவே, சர்க்கார் முன்வந்து அதற்கான உதவியைச் செய்து அந்த இடத்தை வாங்கி பேருந்துகளை அங்கே நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நகராட்சி மன்றம் பேருந்து நிறுத்துகின்ற நிலையம் கட்டுவதற்குத் தயாராக இருந்தால் மாண்புமிகு உறுப்பினருக்கும் அது





விரைவாக நடத்தப்பட வேண்டுமென்ற ஆசை இருந்தால் இத்தனை நாளில் பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும். ஒரு முறைக்கு மூன்று முறை மாயவரத்திற்கு நான் சென்று நகராட்சி மன்றக் கூட்டத்தையும் கூட்டச் சொல்லி அதிலேயும் 3 இடங்களையும் வைத்துப் பேசியிருக்கிறார்கள். நிச்சயமாக அவர்கள் சாதாரணமான விலைக்குக் கொடுத்தால்கூட அந்த நிலத்தை வாங்குவதற்கான நிதி ஆதாரம் நம்மிடத்திலே இல்லை. எனவே அதற்குத் தகுதியான நிலம் ஒன்று நம்மிடத்திலேயே இருக்கிறது. எந்த வகையிலும் சங்கடமும் அதற்கு இல்லை. அதைத் தேர்வு செய்து கொள்ளலாம். நிச்சயமாக அதற்கு அரசும் உதவி செய்யும். அதையும் இந்த ஆண்டிலேயே எடுத்துக் கொள்வதற்கு நான் முயற்சிக்கிறேன் என்று சொன்னேன். நகராட்சி மன்றத்தின் தலைவரும் சட்டமன்ற உறுப்பினரும் என்ன காரணமோ தெரியவில்லை, முயற்சி எடுக்கவில்லை. பேருந்து நிலையம் கட்ட வேண்டுமென்று நான் சட்ட மன்றத்தில் கேட்டேன், அரசு செய்து கொடுக்கவில்லை என்பதற்காக, இதைப் பதிவு செய்கிறாரோ என்னமோ எனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக மனமிருந்தால் அதை இந்த ஆண்டு கூடத் தொடங்கலாம். அதைத்தவிர வேறு வகையில் அந்த நகராட்சியைப் பொறுத்தவரையிலே செய்வதற்கு வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இறுதியாக திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பணியாளர்களுக்கு கருவூலம் மூலம் சம்பளம் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா? அதுமட்டுமல்லாமல் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியத் திட்டத்திற்குத் தேவையான நிதியையும் Devolution Fund மூலம் முழுவதும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 405, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 27

**405—**

**குடிநீர் வசதி**

**18653*—**திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அனகாபுத்தூர், பம்மல் பேரூராட்சிகள் மற்றும் கவுல்பஜார் ஊராட்சி மக்களின் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்க செம்பரம்பாக்கம் பகுதியில் இருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், இன்றைய நிலை என்ன?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆலந்தூர் நகராட்சி, பம்மல், அனகாபுத்தூர், உள்ளகரம், புழுதிவாக்கம், இராமாவரம், மீனம்பாக்கம், பரங்கிமலை, கவுல்பஜார் ஆகிய பகுதிகளுக்கு செம்பரம்பாக்கம் நீர்த் தேக்கத்திலிருந்து நாள் ஒன்றுக்கு 27 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுக்க பொதுப் பணித் துறையிடம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அனுமதி கோரியிருந்தது. பின்னர் அரசு, 6-2-1999-ல் இட்ட அரசாணையின்படி 27-5-1999 அன்று ஆலந்தூர் நகராட்சி, அனகாபுத்தூர், பம்மல், உள்ளகரம், புழுதிவாக்கம், போரூர், வளசரவாக்கம், மீனம்பாக்கம், மதுரவாயல், பேரூராட்சிகள்; பொழிச்சலூர், இராமாவரம், கவுல்பஜார் ஊராட்சிகள், மற்றும் பரங்கிமலை contonment பகுதிகளுக்கு சென்னைப் பெருநகரக் குடிநீர்த் திட்டத்தை நீட்டித்துக் கொடுப்பதற்கான திட்டம் குறித்து அணுகி, அவர்களிடத்தில் கேட்டு, 26 கோடியே, 54 இலட்சம் ரூபாய்க்கு சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல மற்றும் கழிவு நீரகற்று வாரியத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. சென்னை நகரின் குடிநீர் ஆதாரமான ஏரிகளில் நீரின் அளவு அதிகரித்தவுடன் திட்டத்தின் மேற்படி பகுதிகளுக்கு இத்திட்டத்தின் மூலம் தண்ணீர் வழங்கப்படும். 1998 ஆம் ஆண்டு இந்தக் கேள்வி கேட்கப்பட்ட காரணத்தினாலே இன்றைக்குப் பதிலை இந்த மாதிரி அளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அநேகமாக முழு



2000 ஏப்ரல் 27]

வேலைகளும் முடிந்து விட்டன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல முழு வேலைகளும் முடிந்துவிட்டன என்பது உண்மைதான். ஆனால் தற்சமயம் சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் குடிநீர் அளிப்பதற்கு வாய்ப்பில்லாத காரணங்களினால் அதுவரையில், வழங்கப்படுகிற பாலாற்றுத் தண்ணீரை, 9 இலட்சம் லிட்டரிலிருந்து ஒரு நாளைக்குக் குறைந்தபட்சம், 15 இலட்சம் லிட்டராகவாவது உயர்த்தி வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள் மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிற சில இடங்களில் லாரிகள் மூலமும் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அவர் சொன்னதனடிப்படையில் இடைக்கால நிவாரணமாக ஒரு பணியைச் செய்யலாம் என்று எடுத்து அதற்கு ஆய்வும் நடத்தப்பட்டது. அந்த ஆய்வில் எதிர்பார்த்த அளவுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. எனவேதான் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல இப்போதிருக்கிற நீர் ஆதாரத்தைக் கொஞ்சம் பெருக்கி இன்னும், கொஞ்சம் உயர்த்திக் கொடுக்கலாமா என்ற அந்த முயற்சியில் இரண்டு நாட்களாக அதைப் பரிசீலிக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 406, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**406—**

**பாசன மேன்மைத் திட்டம்**

**6241*—**திரு. பி. வெங்கடசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் பெரிய மற்றும் நடுத்தர அணைப் பாசனப் பகுதியில், பாசனப் பகுதி மேன்மைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசிடம் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை

**THIRU B. VENKATASAMY:** Hon'ble Speaker, Sir, Dharmapuri is a drought-prone area. There is only poor rainfall. We are storing water in the K.R.P. dam and P.W.D. tanks. The entire water is going waste because there are no proper channels. I came to understand that the Government of India is giving a lot of money for modernisation of tanks by constructing cement channels and other things. May I know from the Hon. Minister whether such a scheme will be implemented to save the water to irrigate more areas.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் தருமபுரி மாவட்டத்தில் பெரிய மற்றும் நடுத்தர அணைப் பாசனப் பகுதியில் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை என்பதைத்தான் மூலக் கேள்விக்குப் பதிலாக இல்லை என்று நான் சொன்னேன். ஆனால் பொதுப் பணித் துறையில் சில பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது வேளாண்மைப் பொறியியல் துறையால் மேற்கொள்ளப்படவில்லை. 1999 ஆம் ஆண்டு உலக வங்கி நிதி உதவியுடன் பொதுப் பணித் துறை, நீர்வள ஆதாரங்களை மேம்படுத்தி நீர்த் தேக்கத்தில் புனரமைப்புப் பணிகள் மற்றும் நவீனப்படுத்தும் பணிகளை தருமபுரி மாவட்டத்தில் 7 திட்டங்களின் மூலம் செயல்படுத்தி வருகிறது. பாப்பிரெட்டிப்பட்டி வட்டத்தில் உள்ள வாணியார் நீர்த் தேக்கத்தில் புனரமைப்புப் பணிகள் மற்றும் நவீனப்படுத்துதல் ரூ. 158.81 இலட்சத்திலும் கிருஷ்ணகிரி வட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி நீர்த் தேக்கத்தில் புனரமைப்புப் பணிகள் மற்றும் நவீனப்படுத்துதல் ரூ.249.00 இலட்சத்திலும், அரூர் வட்டத்தில் உள்ள ஈச்சம்பாடி அணைக்கட்டு புனரமைப்புப் பணிகள் மற்றும் நவீனப்படுத்துதல் ரூ. 66.00 இலட்சத்திலும் ஊத்தங்கரை வட்டத்தில் பாம்பாறு நீர்த் தேக்கத்தில் புனரமைப்புப் பணிகள் மற்றும் நவீனப்படுத்துதல் ரூ.90.30 இலட்சத்திலும் பாலக்கோடு வட்டத்தில் உள்ள தும்பலஹள்ளி நீர்த் தேக்கம் மற்றும் மாரண்டஹள்ளி அணைக்கட்டு புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தும் பணிகள் ரூ.157.37 இலட்சத்திலும்



போச்சம்பள்ளி வட்டத்தில் உள்ள பரூர் ஏரி மற்றும் நெடுங்கல் அணைக்கட்டு புனரமைப்புப் பணிகள் மற்றும் நவீனப்படுத்துதல் ரூ.271.00 இலட்சத்திலும் ஓசூர் வட்டத்தில் உள்ள சூளகிரி சின்னாறு நீர்த் தேக்கத்தில் புனரமைப்புப் பணிகள் மற்றும் நவீனப்படுத்துதல் ரூ. 84.00 இலட்சத்திலும், மொத்தம் 1,076.48 இலட்சத்தில் பொதுப் பணித் துறை மூலமாகத்தான் இந்தப் புனரமைப்புப் பணிகள், சீரமைப்புப் பணிகள் நடைபெறுகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 407, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**407—**

**மாடு வாங்க மானியம்**

*18309 –**திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள விவசாயிகளுக்கு உழவு மாடுகள் வாங்க மானியம் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள விவசாயிகளுக்கு உழவு மாடுகள் வாங்க மானியம் அளிப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது வேளாண்மைத் துறையால் செயல்படுத்தப்படவில்லை.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழகத்திலே விவசாயிகளாக இருக்கின்ற, வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு, முன்பு இருந்த அரசு, மானியத்திலுடைய அடிப்படையிலே உழவு மாடுகள் வாங்க, டயர் வண்டி மாடுகள் எல்லாம் வாங்க நிதி கொடுத்திருக்கின்றார்கள். தற்போது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியம் அளிப்பதற்கான திட்டம் இல்லை என்று சொல்கின்றார்கள். 4 ஆண்டு காலத்திலே, தமிழகத்திலே எவ்வளவு பேருக்குக் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. அல்லது 4 ஆண்டு காலமாகவே கொடுக்கப்படவில்லையா என்பதை நான் உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன் மேலும் தமிழகத்திலே இருக்கின்ற ஏழை விவசாயிகளுக்கு. விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய அந்தக் காளை

[2000 ஏப்ரல் 27

மாடுகளை மானியத்திலே வாங்கிக் கொடுப்பதற்கு மீண்டும் முன் வருவார்களா என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ முன்பு இருந்த அரசாங்கத்தில் மானிய விலையில் உழவு மாடுகள் எல்லாம் வாங்கிக் கொடுத்ததாக இங்கே சொன்னார்கள். அப்படி ஒரு திட்டம் இருந்ததாக நான் அறிந்தவரை இல்லை. ஆனால் கூட்டுறவு வங்கிகளிலே உழவு மாடுகள் வாங்குவதற்கு, கறவை மாடுகள் வாங்குவதற்கு நீண்ட காலக் கடன் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. (குறுக்கீடு) I.R.D.P. loan அது மத்திய சர்க்கார் scheme; 50 சதவிகித மானியத்திலே மத்திய அரசாங்கம் ஆதிதிராவிடர்களுக்கு வழங்கக்கூடிய ஒரு திட்டம் அது. 1999-2000 ஆண்டிற்கு முன்பும் இருந்தது; 664 இலட்சம் ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கினார்கள். நிதியை மாநில அரசாங்கம் கேட்டுப் பெற முயற்சி செய்தபோது அவர்கள் 4 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு தந்திருக்கிறார்கள். 2000-2001-லே இந்த 4 கோடி ரூபாயில் ஆதிதிராவிடர்களுக்குத்தான் 50 சதவிகித மானியத்திலே வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல முன்பு இல்லை.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை உழவர்களுக்கு உழவு மாடுகள் கொடுப்பதைவிட— தற்போது மாடுகள் வைத்து உழவு செய்வது சற்று அரிதாக இருக்கிறது — தற்போதைய காலத்திற்கேற்றவாறு நவீனமயமாக்கப்பட்ட power tiller-களை விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30 h.p. உள்ள power tractor-கள் வாங்கி நாம் தருகிறோம். அதற்கு 30,000 ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல விவசாயிகளுக்கு என்று விவசாயத் துறையின் மூலம் மாடுகள்



2000 ஏப்ரல் 27]

வழங்கப்படவில்லை. ஆனால் கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலமாகவும் அரிசன நலத் துறையின் மூலமாகவும் விவசாயிகளுக்கு மாடுகள் வழங்கப்பட்டன. ஆனால் தற்சமயம் கள்ளர் சீரமைப்புத் துறையின் மூலம் வழங்கப்பட்ட அந்த உழவு மாடுகள் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அது மீண்டும் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட துறை அமைச்சருக்கு இந்தக் கேள்வியைப் போடலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1966-வது ஆண்டுக்கு முன்பு ஆண்டுதோறும் ஒவ்வொரு தொகுதியிலும் 250 ஜோடி மாடுகள் இனாமாக ஏழை மக்களுக்கு காங்கிரஸ் ஆட்சியிலே கொடுக்கப்பட்டது. அது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். (குறுக்கீடு) உங்களுக்குத் தெரியவில்லை என்று சொல்ல வேண்டாம். தெரியும், ஏனென்றால் அப்போது அதிகப்படியான மனுக்கள் வந்த காரணத்தினாலே குலுக்கல் சீட்டுப் போட்டுக்கூட எடுத்துக் கொடுத்திருக்கிறோம். நானும் அன்றைக்கு அப்படிக கொடுத்திருக்கிறேன். அந்தத் திட்டத்தை அரிசனங்களுக்கு மட்டும் என்று நான் சொல்லவில்லை. யார் யார் ஏழைகளாக இருக்கிறார்களோ அந்த ஏழைகளுக்கெல்லாம் இந்த உழவு மாடுகள் இனாமாக வாங்கிக் கொடுப்பதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அம்மையார் சொல்வது போல எனக்குத் தெரியாது. ஒரு வேளை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே அப்போது தேர்தலுக்கு காங்கிரசுக்குக் காளை மாட்டுச் சின்னம்; அதன் காரணமாக வாங்கிக் கொடுத்திருக்கலாம், தேர்தலுக்காக. (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பெருமக்களுக்கு power tiller ஆண்டுதோறும் ரூ.30,000 மானியத்திலே வழங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் ஒன்றியத்திற்கு ஒரு power tiller மட்டுமே தற்போது வழங்கப்படுகிறது.

அந்த எண்ணிக்கையை உயர்த்தி வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் ஒரு மாநிலத்திற்கு இவ்வளவு என்று tractor, power tiller ஆகியவற்றை ஒதுக்கீடு செய்கிறது. அதை மாவட்ட அளவிலே நாம் பிரித்துக் கொண்டு ஒரு மாவட்டத்திற்கு இவ்வளவு என்று வழங்க வேண்டும். அதற்கு ரூ.30,000 மானியமாக நாம் ஒதுக்கீடு செய்கிறோம். அதைத்தான் வேளாண்மைத் துறை மூலம் வழங்குகின்றோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. மோகன் கந்தசாமி.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஏராளமான படித்த இளைஞர்கள் வேலையில்லாத காரணத்தினால் மாடுகளை வாங்கி வளர்ப்பதற்கு மிகவும் ஆவலாக இருக்கிறார்கள். நான் இதுகுறித்து சென்ற தொடரிலேயே சொன்னேன். அவர்கள் அரசுக்குச் சொந்தமான வங்கிகளில் சென்று பணம் கேட்டாலும் கொடுப்பதில்லை. கூட்டுறவு வங்கிகளிலும் கொடுப்பதற்குத் தயங்குகிறார்கள். வங்கிகளிலெல்லாம் security கேட்கிறார்கள். Security கொடுக்கிறேன் என்று சொன்னாலும்கூட அவர்கள் கொடுப்பதில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுத்து அதுபோன்று படித்த பட்டதாரிகளுக்கு மாட்டுப் பண்ணை வைப்பதற்கு உதவுவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்கள் பண்ணை வைப்பதற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் உதவி தேவை என்று கேட்டால் நிறைய தருவதாகத்தான் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. கொடுக்கவில்லை என்று சொல்வது அவ்வளவு உண்மையாக எனக்குத் தெரியவில்லை. முறைப்படி அவர்கள் அந்த நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளுக்கு விண்ணப்பித்து, பால் பண்ணைக்கு அல்லது ஆடு, மாடு வளர்ப்பதற்காகக் கடன் உதவிகளைப் பெறலாம். கூட்டுறவு வங்கிகளிலே உழவு மாடுகளுக்கு இப்பொழுதும் நீண்ட காலக் கடன் வழங்குகிறார்கள். அதிலே எந்தவிதமான தடையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 408, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.



223311

408—

தனி நீதிமன்றம்

*26572—திரு. பெ.சு. திருவேங்கடம்:

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் வனத் துறை வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்படும் சந்தன மர வழக்குகள் அனைத்தும் திருப்பத்தூர் சிறப்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு, முடிவு செய்யப்படுவதால், வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் வன வழக்குகளை விசாரிக்கத் தனி நீதிமன்றங்கள் அமைக்கும் தேவை இப்போது எழவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான வழக்குகள் பல ஆண்டுகளாக திருப்பத்தூர் நீதிமன்றத்தில், அதனுடைய வேலைப் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே விசாரிக்கப்படாமல் இருக்கின்றன. அதனால் பிடிக்கப்படுகின்ற லாரிகள், மினி வேன்கள், பலவகைப்பட்ட கார்கள் இவையெல்லாம்கூட அந்தந்தக் கிடங்குகளிலேயே பல ஆண்டுகளாகக் கிடக்கின்றன. இன்னொன்று, அவர்களில் யார் முதலிலே கைது செய்யப்படுகிறார்களோ, அவர்களேகூட ஜாமினில் வந்து பிறகு அந்தத் தொழிலைச் செய்கின்ற ஒரு நிலை ஏற்பட்டு விடுகிறது. அதனுடைய அத்தியாவசியத்தைக் கருதி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அதிலும் குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டம் போளூர் பகுதியிலேயாவது ஒரு தனி நீதிமன்றத்தை ஆரம்பித்து, அந்தத் தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளை முடிக்க தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

D V24,3,1000 P00.99.2

[2000 ஏப்ரல் 27

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரக் குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென்று திருப்பத்தூரிலே ஒரு சிறப்பு நீதிமன்றமும் சேலத்திலே ஒரு சிறப்பு நீதிமன்றமும் அமைக்கப்பட்டு, வழக்குகளை விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல வழக்குகள் வேகமாக விசாரிக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் — வேலூர் மாவட்டத்தை உள்ளடக்கிய — வேலூர், திருவண்ணாமலை ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் சேர்த்துத்தான் திருப்பத்தூரிலே ஒரு சிறப்பு நீதிமன்றம் இருக்கிறது. அந்தச் சிறப்பு நீதிமன்றத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் 1,910 வழக்குகள்தான் இருக்கின்றன. இந்த ஆட்சி வந்த பிறகு அந்த வழக்குகளையெல்லாம் வேகமாக நடத்தச் சொல்லி, கடந்த காலத்திலே பிடிபட்ட ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களையெல்லாம் இப்பொழுது ஏலத்தில் விட்டிருக்கிறார்கள். எனவே வழக்குகள் விரைவாக நடத்தப்படுகின்றன. இதிலேயும் தேக்கம் ஏற்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையை அரசு பின்னால் கவனிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 409, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**409—**

### பேருந்து பராமரிப்பு

***8455*— திரு ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பழுதடைந்துள்ள அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பழுதுபார்த்து, தனியார்ப் பேருந்துகளைப் போல் சிறப்பாகப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயக்கத்தின்போது பழுதடையும் பேருந்துகள் உடனுக்குடன் சரிபார்க்கப்பட்டுத் தடத்தில் விடப்படுகின்றன. தனியார்ப் பேருந்துகளைப் போலவே, தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்துகளும் சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன.



2000 ஏப்ரல் 27]

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே, மதுரையிலேயிருந்து அரசு விரைவுப் பேருந்திலே ஏறி வரும்போது, உட்கார்ந்தவுடன் ஆணி குத்திவிட்டது ஐயா. அதோடு மட்டுமல்லாமல், சைடுகளில் சாய்ந்தவுடன், அங்கிருந்த கம்பி மாட்டி சட்டை கிழிந்துவிட்டது. அந்த அளவிற்கு seatகள் எல்லாம் நன்றாக இல்லை. seat...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களா பஸ்ஸிலே வந்தீர்கள்?

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** ஆமாம் ஐயா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உண்மையைச் சொல்லுங்கள்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** ஆமாம் ஐயா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Ticket வாங்கிக் கொண்டு வந்தீர்களா? *(சிரிப்பு)*

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** நான் யார் என்று சொல்லவில்லை, ஐயா. அதனாலே Ticket வாங்கிவிட்டேன். ஆகவே அந்த seatகளையெல்லாம் முறையாகப் போட வேண்டும். அதன் பிறகு குடிதண்ணீர் இருக்கிறதா என்று கேட்டேன். தண்ணீர் இங்கே யாரும் சாப்பிடுவதில்லை. அதனால் குடிதண்ணீர் வைப்பதில்லை என்று சொன்னார்கள். ஏற்கெனவே முதலிலே குடிதண்ணீர் எல்லாம் நல்ல முறையிலே வைத்திருந்தார்கள். அதேபோன்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குடிதண்ணீர் வசதியும் செய்வதுடன் அந்த seatகளை எல்லாம் கொஞ்சம் alter செய்து நன்றாக வைக்க வேண்டும். ஏனென்று சொன்னால் திடீரென வந்து உட்கார்ந்தவுடனே ஆணி குத்திவிட்டது. நான் வெளியே வந்து சொல்ல முடியவில்லை. பக்கத்திலே இன்னொரு friend உட்கார்ந்திருந்தார். ரொம்ப வருத்தப்பட்டு வந்தார்கள். இதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து seatகளை நல்லமுறையிலே பராமரிக்க ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆரூண் போன்றவர்களுக்குத் தனி seatகூடப் போடலாம். *(சிரிப்பு)*

[2000 ஏப்ரல் 27

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவர் எந்தப் பேருந்திலே பயணம் செய்தார் என்பதற்கான அந்த எண்ணையும். அந்த Ticketஐயும் கொடுத்தால், நிச்சயமாக அந்த மாதிரி வண்டி இருந்திருந்தால் நானும் மேற்பார்வையிடுவதற்கு கொஞ்சம் வசதியாக இருக்கும். ஏனென்றால் நான் அப்படிக் கேட்பது, அவரைக் குறை சொல்வதற்காக இல்லை. பொதுவாகச் சொல்கிறபோது எல்லாமே நன்றாக இருக்கிறது, நன்றாக இருக்கிறது என்றுதான் அதிகாரிகள் எங்களிடத்திலே பதில் சொல்கிறார்கள். அந்த மாதிரி தனிப்பட்ட முறையிலே சொன்னால் அந்தப் பேருந்துகளைச சரிசெய்து இயக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வசதியாக இருக்கும். பொதுவாக இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு விரைவுப் பேருந்துகளெல்லாம் புதிய பேருந்துகளாக நிறைய மாற்றப்பட்டிருக்கின்றன. அதிலே புதிய வடிவமைப்புகளிலே பல பேருந்துகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. படிப்படியாக இவையெல்லாம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 410, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**410—**

**விரைவுப் பேருந்து**

***25030*—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்துவிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் நாங்குநேரியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க



2000 ஏப்ரல் 27]

திட்டம் ஏதும் இல்லை. மேலும் கன்னியாகுமரி, மார்த்தாண்டம், களியக்காவிளை, நாகர்கோவில் ஆகிய ஊர்களிலிருந்து நாங்குநேரி வழியாகத் தினந்தோறும் இரு முனைகளிலிருந்தும் நாங்குநேரியைக் கட்டண நிலையாகக் கொண்டு சென்னைக்கு அரசு விரைவுப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. நாங்குநேரி பயணிகள் இப்பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி வருங்காலத்திலே குட்டி சீனாவாக மாறும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே குட்டி சீனாவாக மாறவிருக்கின்ற நாங்குநேரியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைக் குட்டி சீனாவாக மாற்றுகின்றபோது நிச்சயமாக நிறையப் பேருந்துகளை அங்கேயிருந்து இயக்குவதற்கான வசதிகளையும் மாண்புமிகு கலைஞர் அவர்களே கண்டிப்பாகச் செய்துகொடுப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. ஆவுடையப்பன்.

**திரு. இரா. ஆவுடையப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம், பாபநாசத்திலிருந்து பெங்களூர், சென்னை, கோவை போன்ற பெருநகரங்களுக்கு விரைவுப் பேருந்துகள் போய்க்கொண்டிருந்தன. தற்போது அவை நிறுத்தப்பட்டிருக்கின்றன. அந்தப் பேருந்துகளை மீண்டும் விடுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறுத்தப்பட்டிருக்குமானால் அந்தப் பேருந்துகளை விடுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அவை விரைவுப் பேருந்துகளாக இல்லாவிட்டாலும் அங்கேயிருக்கிற போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக அந்தப் பேருந்துகள் இயக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 411, திரு. அ. சுடலைமுத்து, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

[2000 ஏப்ரல் 27

411—

## தரைப்பாலம்

*24763—திரு. அ. கடலைமுத்து:

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடிநாயக்கனூர் தொகுதியிலுள்ள தேவாரம் — மல்லிங்காபுரம் இணைப்புச் சாலையிலுள்ள தரைப்பாலம், T. மல்லிங்காபுரம்-மேட்டுப்பட்டி, தேவாரம்-பண்ணைப்புரம் இணைப்புச் சாலை மற்றும் வடிவேல் கவுண்டர் மருத்துவமனை அருகிலுள்ள தரைப்பாலம் ஆகியவற்றை உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 12.2 கிலோமீட்டர் நீளமுள்ள இந்தச் சாலையில் மூன்று இடங்களில் தரைமட்ட தாம்போகிப் பாலங்கள் உள்ளன. அவற்றை உயர்மட்டப் பாலங்களாகக் கட்டவும், சாலைகளை மேம்படுத்தவும் நடப்பாண்டில் மத்திய சாலை நிதி (Central Road Fund) திட்டத்தில் எடுத்துச் செயல்படுத்த பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பரிந்துரை தற்போது ஆய்வில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. கடலைமுத்து, இருக்கையில் இல்லை.

வினா எண் 412, திரு. செங்கை சிவம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

412—

## நான்கு வழிச்சாலை

*25349—திரு. செங்கை சிவம்:

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2000 ஏப்ரல் 27]

சென்னையில் பூந்தமல்லி தேசிய நெடுஞ்சாலையை இருவழியிலிருந்து நான்கு வழிச்சாலையாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இப்பணியை தேசிய நெடுஞ்சாலைக் குழுமம் (National Highways Authority of India) மேற்கொண்டுள்ளது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து பெங்களூர் வரை உள்ள சாலை முழுவதையும் நான்கு வழிச்சாலையாக மாற்றும் திட்டம் உண்டா? தற்போது அகலப்படுத்தப்படும் தூரம் எவ்வளவு? மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை, இச்சாலைக்கு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூத்த உறுப்பினர்கள் எல்லாம் துணை வினாவைப் படிக்கக்கூடாது.

**திரு. செங்கை சிவம்:** இல்லை. படிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே இப்படிப் படிக்கக் கூடாது என்று தாமரைக்கனிக்குச் சொன்னேன்.

**திரு. செங்கை சிவம்:** மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை 50 கோடி ரூபாயை இத்திட்டத்திற்கு ஒதுக்கியிருப்பதாக அறிகிறேன். இத்தொகை முழுவதும் இச்சாலைக்காகச் செலவழிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இந்த சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை எண் 4, சென்னை நகரத்தில் முத்துசாமிப் பாலத்திலிருந்து தொடங்குகிறது. அங்கிருந்து கோயம்பேடு அம்பேத்கர் சிலை வரையில் ஏறத்தாழ 9 கி.மீட்டர் தூரம் சென்னை மாநகராட்சிப் பகுதிக்குட்பட்டதாக இருக்கிற தேசிய நெடுஞ்சாலை; அதற்கு அப்பால் இருக்கக்கூடிய பகுதிகள் பெங்களூர் வரையிலே தேசிய நெடுஞ்சாலையாக இருக்கிறது. இதில் பெரும்பகுதி, சென்னை நகரத்திற்குள்ளே ஆறு வழிச்சாலையாகவும் இருக்கின்றது; நான்கு வழிச் சாலையாகவும் இருக்கின்றது. சென்னை

மாநகராட்சிக்குள்ளேகூட சில இடங்களில் இப்போது நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்கும், ஆறு வழிச்சாலையாக மாற்றுவதற்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1980 ஆம் ஆண்டிலேயே இடங்கள் கையகப்படுத்தப்பட்டு, ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்தப் படாமல் விடப்பட்டு இருந்து, இப்போதுதான் நம்முடைய ஆட்சியில் அந்த ஆக்கிரமிப்புகள் அப்புறப்படுத்தப்பட்டு, அமைந்தகரை பகுதியிலே அகலப்படுத்துகிற பணி நடைபெறுகிறது. 9-வது கிலோ மீட்டரிலிருந்து 25-வது கிலோ மீட்டர் வரையில் 4 வழிப்பாதையாக அமைக்க வேண்டுமென்று நம்முடைய தமிழக அரசின் சார்பிலே குறிப்பு அனுப்பப்பட்டு, அதற்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது என்பது உண்மைதான். ஆனால் அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு தம்பிதுரை அவர்கள் மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது அதிலே ஒரு கொள்கை மாற்றம் செய்தார்கள். 4 வழிப்பாதையாக மாற்ற வேண்டுமென்றால், குறைந்தது 45 மீட்டர் அகலம் இருக்கவேண்டும். அப்படி இல்லையென்றால் அதை எடுத்துக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார்கள். ஆனால் நம்முடைய பகுதியிலுள்ள சாலை சராசரியாக 30 மீட்டர் அகலம் இருக்கிறது. 30 மீட்டர் அகலத்திலே 4 வழிப்பாதை அமைக்கலாம். ஆனாலும்கூட அந்தக் கொள்கை இன்னும் நடைமுறையில் இருக்கிற காரணத்தால் அந்தப் பணியை முழுவதையும் செலவழிக்க முடியாத நிலையிருக்கிறது. இடத்தைக் கையகப்படுத்துவதற்கான முயற்சியில் நாம் ஈடுபட்டோம். ஆனால் அதற்குரிய தொகையில் பாதித் தொகையை தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். நாம் இதை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. என்றாலும்கூட பூந்தமல்லி புறவழிச் சாலையில் அந்தப் பகுதியை உடனடியாக 4 வழிப்பாதையாக மாற்றுவதற்கு இப்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதையும் தேசிய நெடுஞ்சாலைக் குழுமம்தான் மேற்கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 413. திரு. பி.என். வல்லரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்

**413—**

**பயிற்சி மையம்**

***23226**—**திரு. பி.என். வல்லரசு:***

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரை மேம்படுத்த தனியாக I.A.S. பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னை மற்றும் மதுரையில் I.A.S., I.P.S. பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்கு பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க தனிப்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோருக்கு I.A.S., பயிற்சி மையங்களில் உபகாரச் சம்பளம் (stipend) வழங்கப்படுமா? அதுவும் கூடுதலாக உபகாரச் சம்பளம் வழங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டு வருமானம் ரூ. 24,000-க்குள் இருக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு உணவுக் கட்டணமாக மாதம் ரூ. 500 வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 414, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**414—**

**சிட்கோ தொழிற்கூடங்கள்**

***26761** - **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:***

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு வட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தில் கட்டப்பட்டுள்ள சிட்கோ தொழிற்கூடங்கள் செயல்படாமல் உள்ள நிலை குறித்து அரசு அறியுமா?

[2000 ஏப்ரல் 27

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிப்பட்டு வட்டம், ஆர்.கே. பேட்டை ஒன்றியத்தில் காலியாக உள்ள தொழிற்கூடங்களையும் மற்றும் மேம்படுத்தப்பட்ட மனைகளையும் விற்பனை செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு தொகுதி, ஆர்.கே. பேட்டையிலே இருக்கிற நடுத்தர வர்க்கத்தினுடைய வர்த்தகப் பெருமக்கள் எல்லாம் ஒன்றுகூடி, நேரடியாக அப்போது சிட்கோ தலைவராக இருந்த அதிகாரியைப் பார்த்து தாங்களாகவே முன்வந்து அங்கு தொழிற்பேட்டையை அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், வர்த்தக நோக்கோடு செயல்படுகின்ற சிட்கோ நிறுவனம் நிலத்தை மேம்படுத்துவதன் மூலமாக அந்தத் தொழிற்பேட்டைக்கு அடிப்படை வசதிகளைச் செய்கிறோம் என்று சொன்ன பல்வேறு காரணங்களால் இருக்கின்ற விலையைப் பலமடங்கு ஏற்றிவிட்டார்கள். உதாரணமாக 2 இலட்ச ரூபாய்க்கு வரக்கூடிய தொழிற்கூடம் 10 இலட்சம் ரூபாயாக மாறியதால் அங்கே வாங்க வேண்டும் என்ற எண்ணம் இருந்த அத்தனைபேரும் பின்வாங்கிவிட்டார்கள். இத்தகைய நிலைமை சிட்கோவிலே இன்னும் தொடர்ந்து நீடிக்கிறது என்று நான் எண்ணுகிறேன். வர்த்தக ரீதியாக இயங்குகின்ற நிறுவனமல்ல சிட்கோ; சேவை நிறுவனமாக இருக்க வேண்டிய நிறுவனம் அது. எப்படி ஒரு தனியார் நிறுவனம் நிலத்தை மேம்படுத்தி development cost என்று சொல்லி மிகப் பெரிய அளவிலே தங்களுடைய விலையை ஏற்றி இலாபகரமாகச் சம்பாதிக்கிறார்களோ அதைப்போல ஒரு கொள்ளையை, unreasonable cost என்று சொல்கின்ற வகையிலே மிகப் பெரிய விலையைக் கொடுத்து அதை வாங்குவதற்கு யாரும் முன்வருவார்களா என்றால் நிச்சயம் வரமாட்டார்கள். இத்தகைய நிலைமையை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து அதற்குரிய நீதியை வழங்குவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிட்கோ நிறுவனத்தின் மூலமாகக் கொடுக்கப்படுகின்ற தொழிற்கூடங்களுக்கும் மனைகளுக்கும் அதிக விலையை நிர்ணயம் செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால் தனியாரிடத்திலேயிருந்து



2000 ஏப்ரல் 27]

எந்த நிலமும் வாங்கப்படவில்லை. கடந்தகால ஆட்சியில் 50,000 ரூபாய் பெறக்கூடிய நிலத்தை 3 இலட்சம், 3½ இலட்சம் என்று தனியாரிடத்திலே வாங்கிய காரணத்தால் மொத்தம் வாங்கிய விலை, குடிதண்ணீர் வசதி, சாலை வசதி இன்னும் பிற வசதிகளை மேம்படுத்துவதற்கான செலவு, அதற்குமேல் அதிலே முதலீடு — முதலீடு முழுவதுமே சிட்கோவிலிருந்து முதலீடு செய்யப்படுவதில்லை. SIDBI-லிருந்து வாங்குகிறோம். அந்த SIDBI-ல் வாங்கக்கூடியதற்கு வட்டியும் செலுத்த வேண்டியிருக்கிறது. — ஆக இவற்றையெல்லாம் கணக்கிட்டு அந்த விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் — தேவையில்லாத இடங்களிலெல்லாம் பல தொழிற்பேட்டைகளைக் கடந்தகால ஆட்சியிலே உருவாக்கிய காரணத்தால் அதை விற்பதிலே சிரமங்கள் ஏற்பட்டன. இப்போது இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து— 1996 ஆம் ஆண்டிலிருந்து அவற்றையெல்லாம் விற்பதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த ஆர்.கே. பேட்டை தொழிற்பேட்டையில் இருக்கக்கூடிய ஒரு தொழிற்கூடத்தை 7.83 இலட்சம் ரூபாய்க்கு விலை நிர்ணயம் செய்திருந்தோம். 1998-99-லே இந்த அரசு ஒரு குழுவை அமைத்து அதை 5.60 இலட்சமாகக் குறைத்திருக்கிறோம். ஆனால் அதற்கு முன்பே ஏலத்திற்கு விடுவதற்கெல்லாம் ஏற்பாடு செய்தோம். அதை மிகக் குறைந்த விலையில் ஏலம், tender இரண்டும் சேர்த்து வைத்தோம். Auction-cum-tender வைத்து அதிலும் அவற்றை விற்பதற்கு வாய்ப்பில்லை. இருந்தாலும் விலையை இப்போது 7.83 இலட்சத்திலிருந்து 5.60 இலட்சமாகக் குறைத்திருக்கிறோம். இன்னும் குறைப்பதற்கு ஒரு குழு அமைத்து ஆராய்ந்து வருகிறோம்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 415, திரு. ம. சண்முகம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**415—**

**தொழிற்பேட்டை**

***30738—திரு. ம. சண்முகம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2000 ஏப்ரல் 27

(அ) தொழிற்பேட்டையே இல்லாத கிணத்துக்கடவு தொகுதியிலுள்ள கிணத்துக்கடவு மற்றும் பொள்ளாச்சி வடக்கு ஒன்றியப் பகுதிகளில் ஒரு தொழிற்பேட்டை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மலுமிச்சம்பட்டியில் அமைந்துள்ள தொழிற்பேட்டை கிணத்துக்கடவுக்கு அருகில் இருப்பதாலும் மேலும் 6 தொழிற்கூடங்களும் 41 தொழில்மனைகளும் ஒதுக்கீடு செய்யப்படாமல் காலியாக இருப்பதாலும் புதியதாக கிணத்துக்கடவில் தொழிற்பேட்டை அமைப்பது தற்சமயம் சாத்தியமாக இருக்காது.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு கழக அரசு பொறுப்பேற்றபொழுதுதான் பொள்ளாச்சி வட்டம் தொழிற்துறையில் பின்தங்கிய வட்டம் என்று அறிவிக்கப்பட்டு தொழில்கள் தொடங்கும் சூழ்நிலை ஏற்பட்டது. அப்பொழுது பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்தில் குறிப்பாக எந்தத் தொழிற்சாலையும் தொடங்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. அங்கே தென்னை நார் உற்பத்தித் தொழிற்சாலை மட்டுமே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கிணத்துக்கடவு தொகுதியை உள்ளடக்கிய பொள்ளாச்சி வடக்கு ஒன்றியத்திலே ஒரு தொழிற்பேட்டையை வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோயம்புத்தூர் மாவட்டத்தில் குறிச்சியிலே கிட்டத்தட்ட 250 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டு அவை சிறப்பாக நடந்து வருகின்றன. அதன் அருகில் 7 கி.மீ. தூரத்தில்தான் கிணத்துக்கடவு இருக்கிறது. இப்பொழுது மலுமிச்சம்பட்டியில் இருக்கக்கூடிய தொழிற்கூடத்தையும் அவர்கள் நிச்சயமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். அது காலியாக இருக்கிறது. அதைப்போல இன்னும் அங்கே 18 ஏக்கர் இடம் வழக்கில் இருக்கிறது. விரைவில் அந்த இடம் கிடைத்தவுடன் நிச்சயமாக அங்கே தொழிற்கூடங்களை நிறுவலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொள்ளாச்சி மையமாக இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நிலுவையில் இருக்கக்கூடிய தொழிற்கூடங்களுக்கு



2000 ஏப்ரல் 27]

எப்படியும் விலை நிர்ணயம் செய்து தொழில்புரிய வருகின்ற படித்த இளைஞர்களுக்கு எப்படியாவது வழங்க வேண்டுமென்று அரசின் சார்பில் இப்போது பெருமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அந்த முயற்சி முழுமையடைந்தவுடன் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 416, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**416—**

**பெரியார் திரைப்படம்**

***26331—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரியாரைப்பற்றிய திரைப்படத்தை முன்னணி மற்றும் திறமையாளர்களை வைத்து தமிழக அரசே தயாரிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரியாரைப் பற்றிய திரைப்படம் தயாரிக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாறு என்பது பொது வாழ்விற்கு ஓர் இலக்கணம், போர்க் குணத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு, சீர்திருத்தத்தில் ஒரு சிகரம் என்று சொல்லத்தக்க அளவிற்கு ஒப்பாகும், மிக்காரும் இல்லாத உன்னதத் தலைவராகத் திகழ்ந்தவர் தந்தை பெரியார் அவர்கள். இன்றைய இளைய தலைமுறைக்கு அவருடைய வாழ்க்கை வரலாறு என்பது ஒரு பாடமாக, படிப்பினையாக அமைய வேண்டியது அவசியம். மேலும், சிவாஜி என்று தந்தை பெரியார் அவர்களால் சிறப்பித்து, பாராட்டப்பட்ட நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள்கூட ஒரு முறை சொல்கிறபோது, தனக்கு ஒரு மனக்குறை இருக்கிறது, தந்தை பெரியாருடைய வேடத்திலே இன்னும் இதுவரை நடிக்கவில்லையே என்று சொல்லி தன்னுடைய மனக்குறையை

வெளிப்படுத்தியிருக்கிறார்கள். எனவே தந்தை பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றை, இப்போது தந்தை பெரியார் வழியில் நடைபோட்டுக் கொண்டிருக்கக்கூடிய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கதை வசனம் தீட்டி, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களைப் பெரியாராக வேடம் ஏற்கச் செய்து, தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய ஒரு படத்தை எடுத்து தமிழகத்திற்கு வழங்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுக்கு இந்த அரசு காணிக்கை என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களுடன் சென்று பெரியாரிடம் ஆசி பெற்ற நேரத்திலே அறிவித்திருக்கிறார்கள். பெரியாருடைய கொள்கையைச் செயலாற்றிக் கொண்டிருக்கின்ற இந்த அரசு கடந்த ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரில் அண்ணா வாழ்கின்றார் என்ற ஒரு படத்தை எடுத்து வெளியிட்டிருந்தது. அதற்காக ஜனாதிபதியினுடைய விருதையும் பெற்றிருக்கிறோம். நிதிநிலையைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு கலைஞர் அவர்களே கதை-வசனம் எழுதவேண்டுமென்று அவர்கள் தெரிவித்திருக்கிற காரணத்தால் அவர்களுடைய மேலான ஆலோசனையின்பேரில் அவர்கள் சொல்கிற எண்ணப்படி அதைச் செயலாக்குவதற்கான நடவடிக்கையில் இந்த அரசு ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கணினிமயமாக உலகம் ஆகிவருகின்ற காரணத்தால் இணையத்தின் மூலமாக எல்லாவிதமான தொடர்புகளும் வருகின்ற சூழ்நிலையில் அறிவுஜீவிகளால் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்ட நம்முடைய திராவிடத் தந்தை பெரியாருடைய கருத்துகள் உலகம் முழுவதும் ஆய்வுக்குரியதாக இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டு பேசப்பட்டு வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் திரைப்படங்கள் எடுப்பதைப்போல் சி.டி. ராம் என்று சொல்கின்ற குறுந்தகடுகள் மூலமாக தந்தை பெரியாரின் தத்துவங்களை உலகம் முழுவதும் அனுப்பக்கூடிய அளவுக்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையின் சார்பாக அரசின் செயல்பாடுகள், திட்டங்கள் மக்களுக்குச் சென்றடைகின்ற வகையில், இவற்றைத்தான் இப்போது படமாக எடுத்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறோம். அதேநேரத்தில் தீண்டாமை ஒழிப்பு போன்ற சமூக சீர்திருத்தப் பணிகளையும் இந்த அரசு இந்தத் துறை மூலம் செய்துகொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை கவனத்தில் கொண்டு செயலாற்றுவதற்கான பரிசீலனையில் துறை ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கையைத் தூக்கினால் கூப்பிட வேண்டுமென்றெல்லாம் கிடையாது. கையைக் கீழே போடுங்கள். திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்களுடைய பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பச் செய்ய வேண்டும் என்பதற்காக தனித் துறை தொடங்க வேண்டுமென்ற கேள்வி இந்தச் சபையிலே பல முறை எழுப்பப்பட்டு, சீர்திருத்தத் துறை என்ற பெயராலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அவையிலே செய்தித்தாள் படிக்கக் கூடாது. (குறுக்கீடு) நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. திரு. சிவபுண்ணியம் கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இப்போது சமூக சீர்திருத்தத் துறை என்று தமிழக அரசாலே தொடங்கப்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் துறையின் மூலமாக பகுத்தறிவுக் கருத்துகளை தமிழகம் முழுமையிலும் பரப்பியதாக இதுவரையிலும் எந்தச் செய்தியும் இல்லை. அதற்குரிய முயற்சி எடுக்கப்பட்ட நிலையிலே இருக்கிறதா அல்லது அதற்கான செயல்முறைகள் என்னென்ன நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில்தான் அப்படிப்பட்ட துறை அமைக்கப்பட்டிருப்பதாக நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் துறை எப்படியெல்லாம் செயலாற்ற வேண்டும் என்பதற்கான வழிவகைகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிறார்கள். எனவே அந்தத் துறை செயலாற்றுகிற காலகட்டத்தில் உங்களுடைய மேலான கருத்துகளையும் கவனத்தில்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 ஏப்ரல் 27

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே; பகுத்தறிவுக கருத்துகள், சமதர்ம கருத்துகள் இவற்றைப் பரப்புவதற்கு ஒரு துறை ஏற்படுத்தப்பட்டிருப்பது உண்மை. ஆனால் அந்தத் துறையை அமைத்து அறிவிப்பதற்கு முன்பாகவே அத்தகைய கருத்துள்ள துண்டுப் படங்கள் பலவற்றை எடுத்துத் தனியார் தொலைக்காட்சிகளிலும், சென்னைத் தொலைக்காட்சியிலும் காட்டப்பட்டு வருகின்றன. அண்மையிலேகூட தீண்டாமையை ஒழிப்பதற்கும், மத நல்லிணக்கத்திற்கும், ஜாதிமத பேதங்களை அகற்றுவதற்குமான துண்டுப் படங்கள் தயாரிக்கப்பட்டு, சென்னைத் தொலைக்காட்சி, சன் தொலைக்காட்சி, ராஜ் தொலைக்காட்சி மற்றும் விஜய் தொலைக்காட்சி போன்ற எல்லாத் தொலைக்காட்சிகளிலும் காட்டப்பட்டு உள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 417, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**417—**

## இராஜராஜன் சதய விழா

***32619*—திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாமன்னன் இராஜராஜன் சதய விழாவை செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மூலம் அரசே ஏற்று நடத்திட ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாமன்னன் இராஜராஜன் சதய விழாவினை நடத்துவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்னன் இராஜராஜன் உலகம் எல்லாம் வியக்கின்ற பெரிய கோவிலை நிர்மாணித்து இப்போது உலகத்தினுடைய மக்கள் எல்லாம் வந்து போகிற ஓர் இடத்தை உருவாக்கியவன். உலகத்திலுள்ள பெரிய மாவீரன் அலெக்ஸாண்டரைவிட பெரிய சிறந்த வீரனாக விளங்கிய



2000 ஏப்ரல் 27]

இராஜேந்திரனைப் பெற்றவன். ஐப்பசி மாதம் சதய நட்சத்திரத்தில் அவனுடைய விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் அந்த விழா நிகழ்ச்சிகளிலே பங்கேற்றுச் சிறப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது தேவாரம் நமக்கெல்லாம் தெரிந்திருக்கிறது என்று சொன்னால் அது திருமறை கண்ட மன்னன் நம்முடைய இராஜராஜ சோழன் அவர்களால்தான். அவனுடைய பெருமையை உலகுக்குத் தெரிவிக்கிற அளவுக்கு அந்தச் சதய விழா நிகழ்ச்சியை நாங்கள் அங்கே நடத்துகிறபோது மிகச் சிரமம் ஏற்படுகிறது. நம்முடைய ஆரூர் சோழன் ஆளுகிற இந்த ஆட்சியிலே இராஜராஜன் விழா நடத்துவதற்கு சிரமம் ஏற்படுகிறது என்பதை நாங்கள் பார்க்கிறபோது வருத்தமாக இருக்கிறது. ஆகையினால், இராஜராஜ சோழனுடைய சதய விழாவை அரசே ஏற்று நடத்துவது தான் நல்லது. 1972-ல் நம்முடைய முதல்வர் அவர்கள் இராஜராஜ சோழனுடைய சிலையை நாவலர் அவர்களுடைய தலைமையிலே திறந்து வைத்தார்கள். அப்போதே அந்த மாமன்னன் அந்தப் பெரிய கோவிலைக் கட்டியவன் வெளியிலே இருக்கிற சூழ்நிலை இருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, ஒரு பெரிய சொற்பொழிவா நிகழ்த்துகிறீர்கள்?

**திரு. மா. இராமச்சந்திரன்:** இல்லை. அவரைத் தெரியாமலே இப்படிச் சொன்னால் எப்படி? எவ்வளவு பெரிய மன்னர் அவர்! அதுவும் இந்தக் காலத்திலே நம்முடைய சோழ மன்னன் ஆளுகிற இந்த இராஜ்யத்திலே இப்படி இராஜராஜ சோழனுக்கு ஒரு நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட மன்னனுடைய சிலையே வெளியில் இருக்கவேண்டிய சூழ்நிலை வந்தது. அப்போது மத்திய அரசு அனுமதி அளிக்க மறுத்துவிட்டது. நம்முடைய முதல்வர் அவர்கள் அந்தக் காலத்திலே வருத்தப்பட்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டது. அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் காணுகிறபோது, இராஜராஜ சோழனுடைய சதய விழா நிகழ்ச்சியை, அவனுடைய பிறந்த நாள் விழாவைக் கொண்டாட அரசு தீர்மானிக்க வேண்டும். இது அவசியம் என்பதைக் கருத்தில்கொண்டு ஆராய வேண்டும் என்று தெரிவித்து விடைபெறுகிறேன்.

(முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியே, தஞ்சாவூர் மாமன்னன் இராஜராஜன் சதய விழாவை செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மூலம் அரசே ஏற்று நடத்துமா

என்பதுதான். அதற்காகத்தான் இல்லை என்று பதில் சொன்னேன். ஆனால் தஞ்சாவூர் மாமன்னன் இராஜராஜன் சதய விழாவினை மாவட்ட அளவில் குழு அமைத்து, நிதி வசூலித்து தென்னக பண்பாட்டு மையம், இந்து சமய அறநிலையத் துறை, தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் ஒத்துழைப்போடு அரசு ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தி வருகிறது. மாமன்னன் இராஜராஜன் எவ்வளவு சிறப்புக்கு உரியவர் என்பதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், உள்ளே சிலை வைக்கக் கூடாது என்ற நிலை இருந்தாலும் வெளியிலே அந்த மாமன்னனுக்கு சிலை திறந்து சிறப்புச் சேர்த்ததிலிருந்தே அவர் எவ்வளவு பெரிய உயர்ந்த மன்னர் என்பது நாட்டுக்கு தெரியும் என்பதை நினைவுபடுத்தி, அரசு சிறப்பாக தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை மூலம் விழாவை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 418, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**418—**

**வரதட்சணைக் கொடுமை**

***23481—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனைத்து மாவட்டங்களிலும் வரதட்சணைத் தடுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

(ஆ) வரதட்சணைக் கொடுமைகளை ஒடுக்குவதில் இவர்களுடைய பணி எந்த அளவில் உள்ளது?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை தங்கள் அனுமதியுடன் படிக்க விரும்புகின்றேன்.

(அ) ஆம். வரதட்சணைத் தடுப்புச் சட்டம் 1961, பிரிவு 8-பி-ன்கீழ் எல்லா மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட சமூக நல அலுவலர்கள் வரதட்சணைத் தடுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு உள்ளார்கள்.





(ஆ) வரதட்சணைத் தடுப்பு அலுவலர்களுக்கு ஆலோசனை கூற ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 நபர்கள் கொண்ட குழு நியமிக்கப்பட்டு, வரதட்சணை குறித்த புகார்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மாவட்டந்தோறும் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டு அதனுடைய தீர்மானங்களும் பெறப்பட்டுத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரதட்சணைக் கொடுமை நடக்கக்கூடிய சூழ்நிலையில் மாவட்டந்தோறும் 5 நபர்கள் கொண்ட ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த ஆலோசனைக் குழுவில் சமூக நலனில் அக்கறை உள்ள பொது மக்களும், பெண்களும் இடம் பெற்று இருக்கிறார்களா? அப்படிப்பட்ட சூழ்நிலை உருவானால்தான் நன்றாக இருக்கும். இன்று வரதட்சணை பற்றிக் கொடுக்கக்கூடிய புகார்களிலேகூட சில தவறான புகார்கள் கொடுக்கக்கூடிய சூழ்நிலையில் அந்த ஆலோசனைக் குழுவின் மூலமாக செய்யக்கூடிய முடிவிற்குப் பிறகுதான் புகார்களையே பதிவு செய்யக்கூடிய நிலையை அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார்கள் தரப்படுகின்றபொழுது அந்தப் புகார்கள் சரியானவைதானா என்பதை அந்தக் குழுவைச் சேர்ந்தவர்களும் மாவட்ட சமூக நல அலுவலரும் நேரடியாகச் சென்று பார்வையிட்டு உண்மையை அறிந்து வருகிறார்கள். அந்தக் குழுவில் நியமனம் செய்யப்பட்டு இருக்கிற அத்தனைபேருமே சமூக நலனிலே அக்கறை கொண்டவர்களாகத்தான் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதில் மகளிரும் இடம் பெற்றுள்ளார்கள். மேலும் 3 மாதங்களுக்கு ஒரு முறை அந்த குழுக் கூட்டம் நடத்தப்பட்டு, தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகிறது. மாதந்தோறும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளராலும் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பெற்று அதன் மூலமாகவும் அந்தப் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்திலே மட்டும் 4 புகார்கள் பதிவு செய்யப்பட்டு அதிலே 2 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு சுமூகமான தீர்வு காணப்பட்டு இருக்கிறது. ஒரு புகார் மீது நடவடிக்கை எடுப்பதற்கு மகளிர் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு இருக்கிறது. மேலும் ஒரு புகார் நிலுவையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 ஏப்ரல் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 419. திரு. க. மணிவர்மா. மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**419—**

**சாலை வசதி**

*7876—**திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, மேல்வலசை, கீழ்வலசை, அக்கறைப்பட்டி ஆகிய கிராமங்களுககு மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலை வசதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைத் தொடர்ச்சியின் கூடைசிப் பகுதியிலே என்னுடைய தொகுதியைச் சேர்ந்த 3 கிராமங்கள் இருக்கின்றன. அக்கறைப்பட்டி, கீழ்வலசை, மேல்வலசை என்ற கிராமங்களிலே 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கிறார்கள். கர்ப்பிணிப் பெண்கள் பிரசவ வேதனைப்படும்போதும் கொடிய நோய்களால் தாக்கப்படுகின்றபோதும் பாம்பு கடிக்கின்றபோதும் அங்கேயே அவர்கள் இறந்துவிடுகின்ற நிலை இருக்கின்றது. கர்ப்பிணிப் பெண்களை டோலி கட்டித்தான் 10 கிலோமீட்டர் வரை எடுத்துக்கொண்டு வந்து தானிப்பாடி மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. கரடுமுரடான பாதையிலே, ஒத்தையடிப் பாதையிலே செல்கின்ற அந்த மக்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சாலை அமைத்து, அந்த மக்களுக்குப் போதுமான அடிப்படை வசதிகள் செய்துதர தக்க நடவடிக்கை எடுப்பார்களா? அந்த மக்களைச் சிறந்த முறையிலே வாழ வைப்பதற்கு வழிவகைகளைச் செய்வார்களா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2000 ஏப்ரல் 27]

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் கோரிக்கைகளை எல்லாம் இந்த அரசு நன்றாக உணர்ந்து இருக்கிறது. மலைவாழ் மக்களுக்கு மலையளவு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் மேல்வலசை, கீழ்வலசை, அக்கறைப்பட்டி ஆகிய பகுதிகளில் 11½ கிலோமீட்டர் வரை சாலை அமைக்கப்பட வேண்டி இருக்கிறது. அந்தப் பகுதியில் 11½ கிலோமீட்டர் சாலை அமைப்பதற்கு ரூபாய் 44.5 இலட்சம் செலவு செய்யப்பட வேண்டியிருககிறது. 44.5 இலட்ச ரூபாய் செலவழித்து போடப்படும் அந்தச் சாலையால் பயன்பெறும் மக்கள் தொகையோ மிகவும் குறைவு. அப்படிச் சாலை அமைக்கப்பட வேண்டிய அந்தப் பகுதி காப்புக் காடுகள். (reserve forest) பகுதியில் வருகிறது என்று சொல்லப்படுகிறது. இதற்கு மத்திய அரசினுடைய முன்னனுமதி பெற வேண்டியிருக்கிறது. மத்திய அரசினுடைய முன்னனுமதியைப் பெறுவது என்பது மிகவும் எளிதல்ல என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். இவ்வாறு சாலை அமைத்தாலும், சாலை அமைக்கின்ற நேரத்தில் அந்தக் காடுகளிலுள்ள விலை மதிப்பற்ற மரங்களை வெட்ட வேண்டியிருக்கும். காப்புக் காடுகளில் உள்ள மரங்கள் திருட்டுப் போகும் சூழ்நிலையும் ஏற்படும். இந்தச் சாலை ஏற்படுத்தப்பட்டால் காப்புக் காடுகளில் உள்ள மரங்கள் கடத்தப்படுவதற்குரிய வாய்ப்புகள் உருவாகும். இதனால் சந்தன மரங்கள் போன்ற மரங்கள் மேலும் கடத்தப்படுவதற்கு வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

(முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராக:** மாண்புமிகு உறுப்பினர் ஏற்கெனவே சொன்னபடி அந்த மேல்வலசை மற்றும் கீழ்வலசை பகுதியில் வண்டிப்பாதை, ஒத்தையடிப்பாதை இருக்கின்றது. ஆகவே அந்தப் பகுதியில் அவசியமான, தேவையான நேரத்தில் நிதி நிலைமை இடம் கொடுத்தால் எதிர்காலத்தில் சிந்தித்து, பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 ஏப்ரல் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 420. திரு. நா. பெரியசாமி. மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**420—**

### ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

***350*— திரு. நா. பெரியசாமி:**

*மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு பூமிதான வாரிய நிர்வாகத்திலுள்ள விவசாய நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி அவற்றை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பூமிதான நிலத்திலுள்ள ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு அந்த நிலங்களில் விவசாயம் செய்வதற்கு ஏழை மக்களுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கும் நோக்கத்தோடு பூமிதான இயக்கம் நடத்தப்பட்டது. அப்படிக் கிடைத்த நிலங்களை இந்த வாரியம் நிருவகித்து வருகிறது. பல இடங்களில் குறிப்பாக ஈரோடு மாவட்டம், அரச்சலூரில் நிலமற்ற ஏழைகளை வெளியே விரட்டிவிட்டு நில உடைமையாளர்கள் அந்த நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன. எந்த அளவிற்கு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டிருக்கின்றன, எவ்வளவு ஏழைகளுக்கு நிலம் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்துவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பூமிதான நிலத்தில் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன என்று அரசிற்கு சில இடங்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளன. அதனுடைய அடிப்படையில் தருமபுரி மாவட்டம் நாகர்கூடல், கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம், ஒடந்துறை, குறிச்சி, கோவைப்புதூர், தேக்கம்பட்டி, மாதம்பட்டி, வேலம்பூர் போன்ற பகுதிகளில் அந்த நிலங்களையெல்லாம் ஆய்வு செய்து அந்த ஆக்கிரமிப்புகளெல்லாம் அகற்றப்பட்டு இப்போது அந்த நிலங்களை எல்லாம் விவசாயத்திற்காக வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சமீபத்திலே சென்னைக்கு அருகில், இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரிக்கு அருகில் சுமார் 2 கோடி ரூபாய் மதிப்புள்ள நிலத்தில் இருந்த ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு வாரியத்திற்குச் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 ஏப்ரல் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

*[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வழங்கக் கோரிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று 3 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட இருப்பதால் வேறு பொருளை எடுப்பதற்கு இல்லை என்ற முடிவிலே நான் இருந்தேன். ஆனால் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து பல உறுப்பினர்கள் அறிவிப்புக் கொடுத்திருந்தார்கள். அதிலே கால்நடை மருத்துவர்களோடு அவரே ஒரு மருத்துவர் போல டாக்டர் குமாரதாஸ் அவர்கள் அன்றாடம் இந்தப் பிரச்சினையைப்பற்றி என்னிடம் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாளைக்குப் பதில் சொல்வதாகச் சொல்லியிருந்தார்கள். டாக்டர் குமாரதாஸ் அவர்கள் இன்று வெளிநாடு செல்கின்ற காரணத்தால் இன்றே அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, கால்நடை உதவி மருத்துவர்கள் பிரச்சினைபற்றி கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்தவர்கள் திரு. சோ. பாலகிருஷ்ணன், டாக்டர் தே. குமாரதாஸ், திரு. ஜி. பழனிசாமி, திரு. இரா. தாமரைக்கனி, டாக்டர் அ. செல்லக்குமார், திரு. ச. அழகிரி மற்றும் சிறப்புக் கவன ஈர்ப்புக்கு திரு. சி. வேலாயுதன், திரு. தீரன், திரு. லா. சந்தானம் ஆகியோர் அறிவிப்பு

கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாகப் பேசுமாறு கூறி, முதலில் டாக்டர் குமாரதாஸை அழைக்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவர் சங்கத்தின் சார்பாக, தங்களுக்கும் மத்திய அரசு கால்நடை உதவி மருத்துவர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி கடந்த வாரம் பல்வேறுவிதமான போராட்டங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய போராட்ட உணர்வைப் பற்றிச் சொல்கிறபோது, அரசை எதிர்க்க வேண்டுமென்ற உணர்வு அவர்களுக்கில்லை. மாறாக அரசினுடைய கவனத்திற்குத் தங்களுடைய கோரிக்கைகளைக் கொண்டுவர வேண்டுமென்கிற உணர்வின் அடிப்படையிலேதான் அந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டத்திலே கலந்துகொண்ட நண்பர்களில் பெருவாரியானவர்கள் தமிழக முதல்வர் அவர்களைப் பாராட்டி, நாங்கள் எல்லோரும் அவர்கள் பின்னாலே அணியிலே இருக்கின்றவர்கள் என்றும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்.

முற்பகல் 10-35

1989-லே ஆசியாவில் முதலாவது கால்நடை பல்கலைக்கழகத்தைத் தமிழகத்தில் முதல்வர் அவர்கள் கொண்டு வந்ததையும் சொல்லி எங்களையும் மற்றவர்களுக்கு இணையாகத்தான் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கை என்னவென்று கேட்கிறபோது மத்திய அரசுக்கு இணையாகக் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு 8,000 ரூபாய் வழங்க வேண்டுமென்பது. ஆனால் இங்கே அவர்களுக்கு 6,500 ரூபாய் வழங்கப்படுகிறது. அதிலே 1500 ரூபாய் வேறுபாடு.

பல்வேறு காலகட்டங்களிலே இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்துகிறபோது கால்நடை மருத்துவர்கள், வேளாண்மை அலுவலர்கள், பொறியாளர்கள் ஆகியோர் ஒரே நிலையிலே இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் கால்நடை உதவி ஆய்வாளர்கள் வாரத்திற்கு 7 தினங்களும் பணி செய்ய வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறார்கள். அதுபோல வேளாண்மை அலுவலர்களை எடுத்துக் கொண்டால் 3½ ஆண்டுகள்தான் அவர்களுடைய கல்வி; அவர்கள் வாரத்திற்கு 5 தினங்கள்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். பொறியாளர்களைப்



பொறுத்தவரை 4 ஆண்டுகள்தான் அவர்களுடைய கல்வி; அவர்களும் வாரத்திற்கு 5 தினங்கள்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதுமாத்திரம் அல்ல, ஏற்கெனவே எம்.பி.பி.எஸ்., மருத்துவர்கள், சித்தா மருத்துவர்கள் ஆகியவர்களுக்கு இணையாகக் கால்நடை மருத்துவர்கள் ஊதியம் பெற்றுக்கொண்டிருந்தார்கள். திடீரென்று இப்போது அந்த நிலையிலிருந்து கீழே இறக்கப்பட்டிருக்கிறார்கள். ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையில்கூட மரியாதைக்குரிய நீதிபதி இரத்தினவேல் பாண்டியன் அவர்கள் இந்த நிலை பரிதாபத்திற்குரியது, இவர்களுக்கும் மத்திய அரசு உதவி கால்நடை மருத்துவர்களுக்கு இணையான ஊதியம் வழங்க வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே ஆவன செய்ய வேண்டும். கிட்டத்தட்ட 1,250 பேர் மருத்துவர்களாகப் பணியாற்றி வருவதாகச் சொன்னார்கள். அதில் 600, 700 பேர் ஏற்கெனவே இந்த basic pay—ரூ.8,000 என்பதை reach பண்ணிவிட்டார்கள். பாக்கி உள்ள 600, 700 பேர் தான், 8,000 ரூபாய்க்குக் குறைவாக basic pay வாங்குகிறார்கள். மத்திய அரசினுடைய உதவி கால்நடை மருத்துவர்களுக்கு ரூ. 8,000; உதவி இயக்குநர்களுக்கு ரூ. 9,000; அதற்கு மேற்பட்ட category-களுக்கு 10,000 ரூபாய். இவ்வாறு basic pay நிர்ணயித்து வைத்திருக்கிறார்கள். எனவே மத்திய சர்க்காரிலே கால்நடை உதவி மருத்துவர் பணியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு மனிதாபிமான அடிப்படையிலே அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிலையிலிருந்து கீழே இறக்கப்பட்டதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருத்திலே கொண்டு அவர்களுக்கு இணையான ஊதியத்தை, மாதம் ரூ. 8,000 அடிப்படை ஊதியத்தை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கிறேன்.

இதனால் ஆண்டு ஒன்றுக்குக் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய்தான் செலவு வரும் என்று சொல்கிறார்கள். நாம் 21,000 கோடி ரூபாய்க்கு வரவு-செலவுக் கணக்குப் போடுகிறோம். 21,000 கோடி ரூபாயில் 1 கோடி ரூபாய் என்பது பெரிதாக எங்களுக்குத் தெரியவில்லை. நிதி அமைச்சர் பொறுப்பில் இருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் அதை முடிவு செய்ய வேண்டும். இருந்தாலும் கருணை உள்ளத்தோடு அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க மத்திய அரசுக்கு இணையான ஊதியத்தை அவர்களுக்கு வழங்க முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து அவர்களுடைய வெகு நாளைய கோரிக்கையை நீங்கள் பரிசீலித்து தாயுள்ளத்தோடு அவர்கள் வயிற்றில் பால் வார்க்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி, சுருக்கமாகப் பேசி, உரையை முடிக்கவும்.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு உதவி கால்நடை மருத்துவர்கள் இப்போது போராட்டம் நடத்துகிறார்கள். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதிய உயர்வு வேண்டுமென்று சொல்கிறார்கள். இது நியாயமான பிரச்சினை. முதல்வர் அவர்களும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம், தமிழ்நாடு அரசு ஊழியர்களுக்குக் கொடுப்பதாகப் பல நேரங்களில் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறார்கள். சொன்னதைச் செய்வோம் என்று சொல்கிறார்கள். அநேகமாக இந்த விஷயத்தில் அவர்கள் கண்டிப்பாகச் செய்வார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் ஒரு மனிதன் வைத்தியம் பார்க்கச் சென்றால் இங்கே வலிக்கிறது, அங்கே வலிக்கிறது, இந்த காய்ச்சல் என்று சொல்லுவான். ஆனால் ஒரு வாய் இல்லா ஜீவனுக்கு வைத்தியம் பார்க்கிறவர்கள் அந்த மிருகங்களுக்கு வைத்தியம் பார்க்கிறவர்கள் அவர்கள். அந்த டாக்டர்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் கொடுப்பதிலே ஒன்றும் தவறு இல்லை. சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் அவர்கள் ஒவ்வொரு மாநிலத்திலும் எப்படி ஊதிய உயர்வு இருக்கிறது என்ற முழு விவரங்களைச் சொன்னார்கள். கௌரவப் பிரச்சினையாகப் பார்க்காமல் அவர்களை அழைத்துப் பேசி மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இணையான ஊதிய உயர்வு கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

*முற்பகல் 10-40*

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவர்கள், தங்களுக்கு மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி, உண்ணாவிரதம் போன்ற அறப் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது கோரிக்கை நியாயமானது என்பதனை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்கள் நடத்திய ஒரு விழாவிலே கலந்துகொள்கின்ற நேரத்திலேகூட உங்களுடைய இந்தக் கோரிக்கையைப் பரிசீலித்து நிச்சயமாக உங்களுக்கு உதவி செய்கிறேன் என்று அப்போது அந்தக் கூட்டத்திலே அறிவித்திருக்கிறார்கள்





என்பதைக்கூட என்னிடத்திலே அவர்கள் சொன்னார்கள். எனவே கருணை உள்ளம் கொண்ட நமது முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய அந்தக் கோரிக்கையை ஏற்று—பல்வேறு துறைகளிலே இருக்கின்ற அனைவருக்கும் மத்திய அரசுக்கு இணையான சம்பளத்தை வழங்கிக் கொண்டிருக்கின்ற நமது அரசு அவர்களுடைய இந்தக் கோரிக்கையையும் ஏற்று—அவ்வாறே சம்பளம் வழங்கிட வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்வது என்பது சாதாரண மருத்துவர்களைவிட சற்றுக் கடினமான வேலை; சற்று அதிக வலியுள்ள நோய்களுக்கு சிகிச்சை செய்யும்போது மனிதர்களை மயக்கி வைத்து அவர்களுக்கு வேதனை தெரியாமல் சிகிச்சை செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் கால்நடைகளைப் பொறுத்தமட்டில் அவற்றோடு போராடித்தான் சிகிச்சை செய்யவேண்டிய நிலையில் கால்நடை மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல. இப்போது நம்முடைய அரசாங்கம் சிறப்பு மருத்துவ முகாம்கள் அதாவது வருமுன் காப்போம் என்ற நிலையில் கிராமங்கள்தோறும் சென்று சிகிச்சை அளிக்கக்கூடிய நல்ல திட்டத்தைச் செயலாற்றி வருகின்றபோது இது அந்த மருத்துவர்களுக்கு அதிகப்படியான வேலைப்பளுவாக அமைகின்றது. அதிலேகூட அவர்கள் ஆர்வத்தோடு எந்தவிதமான கணக்கும் காட்டாமல் பணியாற்றுகின்றார்கள். எனவே கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்யக்கூடிய மருத்துவர்களுக்கு. இன்னும் ஆர்வத்தோடு அவர்கள் பணியாற்றக்கூடிய வகையில் ஆவன செய்ய வேண்டும். மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் வேண்டும் என்று கேட்டு அவர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும் இதைக் கருணையோடு பரிசீலித்து அவர்களுடைய நியாயமான கோரிக்கைக்கு நல்ல தீர்ப்பு வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை உதவி மருத்துவர்கள், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் கேட்டு தமிழக அரசிடம் கோரிக்கை

வைத்திருக்கிறார்கள். இப்போது கால்நடை மருத்துவப் பணியானது எவ்வளவு கடுமையான பணி என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அவர்கள் படித்தது 5½ ஆண்டுகள். வேலை நாட்கள்கூட ஒரு வாரத்தில் ஏறத்தாழ 7 நாட்களும் அவர்கள் பணிசெய்யக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. எனவே அவர்களுக்கு மத்திய அரசிலே கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியத்தைப்போல அந்த 1,500 ரூபாய் வேறுபாடு இருப்பதை நீக்கி ஊதியம் வழங்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1998 ஆம் ஆண்டு வள்ளுவர் கோட்டத்திலே அவர்களுடைய மாநாட்டிலே உரையாற்றுகிறபோது உங்களுடைய கோரிக்கை நிராகரிக்கப்படவில்லை, ஒத்திவைக்கப்பட்டுள்ளது, மனம் குளிரும்படி அறிவிப்பேன் என்று அப்போது அறிவித்தார்கள். எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உடனடியாக இந்தப் பிரச்சினையிலே தலையிட்டு கால்நடை உதவி மருத்துவர்கள் மனம் குளிரும்படி இந்த ஆண்டே அந்த ஊதிய முரண்பாட்டைச் சரி செய்து உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை உதவி மருத்துவர்கள் குறித்த பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் குமாரதாஸ், திரு. தாமரைக்கனி, திரு. சந்தானம், திரு. வேலாயுதன், திரு. தீரன் ஆகியோர் தங்களுடைய கருத்துகளையும், அவர்களுக்கு உடனடியாக உதவிட வேண்டும், ஒப்புதல் அளித்திட வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்திருக்கின்றார்கள். எப்போது வேண்டுகோள் வந்தாலும் முடியாத பட்சத்தில் அதை நேரடியாக நிராகரிக்கிறேன் என்று ஒரே வார்த்தையிலே சொல்வது, உண்மையான நிலை என்றாலும்கூட, நாகரீகமாக இருக்காது. அதனால்தான் அந்த நேரத்தில் அதைப் பரிசீலிக்கிறேன்; பரிசீலிக்கப்படும் என்கின்ற வார்த்தைகள் ஏற்கெனவே இருந்த அரசாங்கங்களால் நமக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பயன்படுத்துவதில் எந்தவிதத் தவறும் கிடையாது.

மனம் குளிரும்படியாக முடிவு எடுப்பேன் என்று சொன்னால் மனம் குளிர்வதும், குளிராததும் முடிவு எடுக்கின்றவர்களைப் பொறுத்தது அல்ல; மனம் உடையவர்களைப் பொறுத்தது. மனம் உடையவர்கள் குளிர்ந்திருப்பார்கள் என்கின்ற எண்ணத்தோடுதான் சில கருத்துகளைச் சொல்வது வாடிக்கை. அப்படிச் சொல்லப்பட்ட கருத்துகளை வைத்துக்கொண்டு மத்திய சர்க்காருடைய அலுவலர்களுடைய





ஊதியத்திற்கு இணையான சம்பளம் தருவதாகச் சொன்னீர்கள். ஆனால், தரவில்லை என்று குற்றஞ்சாட்டுவது பொருத்தம் உடையதல்ல. ஏனென்றால் இந்தியாவிலேயே மத்திய சர்க்காருடைய ஊழியர்களுக்குத் தரப்படும் சம்பளத்திற்குச் சமமான சம்பளத்தை மாநில அரசு அலுவலர்களுக்கு முதன்முதலாகத் தந்த அரசு இந்த அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள்.

முற்பகல் 10-45

குமாரதாஸ் அவர்கள் பேசும்போது 21,000 கோடியில் ஒரு கோடி என்ன பெரிதா என்று கேட்டார். ஒவ்வொரு கோடியாகச் சேர்ந்துதான் 21,000 கோடி என்பது அவருக்குத் தெரியாத கணக்கு அல்ல. இதனுடைய விளைவுகள்—Implications ஒரு பிரிவினருக்குக் கொடுத்தால் அதே பிரிவில் உள்ள மற்றவர்களும் அதையே கேட்க ஆரம்பிப்பார்கள் என்கிறபோது ஒரு கோடி இரண்டு கோடியாகி, இரண்டு கோடி நான்கு கோடியாகி— இப்பொழுதே 21,000 கோடி ரூபாயில், ஏறத்தாழ 10,000 கோடி ரூபாய் அரசு ஊழியர்களுடைய ஊதியத்திற்காகச் செலவிடப்படுகிறது— அது 14,000 15,000 கோடி என்று ஆகிவிட்டால், பிறகு 21,000 கோடியிலே மிச்சப்படுவது எவ்வளவு என்பதை நாம்தான் கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த நிலைகளையெல்லாம் யோசித்துத்தான் இதுபோன்ற விஷயங்களில் இறுதியாக ஒரு முடிவை நாம் எடுக்க வேண்டிய சூழ்நிலை அமைகின்றது. அதற்கிடையே அவசரப்பட்டு அல்லது காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவேண்டும்; சட்டமன்றம் நடக்கும்பொழுதே இதையெல்லாம் நாம் தீர்க்க வேண்டும்; போராட்டம் நடத்த வேண்டும் என்கின்ற ஒரு நிலையில் பொதுவாக எல்லா எதிர்க்கட்சிகளும் இத்தகைய போராட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளும். நானேகூட எதிர்க்கட்சியிலே இருந்தால், பயன்படுத்திக் கொள்ளத் தவறமாட்டேன். அதுதான் எதிர்க்கட்சியினுடைய இலக்கணம். அந்த இலக்கணப்படி எதிர்க்கட்சி நம்முடைய கோரிக்கையை எடுத்துக்கொண்டு வாதாடும் என்ற நம்பிக்கையோடு போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், கால்நடை உதவி மருத்துவர்கள், மத்திய அரசு அலுவலர்களுக்கு ஈடான ஊதிய விகிதம் அளிக்கப்படவில்லை என்பதற்காகப் போராட்டம் நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி ஊதிய விகிதத்தை

[கலைஞர் மு. கருணாநிதி] [2000 ஏப்ரல் 27

மாற்றுவதற்கு முன்பு கால்நடை உதவி மருத்துவர்களுடைய ஊதிய விகிதம் ரூ.2000-3,500 என்று இருந்தது. இதே ஊதிய விகிதம்தான் உதவிப் பொறியாளர், வேளாண்மை அலுவலர் ஆகியோருக்கும் வழங்கப்பட்டு வந்தது. கால்நடை உதவி மருத்துவர்களுடைய தற்போதைய ஊதிய விகிதம் ரூ.6500-ரூ11,100 என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். இதே ஊதிய விகிதம்தான் உதவிப் பொறியாளர், வேளாண்மை அலுவலர்கள் ஆகியவர்களுக்கும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அவர்கள் எந்தவிதமான போராட்டமும் நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய அரசிலே கால்நடை உதவி மருத்துவர் என்ற பதவியே கிடையாது. அங்கே கால்நடை மருத்துவர் என்ற பதவிதான் உள்ளது. அங்கே கால்நடை உதவி மருத்துவர் என்ற பதவியே இல்லாதபோது அதற்குச் சமமான ஊதியத்தை இங்கேயுள்ள கால்நடை உதவி மருத்துவர்களுக்கு எப்படித் தரமுடியும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். பேரவைத் தலைவருடைய அறையிலேகூட குமாரதாஸ் அவர்கள் என்னிடம் விவாதித்தபோது மத்திய அரசிலே கால்நடை உதவி மருத்துவர் பதவி இருக்கிறது என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகு நான் அந்தப் பட்டியலையே அதிகாரிகளிடம் பெற்றேன். மத்திய அரசிலே இந்த கால்நடைத் துறையிலே உள்ள பதவிகள், நுழைவுப் பதவிகள்; அதாவது ரூ8,000-13,500 என்ற அளவில், உதவி இயக்குநர்—அமைச்சகத்தில் பணிபுரிவோர்; கால்நடை மருத்துவர்—களப்பணியில் பணிபுரிபவர்; உதவிப் பேராசிரியர்—ஆசிரியர் பணிபுரிபவர்—ஆகிய பதவிகள்தான் இருக்கின்றனவே தவிர, கால்நடை உதவி மருத்துவர் என்ற பதவியே இல்லை. கால்நடை மருத்துவர் என்றுதான் அங்கே பதவி உள்ளது. அதைத்தவிர மத்திய அரசிலே இரண்டாம் நிலைப் பதவிகளிலே துணை இயக்குநர், மூன்றாம் நிலைப் பதவியிலே இணை இயக்குநர், நான்காம் நிலைப் பதவிகளிலே இயக்குநர் என்றுதான் பதவிகள் அங்கே இருக்கின்றனவே தவிர கால்நடை உதவி மருத்துவர் என்ற பதவியே இல்லாத சூழ்நிலையில் அங்கே கால்நடை உதவி மருத்துவர்களுக்குத் தரப்படுகின்ற அதே ஊதிய விகிதம் இங்கே தரப்படவேண்டும் என்று கேட்பது பொருத்தமான வாதமாக இல்லை.

தமிழகத்திலேயுள்ள கால்நடை உதவி மருத்துவர் பணிக்குத் தேவையான கல்வித் தகுதிதான் மத்திய அரசின் கால்நடை மருத்துவர் பதவிக்கும் என்பதால் மத்திய அரசிலே கால்நடை மருத்துவர் பணிக்கு வழங்கப்படும்



2000 ஏப்ரல் 27] [கலைஞர் மு. கருணாநிதி]

ரூ.8,000-13,500 என்ற ஊதிய விகிதத்தைத் தங்களுக்கும் வழங்க வேண்டுமென்று போராட்டம் நடத்துகிறார்கள். இது நியாயமாகத் தெரியவில்லை. ஏனென்றால், எம்.ஏ. படித்த ஒருவர் Inspector ஆகவும் இருக்கலாம்; Sub-Inspector ஆகவும் இருக்கலாம். அதற்காக படிப்பை வைத்து சம்பளத்தை வழங்க இயலாது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஓர் உண்மையாகும். இவர்களுடைய கோரிக்கையை ஏற்று இவர்களுடைய ஊதிய விகிதத்தை உயர்த்தினால், ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு முன் இவர்களுக்குச் சமமான ஊதியம் பெற்று வந்த உதவிப் பொறியாளர் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் தங்களுக்கும் இந்த ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று உடனே போராட்டம் நடத்தத் தொடங்கிவிடுவார்கள். இந்தச் சங்கடமும் அரசுக்கு இருக்கிறது. மத்திய அரசில் கால்நடை மருத்துவர்களுக்கு ஊதிய விகிதம் ரூ.8,000-ரூ.13,500. நமது மாநிலத்திலும் கால்நடை மருத்துவர் (Veterinary Surgeon) மற்றும் உதவி இயக்குநர் ஆகிய பதவிகளுக்கு மத்திய அரசில் உள்ளது போல் ரூ. 8,000-13,500 என்ற ஊதிய விகிதம்தான் இப்பொழுதும் வழங்கப்பட்டு வருகின்றது. அதிலே எந்தவிதமான வேறுபாடும் காட்டவில்லை.

முற்பகல் 10-50

தமிழகத்திலே கால்நடை உதவி மருத்துவர்கள் பணியிலே இருப்பவர்கள்தான் பதவி உயர்வு பெற்று கால்நடை மருத்துவர்களாகவும் உதவி இயக்குநர்களாகவும் வருகிறார்கள். எனவே கால்நடை உதவி மருத்துவர்களுக்கு ரூ.6,500-11,100 என்ற ஊதிய விகிதமும் அவர்கள் பதவி உயர்வு பெற்று கால்நடை மருத்துவர்களாக ஆகும்போது மத்திய அரசிலே கால்நடை மருத்துவர்களுக்குத் தரப்படும் அதே ஊதிய விகிதமும் தரப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், சில கால்நடை உதவி மருத்துவர்கள், தங்களது ஊதிய விகிதத்தை ரூ.6500-ரூ.11,100 என்பதில் இருந்து ரூ.8,000 - 13,500 எனத் திருத்தி வழங்க வேண்டி தமிழ்நாடு தீர்ப்பாயத்திலே வழக்கு ஒன்றும் தொடர்ந்திருக்கிறார்கள். இதற்கு அரசின் சார்பிலே எதிர்மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கால்நடை உதவி மருத்துவர்களைவிட உதவி மருத்துவர்கள் (Assistant Surgeons) எப்போதும் ஒரு நிலை கூடுதலாகவே ஊதியம் பெற்று வருகிறார்கள். தற்போது கால்நடை உதவி மருத்துவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அவர்களுடைய ஊதிய விகிதத்தை உயர்த்தினால் உடனே உதவி மருத்துவர்கள் தற்போது பெற்றுவரும் ஊதிய விகிதத்தைவிட தங்களுக்கு மேலும் ஒரு நிலை ஊதிய விகிதத்திலே உயர்த்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கத்

தயங்கமாட்டார்கள். இப்படிப்பட்ட தர்மசங்கடமான சூழ்நிலைகள் எல்லாம் வரும். எனவே நான் கால்நடை உதவி மருத்துவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்: உங்களுக்காக இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் தொடங்கி திரு. தீரன் வரையிலே பேசியிருக்கிறார்கள்; இந்த அனுதாபம் என்றைக்கும் அவர்களோடு சேர்ந்து இந்த அரசுக்கும் இருக்கும் என்று கூறிக்கொண்டு கால்நடை உதவி மருத்துவர்கள் இதற்குப் பிறகாவது தங்களுடைய போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேளுங்கள்.

***திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது பரிசீலிக்கப்படும் என்கிற வார்த்தைக்கு அவ்வளவுதான் என்கிற பொருள்படுகிற மாதிரிச் சொன்னார்கள். அது முடிந்துபோன விஷயம் என்கிற மாதிரிச் சொன்னார்கள் சட்டமன்றத்திலே பல கேள்விகளை நாங்கள் கேட்கிறோம். அமைச்சர்கள் அவையெல்லாம் பரிசீலிக்கப்படும் என்று சொன்னவுடன் நம்பிக்கையாக நாங்கள் அமர்கிறோம். அதுமட்டுமல்ல, நீங்களே ஒரு குழு அமைத்திருக்கிறீர்கள், உறுதிமொழிக் குழு என்று. அந்த உறுதிமொழிக் குழுவிலேகூட, அமைச்சர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன்னால், அதை அரசாங்கம் ஒத்துக்கொண்டதாகப் பொருள் என்று நீங்கள் அதிலே விளக்கம் அளித்திருக்கிறீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நானா?

**திரு. ச. அழகிரி:** அதாவது பேரவையினுடைய உறுதிமொழிக் குழுவிலே அப்படி இருக்கிறது. எனவே பரிசீலிக்கப்படும் என்பதற்கு அரசாங்கத்தினுடைய பொருள் என்ன? அவர்களுடைய அகராதியிலே என்ன பொருள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இப்போது அவருக்கு வேறொன்றும் பிரச்சினை இல்லை. பரிசீலனை என்றால் என்ன பொருள் என்று கேட்கிறார். இதற்குப் பொருள் ஆய்வு செய்தல் என்பதாகும். நிறைவேற்றப்படும் என்று பொருள் அல்ல; ஆய்வு செய்யப்படும் என்பதுதான் பொருள்.



## 3. கவன ஈர்ப்பு

## கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு, ஏழுதேசம் பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-இன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. டி. மணி, திரு. ஜே. ஹேமச்சந்திரன் ஆகியோர், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், கொல்லங்கோடு, ஏழுதேசம் பேரூராட்சிகளில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் விரைவில் முடிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

கன்னியாகுமரி மாவட்டத்தில் கொல்லங்கோடு, ஏழுதேசம் ஊரகப் பேரூராட்சிகள் மற்றும் 21 வழியோரக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்குத் திருத்திய நிர்வாக ஒப்புதல், ரூ. 472.50 இலட்சத்திற்கு 19-5-1998 அன்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தொழில்நுட்பக் குழுவினால் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் முடிக்கப்பட்டுள்ளன:-

(1) குழித்துறை ஆற்றில் 3.5 மீ. விட்டமுள்ள 5 நீர் உறிஞ்சு கிணறுகளும் ஆற்றுப் படுகையில் 300 மீட்டர் நீளத்திற்கு இணைப்புக் குழாய்களும் முடிக்கப்பட்டுள்ளன.

(2) ஆற்றின் கரையில் 1.20 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரை மட்ட நீர்த் தேக்கத் தொட்டியும், விசை இறைப்பான் கட்டுப்பாட்டு அறையும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

[திரு. கோ.சி. மணி] [2000 ஏப்ரல் 27

(3) இடைப்பட்ட நீர் சேகரிப்புத் தொட்டி மற்றும் நீர் உந்து நிலையம், நீர் ஏற்று இயந்திர அறை அமைத்தல் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

(4) பகிர்மானக் குழாய் பதிக்கும் பணிகளில் மொத்தம் 57,130 மீ நீளத்தில் 55,290 மீட்டர் நீளத்திற்குக் குழாய் பதிக்கும் பணி முடிவடைந்துள்ளது.

(5) மொத்தமுள்ள 6 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணிகளில் 4 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 2 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

(6) நீருந்து குழாய் பதிக்கும் பணியில் 24,385 மீட்டர் நீளத்தில் 19,165 மீ. நீளத்திற்கு குழாய் பதிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

இக்குடிநீர்த் திட்டப் பணிகள் குறிப்பிட்ட காலவரைக்குள் முழுமையாக முடிவடையாததற்கு இத்திட்டத்தில் உள்ள மொத்தம் 23 உட்பிரிவுப் பணிகளில், 350 மி.மீ. கான்கிரீட் குழாய்ப் பணி, நீரேற்று இயந்திரப் பணி, உயர்நிலைத் தொட்டிப் பணி ஆகிய மூன்று உட்பிரிவு பணிகளில் ஏற்பட்ட காலதாமதமே காரணமாகும்.

அ. **350 மி.மீ கான்கிரீட் குழாய் பதித்தல் பணி:**

5,920 மீ. நீளத்திற்கு 350 மி.மீ. விட்டமுள்ள முன்உறுதி செய்யப்பட்ட கான்கிரீட் பிரதானக் குழாய்கள் பதிக்கும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி 5-10-1998 கடைசி நாளாக வைத்துக் கோரப்பட்டது. இதற்கு ஒரு நபர் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டதாலும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி 18 விழுக்காடு கூடுதலாக இருந்ததாலும் இந்த ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டது.

மீண்டும் 18-12-1998 அன்று கடைசி நாளாகக் கொண்டு இரண்டாவது அழைப்பாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. இரண்டாவது அழைப்பில் யாரிடமிருந்தும் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. மூன்றாவது அழைப்பாக 29-1-1999 அன்று கடைசி நாளாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இந்த அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 30-7-1999 அன்று ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டன.

இப்போது இந்தப் பிரதான குழாய் பதிக்கும் பணிகளில் 5,920 மீ. நீளம் குழாய்கள் தயாரிக்கப்பட்டுப் பணித்தளத்திற்குக் கொண்டு



2000 ஏப்ரல் 27] [திரு. கோ.சி. மணி]

வரப்பட்டு, 305 மீ. நீளத்திற்குக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5.6 கிலோ மீட்டர் குழாய் பதிக்கும் பணிகள் இன்னும் மூன்று மாத காலத்திற்குள் முடிவடையும்.

(ஆ) தலைமைப் பணியிடம் மற்றும் நீர் உந்து நிலையத்தில் நீர் இறைப்பான் வழங்கி அவற்றினைப் பொருத்தும் பணிக்கு (14 எண்ணம்) 18-12-1998, 10-2-1999, 22-8-1999 ஆகிய நாட்களைக் கடைசி நாளாகக் கொண்டு மூன்று முறை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. மூன்று முறையும் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் பெறப்படவில்லை. எனவே திருத்திய மதிப்பீட்டின்படி நான்காவது முறையாக 15-3-2000 அன்று கடைசி நாளாகக் கொண்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தற்சமயம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணி 8/2000-க்குள் முடிவடையும்.

**(இ) உயர்நிலைத் தொட்டிப் பணிகள்**

**(i) கொல்லங்கோடு பேரூராட்சியில் 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர்நிலைத் தொட்டிப்பணி**

ஒப்பந்தப்புள்ளி பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டதால் பணி ஏற்பு ஆணை 23-4-1999 அன்றுதான் வழங்க முடிந்தது. இப்பணி இப்போது தூண்கள் முடிவுற்ற நிலையில் தொட்டிக்கான கற்காரை இடும் அளவிற்கு வளர்ந்துள்ளது. மிகுதிப் பணி இன்னும் இரு மாதங்களில் முடிவடையும்.

**(ii) கொல்லங்கோடு பேரூராட்சியில் 5.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள உயர்நிலைத் தொட்டிப் பணி**

இத்தொட்டிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கெனவே இறுதி செய்யப்பட்ட நிலையில் இப்பணிக்கான அடிமட்ட அஸ்திவாரத்தில் தளம் அழுத்துச் சோதனை செய்து பார்த்ததில் தாங்கு சக்தி சரியாக இல்லாததால் அடிமட்ட கற்காரை வடிவமைப்பினை இருக்கின்ற தாங்கு சக்திக்காகத் திருத்தி அமைத்து பணி தொடங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. 6/1999-இல் பணி தொடங்கி தூண்கள் கட்டும் நிலை வரை வந்துள்ளது. இப்பணி இன்னும் மூன்று மாத காலத்திற்குள் முடிவடையும்.

**(iii) ஆலங்கோடு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டிப் பணி**

இத்தொட்டிக்கான இடம், ஆறுதேசம் கிராமத்தில் சர்வே எண் 118/8-ல் தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருந்து அன்னார் அந்த

இடத்தைத் தானமாகத் தருவதாக முதலில் சம்மதம் தெரிவித்து பின்னர் தர மறுத்து வழக்குத் தொடர்ந்துள்ளார். மாற்று இடம் தேர்தெடுப்பதில் தாமதம் ஏற்பட்டதால் பணி தாமதப்பட்டன.

மேற்குறிப்பிட்ட பல வகையான இடர்ப்பாடுகளைக் கடந்து திட்டம் செயல்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாலும் முன்னாளில் கடைப்பிடிக்கப்பட்ட பகுதி பகுதியாக ஒப்பந்தம் நிர்ணயம் செய்வதில் ஏற்பட்ட தாமதத்தினாலும் கொல்லங்கோடு, ஏழுதேசம் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் எஞ்சியுள்ள அனைத்துப் பணிகளும் ஜூலை மாதம் (7/2000) இறுதிக்குள் முடிக்கப்பட்டு இத்திட்டம் மக்களின் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நீண்ட விவர அறிக்கை தரப்பட்டிருக்கிறது. இதற்கு முறைப்படி இரண்டு கேள்விகள் என்று இருந்தாலும் சில விவரங்களைச் சொல்வதற்கு எனக்குச் சிறிது நேரம் தரவேண்டுமென்று நான் முதலிலே கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இது 1994-95-இல் அடிக்கல் நாட்டப்பட்ட திட்டம்; 1998-இல் இதனுடைய ஒப்புதலைத் தந்து அதற்குரிய நிதியை ஒதுக்கினார்கள். தற்போது ஒப்பந்தக்காரர்கள் சரிவர இல்லை என்று பலவேறு காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு உள்ளே இருக்கும் குறைபாடு என்பது 1998-லே ஆரம்பிக்கப்பட்டு 2000-லே முடிவடைய வில்லை. ஆனால் கடந்த வாரத்திலேதான் அதற்கான பெரிய குழாய்களை மண்ணுக்குள்ளே புதைக்கின்ற வேலையை ஆரம்பித்திருக்கிறார்கள்.

விலைவாசி ஏற்றத்தினுடைய பின்னணியில், இதனுடைய விலைகள் முழுவதும் ஏறியிருக்கின்றன. இதிலே பொருட்களினுடைய விலை, தொழிலாளிகளுடைய சம்பள உயர்வு, இதெல்லாம் வருகின்ற போது இதிலேகூடத் தீர்மா என்பது இன்னொரு கேள்வியாக உள்ளது. இருந்தாலும்கூட விரைந்து செயல்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். இப்போது ஒரு கால அளவைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கால அளவிற்குள்ளே இந்தத் திட்டத்தை அமலாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



முற்பகல் 10-55

அதற்குள்ளே இருக்கின்ற இன்னொரு சங்கடம் தாமிரபரணி ஆற்றுக்கு உள்ளே 5 கிணறுகள் எடுத்திருக்கிறார்கள். அந்தக் கிணற்றினுடைய வேலைகள் எல்லாம் முடிவடைந்துவிட்டன. ஆனால் இந்தத் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னால் அந்தக் கிணறுகள் பாழடையக்கூடிய ஒரு துரதிருஷ்டமான நிலை அந்தப் பகுதியிலே இருக்கிறது. எனவே, அந்தக் கிணறுகளைப் பாதுகாத்துக்கொள்வதற்கு ராட்சதக் கற்களை, கிரேன் மூலமாக, அதனுடைய சுற்று வட்டாரத்திலே இடுவதன் மூலமாகத்தான் அந்தக் குடிநீர் கிணறுகளைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். அந்த வகையிலே இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

அதுபோன்று மின்சாரத் துறை, மிக்க கவனம் செலுத்தினால் மட்டும்தான் உரிய நேரத்தில் இதற்கு இணைப்புகளைத் தர இயலும். அதையும்கூட செய்வதன் மூலமாகத்தான் இந்த ஆறு மாதத்திற்குள்ளே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியிருக்கின்ற, இந்தக் கால அளவுக்குள்ளே, இந்தத் திட்டம் முடிவடையும் என்று கருதுகின்றேன். அந்த அடிப்படையிலே விரைந்து செயல்பட்டு இந்தக் குடிநீர்ப் பற்றாக்குறையை இந்த இரண்டு பெரிய வருவாய்க் கிராமத்திற்குள்ளே முடித்துத் தரும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் இங்கே குறிப்பிட்டது; சில நேரங்களில், இவற்றையெல்லாம் தனித்தனியாகச் சொல்லியிருக்கிறார்கள். கடைசியில் அவற்றை, கன்னியாகுமரி மாவட்டத்தில் கொல்லங்கோடு முதல் ஏழுதேசம் வரையிலுள்ள குடிநீர்ப் பற்றாக்குறைப் பிரச்சினை எனத் தொகுத்து, ஒரு கவன ஈர்ப்பாக அவர்கள் தந்தார்கள். ஆனால் அவர்கள் என்னுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு முன்னாலேயே பலமுறை தெரிவித்ததன் அடிப்படையில் நான் அதிகாரிகளுடைய கவனத்தை ஈர்த்துவிட்டேன். ஆகையினால் சற்றுச் சுலபமாகவே இந்தப் பணி முடிவடையும் என்று தற்போது நான் நம்பியிருக்கிறேன். காரணம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இரண்டு முக்கியமான பிரச்சினை; ஒன்று பொருட்களின் விலை ஏற்றத்தால்—அவர்கள் உரிய மதிப்பீட்டின் பேரில்—ஒப்பந்தக்காரர் வருவதற்கு தாமதித்தது; அதனால் சில நேரங்களில் தடை ஏற்பட்டதும் உண்டு. அதற்குப்பிறகு அவை

[திரு. கோ.சி. மணி] [2000 ஏப்ரல் 27

திருத்தப்பட்டு உண்மையான விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என்று ஒரு பொதுவான முடிவு தமிழ்நாடு பூராவிலும் எடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் பிறகு ஒப்பந்தம் கோரப்பட்டு தற்போது அந்த ஒப்பந்தம் பெறப்பட்டிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. கூடுமானவரை தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று நேற்றைய முன்தினம்கூட நம்முடைய தலைமைப் பொறியாளருக்குத் தொலைபேசி மூலம் என்னுடைய அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதை ஏதோ கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள், அதற்கான ஒரு பதிலை அளித்திருக்கிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் இருவரும் கருத வேண்டாம். உள்ளபடியே நான் குறிப்பிட்டிருக்கின்ற மாதத்தைத் தாண்டி ஓரிரு மாதங்கள் சென்றால் செல்லலாமே தவிர, நிச்சயமாக இந்த 7-வது மாதத்தில் இந்தப் பணியை முடிக்க வேண்டும் என்றுதான் அந்தப் பணியிலே அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றுதான் நான் அறிவித்திருக்கிறேன். பண வசதி மற்ற வசதிகள் அத்தனையும் அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே ஒன்றே ஒன்று புதிது. அங்கே, ஆற்றில் அமைக்கப்பட்டிருக்கின்ற கேணிகளுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை இப்போது அவர்கள் புதிதாக மன்றத்திலே வலியுறுத்தியிருக்கிறார்கள். அதையும் நான் அவர்களிடத்திலே கலந்து, தேவையானால் அந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள இருக்கிறேன். வருகிற 10-ஆம் தேதி இந்தத் துறையின் மானியக் கோரிக்கைகள் முடிவடைந்த பிறகு அதற்கான ஒரு தனிக் கூட்டத்தையும் ஏற்பாடு செய்து கன்னியாகுமரி மாவட்டத்தில் எங்கெங்கே இப்படிப்பட்ட நிலை இருக்கிறது என்பதை ஆய்வு செய்யச் சொல்லி இருக்கிறேன். ஒட்டுமொத்தமாக, நம்முடைய கன்னியாகுமரி, திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கும் தனியாக ஆய்வுப் பணியைத் தொடங்க இருக்கிறார்கள். அது முடிவுற்ற பிறகு மற்றப் பணிகளைப் பற்றியும் விவரமாக அறிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கை அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. வ. வேலுசாமி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.



2000 ஏப்ரல் 27]

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பன்னிரெண்டாவது முதல் நூற்றுப் பதினாறாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2000-2001, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம்**

**(ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்**

**(இ) கோரிக்கை எண் 37—சுற்றுச்சூழல்**

### (அ) கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2000-2001 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். கோரிக்கை எண் 13 - நீதி நிருவாகம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.141,55,37,000-க்கு மேற்படாத் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1703, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் உயர்நீதிமன்றக் கிளை ஒன்றினை நிறுவ வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1961, திரு. நா. பெரியசாமி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4454, திரு. ஐ. கணேசன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1315, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் நீதிமன்ற வளாகத்தில் கூடுதல் நீதிமன்றக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1815, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் நகராட்சியில் புதிதாகக் குற்றவியல் நீதிமன்றம் தொடங்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2091, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடங்களில்



நீதிபதிகளை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1554, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டத்தில், நீதிமன்றங்களில் அதிகமான வழக்குகள் நிலுவையில் உள்ளதால், அங்கு மேலும் அதிக நீதிபதிகளை நியமித்து, வழக்குகளை உடனே முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1206, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தண்டராம்பட்டில் சார்பு நீதிமன்றம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்.** வெட்டுத் தீர்மானம் எண் 3464, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரங்கிப்பேட்டையில் உள்ள உரிமையியல் நீதிமன்றத்தை தனி இடத்தில் செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8767, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் குற்றவியல் நீதிமன்றம் அமைப்பதற்கான அனைத்துப் பணிகளும் முடிந்துள்ள நிலையில் அதனை உடனே திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1383, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker Sir, 'To discuss the need to appoint more Judges for early disposal of civil and Criminal cases pending in the State', I move—

"That the sum of Rs.141,55,37,000/- allocated under Demand No.13--Administration of Justice, be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3640, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2730, டாக்டர் க. கிருஷ்ணசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2380, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1469, திரு. வி.கே. லட்சுமணன்.



**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உரிமையியல் பாதுகாப்புச் சட்டத்தின் கூறுகளை (Protection of Civil Rights Act) தவறுதலாகப் பயன்படுத்துவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3267, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள நீதிமன்றங்களில் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் உள்ள நீதிபதி பணியிடங்களை விரைவில் நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 141,55,37,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2335, திரு. ச. புரட்சிமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4041, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் காலியாகவுள்ள அரசு வழக்கறிஞர் பணி, ஜட்ஜ், முன்சீப் போன்ற பணிகளுக்கு விரைவாக நியமனம் செய்ய வேண்டிதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 141,55,37,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2824, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிமடம் தொகுதி செந்துறையில் சப்கோர்ட் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.141,55,37,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2909, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து நீதிமன்றங்களிலும் காலியாக உள்ள நீதிபதிகளின் பணி இடங்களை நிரப்புவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 141,55,37,000-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 14 - சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14, சிறைச்சாலைகள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.55,87,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1700, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் உள்ள ஆண்கள், பெண்கள் மத்திய சிறைச் சாலைகளில் உள்ள குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க பாலாற்றில் புதிய கிணறு வெட்டி குடிநீர் சப்ளை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1963, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டத்தில் மத்திய சிறை வளாகம் ஒன்று அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1413, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் கிளைச் சிறைச்சாலையை சுகாதார முறையில் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1812, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைக்காவலர்கள் மற்றும் பணியாளர்களின் ஊதிய உயர்வு குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2097, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1559, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி நகரில் உள்ள கிளைச் சிறையில் குடிநீர் வசதி, கழிப்பிட வசதி போன்ற வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1203, திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகளுக்குத் தரமான உணவு வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3406, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலை அறைகளில் காற்றோட்டமும், குடிநீர் வசதியும் செய்து தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2768, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கையில் பழமையான கட்டடத்தில் உள்ள துணைச் சிறைச்சாலைக்கு நவீன வசதிகளோடு கூடிய புதிய கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1381, திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, 'To discuss the need to instal T.V. sets in all jails in Tamil Nadu', I move—

"That the sum of Rs.55,87,70,000/- allocated under Demand No.14 - Jails be reduced by Rs.100/-."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2381, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4044, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விசாரணைக் கைதிகளுக்குத் தனிச் சிறைச்சாலை அமைப்பதுபற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3059, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள சிறைச்சாலைகளில் கொசுத் தொல்லையை ஒழிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1753, திரு. ஜே.எம். ஆரூன் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3657, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் தரமான உணவுப் பொருட்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.55,87,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1470, திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை மத்திய சிறைச்சாலையைப் புழலுக்கு மாற்றுவது போன்று,



கோவை சிறைச்சாலையையும் புறநகர்ப் பகுதிக்கு மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3615, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாளையங்கோட்டை சிறைச்சாலையில் கைதிகளுக்கும், சிறை அதிகாரிகளுக்கும் இடையே அடிக்கடி நடந்து கொண்டிருக்கிற மோதல்களைத் தடுக்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1878, திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி கிளைச் சிறைச்சாலையில் குடிநீர் இணைப்பு கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.55,87,70,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (இ) கோரிக்கை எண் 37 - சுற்றுச்சூழல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37—சுற்றுச்சூழல், மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.8,86,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்." எனக் கோருகிறேன்:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1985, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்திலுள்ள தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் சேர்த்து ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4162, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலிதீன் பை மற்றும் பாக்கெட் காகிதங்களால் சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்படுவதைத் தடுக்க அவற்றின் உற்பத்தியைத் தடைசெய்ய வேண்டியதன் அவசியம்பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2873, திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூரில் அமைக்கப்பட்டுள்ள எட்டு பொது சுத்திகரிப்பு நிலையங்களின் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்ட நிலையில் அவற்றை விரைவில் இயக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3572, திரு வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2239, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2633, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி நகரில் கழிவு நீரைத் தெருக்களில் விட்டுச் சுற்றுச்சூழலைப் பாதிப்புக்கு உள்ளாக்குபவர்கள்மீது நகராட்சி மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3522, திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள இறால் பண்ணைகளினால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3723, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2400, திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3713, திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம் பாபநாசம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இடங்களில் மரங்களை நட்டு சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1747, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாநகராட்சி நாள்தோறும் கழிவுப் பொருட்களை எரித்து விண்வெளியை மாசுபடுத்துவதனைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3422, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதியில் காடு வளர்ப்பதற்குப் பொது மக்கள் பெரிதும் ஈடுபாடு கொள்ளச் செய்யும் வகையில் நடைமுறைகளை உருவாக்கும் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2814, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2785, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3146, திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச்சூழல் பற்றிய 37 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,86,12,000-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் முதலிலே கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் ஆகியவை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்.

@ 449 முதல் 493 வரையிலான பக்கங்களின் இணைப்புகள் I, II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @@ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று 10 உறுப்பினர்கள் பேச இருக்கின்றார்கள். விவாதத்தைத் தொடங்கி வைப்பவருக்கு 15 நிமிடங்கள் கொடுக்கப்படும். மற்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் 10 நிமிடங்கள் வீதம்தான் கொடுக்க முடியும் என்று தெரிவித்துக்கொண்டு திரு. சி. ஞானசேகரன் அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச்சாலைகள் நிருவாகம், சுற்றுச்சூழல் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

முதலிலே மாசுக் கட்டுப்பாடு வாரியத்திலே நடக்கக்கூடிய சில நிகழ்வுகளை இந்த அரசுக்கும் இந்த அவையினுடைய கவனத்திற்கும் கொண்டுவருவது என்னுடைய தலையாய கடமையாகும். மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் 142 பேருக்கு வீட்டுமனைகள் வாங்கித் தருவதாகவும் அல்லது வீடுகள் கட்டித் தருவதாகவும் சொல்லி முதலில் ஹட்கோவிலிருந்து 80 சதவீதமும் வாரியத்திலேயிருந்து 20 சதவீதமும் பணத்தை அளித்து சிலபேருக்கு ரூ.50,000-மும் சிலபேருக்கு ரூ.75,000-மும் கடன் அளிப்பதாகச் சொல்லி முதலிலே சில திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். பிறகு ஹட்கோ பணம் கொடுக்காமல் கைவிரித்துவிட்ட காரணத்தினால் மாசுக்கட்டுப்பாடு வாரியமே பஞ்சாப் நேஷனல் வங்கியிலேயிருந்து இவர்களுக்கு எல்லாம் பணத்தைக் கடனாகப் பெற்றுத் தந்து மாதா மாதம் பிடித்தம் செய்வதாகவும் சொல்லி சுற்றறிக்கை அனுப்பி அதன் அடிப்படையில் சத்தியமூர்த்தி கூட்டுறவுச் சங்கம் ஆரம்பித்து சில நபர்களை அனுப்பி அங்கே மனுக்களைப் பெற்று ரூ.85 லட்சத்திற்கு மேல் பஞ்சாப் நேஷனல் வங்கியிலிருந்து கடனாகப் பெற்று

@@ 494 முதல் 529 வரையிலான பக்கங்களின் இணைப்புகள் III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

அந்த சத்தியமூர்த்தி கூட்டுறவுச் சங்கம் இன்று ஏப்பம் விட்டிருக்கிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கம் அதை அப்படியே ஒரு promoter ஆனந்தன் என்பவருக்குக் கொடுத்து விட்டதாகச் சொல்கிறார்கள். அங்கு மனையோ நிலமோ வாங்கப்படவில்லை. நில உரிமையாளர் ஞானசுந்தரம் என்பவர் நான் நிலத்தை விற்கவில்லை. யாரும் இந்த நிலத்தை வாங்காதீர்கள் என்று Noticeஐ அனுப்பியிருக்கிறார். நிலமே வாங்கப்படாத நிலையில் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் கூட்ட அரங்கத்தில் அவர்கள் கூட்டத்தைக் கூட்டி மனைகளை ஒதுக்குவதாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்திலே பணிபுரியக்கூடிய திட்டப் பிரதிநிதி கே.இ. மோகனன், எம்.காம். என்பவரும், அதேபோல் துணை இயக்குநர் (கணக்கு) கண்ணன் என்பவரும் சில நிரந்தரமில்லாத பணியாளர்களுக்கு தற்காலிகமாகப் பணி செய்து கொண்டிருப்பவர்களுக்கு எல்லாம் சம்பளச் சான்றை அளித்து அவர்கள் அதனுடைய அடிப்படையில் ஒரு பெரிய மோசடியைச் செய்து இன்று ரூ.85 லட்சத்திற்கு மேலே ஏப்பம் விட்டு அந்தத் தொழிலாளர்கள் அதற்கான பணத்தைக் கட்ட வேண்டுமென்று சொல்லி ரூ.12 லட்சத்தை அவர்கள் கட்ட வேண்டியிருக்கிறது. சம்பளத்திலே பிடித்தம் செய்ய இருக்கிறோம் என்று இன்று பஞ்சாப் நேஷனல் வங்கி சொல்கிறது என்று சொன்னால் சுற்றறிக்கையை மாசுக்கட்டுப்பாடு வாரியமே அனுப்பி இன்று தொழிலாளர்களை ஏமாற்றக்கூடிய நிலையில் இருக்கிறது என்று சொல்கிறபோது இது இன்னும் எவ்வளவு ஊழல்களை இந்தத் துறையிலே செய்யாது என்பதை நான் இங்கே அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின்மீது குற்றம் சுமத்துகின்ற காரணத்தினாலே சில விளக்கங்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மாசு கட்டுப்பாடு வாரிய ஊழியர்கள் தங்களுக்கு வீட்டுமனை ஒதுக்க வேண்டும் வீடு கட்டுவதற்குக் கடன் வேண்டும் என்று சொல்லி அரசுக்கு விண்ணப்பம் செய்தார்கள். அரசாங்கம் அவர்களுக்குக் கடன் கொடுக்க முடியாது என்று திருப்பி அனுப்பிவிட்டது. அதறகுப் பிறகு அந்த வாரியத்திலே உள்ள உறுப்பினர்கள் எங்களுக்கு சத்தியமூர்த்தி கூட்டுறவுச் சங்கம் வீட்டுமனை ஒதுக்கி வீடு கட்டித்தர முன் வருகிறது. எனவே



நீங்கள் அதற்குப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது வாரியம் வங்கி மூலம் அவர்களிடத்தில் negotiation செய்தார்கள். பஞ்சாப் நேஷனல் வங்கி 84 இலட்சத்து 50,000 ரூபாய் கடன் கொடுப்பதற்கு முன் வந்தது. 1999 மார்ச் மாதம் முதற்கொண்டு ஜூலை மாதம் வரையிலே அந்தப் பணத்தை அவர்கள் கடனாக உறுப்பினர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் சங்கம் மூலமாக. அதற்குப் பிறகு நிலமே வாங்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குற்றம் சுமத்துகிறார்கள். அந்த சத்தியமூர்த்தி கூட்டுறவுச் சங்கம் நிலத்தை வாங்கியிருக்கிறது. பதிவு எண் 2642, நாள் 14-5-1999-ல் 1.96 ஏக்கர் 3 இலட்சத்து 52 ஆயிரத்து 800 ரூபாய்க்கும் பதிவு எண் 2644, நாள் 14-5-1999-ல் 1.40 ஏக்கர் 2 இலட்சத்து 52,000 ரூபாய்க்கும் பதிவு எண் 2643, நாள் 4-8-1999-ல் 79 சென்ட் 1 இலட்சத்து 42 ஆயிரத்து 200 ரூபாய்க்கும் பதிவு எண் 497, நாள் 28-2-2000-ல் 23 சென்ட் 57 ஆயிரத்து 600 ரூபாய்க்கும் பதிவு எண் 725, நாள் 14-3-2000-ல் 93 சென்ட் 2 இலட்சத்து 32 ஆயிரத்து 500 ரூபாய்க்கும் பதிவு எண் 726 நாள் 16-3-2000-ல் 2 ஏக்கர் 36 சென்ட் 5 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய்க்கும் ஆக 7 ஏக்கர் 67 சென்ட் 16 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய்க்கு நிலம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப்போல அந்த நிலத்தை மேம்பாடு செய்து சாலை அமைத்து உறுப்பினர்களுக்கு அந்த வீட்டுமனைகளை ஒதுக்கியிருக்க வேண்டும். அதை அந்தக் கூட்டுறவுச் சங்கம் செய்வதிலே காலம் கடந்துவிட்டது. 6 மாத காலம் அது வீணாக நேரத்தை வீணடித்து இருக்கிறது. அது தவறுதான். அரசாங்கத்திற்கும் அதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மாசுக் கட்டுப்பாடு வாரியம் இதற்காக ஓரே ஒரு ரூபாய்கூடத் தொழிலாளர்களுக்குப் பணம் தரவில்லை. இதைக் கொடுத்தது பஞ்சாப் நேஷனல் வங்கி; அவர்கள் வாங்கியிருப்பது கடனாக; திருப்பிச் செலுத்த வேண்டும் என்று இந்த வங்கி கேட்கிறது. இப்போது ஊழியர்கள் நாங்கள் பணம் செலுத்த மாட்டோம் என்கிறார்கள். ஆனால் சத்தியமூர்த்தி கூட்டுறவுச் சங்கம் நாங்கள் வட்டியையும் பணத்தையும் செலுத்திவிடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் அந்தக் கூட்டுறவுச் சங்கம் காலம் கடத்தியது தவறு என்று இந்த அரசாங்கம் கருதி அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூட்டுறவு இலாகாவிற்கு அறிவுரை வழங்கியிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நிலத்தை வாங்கியிருக்கக்கூடிய society அதாவது ஆனந்தன் என்கிற promoter மூலமாக வாங்கிய society வெறும் 31 இலட்சம் ரூபாயைத்தான் எங்களுக்குக் கொடுத்து இருக்கிறார்கள்; மீதித்

தொகைக்கு அவர்கள் ஒரு காசோலை கொடுத்தார்கள்; அது bounce ஆகி விட்டது; dis-honour ஆகிவிட்டது; ஆகவே இதிலே Criminal Court-லும், Civil Court-லும் வழக்குத் தொடுத்திருக்கிறோம் என்று Member Secretary, Pollution Control Board-க்கு 20-4-2000 அன்று ஒரு Notice அனுப்பியிருக்கிறார், அந்த நிலத்தினுடைய சொந்தக்காரர் ஞானசுந்தரம் என்பவர். இப்போது நிலமே இல்லாதபோது அங்கேயிருக்கக்கூடிய சத்தியமூர்த்தி கூட்டுறவு கட்டடச் சங்கம் என்ற பெயரால் உள்ள சங்கம் வீட்டுமனைகளுக்கு எண் கொடுத்து ஒதுக்கீட்டு ஆணை வழங்கும் விழா என்று ஒரு விழாவே நடத்தியிருக்கிறார்கள். சட்டியிலே இருந்தால் தானே அகப்பையிலே வரும். அந்த இடத்திலே நிலமே வாங்கப்படவில்லை; நிலத்தை வாங்கியதாகச் சொல்கிறார்கள். அதாவது இப்பொழுதுதான் மேம்பாடு செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். நிலமே இப்போது Civil மற்றும் criminal வழக்குகளிலே dispute-ல இருக்கிற காரணத்தினாலே இவர்களுடைய கைக்கே வரவில்லை. 2 கூட்டங்களை மாசுக் கட்டுப்பாடு வாரியக் கூட்ட அரங்கத்தில் நடத்தியிருக்கிறார்கள். அதிலே promoter, நான் பணத்தைக் கொடுத்து ஏமாந்துவிட்டேன், முடியவில்லை என்று சொல்லியிருக்கிறார். நிலச்சொந்தக்காரர் நிலத்தைக் கொடுக்கமாட்டேன் என்று வழக்குத் தொடுத்திருக்கிறார். இந்தச் சூழ்நிலையில் நாங்கள் கேட்பதெல்லாம் தவறான செய்தி அவைக்குத் தந்து . . . .

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தவறான செய்தி தரவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் இதில் அரசாங்கம் நேரடியாக ஈடுபடவில்லை. ஒரு கூட்டுறவுச் சங்கம் வாங்கியிருக்கிற நிலம்; அவர்கள் அரசாங்கத்திற்கு பதிவு எண் உட்பட, தேதி உட்பட, கிரயம் செய்த தொகை உட்பட தந்திருக்கிறார்கள் என்றால் மாண்புமிகு உறுப்பினர் தான் சொல்வதுதான் உண்மை, அரசு சொல்வது தவறு என்று சொன்னால் எங்கே போய் யாரிடத்திலே முறையிடுவது? பதிவு செய்திருக்கின்ற நிலம், அந்த எண், அந்த தேதி, அந்தத் தொகை தவறு என்றால் அரசாங்கம் எந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதை மட்டும் உறுப்பினருக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியப் பணியாளர்கள் முன்னேற்ற சங்கம், தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தோடு இணைந்த



ஒன்று. அங்கே இருக்கக்கூடிய ஆளும் கட்சியைச் சேர்ந்த மோகன் என்பவர்தான் எல்லோரையும் சேர்த்து வைத்து இப்படியெல்லாம் ஒரு மாபெரும் ஏமாற்று வேலையைச் செய்து, இதிலே வாரியத்தையே ஈடுபடுத்தியிருக்கிறார். வாரியமே சுற்றறிக்கை அனுப்புகிறது. சம்பந்தமே இல்லை என்று சொன்னால் வாரியம் ஏன் இதற்கு சுற்றறிக்கை அனுப்புகிறது? எதற்காக வாரியம் இதிலே தலையிடுகிறது? இதிலே டி. கண்ணன் என்கிற துணை இயக்குநர் எல்லோருக்கும் தற்காலிகத் தொழிலாளர்களுக்குக்கூட சம்பளச் சான்றை அளித்து, வாங்காத சம்பளத்தை வாங்கியதாகக் காட்டி ஏமாற்று வேலை செய்திருக்கிறார். ஆகவே அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவதெல்லாம் இப்படித் தவறு செய்தவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிலே A.G. office லேயிருந்துகூட ஒருவரை அழைத்திருக்கிறார்கள் அதற்கு என்ன சம்பந்தம் என்றே எனக்குத் தெரியவில்லை. இதிலே எஸ். பிரபு, I.A. and A.S. முதுநிலை துணைத் தலைமைக் கணக்காய்வுத் தலைவர், தமிழ்நாடு என்ற A.G. Officeலேயிருந்து வரக்கூடிய ஆளை எதற்காக ஒதுக்கீட்டு ஆணை வழங்கும் விழாவிற்கு அழைத்தார்கள் என்றே எனக்குத் தெரியவில்லை. ஆகவே, துறையைச் சார்ந்தவர்கள்- இப்படித் துறையிலே தவறான நடவடிக்கையில் ஈடுபட்டு மோசடி செய்தவர்கள்- மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்து அவர்களை உடனடியாக suspend செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இப்போது சென்னை கடற்கரை உலகத்திலேயே இரண்டாவது அழகுமிக்க கடற்கரை என்று சொல்லப்படுகிற அளவுக்கு உள்ளது. அந்தக் கடற்கரையைப் பார்த்தீர்கள் என்று சொன்னால் அங்கே காலையிலேயும், மாலையிலேயும் போகிறபோது மிகவும் அசுத்தங்கள் நிறைந்து அந்த இடத்திலே நடமாட முடியாத அளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது. அது யாருடைய Controlலில் வருகிறது? கேட்டால் Revenue துறையில் உள்ளது என்று சொல்கிறார்கள்; பொதுப் பணித் துறையிலும் உள்ளது என்று சொல்கிறார்கள்; பிறகு கொஞ்சம் மேலே ஏறி வந்தால் அந்தப் பகுதி Corporationனுக்குச் சொந்தம் என்று சொல்கிறார்கள். பல துறைகளுக்குச் சம்பந்தப்பட்ட விஷயம் என்கிற காரணங்களினாலே நடவடிக்கை எடுப்பதிலே அங்கே ஒருங்கிணைப்பு இல்லை. ஆகவே அந்தக் கடற்கரையைக் காப்பாற்றக்கூடிய, அதை அழகுபடுத்தக்கூடிய ஒரு நிலையை உடனடியாக மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகிற கழிவுநீர் 200 அடி ஆழத்திற்கு நிலத்தடியிலே சென்று தண்ணீரை மாசடையச் செய்திருக்கிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதிலே groundwater study செய்து எந்தெந்த இடம் black area, குடிநீரே பயன்படுத்த முடியாத பகுதி என்பதை உடனடியாகக் கண்டுபிடித்து மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால் நடவடிக்கை எடுத்து அப்பகுதிக்குக் குடிநீர் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்களுக்குக் கிடைக்கிற குடிநீர் குடிப்பதற்கு ஏற்றதாக இல்லை. ஏனென்றால் நாங்களெல்லாம் இப்போது. வேலூர் சந்துவாச்சாரியிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய மக்களெல்லாம், மற்றும் துரைப்பாடி, அல்லாபுரம் பேரூராட்சியிலே இருக்கக்கூடிய மக்களெல்லாம் குடிக்க லாயக்கற்ற தண்ணீரைக் குடித்துக் கொண்டிருக்கிறோம். Unfit for drinking என்றே Certificate வருகிறது. அப்படிப்பட்ட தண்ணீரை நாங்கள் குடித்துக் கொண்டிருக்கிறபோது நாங்கள் இன்னும் எத்தனை நாள் வாழ்வோம்; எப்போது சாவோம் என்பதே தெரியாத ஒரு நிலையில் இருந்துகொண்டிருக்கிற காரணத்தினால் மாசுக் கட்டுப்பாடு வாரியமே இதற்கு ஒரு வழிவகை காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கோவை மாவட்டத்திலே உள்ள விஸ்கோஸ் தொழிற்சாலையிலேயிருந்து வரக்கூடிய கழிவு நீர் என்பது அதிகமாக சுற்றுப்புறத்தைக் கெடுக்கிறது. இவர்கள் Pollution treatment plant போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இவர்கள் அங்கே சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்திருந்தாலும்கூட அதைச் செயல்படுத்தாமல் அப்படியே ஆற்றிலே கொண்டுபோய் அந்தக் கழிவு நீரையெல்லாம் விட்டுவிடுவதால் இப்போது பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உள்ள பயிரும் செத்துப் போகின்றன; அங்கே இருக்கக்கூடிய குடிநீரும் கெட்டுப் போய்க்கொண்டிருக்கிறது.

கன்னியாகுமரி மாவட்டத்திலேகூட, கொக்கோ கோலா தொழிற்சாலையிலேயிருந்து வரக்கூடிய கழிவு நீர் ஒரு குளத்திலே, நல்லூர் குளத்திலே கலந்து அது அங்கே ஒரு மாபெரும் மாசை ஏற்படுத்திக் கொண்டு அந்தப் பகுதியிலே இல்லாத நோய்களையெல்லாம் வரவழைத்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் கொஞ்சம் விழிப்போடு பணியாற்றிட வேண்டும். இந்த polution prevention-காக நம்முடைய அரசு கொடுக்க வேண்டிய மானியத்தை அங்கு கொடுக்காத காரணத்தினால் common effluent treatment plant-ஐ கட்ட முடியாமல் இருக்கிறார்கள்.



அதேபோல திருப்பூர் போன்ற பகுதிகள் ஆனாலும் சரி, ஈரோடு போன்ற பகுதிகள் ஆனாலும் சரி, சாயப்பட்டறைகள் மூடப்பட்டுள்ளன. ஏனென்றால் தொழிலாளர்களையும் நாம் பார்க்க வேண்டியதிருக்கிறது; இல்லை என்று சொல்லவில்லை. தொழில் அதிபர்களை நீங்கள் அழைத்து மானியத்தை உரிய வகையிலே பெற்றுத் தந்துதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கு தமிழகத்திலே ஓசோன் என்று சொல்லக்கூடிய அந்தப் படலமே கெட்டுப்போய் இருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அது கிழிந்து போகாமல் இருப்பதற்கு ஏதோ கண்காணிப்பையெல்லாம் வைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள் உங்களுடைய கொள்கைக் குறிப்பிலே. ஆனால் நீங்கள் எந்த அளவிற்கு கண்காணிக்கிறீர்கள் என்று தெரியவில்லை. இப்போது எங்கு பார்த்தாலும் அதாவது காற்றிலேயும் மாசு; நீரிலேயும் மாசு; மற்றும் எதையெடுத்தாலும் மாசு என்று சொல்கிறார்கள். ஆகவே மாசில்லாத ஓர் உலகத்தைப் படைக்க முடியுமா என்பதே ஒரு மாபெரும் அச்சமாக இருந்துகொண்டிருக்கிற ஒரு காலகட்டத்தில்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஓசோன் வாயுப்படலம் தமிழகத்திலே இல்லை; வான மண்டலத்திலே இருக்கிறது. நீங்கள் என்னமோ தமிழகத்திலே மட்டும் என்று சொல்கிறீர்களே?

**திரு. சி. ஞானசேகரன்:** தமிழகத்தின் மேலேயும் வானமண்டலம் இருக்கிற காரணத்தினால் நமது மாநிலத்திலே இருக்கிற 17 வகையான தொழிற்சாலைகளிலிருந்து வெளிவருகிற மாசு ஓசோன் படலத்தைக் கெடுக்கக்கூடிய அளவில் இருக்கிறது என்று ஏற்கெனவே ஆய்வுகள் சொல்கின்றன. உங்களுடைய கொள்கைக் குறிப்பிலும் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே அதையும் நீங்கள் செப்பனிட வேண்டும். அதற்கு நீங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நீதித் துறையைப் பொறுத்த அளவில் நீதி நிருவாகம் மிகச் சிறப்பாக நடைபெற வேண்டுமென்பது நம்முடைய குறிக்கோள். ஆனால் அந்தக் குறிக்கோளை நாம் எய்தியிருக்கிறோமா என்று சொன்னால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எத்தனையோ Courtகள் இன்று தமிழகத்திலே இருக்கின்றன. உயர்நீதிமன்றத்திலிருந்து ஆரம்பித்து கீழே Magistrate, Munsif Courtகள் வரை, இருந்தாலும்கூட, நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவிற்கு நமக்கு நீதி கிடைத்திருக்கிறதா என்று சொன்னால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். நிதிக்கும், நீதிக்கும்

கடும்போர் நடந்து எல்லாக் கால கட்டத்திலும் நீதியே வென்றது என்று எண்ணக்கூடிய அவல நிலை வந்துவிடக்கூடாது என்கிற ஓர் அச்சத்தில்தான் நான் இதை கூறிக் கொண்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

முற்பகல் 11-20

இங்கே உச்சநீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதியாக இருந்த வெங்கட்டராமையா அவர்கள்கூட தான் ஓய்வு பெற்ற பின்னால் Times of India-வினுடைய ஆசிரியர் குல்தீப் நையாருக்கு பேட்டி கொடுத்தபோது உயர்நீதிமன்றங்களினுடைய நீதிபதிகள் எல்லாம் சரியாக, தகுதியில்லாமல் அனுபவம் இல்லாமல் தேர்ந்தெடுக்கப்படக்கூடியவர்கள்; 'for wining and dining' judgment-ஐக் கொடுத்துவிடுகிறார்கள் என்றுகூடத் தெரிவித்தார்கள். அதற்காக மும்பையில் இருக்கக்கூடிய ஒரு வழக்கறிஞர் விஸ்வநாதன் என்பவர்கூட மும்பை உயர்நீதிமன்றத்திலே ஒரு வழக்கைத் தொடுத்தார்கள், இது Contempt of Court வரும் என்று சொன்னார்கள். "நீதிமன்றத் தீர்ப்புகள் எல்லாம் wine-க்கும் அதேபோல dinner-க்கும் மாற்றியமைக்கப்படக்கூடிய நிலை இன்று நாட்டிலே வந்துவிட்டது என்று ஓய்வுபெற்ற நீதிபதியே சொல்வது என்பது சரியல்ல. ஆகவே அது Contempt of Court என்று சொன்னார்கள். மும்பை நீதிமன்றம், இது தனிப்பட்ட நபரைச் சொல்லவில்லை; பொதுவாக அப்படிப்பட்ட ஒரு நிலைமை வந்துவிட்ட காரணத்தினாலேதான் ஓய்வு பெற்ற நீதிபதி கூறியிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறது. தமிழகத்திலும் பல இடங்களிலே இப்போது நீதித் துறையிலே சில Magistrateகள் மீது சில Munsiffகள்மீது சில மாவட்ட நீதிபதிகள்மீது கூடப் புகார் வந்தால் அந்த வழக்கறிஞர்கள் சங்கங்கள் போராட்டத்திலே மாதக் கணக்கிலே ஈடுபட்டாலும்கூட அதைக் கண்டுகொள்வதற்கு யாருமே இல்லை என்பதுதான் மிக வருத்தமான ஒரு செய்தியாகும். அமைச்சரைக் கேட்டால் நிதி கொடுப்பதோடு என்னுடைய கடன் முடிந்துவிட்டது, நீதித் துறையில் நான் தலையிட முடியாது என்கிறார்கள். ஆனால் அங்கே நீதித் துறையிலே அமர்ந்து கொண்டிருக்கிறவர்களோ உடனடியாகப் போய் அந்த விஷயத்தைத் தீர்த்து வைக்கிறார்களா என்று பார்த்தால் ஏனோ இல்லவே இல்லை. நீதித் துறைக்கும் நம்முடைய சட்டத் துறைக்கும் ஒரு co-ordination என்பதே இல்லாமல் இப்படிப்பட்ட நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு Registrar அங்கேயிருந்து வருகிறார். ஒரு மாவட்ட நீதிபதி அளவில் இருந்து இங்கே நியமிக்கப்பட்டிருந்தாலும்கூட அவர்



இங்கு வந்து செய்திகளைப் பரிமாற்றம் செய்யக்கூடியவராக மட்டுமே இருந்துவிடுகிறாரே ஒழிய வேறு எதுவும் செய்வதில்லை. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, நீதித் துறையிலே இப்படிப்பட்ட அவல நிலைமை இருக்கிறது. பொதுவாக, Additional Public Prosecutors, Public Prosecutors என்று போடுகிற போதுகூட கட்சி அடிப்படையிலே போடக்கூடிய நிலையிலே Public Prosecutors வருகின்ற காரணத்தினாலே அங்கும் சரியாக வழக்குகளை நடத்த முடியாமல் போய்விடுகிறது. கட்சிக்கு அப்பாற்பட்டு, திறமை படைத்தவர்களை நாம் Public Prosecutors ஆக நியமித்தோம் என்றால்தான் அங்கே ஓரளவிற்கு நம்மாலே சரியான நீதியைப் பெறமுடியும்.

அதேபோல நீதிமன்றங்களிலே நீதிபதிகள் மீதோ, மற்றவர்கள் மீதோ புகார் வருகிறது என்று சொன்னால் . . .

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Public Prosecutors நியமிக்கப்படுவதில் கடந்த காலத்தில், காங்கிரஸ் ஆட்சியில் அந்த அரசு எந்தக் கொள்கையை, எந்த நெறியைப் பின்பற்றியதோ அதைத்தான் எல்லா அரசுகளும் பின்பற்றி வருகின்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்திலேகூட ஒரு முறை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே, அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய M.L.A.-க்கள் எல்லாம் சேர்ந்து ஒரு நபரை நீங்கள் Public Prosecutor ஆக போடவேண்டும் என்று—கட்சிக்காரர்கள்—சொன்னார்கள். ஆனால் அங்கு இருக்கக்கூடிய Collectorate-ல் petition எல்லாம் Collector வாங்கிப் பரிசிலித்தபோது, வேறு கட்சியைச் சார்ந்த ஒருவரை public Prosecutor ஆக நியமித்தபோது, கர்மவீரர் காமராஜரிடம் எங்களுடைய காங்கிரஸ் கட்சியினுடைய M.L.A.-க்கள் சொன்னபோது நீதித் துறையிலே தலையிட வேண்டாம், Public Prosecutors என்பவர்கள் திறமையினுடைய அடிப்படையிலே நியமிக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அப்படி காங்கிரஸ் கட்சியைச் சாராத ஒருவரைக்கூட வேலூர் மாவட்டத்திலே Public Prosecutor ஆக நியமித்த காலம் உண்டு என்பதை நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட இந்த ஆட்சியிலேயும், கட்சிக்கு சம்பந்தம் இல்லாத திறமையான வழக்கறிஞர்களைக் கூடுதல் Advocate General ஆகக்கூட நாங்கள் நியமித்திருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரம் அதிகமாகிவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்து விடுகிறேன். நான் அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, எல்லா இடங்களிலும் கட்சிக்கு அப்பாற்பட்டு நீங்கள் Public Prosecutors-ஐ நியமிப்பீர்கள் என்று சொன்னால் கொஞ்சம் தரமான சட்டக் கல்வி கிடைக்கும் என்பதை நான் இந்த இடத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நேற்றுகூடப் பார்த்தீர்கள் என்று சொன்னால், ஒரு வழக்கறிஞரை உயர்நீதிமன்றத்திற்கு முன்னால் போக்குவரத்துக் காவல் துறையினர் அடித்து அவர் இரத்தம் சொட்டச் சொட்ட தலைமை நீதிபதியிடமே போய் முறையிட்டிருக்கிறார். காவல் துறைக்கும் நீதி மன்றத்திற்கும் கூட அடிக்கடி தகராறுகள் வந்து கொண்டே இருக்கின்றன. இப்படிப்பட்ட பிரச்சினைகளைக் காவல் துறையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும். வழக்கறிஞர்களை ஏனோ இப்போது மதிக்காத சூழ்நிலை அந்தத் துறையில் வந்துகொண்டிருப்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இப்போது பார்த்தீர்கள் என்று சொன்னால் டெல்லியிலேகூட வழக்கறிஞர்கள் ஒரு போராட்டம் நடத்தியபோது அவர்களை அடித்து நொறுக்கி இருக்கிறார்கள்.

நம்முடைய சட்ட அமைச்சருக்குக்கூட ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். Advocates' Act-ல் கொண்டு வந்திருக்கக்கூடிய Amendment தேவையற்ற ஒன்று. அதைப்போல Civil Procedure Code-ல் வந்திருக்கக்கூடிய Amendment என்பதும் தேவையற்ற ஒன்று. செய்கிற வேலையை விட்டு இங்கே சினை ஆட்டிற்குத் திரி போடுகிற கதையாக B.J.P. அரசு சிலவற்றை கொண்டு வந்திருக்கிற காரணத்தினாலே வழக்கறிஞர்கள் மத்தியிலே ஓர் அமைதியின்மை இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட ஒரு நிலைமை உடனடியாகத் தடுக்கப்பட வேண்டும். இங்கே இருக்கக்கூடிய சட்ட அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று



மாண்புமிகு பிரதமர் அவர்களைப் பார்த்துவிட்டு வந்தார்கள். Advocates Act-லே கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தங்களையும் Civil Procedure Code-லே கொண்டு வந்திருக்கக்கூடிய திருத்தங்களையும் இப்போது நிறைவேற்றாமல் பார்த்துக்கொள்வதாக திரு. வாஜ்பாய் அவர்கள் உறுதி அளித்திருக்கிறாரா என்பதை நான் அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடம், பேசி முடித்து விடுகிறேன். சிறைத் துறையிலே . . .

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு மேலே அதிகமாக நீங்கள் பேசிவிட்டீர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறையிலே அடிப்படைச் சம்பளத்தைக் காவலர்களுக்கு நிர்ணயிக்கிறபோது 3,050 ரூபாய் என்று அந்தச் சம்பளத்தை வைத்திருக்கிறோம். ஆனால் சிறைத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற காவலர்களுக்கு 2,750 ரூபாய் என்று வைத்திருப்பது, ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பு; ஒரு கண்ணுக்கு வெண்ணெய் என்று வைக்கப்பட்டது போல் இருக்கிறது.

அதேபோல நரசிம்மன் கமிஷன், இஸ்மாயில் கமிஷன், இப்போது டேவிட் கிறிஸ்டியன் கமிஷன் என்றெல்லாம் கமிஷன்களை வைத்திருக்கிறோம். அந்தக் கமிஷன்களின் பரிந்துரைகளில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய வழிமுறைகளைக் கையாண்டால்தான் சிறையை நாம் நிர்வாகம் செய்ய முடியும்.

அலுவல் சாரா பார்வையாளர்கள் சிறைக்கு இப்போதெல்லாம் நியமிக்கப்படுவதே கிடையாது. ஆனால் இப்போது மூன்று ஆண்டு பதவி காலத்திற்கு நியமிக்கப்படுவதாகக் கொள்கை விளக்கக் குறிப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அலுவல்சாரா பார்வையாளர்களைச் சிறைக்குள்ளே அனுப்பி சிறைச்சாலையிலே என்ன நடக்கிறது என்பதை வெளியே கொண்டு வரவேண்டும்.

அதேபோல் சிறைச் சாலைகளிலே பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய காவலர்களுக்கு எட்டு மணி நேரம் duty என்று சொன்னாலும்கூட உண்மையிலேயே work Shop-ல் வேலை செய்யக்கூடியவர்கள் 12 மணி நேரமும், 20 மணி நேரமும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எட்டு மணி நேரம் வேலை செய்யக்கூடியவர்களுக்கு weekly off இல்லை என்று சொல்கிறார்கள்.

அதேபோல பருப்பு, மானிய விலையில் காவலர்களுக்குக் கிலோவுக்கு 10 ரூபாய்க்கு என்று கொடுக்கிறபோது, இவர்களுக்கு இல்லை என்று சொல்லுகிறார்கள். அதேபோல நன்னடத்தைப் பிரிவில் Probation Officers என்று இருக்கிறார்கள். 1997, 1998-லே தனித் துறையாக உருவாக்கப்பட வேண்டும் என்ற ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. நன்னடத்தை ஆபீசர்கள் 27 பேர்களுடைய பதவிகள் இப்போது காலியாக இருக்கின்றன. அதைக் கண்டுகொள்ளவில்லை. அவற்றையும் பூர்த்தி செய்து அதைத் தனித் துறையாக ஏற்படுத்தி Probation Officers-க்கு ஒரு நல்ல வாழ்வினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

RICA என்று என்னுடைய வேலூரிலே ஓர் அமைப்பு இருக்கிறது. ஆந்திரா, கேரளா, நம்முடைய தமிழ்நாடு போன்ற அரசுகள் சேர்ந்து நடத்தக்கூடிய அந்த RICA என்பதில் என்ன நிகழ்வுகள் நடைபெறுகின்றன என்று யாருக்குமே தெரியவில்லை. அங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களையோ நாடாளுமன்ற உறுப்பினர்களையோ, எந்தவொரு நிகழ்ச்சிக்கும் அவர்கள் அழைப்பதும் இல்லை; அங்கே நடப்பது என்னவென்றும் தெரியாமல் சில ஒழுங்கீனங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இவற்றையெல்லாம் சரி செய்யவேண்டிய பொறுப்பு நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. நிதி மட்டும் கொடுக்கிற வேலைதான் என்னுடைய வேலை என்று சொல்லித் தட்டிக்கழிக்காமல் நம்முடைய நீதித் துறையிலேயும் சரி, சிறைத் துறையிலேயும் சரி, எவற்றையெல்லாம் அவர் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் அவர் செய்து சாதனை படைக்க வேண்டும் என்று நான் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாகக் கேட்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

***திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே வழக்கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்த என்னை சட்டமன்றத்திலேயும் தொகுதி மக்களுக்காகப் பணியாற்று என்று சொல்லி வாய்ப்பளித்த எங்களின் அன்புத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களை வணங்கி, தொகுதி மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, நீதி நிர்வாகம், சிறைச்சாலை, சுற்றுச்சூழல் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்து சில கருத்துகளைக் கூற விரும்புகின்றேன்.

வரிச் சுமை இல்லாமல் மதியால் நிதியை அரசுக்குக் கொணர்ந்து, நீதி ஆட்சி நடத்தும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை



நடுநிலையாளர்கள், நன்மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள். தந்தை பெரியாரின் பாதையில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய அடிச்சுவட்டில் ஆட்சிப் பயணத்தை நடத்திக்கொண்டிருக்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமேதை அம்பேத்கர் அவர்களின் பெயரில் சட்டக் கல்லூரியும், அவர்களுக்கு மணிமண்டபமும், சட்டப் பல்கலைக்கழகமும் அம்பேத்கர் அவர்கள் பிறந்த நாளில் அரசு விடுமுறையும் அறிவித்து, அந்தச் சட்டமேதைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெருமை சேர்த்திருக்கிறார்கள்.

அதேபோல தந்தை பெரியாருடைய கருத்துகள், இலட்சியங்கள் நம்முடைய தலைவர் அவர்களுடைய ஆட்சியிலேதான் சட்டமாக மாற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதை இந்த நேரத்திலே சொல்ல விரும்புகின்றேன். உதாரணத்திற்குச் சில, சீர்திருத்தத் திருமணங்கள், கலப்புத் திருமணங்கள், பெண்களுக்குச் சமஉரிமை, சொத்தில் சம பங்கு, கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் சமூக நீதி என்று பல திட்டங்களைச் சட்டமாக்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையே சாரும்.

*முற்பகல் 11-30*

நாட்டை நிர்வகிக்கின்ற சட்டமன்றம், நீதித் துறை, நிர்வாகத்துறை, ஆகிய இந்த மூன்று துறைகளிலும் நீதித் துறை முக்கியமான பங்கு வகிக்கிறது என்பதை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். இந்த மூன்று துறைகளிலும் முத்திரை பதிக்கும் நம்முடைய முதல்வர் அவர்களை எதிர் வரிசையில் உள்ளவர்கள் பாராட்டியதை நான் கேட்டிருக்கிறேன், அவர்கள் பாராட்டுகின்றபோது எந்த அளவுக்கு முதல்வர் அவர்கள் ஆட்சிக் கட்டிலை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் எண்ணிப் பார்த்திருக்கிறேன்.

ஒரேயொரு கருத்தைத் தெளிவாகச் சொல்லியாக வேண்டும். முதல்வர் முதல் எங்கள் வரை எங்கள் மடியில் கனம் இல்லை ஆகவே எங்களுக்கு வழியிலே பயம் இல்லை. ஆனால் இப்போது சிலர் வழி மாறி, இடம் மாறி, தற்காலிகமாக அமர்ந்துள்ள காரணத்தால் அவர்கள் பேச்சிலே அடி மாறியிருக்கிறது; ஏன், தொனி மாறியிருக்கிறது. அவர்கள் இன்று அமர்ந்துள்ள மடியில் கனம் இருக்கின்ற காரணத்தால் இப்போது நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருக்கிறார்கள்; சிறைத் துறையில் உள்ள அந்தப் படிக்கட்டிலே ஏற இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தான் திருடி பிறரை நம்பாள் என்பார்கள். அவர்களை நம்பிச் சென்றவர்கள் அவர்களைத் திருத்திபடுத்த,

ஆதாரமில்லாத, அடிப்படையில்லாத, நீதிமன்றத்தில் சந்திப்போம் என்ற உறுதியில்லாத சில குற்றச்சாட்டுகளை நம்முடைய அமைச்சர்கள் மீது வைக்கின்றபோது, என்னைப் போன்றவர்களுக்கு வேதனையாக இருக்கிறது. காரணம் அன்று வாய் கிழியப் பாராட்டியவர்கள், உளமாரப் பாராட்டியவர்கள், இப்போது ஒருவரை மகிழவைப்பதற்காக, அவர்களைத் திருப்திபடுத்துவதற்காக, அவர்கள் மடியில் அமர்ந்திருக்கின்ற காரணத்தால் சில குற்றச்சாட்டுகளை ஆதாரம் இல்லாமல் நம்மீது வைக்கிறபோது சட்டம் படித்த எனக்கெல்லாம் மிகவும் வேதனையாக இருக்கிறது. ஆனால் ஒருவர் மகிழப் பேசிக் கொண்டிருக்கிறார்கள், மக்கள் மகிழ அல்ல என்பதை சில மாதங்களில் அவர்கள் உணரத்தான் போகிறார்கள், மக்கள் உணர்த்தத்தான் போகிறார்கள்.

தன் பெயரிலே புரட்சி என்ற வார்த்தையைச் சூட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் புரட்சியைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். ஏனென்றால், நீதித் துறைக்கும், சிறைத் துறைக்கும் அவர்கள் செய்த புரட்சிக்கும் சம்பந்தம் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் புரட்சியைப் பட்டியலிட்டு, அதில் சிலவற்றைக் காட்ட விரும்புகிறேன். அரசு நிலத்தை — டான்சி நிலம் — வாங்கியதில் புரட்சி; புடவை எண்ணிக்கை பத்தாயிரம், அதிலே புரட்சி, நகைகள் - எடை கிலோக் கணக்கிலே— வைத்து இருந்ததிலே புரட்சி; பங்களாக்கள் எண்ணிக்கையில்லாமல் வாங்கியதில் புரட்சி; பாசிச செயல் — acid வீசியது — என்பதிலே புரட்சி; அறிக்கை விடுவதிலே புரட்சி; தனக்காக ஆடம்பரப் பேருந்து ஒன்று அமைத்து, யாரும் பார்க்காத வண்ணம் அந்த ஆடம்பரப் பேருந்தை அனுபவிக்க நினைத்ததிலே புரட்சி; ஏன், வளர்ப்பு மகனுக்குத் திருமணம் செய்ததிலே நாடே நம்ப முடியாத புரட்சி; உலகத்திலேயே இரண்டாவது அழகிய கடற்கரை நம்முடைய கடற்கரை என்று திரு. ஞானசேகரன் அவர்கள் பாராட்டினார்கள், அந்தக் கடற்கரையை அழகுபடுத்தினால் — நேற்று செய்தித் தாளில் பார்க்கிறேன், — அவர்கள் சொல்கிறார்கள் அது ஆடம்பரச் செலவு என்று. கடற்கரையை அழகுபடுத்தினால் ஆடம்பரச் செலவு என்று சொல்கிறார்கள்; அழகுக்கும் ஆடம்பரத்திற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள். அவர்கள் ஆட்சியிலே நீதித் துறையில், நீதிபதியின் மகனும் மருமகனும் பொய் வழக்குகளைச் சந்தித்ததை, அந்த நிலைகளை எல்லாம் மக்கள் மறந்துவிடவில்லை; நீதிபதிகளும் மறக்கவில்லை.



எதிர்க்கட்சிக்காரர்கள் ஒரு புரட்சி செய்தார்கள்; வருத்தப்படக்கூடாது. நேற்று முன்தினம் ஒரு புரட்சி நடந்தது. நமது தலைவர்கள் எல்லாம் நமக்கு ஆணையிட்டிருக்கிறார்கள். விவசாயிகள் போராட்டம், இலங்கைத் தமிழர் போராட்டம், மொழிப் போராட்டம் என்று பல போராட்டங்களிலே கலந்துகொண்டு மாதக் கணக்கிலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சிறையில் இருந்திருக்கிறோம். ஆனால் இன்று யாரும் சிறை செல்ல விரும்பவில்லை. அது மகிழ்ச்சிதான். இருந்தாலும் (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன். (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன். நான் பேசிய பிறகு சொல்லுங்கள். (குறுக்கீடு) I am not yielding. ஆனால் நேற்றுமுன்தினம் ஒரு புரட்சி நடந்தது. நான்கூட நினைத்தேன். வெளியில் சென்று ஏதாவது மறியல் நடந்ததா என்று கேட்டேன். இங்கே ஒன்றுமே இல்லையே, அப்படி ஒன்றும் நடக்கவில்லையே என்று சொன்னார்கள். **

**THIRU C. GNANASEKARAN:** Hon. Deputy Speaker Sir, on a point of order. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேதுநாதன் அவர்கள் இங்கே பேசுகின்றபோது, நீதி நிர்வாகம், சிறைத் துறை, மாசுக் கட்டுப்பாடு வாரியம் போன்ற துறைகளின் மீது பேசாமல், நேற்றைக்கு முந்தைய நாள், தமிழ் மாநில காங்கிரஸ், அ.தி.மு.க., கம்யூனிஸ்ட் கட்சிகள், தேசிய லீக் கட்சி போன்ற கட்சிகள் எல்லாம் விவசாயிகள் கடன்களை இரத்துச் செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்து, அது இங்கே ஏற்கப்படாத காரணத்தால் ஜனநாயக முறைப்படி சென்று நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டதை . . **

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சேதுநாதன், நீங்கள் வேறு point-க்கு வாருங்கள். (குறுக்கீடு)

*(திரு. மு. அப்பாவு, டாக்டர் அ. செல்லக்குமார், டாக்டர் பத்மா ஆகியோர் எழுந்து நின்று பேச முற்பட்டனர்.)*

திரு. ஞானசேகரன் பேசி விட்டார்; திரு. சேதுநாதன் சொன்னதற்கு ஞானசேகரன் பதில் சொல்லிவிட்டார். உங்கள் கட்சிதானே அவர் (குறுக்கீடு) அடுத்த point-க்கு செல்லுங்கள் என்று சேதுநாதனிடம் சொல்லிவிட்டேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்களுடைய உள்ளங்கள் புண்படுமானால் மாண்புமிகு உறுப்பினர் பேசிய பேச்சை எடுத்துவிடலாம். அதிலே ஒன்றும் ஆட்சேபனை கிடையாது. தேவையில்லாமல் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விடுங்கள், ஒன்றுமில்லை. அவர் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதோடு நிறுத்திக்கொள்ளுங்கள். ஆனால் ஒன்று, ஞானசேகரன் point of order கிளப்பும்போது ஒரு நல்ல கருத்தைச் சொன்னார், மானியத்தை ஒட்டித்தான் பேச வேண்டும், மற்ற கருத்துகளைப் பேசக்கூடாது என்று. இந்த உபதேசத்தை ஊருக்கு மட்டும் செய்யக்கூடாது, நீங்களும் கடைப்பிடிக்க வேண்டும். திரு. சேதுநாதன் சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. 10, 12 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. ரா. சேதுநாதன்:** தலைவரவர்களே, நடந்த நிகழ்ச்சியைத்தான் சொன்னேனேயொழிய, அதை மிகைப்படுத்தியோ குறைவுபடுத்தியோ நான் சொல்லவில்லை. எதிரிலே இருக்கின்ற நீங்கள் எல்லாம், மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் எந்த அளவிற்கு பாராட்டினீர்கள்! எந்த அளவுக்குச் சாதனைகளை நீங்கள் சொன்னீர்கள். நாங்கள் சாதனைகளை பற்றிச் சொன்னதைவிட, நீங்கள் சாதனைகள் சொன்னது அதிகம். எங்கள் முதல்வர் அவர்களைப் பாராட்டியது, அமைச்சர் பெருமக்களைப் பாராட்டியது என் காதுகளிலே ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கிறது. அதில் சிலவற்றை இந்த நேரத்திலே சொல்லியாக வேண்டும். ஆரம்பப் பள்ளிகளே இல்லாத கிராமங்கள் இல்லை என்று புரட்சி செய்தார்கள். அதைப் புரட்சி என்று நான் சொல்ல விரும்பவில்லை; சாதனை என்று சொல்ல விரும்புகிறேன். இது கல்வித் துறையிலே செய்த ஒரு மாபெரும் சாதனை. சுகாதாரத் துறையில் மருந்துகள் இல்லாத மருத்துவமனைகள் என்று இருந்த காலத்தை மாற்றி, மருந்துகளை நிறையக் கொடுத்து மக்களின் நோய்களை . . .

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேதுநாதன் ஓர் வழக்கறிஞர். இது வழக்கறிஞர்கள், நீதிமன்றங்கள் பற்றிய விவாதம் நடக்கிற ஒரு மானியம். அதனால் கூடுமானவரையில் அந்த மானியத்தை ஒட்டிப் பேசுவதே நல்லது. மற்ற விஷயங்களைப் பொதுவாகப் பேசுவதற்கு எத்தனையோ நேரங்கள் உண்டு. எனவே, நீதிமன்றங்கள், சுற்றுச்சூழல் இதுகுறித்துப் பேசுவதுதான் இந்த மானியத்தை ஒட்டிப் பேசுவதாகும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. கே. சுப்பராயன். (குறுக்கீடு) திரு. சேதுநாதன், உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்து விட்டது. அடுத்து, திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, முதலில் நான் மாசுக் கட்டுப்பாடு வாரியம் குறித்து இரண்டொரு விஷயங்களைச் சொல்லி, என் உரையைத் தொடங்க விரும்புகிறேன். திருப்பூரில் 8 பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து முடிக்கப்பட்டு, மாசுக் கட்டுப்பாடு வாரியம் என்னென்ன வரையறைகளை விதித்து இருந்தனவோ, தீர்மானித்து இருந்தனவோ அந்த அடிப்படையில் முடிக்கப்பட்டும்கூட இன்னும் consent order வரவில்லை என்பதை மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து உடனடியாக அந்த 8 பொதுச் சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் consent order வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 8 சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டது உண்மை; எல்லா வேலைகளும் நடந்தது உண்மை. இன்னும் திடக் கழிவு மேலாண்மை வேலை மட்டும் பாக்கியிருக்கிறது. அந்த வேலை முடிந்ததும் அந்த இசைவாணை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நன்றி. அந்தத் திடக் கழிவுகள் எங்கு அகற்றப்பட வேண்டும் என்றும் அரசாங்கம் ஏதாவது இடத்தை ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதையும் மாநில அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருப்பூர் நொய்யல் நதியைப் பொறுத்தவரையில் அது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசு ஆற்று மேம்பாட்டு நிதி என்று ஆறுகளை மேம்படுத்துவதற்காக நிதியொதுக்கீடு செய்து செலவு செய்து வருகிறது. அதை மாநில அரசு கோரிப் பெற்று திருப்பூர் நொய்யல் ஆற்றுப் பகுதியை மேம்படுத்துவதற்காக நிதியை மத்திய அரசிடமிருந்து பெற்று மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாட்டில் இறால் பண்ணைகள் என்பது மிகப் பெரிய மாசினை ஏற்படுத்தி வருகிற ஒன்று என்று 1998 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றமே தீர்ப்பு அளித்திருக்கிறது. அந்தத் தீர்ப்பு வந்ததன்

அடிப்படையில் தமிழ்நாட்டில் கிழக்குக் கடற்கரைப் பகுதி முழுவதும் முறைப்படி இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா? உச்சநீதிமன்றத் தீர்ப்பு முழுமையாக தமிழ்நாட்டின் கடற்கரையோரங்களில் அமலாக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-40

அடுத்து நீதித் துறையைப் பொறுத்தவரையிலும் தமிழ்நாட்டில் உயர்நீதிமன்றத்தில் ஏழு இடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை இட்டு நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும். சார்நிலை நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் மிக அதிகம். சென்னை உயர் நீதிமன்ற உரிமையியல் வழக்குகளில் 3,20,958 வழக்குகளும்; சார்பு நீதிமன்றங்களில், மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களில் முறையே 1,79,818 வழக்குகளும், 3,54,665 வழக்குகளும் ஆக, ஏறக்குறைய 10 இலட்சத்திற்கு மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருப்பது என்பதை ஒரு கடுமையான விஷயமாக மாநில அரசு கவனத்தில் கொள்ள வேண்டும். இதற்கு எத்தகைய நிர்வாக ரீதியான அல்லது வேறுவகைப்பட்ட நியாயங்களைச் சொன்னாலும்கூட நடைமுறையில் நீதி தாமதிக்கப்படுகிறது, நீதி மறுக்கப்படுகிறது என்பதுதான் பதிலாக பொதுமக்களுக்கு வருகிறது. இதுகுறித்து அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த வழக்குகள் காலத்தில் முடிவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுதவிர குற்றவியல் வழக்குகள் 2,65,399 நிலுவையில் இருக்கின்றன. ஆகவே வழக்குமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் இவ்வளவு இலட்சக்கணக்கில் நிலுவையில் இருப்பது என்பது நல்லதல்ல, அவற்றுக்கு உரிய நடவடிக்கையை மாநில அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு மிக முக்கியமான விஷயம். கடந்த மூன்று, நான்கு வருடங்களாக தமிழ்நாட்டில் நடைபெற்று வருகிறது ஒரு பகற்கொள்ளை. மிக எளிதில் கவர்ச்சிகரமான வட்டிகளைச் சொல்லி, பொதுமக்களின் பணத்தை பகிரங்கமாகச் சூறையாடுகிற ஒரு சட்டவிரோதச் செயல், சட்டபூர்வமாக நடைபெற்றுக் கொண்டு இருந்தது என்பதுதான் நாம் பார்த்த யதார்த்தமான உண்மையாகும். தமிழ்நாட்டில் நிதி நிறுவனங்கள் மட்டும் பொதுமக்களிடமிருந்து கொள்ளையடித்த பணத்தின் மதிப்பு



அநேகமாக கிட்டத்தட்ட 1500 கோடி ரூபாயாக இருக்கலாம் என்று நான் கருதுகிறேன். 1500 கோடி ரூபாய் என்பது தோராயமாக நான் குறிப்பிடுவது. 1500 கோடி ரூபாயைக் கொள்ளை அடித்திருக்கிற இந்த நிதி நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதுதான் வாழ்க்கையில் அனுபவம் காட்டுகிற உண்மையாகும். நான் குறிப்பாக இந்த விஷயத்தில் குறிப்பிட விரும்புவது, கோவையில் வி.சி. வெள்ளக் கிணறு என்ற பகுதி இருக்கிறது. அந்த வி.சி. வெள்ளக்கிணறு பகுதி . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நிதி நிறுவனங்களில் நடக்கின்ற மோசடிகளைத் தடுப்பதற்காக முதன் முதலாக இந்தியாவிலேயே சட்டத்தை நிறைவேற்றியது தமிழ்நாடு அரசுதான். இந்தச் சட்டம் சிறந்தது என்றும், உயர்ந்தது என்றும் Reserve Bank of India குறிப்பிட்டு இதையே சென்னை உயர் நீதிமன்றம், மற்ற மாநிலங்களெல்லாம் தமிழகத்தை பின்பற்ற வேண்டுமென்று தீர்ப்பிலே கூறியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். இப்பொழுது பதிவு செய்யப்பட்டிருக்கிற வழக்குகள் 235. ஏறக்குறைய deposit தொகை என்று இப்பொழுது புலன் விசாரணையில் கிடைத்து இருக்கிற பணம் 342.49 கோடி ரூபாய். இது தொடர்பாக நாம் attach பண்ணியிருக்கிற சொத்தின் விவரம் 305 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 4 வழக்குகள் தீர்ப்பாகி இருக்கின்றன. அந்தத் தீர்ப்பில் 10 ஆண்டுகள் தண்டனை கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய தீவிர நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது; இந்தியாவிற்கே முன்மாதிரியாக விளங்குகிறது என்பதைத் தங்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில விஷயங்களை நான் மறுக்கவில்லை. ஆனால் இந்த Special Court-ல்கூட இரண்டொரு வழக்குகள்தான் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இன்னும் நிறைய வழக்குகள் Special Court-லே நிலுவையாக இருக்கின்றன. அதுபோன்று நொடிப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட வேண்டும். எழும்பூர், சைதை மாநகரக் குற்றவியல் நீதிமன்றங்களில்

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே எல்லா வழக்குகளையும் கொண்டுவர முடியாது. I.P.C.-யின்கீழ் சில வழக்குகளைக் கொண்டுவர முடியும்; சில வழக்குகள் இருக்கின்றன. அதற்குத் தடையாக இருக்கின்றன. எனவேதான், தனி நீதிமன்றம் முன் சில வழக்குகளைத்தான் கொண்டுவர முடியும். அந்த அடிப்படையில் வழக்குகளைத் தொடுத்திருக்கிறோம். மக்களுடைய பணத்தை மோசடி செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது துணிந்து சட்டப்படி அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவ்வளவு விவரம் இல்லாமல் யாரும் இந்த மோசடிகளைச் செய்வதில்லை. மிகுந்த விவரத்தோடுதான் மோசடி செய்கிறார்கள். மோசடியில் ரகங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் அது ஒரு தனி ரகம். தமிழ்நாட்டில் மோசடி செய்தவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்றால் கோடிக்கணக்கான ரூபாயைக் கொள்ளையடித்துவிட்டு கடனாகக் கொடுத்துவிடுகிறார்கள். கடனாகத் தனக்கு வேண்டியவரிடம் கொடுத்துவிட்டு தன்னிடம் ஒன்றுமில்லாமல் காட்டிக்கொள்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை, மாநில அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நொடிந்து போனதாகச் சொல்லி, நொடித்து பணத்தைச் சுருட்டிக்கொண்ட அந்த நிறுவனங்களின்மீது நடவடிக்கை எடுக்க, அந்த நொடிந்த நிறுவனங்களிடம் கடன் பெற்றவர்களின் சொத்துகளின்மீது attach செய்வதற்குரிய சட்ட ரீதியான ஏற்பாடுகளைச் செய்யாவில்லையென்றால், இப்போது நீங்கள் எடுந்திருக்கிற இந்த நடவடிக்கை நடைமுறையில் செல்லத்தக்க ஒன்றாக இருக்காது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, மாண்புமிகு...

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயனுடைய வாதத்தை நான் வரவேற்கிறேன். இதிலே தீவிரம் காட்ட வேண்டும். முனைப்போடு செயல்பட வேண்டுமென்று அவர் சொல்வதை நான் வரவேற்கிறேன். மேலும் தீவிரம் காட்ட வேண்டுமென்று சொல்வதை வரவேற்கிறேன். ஆனால் இந்த அரசு இப்போதும் தீவிரமாகத்தான் செயல்படுகிறது. Deposit செய்யப்பட்டதாக, காவல்துறையினுடைய புலன் விசாரணை அடிப்படையில் 342 கோடி ரூபாய், attach பண்ணியிருப்பது 305 கோடி ரூபாய். அப்படியானால் எந்த அளவுக்கு மோசடி செய்யப்பட்டிருக்கிறதோ அந்த அளவுக்கு ஈடாக இல்லாவிட்டாலும் கொஞ்சம்தான்



குறைந்திருக்கிறது. 40 கோடி ரூபாய் குறைந்திருக்கிறது. அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதில் மேலும் நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்வதை நான் வரவேற்கிறேன். அதில் ஒன்றும் மாறுபட்ட கருத்து கிடையாது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்த விஷயம் ஒன்று. கோயம்புத்தூரிலே கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியினுடைய பேராசிரியர் ஒருவர் 150 பேருக்கு மேற்பட்டவர்களிடம் 3 கோடி ரூபாய் வாங்கி எல்லா விஷயங்களுக்கும் ரசீது கொடுத்துவிட்டார். எவ்வளவு நயமாக அவர் ஏமாற்றியிருக்கிறார் என்பதற்காக நான் பேரவை முன்னால் வெளியிட விரும்புகிறேன். எல்லோருக்கும் ரசீது வழங்கிய செல்லமுத்து என்ற பேராசிரியர், ரசீது கொடுத்துவிட்டு பின்னர் I.T. problem இருக்கிறது, அங்கே கணக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி யாரிடமெல்லாம் deposit பெற்றாரோ அவர்களிடம் கொடுக்கப்பட்ட ரசீதுகளைத் திரும்பப்பெற்று அந்த ரசீதுகளையெல்லாம் தீ வைத்துக் கொளுத்திவிட்டார். அவர்களுக்கு என்ன சொல்லிவிட்டார் என்றால் இன்னும் இரண்டாவது மாதம், மூன்றாவது மாதத்திற்குள் நாங்கள் எல்லாப் பணத்தையும் கொடுத்துவிடுகிறோம் என்று சொல்லி, நயமாகப் பேசி அவரும் அவர் மனைவியும் ரசீதுகளைக் கொளுத்தி முடித்துவிட்டார்கள். ஆனால் அவர்களுடைய சொத்து முழுவதும் பினாமி பெயரில், அவருடைய மாமனார், வெள்ளக்கோவில் வட்டாரத்தில் மூலனூர் பகுதியில் அவருடைய மாமனாருடைய நிர்வாகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. இது பகிரங்கமாகத் தெரிந்தும்கூட—பொருளாதாரக் குற்ற நடவடிக்கைக் காவல் துறை பிரிவு கோவையிலே இயங்குகிறதா அல்லது இறந்துவிட்டதா என்றே தெரியவில்லை—இதுகுறித்துப் புகார் கொடுத்தும் அந்தக் குற்றவாளிகள் நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் இல்லை. ஆகவே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஜெயில் பிரச்சினையிலே மட்டும் இரண்டொரு விஷயங்களைச் சொல்லி முடித்துவிடுகிறேன். முதலில் சிறைச்சாலைக்குள், 8 ஆண்டுகளுக்கு மேல் இருக்கக்கூடிய, ஆயுள் தண்டனை பெற்ற சிறைக் கைதிகளை உடனடியாக விடுவிக்க மாநில அரசு கருணையோடு, பரிவோடு நடவடிக்கை எடுக்க வேண்டும். 21-வது நூற்றாண்டுக்கு நுழைகின்ற கடைசி வருடத்தில் நாம் இருக்கிறோம் நம்முடைய சிந்தனையும் பழைய கி.மு. என்பதிலேயே இருந்துகொண்டால் நல்லதல்ல. கால வளர்ச்சிக்கொப்ப

சிந்தனை வளரவில்லையென்றால் அது தேங்கிய குட்டையாகப் போய்விடும். இந்த மாநில அரசு சிந்தனையில் தேங்கிய குட்டையாக இருக்கிறதா அல்லது கால வளர்ச்சிக்கொப்ப தன்னுடைய சிந்தனையைத் தீட்டிக்கொண்டிருக்கிறதா என்பதை வார்த்தைகளில் அல்ல வாழ்க்கையில் காட்ட ஒரு வாய்ப்பு, 8 ஆண்டுகள்...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கலைஞருடைய விழுமிய தலைமையில் இருக்கின்ற இந்த அரசு சீர்திருத்தக் கருத்துகளைத் தீவிரமாகச் செயல்படுத்துவது என்பது நாடு அறிந்த உண்மை. பொதுவுடைமை நாடுகளைப்போல யாரையும் தூக்கிலிடவில்லை, துப்பாக்கியால் சுடவில்லை. முறையாக விசாரித்து நல்ல முறையில்தான் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. அதேநேரத்தில் ஆயுள் தண்டனை என்பது 14 ஆண்டு காலம் என்ற நிலையில் இருக்க வேண்டுமென்று ஒரு விதியிருந்தாலும்கூட சுதந்திர தினம், பொன் விழா, பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் விழா இதுபோன்ற விழாக்களிலே எல்லாம் 10 ஆண்டுகள் இருந்தால் போதும், அவர்களுக்கு விடுதலை என்று சொல்லி விடுதலையெல்லாம் அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே அரசு கருணையோடு சில பிரச்சினைகளைப் பரிசீலிக்கிறது. அதேநேரத்தில் சமூக விரோதிகளுக்கு நியாயமான தண்டனை கொடுப்பதற்கும் இந்த அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது.

**திரு. சி. வேலாயுதன்:** Sir, I am on a point of order.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்ட விஷயத்தை விட்டுவிட்டு வேறு விஷயத்திற்கு அமைச்சர் சென்றுவிட்டார். ஆனால் நான் அதற்குப் பதில் அளிக்க விரும்பவில்லை. பொதுவுடைமை நாடுகள் குறித்தெல்லாம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றி நான் சொன்னால் திசை தவறிவிடும். நான் இங்கே குறிப்பிட விரும்புவது 8 ஆண்டுகளுக்கு மேல் சிறையிலிருக்கும் ஆயுள் தண்டனை பெற்ற சிறைவாசிகளை விடுவிக்க கேரளாவில், ஆந்திராவில் சட்ட ரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பின்பற்றி தமிழ்நாட்டிலும் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். 10 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருந்தவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதும் நான் சொல்ல விரும்புகிறேன். இதே தமிழ்நாட்டின் சிறைகளில் 15 ஆண்டுகள், 16 ஆண்டுகள், 17 ஆண்டுகள், முடித்த ஆயுள் தண்டனைக் கைதிகள்கூட உள்ளே வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தப்பித்துச் சென்றார்கள் . . .



*முற்பகல் 11-50*

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** அப்படி இருக்கிறார்கள் என்பது உண்மை. அவர்கள் சிறைக்கு உள்ளே இருந்து திருந்தவில்லை. சிறைக்கு உள்ளேயே தவறு செய்துகொண்டிருக்கிறார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அடிப்படையிலேயே மாறுபடுகிறேன். அவர்கள் திருந்துவதற்கு சிறை ஒன்றும் அறச்சாலை அல்ல. குற்றங்களைக் கற்றுக் கொடுக்கிற பல்கலைக்கழகமாகச் சிறைகள் மாறி இருப்பதால் சிறைச்சாலைகள் ஒருபோதும் மனிதனைத் திருத்தாது என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே சிறைகளுக்குள் வைத்து மனிதர்களை...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு உறுப்பினர் அவரே ஒரு தவறான வாதத்தைச் சொல்கிறார். சிறைச்சாலையைப் பல்கலைக்கழகம் என்று சொல்கிறார். பிறகு திருத்தாது என்றும் அவரே சொல்கிறார். எதற்குப் பதில் சொல்வது என்று எனக்கே புரியவில்லை.

**திரு. கே. சுப்பராயன்:** அமைச்சர் காதைத் திறந்து வைத்திருப்பது நல்லது. நான் இங்கே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் இந்தமாதிரி பேசுவது நன்றாக இல்லை. சிறைச்சாலையில் இருக்கும்போது அவர்களுடைய நன்னடத்தையைக் கருதிச் சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** பல்கலைக்கழகம் என்று குறிப்பிட்டதை அமைச்சர் முழுமையாக எடுத்துக்கொள்ளவில்லை. குற்றங்களைக் கற்றுக் கொடுக்கிற பல்கலைக்கழகமாக இருக்கிறது என்று நான் குறிப்பிட்டதை அவர் எடுத்துக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிலேயே திருந்தி, நன்னடத்தையோடு இருக்கிறவர்களைத்தான் அந்த Board விசாரித்து அவர்களை release பண்ணுகிறார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** நான் வைத்த வாதங்களை விட்டுவிட்டு, தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடித்துக்கொண்டால் பிரச்சினைகள் வந்துவிடும். நான் இங்கே முன்வைத்த விஷயம் ஆயுள் தண்டனைக் கைதி 15 வருடம், 16 வருடம், 17 வருடம்கூட சிறையில் இருந்தும் அவர்கள் தப்பிச் சென்றார்கள் என்பதற்காக அதற்கு ஒரு தண்டனை விதிக்கப்பட்டும் அந்தத் தண்டனைக் காலத்தையும் கழித்தும் அதற்குப் பின்னரும் மீண்டும் அங்கே சிறையில் வைத்துக்கொண்டிருப்பது மனித நேயம்தானா? ஏன் அவர்களை அப்படி வைத்திருக்கிறீர்கள்? அப்படி வைத்திருக்கிறவர்களை விடுவிக்க வேண்டாமா என்றுதான் நான் கேட்கிறேன். எனவே அத்தகைய கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறைச்சாலை நிர்வாகத்தைப் பொறுத்தவரையில் ஒரே ஒரு விஷயம்; சென்னை சிறைச்சாலையில் கலவரம், தமிழ்நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளில் குமுறல், கொந்தளிப்பு, சின்னச்சின்ன பிரச்சினைகள் என இருக்கின்றன. எனவே இந்த மாநில சிறைச்சாலை நிர்வாகங்கள் குறித்து மத்திய Human Rights Commission என்பதைக் கொண்டு விசாரணை நடத்தி நிர்வாகத்தை ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக நம்முடைய மானாமதுரை M.L.A. சொல்லியிருக்கிற அந்த ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் குற்றவியல் நீதிமன்றம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டும், கட்டடப் பணிகள் முடித்து, ஓராண்டு ஆகியும் இன்னும் Court தொடங்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அவற்றையும் தொடக்கவேண்டுமென்று கேட்டு 8 ஆண்டுகள் சிறைவாசம் பூர்த்தி அடைந்த சிறைவாசிகளை விடுவிக்க அரசு அரசியல் உறுதியோடு நிலையெடுத்து நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று மீண்டும் கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் மனித நேயத்தோடு நடந்துகொள்ளாமல், பலவிதமான தவறுகள் செய்தவர்கள் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டு சிறைகளில் அடைக்கப்படுகின்றார்கள். அவர்கள்மீது இந்த அளவுக்குச் சட்டம் பாய்ந்ததற்குப் பிறகும்கூட தவறுகள் ஒருகாலும் குறைந்ததாக



இல்லை. நாளுக்குநாள் கூடிக்கொண்டேயிருக்கிறது. இப்படி இருக்கக்கூடிய காலகட்டத்தில் தண்டனையைக் குறைத்தால் மேலும் இதுபோன்ற பிரச்சினைகள் அதிகமாகும். எனவே தண்டனையைக் குறைப்பது நியாயம் அல்ல.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்து சாஸ்திரமே சொல்கிறது; மறச் சட்டங்களால் மனித சமூகத்தைத் திருத்தமுடியாது; அறச் சட்டங்களால் மட்டும்தான் திருத்த முடியும் என்று இந்து சாஸ்திரங்கள் சொல்வதைக்கூட வேலாயுதன் புரிந்துகொள்ளவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

முற்பகல் 11-55

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலை, சுற்றுப்புறச் சூழல் குறித்த இந்த மானியங்களின்மீது என்னுடைய கருத்துகளை முன்வைக்க அனுமதியளித்தமைக்கு நன்றி. நம்முடைய அரசமைப்புச் சட்டம், நாட்டினுடைய இறையாண்மையை ஒட்டுமொத்தமாகக் குறிக்கும் அதே நேரத்தில் இந்த இறையாண்மை அரசமைப்புச் சட்டத்தினுடைய ஏற்பாட்டின் அடிப்படையில் எப்படிப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் விளக்கமாகத் தெரிவிக்கின்றது. இறையாண்மை என்ற அந்த பொதுச் சொல் மூன்று வகையிலே நம்முடைய அரசமைப்புச் சட்டத்தால் வெளிப்படுத்தப்படுகிறது. நீதி நிர்வாக இறையாண்மை, நம்முடைய நிர்வாகத்தில் நாம் கடைபிடிக்கவேண்டிய இறையாண்மை, சட்டமன்ற, நாடாளுமன்றத்திலே அந்தந்த மன்றங்களுக்கு இருக்கக்கூடிய இறையாண்மை இவற்றிற்கு இடையே ஒட்டுமொத்தமான ஓர் ஒருங்கிணைப்பு இருக்கலாமே தவிர, தேவையில்லாமல் அரசமைப்புச் சட்டம் எதனை எதிர்பார்க்கிறது? நம்முடைய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய வித்தகர்கள் எதனை அடிப்படையாகக் கொண்டு நம்முடைய இறையாண்மையைப் பிரித்துக் காட்டினார்களோ அதற்கு மாறாக இப்போது நாட்டில் சில இடையூறுகள், குறுக்கீடுகள் ஏற்பட்டு வருவது மிகவும் கவலைக்குரிய ஒன்றாகும். நமக்கு இருக்கக்கூடிய ஒரே நம்பிக்கை, நீதியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே நம்பிக்கை—இப்போது மாறி இருக்கிற நாட்டின் இந்தச் சூழ்நிலையில்—நீதிமன்றம் ஒன்றுதான் என்பதை நிச்சயமாக நாம் மறுப்பதற்கில்லை. நீதிமன்றம் ஒன்றுதான் நம்முடைய

நம்பிக்கைக் கேந்திரம் என்று இருக்கும்போது நாம் எவ்வளவு தூரம் நீதிமன்றத்தினுடைய இறையாண்மையைப் போற்றும் வகையில் நடத்த வேண்டும் என்பதைப் பற்றி விளக்கம் தேவையில்லை. ஆனால் அண்மைக்காலத்தில் நீதிபதிகளைப் பற்றியும், நீதிமன்றங்களைப் பற்றியும் வெளிப்படையாக விமர்சனங்கள் மக்கள் மன்றத்திலே மட்டுமல்ல, சட்டமன்றங்களிலேகூட ஒருசில இடங்களில் நடைபெறுவது மிகுந்த ஆபத்துக்கு உரிய ஒன்று என்பதை நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. எனவே நீதிபதிகள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டு நடந்துகொள்ள வேண்டும் என்பது எவ்வளவு உண்மையானதோ, அதே அடிப்படையில்தான் நீதிமன்றத்தில் என்ன தீர்ப்புகள் வழங்கப்பட்டாலும் அவை குறித்து நமக்குப் பிடிக்காவிட்டால் அதிலே நமக்கு ஏமாற்றங்கள் அல்லது மாற்றமான கருத்துகள் இருந்தால் மேல்முறையீடு செய்யலாம்; மேல்முறையீடு செய்யும்போது அந்த மேல் முறையீட்டால் நம்முடைய மாறுபட்ட கருத்துகளை வழங்கப்பட்ட தீர்ப்புகளின் மீதான நம்முடைய விமர்சனங்களைத் தெரிவிப்பதற்கு நமக்கு நிச்சயமாக உரிமை இருக்கிறது. ஆனால் அதை நம்முடைய இறையாண்மையின் இன்னொரு வெளிப்பாடாக இருக்கிற சட்டமன்றத்தில் அல்லது நிர்வாகத்தின் வாயிலாக நீதிமன்றத்தினுடைய நடத்தையைப் பற்றி நீதிபதிகளுடைய நடத்தையைப் பற்றி விமர்சனம் செய்வது நம்முடைய ஜனநாயகத்துக்குப் பேராபத்தை ஏற்படுத்திவிடும் என்பது மட்டுமல்ல, தனிப்பட்டவர்களுடைய உரிமைக்குக்கூட பல கேள்விக்குறிகளை அது ஏற்படுத்திவிடும் என்ற கவலையை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் துறையைச் சார்ந்தவர்கள்; நல்ல பக்குவம் பெற்றவர்; வழக்கறிஞர்; அதேநேரத்தில் நீதிபதி யார் என்பதையும், நீதிபதிகள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் அந்தக் களத்தில் இருந்தே கண்டவர். எனவே என்னுடைய கருத்துக்கு அவர் மறுப்புச் சொல்லமாட்டார் என்று நான் எதிர்பார்க்கிறேன். அவர் சொல்லமாட்டார் என்று நிச்சயமாக நம்புகிறேன். அண்மைக்காலத்தில் நடந்த சில சம்பவங்களை வைத்து நான் இதைச் சொல்கிறேனே தவிர, எந்தத் தனிப்பட்ட நீதிபதியையும் எண்ணத்தில் வைத்து நான் இதைப் பேசவில்லை. எனவே போதிய அளவுக்கு நாம் எப்படிச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையில் நீதிமன்றம் தலையிடக் கூடாது என்பதில் உறுதியாகவும் அறுதியாகவும் இருக்கிறோமோ — அது உண்மைதான் — சட்டமன்றத்தினுடைய இறையாண்மையில், அதனுடைய வளாகத்திற்கு உட்பட்டு, வரையறைக்கு



உட்பட்டு, அது தனது கருத்துகளைத் தெரிவிக்கும்போது, அதிலே தலையிடுவதற்கு வேறு துறைகளுக்கு எப்படி உரிமை இல்லையோ, அப்படித்தான் நாம் நீதிமன்றத்தினுடைய விவகாரங்களில், நீதிபதிகளுடைய நடத்தையில் வெளிபபடையாகப் பேசுவது கூடாது என்பது. ஆனால் ஒன்று; சட்டமன்றத்தினுடைய சட்டங்களைக்கூட, அமைச்சர்களுடைய எண்ணங்களைக்கூட, அரசு வெளியிடுகிற ஆணைகளைக்கூட, ஆய்வு செய்யக்கூடிய பொறுப்பு, அதிகாரம் யாரிடத்திலே இருக்கிறது என்று சொன்னால், நீதிமன்றத்திலேதான் இருக்கிறது. அரசமைப்புச் சட்டம் - The Constitution of India, as they are interpreted by the Judiciary. Constitution என்றால் என்ன? Judiciary அதற்கு எப்படி அர்த்தம் கொள்கிறதோ, அதுதான் Constitution; whether you like it or not, that is the Constitution. The Constitutional provisions are to be interpreted by the Judiciary and whatever the interpretation of the Judiciary is, we have no power to interfere with that, unless and until we go in for an appeal. என்ற முறையிலேதான் அது வருகிறது. சில விஷயங்களிலே அரசு அப்படி நடந்து கொண்டிருக்கிறது. அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் போதிய அளவிற்கு நாம்—ஏனென்றால் சில நாட்களாக, சில விமர்சனங்கள், அதை நான் யாருக்காகவும் பேசவில்லை. சட்டமன்றத்திற்காகவும் பேசவில்லை.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் மூத்த உறுப்பினர். உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. நீதிமன்றத்தைப் பற்றியோ, நீதிபதிகளைப்பற்றியோ இந்த அவையில் ஏதோ விமர்சனம் செய்ததாகப் பேசுவது இந்த அவையையே நீங்கள் குற்றஞ்சாட்டுவதைப் போல் இருக்கிறது. தயவுசெய்து அதைத் தவிர்க்க வேண்டுகிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் பேசியதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கவனமாகக் கேட்டிருப்பார். கேட்டிருக்கக்கூடும் என்று நம்புகிறேன். நான் சட்டமன்றத்தை முழுமையாகச் சொல்லவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது அந்த முறையை வரையறையை எண்ணிப் பேச வேண்டுமென்று என்னையும் உள்ளிட்டுத்தான் நான் சொல்கிறேனே தவிர, I am not charging and bringing the entire Legislative Assembly into this. அதை நான் கொண்டு வரவில்லை. Assembly-யைச் சொல்லவில்லை. Assembly-யில் நடைபெறுகிற பேச்சுகளை—தனிப்பட்ட என்னைப் போன்றவர்கள் என்றே

வைத்துக்கொள்ளலாம். எனவே அதைப் பற்றித்தான் நான் சொல்கிறேன். அதை ஒரு வேண்டுகோளாக, இந்தத் துறையைச் சேர்ந்தவன் என்ற முறையிலே, அது உருவாக்குகிற ஆபத்தைப் பற்றி நான் இங்கே எடுத்துச் சொல்கிறேனே தவிர சட்டமன்றத்தை நான் இழிவுபடுத்தினேன் என்றால் நான் எங்கே இருக்கிறேன்? நான் எங்கே இருக்கிறேன்? அப்படி என்னையே நான் இழிவுபடுத்திக்கொள்வேனா? இல்லை. நமக்குரிய இறையாண்மை இருக்கிறது. அதிலே யாரையும் நாம் தலையிட அனுமதிக்க முடியாது. ஆனால் அதேநேரத்தில் மற்றவர்களையும் அவர்களுடைய அதிகார வரம்பிற்குள் வைத்து நாம் மதிக்க வேண்டும். அதிலே ஒரு வித்தியாசத்தை நான் சொல்கிறேன். சட்டமன்றம் சட்டத்தினை இயற்ற முடியும். அந்தச் சட்டத்தினை நிருவாகம் (Executive), பின்பற்றி ஆணைகளைப் பிறப்பிக்க முடியும். அமைச்சர்கள் கருத்துகளை வெளியிட முடியும். ஆனால் இவற்றைக்கூட விமர்சனங்கள் செய்து அதறகுரிய தகுதி என்ன? Constitutional validity என்ன? Legal competency என்ன? என்பதைப் பற்றியெல்லாம் யார் சொல்ல வேண்டுமென்றால் அவர்களதான் சொல்ல வேண்டும். அவர்கள் சொல்லிவிட்டால் அதுதான் முடிவானது என்ற நிலையிலே நீதிமன்றங்கள் இருக்கும்போது நாம் மிகப் பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோளே தவிர வேறு அல்ல.

நீதி நிருவாகம்பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதிலே முக்கியமான ஒன்று, வெகு நாட்களாக நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது, ஏங்கிக் கொண்டிருந்தது ஒன்று மதுரையிலே உயர்நீதிமன்றக் கிளை அமையவிருப்பது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதனை தலைமையேற்று நடத்தி, இந்திய உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களைக் கொண்டே அதற்கு அடிகோலியிருக்கிறார்கள் என்பது இந்தக் குறிப்பிலே இருக்கிற ஒரு மகிழ்ச்சியான செய்தி. அதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நீண்ட நாட்களாக நாம் விரும்பிய ஒன்று இப்போது நடைபெற இருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இன்னொரு முயற்சியையும் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் —



இதுகுறித்து அவர் நினைத்தால் அதற்கான முன்னடியை எடுத்து வைக்க முடியும் என்பதால் சொல்கிறேன் — எப்படி உயர்நீதிமன்றக் கிளையை மதுரையில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோமோ அதேபோல்— வெகு தூரத்தில் இருக்கிற டெல்லிக்குதான் போக வேண்டும். ஒரு சாதாரண S.L.P. போட வேண்டுமென்று சொன்னாலும்கூட, இங்கே இருக்கக்கூடிய ஏழை, பாழைகள் சாதாரண மக்கள் டெல்லிக்குப் போக முடியாது. எனவே— Supreme Court-னுடைய ஒரு கிளையை தென்னகத்தினுடைய தலைநகரமாக இருக்கிற சிறப்புமிக்க சென்னைப்பட்டினத்தில் — இதை யாரும் மறுக்க முடியாது — ஏற்படுத்தினால், அதுவும் நம்முடைய சட்டத்தை மக்கள் வரையிலே சேர்ப்பிப்பதற்கு உதவுவதாக அமையும். அதற்காகவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். முதலமைச்சர் போன்றவர்கள் அதற்காக இப்போதிருந்தே குரல் கொடுக்க வேண்டும். அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பார்கள். எனவே, இப்போதே நாம் அழ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப் பெற்றது)*

*பிற்பகல் 12-05*

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்த்தேன். கடந்த முறை உயர் நீதிமன்றத்தினுடைய ஒரு பட்டியல், எங்கெங்கு உரிமையியல் நீதிமன்றங்களுக்கான அனுமதி அவர்கள் அளித்திருக்கிறார்கள் என்ற ஒரு பட்டியல் இதே மன்றத்திலே வாசிக்கப்பட்டது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வாணியம்பாடி— தயவுசெய்து அமைச்சர் அவர்கள் அந்த ஊருக்கு வந்து பார்க்க வேண்டும். வாணியம்பாடியில்—நீதிமன்றம் கட்டடமே இல்லாமல் இருக்கிறது. ஒரு நாள் மேலிருந்து கட்டடம் இடிந்து விழுந்து நீதிமன்றத்திலே இருந்த வழக்கறிஞர்கள் மற்றும் நீதிபதி ஆகியோர் பதறிப் போய் வெளியிலே வந்து தாழ்வாரத்தில் உட்கார்ந்தார்கள். உட்கார்ந்தவர்கள் தாழ்வாரத்திலேயே இப்போதும் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். பார்ப்பதற்கே மிக நன்றாக இல்லை. நீதிபதி கட்டடத்திற்குள் இல்லை, தாழ்வாரத்திலே இருக்கிறார். எனவே தயவுசெய்து அதற்கு ஒரு முன்னுரிமை வழங்கி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே உரிமையியல் நீதிமன்றத்தை மட்டுமல்ல, தயவுசெய்து அங்கே அந்தக் கட்டடத்திற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளாக நான் வைக்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* முடித்துவிடுகிறேன்.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2000 ஏப்ரல் 27

நீதிமன்றம் முடிந்து இப்போது சிறைச்சாலைக்குப் போக வேண்டும். (சிரிப்பு) சிறைச்சாலை என்பது மனிதனுடைய எண்ணங்களையும், உள்ளங்களையும் திருத்தும் இடம். அப்படிப்பட்ட ஒரு இடமாகத்தான் அந்த சிறைச்சாலை இருக்க வேண்டும். சாதாரணமாக சந்தர்ப்பவசத்தால் ஏதாவது ஒரு சிறிய தவறு, குற்றத்தைச் செய்துவிட்டு சிறைச்சாலைக்குச் சென்றபின், பக்குவப்பட்ட மனிதனாகத் திரும்பி வருகிற சூழ்நிலை இப்போது சிறைச்சாலைகளிலே இருக்கின்றனவா என்பதை நான் மிகுந்த வருத்தத்துடன் கேட்டுக்கொள்கிறேன். சிறைச்சாலை திருத்தும் இடமாக இல்லை. எல்லோரையும் குற்றவாளிகளாக மாற்றும் இடமாக அது மாறிக் கொண்டு வருகிறது. தயவுசெய்து அதைப்பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம்முடைய சிறைச்சாலையிலே நடந்த கலவரம் என்ன சாதாரணக் கலவரமா? சிறைச்சாலையில் கலவரம் நடக்கலாமா? வெளியிலே நடந்தால் குற்றம், ஆனால் குற்றத்தைத் தடுப்பதற்காக, திருத்தும் இடமாக இருக்கக்கூடிய அந்த இடத்தில் குற்றவாளிகள் திருந்த வேண்டுமென்பதற்காக, அரசு பொது நிதியிலிருந்து அதற்குப் பணம் செலவு செய்து நடத்துகிற சிறைச்சாலையிலே குற்றங்கள் வளர்கின்றன; எண்ணிக்கூட பார்க்க முடியாத அளவுக்குக் குற்றங்கள் வளர்கின்றன. நம்முடைய I.P.C. என்பதிலே *500* Sections இருக்கின்றன. ஆனால் *5,000* Sections வரையில் குற்றங்கள் நடைபெறுகிற இடமாக சிறைச்சாலை இப்போது மாறிவிட்டிருக்கிறது என்றால் அதைப்பற்றி அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதனால்தான் இங்கேகூட பல பேர் என்னிடத்தில் வந்து ஒன்றைச் சொன்னார்கள். இந்த நன்னடத்தை குறித்து Probation of Offenders Act என்ற ஒரு Act pass பண்ணினோம். அதிலே நன்னடத்தைக்காகக் கண்காணிக்கப்படுகிறவர்களை சாதாரணமாக சிறைச்சாலையிலே வைக்கக்கூடாது; அதற்குத்தான் இளைஞர்களாக இருந்தால், சிறு வயதில் உள்ளவர்களாக இருந்தால், பெண்களாக இருந்தால், முதல் குற்றத்தைச் செய்தவர்களாக இருந்தால் அவர்களைத் திருத்துவதற்கான வாய்ப்புகள் இருந்தால் அவர்களைத் தனியாக வைக்க வேண்டும்; அவர்கள் திருந்திய பிறகு அவர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற ஒரு முயற்சி நல்ல முயற்சி. அநத அடிப்படையிலேயான குறிப்பை நான் பார்த்தேன். *1995*-ல் இப்படி இவர்கள் எல்லாம் சிறைச்சாலையிலே இருந்து தனிமைப்படுத்தி வைக்கப்பட்ட காரணத்தால் அரசுக்கு ஏறக்குறைய *35* கோடி ரூபாய் மிச்சம் என்று சொல்கிறார்கள். எதற்காக எல்லோரையும் வைத்து அங்கே சோறு போட வேண்டும்.



2000 ஏப்ரல் 27] [திரு. ம. அப்துல் லத்தீப்]

திருத்துவதற்கு வாய்ப்பு இருந்தால் அந்தத் திருத்துவதற்கான இடத்தை நீங்கள் அந்த Department-ஐயே தனிமைப்படுத்துங்கள். தயவுசெய்து. Get it separated from the Jail administration. Jail administration-லிருந்து separate பண்ணி probationers-ஐ எல்லாம் தயவுசெய்து பிரித்து வைத்தால் நம்முடைய இளைஞர்கள் திருந்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தேவையில்லாமல் அரசுப் பணத்தைச் செலவழித்து அங்கே ஒரு பெருங்கூட்டத்தை வைத்து சாப்பாடு போடுகின்ற அவசியமும் இல்லை. எனவே அதைப்பற்றி தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் பேசாவிட்டால் திரு. ஞானசேகரன் ஊரில் போய்ச் சொல்வார் நான் பேசினேன், அவன் பேசவில்லை என்று. ஆகையினால் நான் பேசியாக வேண்டும் மாசுக் கட்டுப்பாடு என்பது எல்லா இடத்திலும் இருக்கிறது. எங்கள் மாவட்டத்திலே இருக்கிறது. திரு. ஞானசேகரன் என்ன சொன்னார்? "தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் வாயிலாக எங்களுடைய பாலாறு மாசுபடுகிறது. பாலாறு பல வகைகளில் மாசுபடுகிறது" என்று சொன்னார். அதுமட்டுமல்ல; பாலாறு மட்டுமல்ல; நங்காஞ்சியாறு மாசுபடுகிறது; குடகனாறு மாசுபடுகிறது; அமராவதி ஆறு மாசுபடுகிறது" என்று திரு. சுப்பராயன் அவர்கள்கூடச் சொன்னார்கள். எனக்கு இந்த ஆறுகளையும் தெரியும். அந்த ஊர்களையும் தெரியும். நங்காஞ்சியாறு எப்படி மாசுபடுகிறது? இந்தப் பாலாற்றைவிட பெரிய அளவில் மாசுபடுகின்ற இடமாக நங்காஞ்சியாறு மாறிவிட்டது, குடகனாறு மாறிவிட்டது; அமராவதி ஆறு மாறிவிட்டது, பொருணையாறு மாறிவிட்டது, தாமிரபரணியாறே மாறிவிட்டது. எனவே இது குறித்து அரசு இப்போது என்ன செய்யவேண்டும்? தலைவலி வந்து விட்டது, தலையையே எடுத்து விடலாம் என்று சொன்னால் அது சாத்தியமானதல்ல. ஆகையினாலே (மணியடிக்கப்பெற்றது) — நான் முடித்து விடுகிறேன். நான் முடித்து விடுகிறேன் — தயவுசெய்து நான் அரசைக் கேட்டுக்கொள்வது இதை எப்படிச் சமாளிப்பது என்று பாருங்கள். நடக்கின்ற தொழில்கள் நடந்துதானே ஆகவேண்டும். அதற்கு வேறு வழியில்லை. அந்தத் தொழிலை வைத்துக் கொண்டு—இப்போது நகரத்தைச் சுற்றி வேறு தொழில்கள் எல்லாம் நீங்கள் செய்யவில்லையா? Sanitary work எல்லாம் உங்களுக்கு இல்லையா; நகரத்தைச் சுற்றி எப்படிச் செய்வீர்களோ, இதையும், part of work அந்த நகரத்திலே ஏற்படுகிற அசுத்தமாகக் கருதி, ஆற்றை, ஆற்றுப் படுகையை, ஊரை, ஊரிலே இருக்கிற கால்வாயை, சுற்றுப்புற சூழ்நிலைகளைச் சுத்தப்படுத்துகின்ற பொறுப்பு அரசினுடைய பொறுப்பு என்ற அடிப்படையிலே அதையும் சுத்தப்படுத்த

வேண்டும். அங்கே வேலைசெய்கிற மக்களும் வாழ்வைத் தொடர்ந்து நடத்த வேண்டும். வயிராற உண்ண வேண்டும். வயிராற உண்ண வழி இல்லாவிட்டாலும் பசியைப் போக்குவதற்காகவாவது உண்ண வேண்டும். சோறு இல்லாவிட்டால் பத்தும் பறந்து விடும் என்ற எண்ணத்தில் இதுவும் தொடர வேண்டும், அதுவும் தொடர வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அரசு சில மானியங்களை வழங்கவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இதிலே இப்போது தடை ஏற்பட்டிருக்கிறது; தாமதம் ஏற்பட்டிருக்கிறது. தயவுசெய்து அந்தத் தடைகளை அகற்றி தாமதங்களை இல்லாமல் ஆக்கி, அந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க —தோல் தொழிற்சாலைகளைப் பற்றிச் சொல்கிறேன் — அவர்களுக்கு நீங்கள் மானியங்கள் வழங்க வேண்டும். திருப்பூராக இருந்தாலும் வழங்க வேண்டும் அல்லது ஈரோடாக இருந்தாலும் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு (குறுக்கீடு) சேலம் என்று சொல்கிறார் - - சேலம் மட்டுமல்ல எவிடேங்கிலும், எல்லா இடங்களிலும் வழங்கவேண்டும் என்று (மணியடிக்கப்பெற்றது) நான் கேட்டுக்கொண்டு என்னுடைய இந்த வார்த்தைகளை நிறைவு செய்கிறேன்.

*பிற்பகல் 12-10*

**திரு. ப. மோகன் கந்தசாமி:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேளுங்கள்.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** சுத்திகரிப்பு நிலையத்தைப் பற்றிச் சொன்னார்கள். திருப்பூரிலே மிக அருமையாக, ஏராளமான பொருள் செலவிலே நாங்கள் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்து இருக்கிறோம். சென்ற வாரம்கூட அமைச்சர் அவர்களும் Chairman அவர்களும் வந்து பார்த்தார்கள். ஒரு சுத்திகரிப்பு நிலையத்திற்குத்தான் இப்போது consent கொடுத்திருக்கிறார்கள். மற்ற சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் consent வேண்டும். அதேபோல தனியார்கள் நிறைய சுத்திகரிப்பு நிலையங்களை அரசு சொல்வதைப் போலவே செய்திருக்கிறார்கள். ஆகவே அதற்கும் consent கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.



**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த வணக்கத்திற்குரிய நம்முடைய முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வணக்கம்.

சட்டத் துறை, நீதித் துறை என்பது இருக்கிற துறைகளிலேயே மிகச் சிறந்த துறையாகக் கருதப்பட வேண்டும். காரணம் வகுக்கிற சட்டங்கள் எல்லாம் அரசியல் நிர்ணயச் சட்டத்திற்குள் வருகின்றனவா, அவை நீதிமன்றங்களிலே தள்ளப்பட்டுவிடுமா என்பதை ஆராய்ந்து, தகுந்த சட்டமாக ஆக்குவதற்குரிய வழிமுறைகளை உருவாக்குகிற ஒரு துறை தான் நம்முடைய நீதித் துறை என்பதிலே இருவேறு கருத்து வேறுபாடுகள் இல்லை. அப்படிப்பட்ட சிறந்த துறை, மிகச் சிறப்பாகத் தமிழகத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிறது. இப்போது தலைமை நீதிபதியாக இருக்கிறவர்களும், நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களும் பல்வேறு நிகழ்ச்சிகளிலே கலந்து கொண்டு, நீதி நிர்வாகம், சிறந்து செயல்படுகிறது என்பதற்காக அத்தாட்சிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், நாகர்கோவில் போன்ற தென் மாவட்ட மக்கள் எல்லாம் சென்னைக்கு வந்துதான் தம் வழக்குகளுக்கு மேல்முறையீடு செய்யவேண்டும் என்கிற சூழ்நிலையை மாற்றி இருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கங்கள் அதற்கான வழிமுறைகளைக் காணவேயில்லை; மதுரையிலே, உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகள் சரியாக, முறையாக அதைச் செயல்படுத்தாமல் இருந்த காரணத்தினாலே தடைகள் ஏற்பட்டு, இப்போது தமிழ்ப் புத்தாண்டு பிறந்த நாளன்று, மதுரையிலே கால்கோள் விழாவை நடத்தி, மிகச் சிறப்பாக நீதிபதிகள் செயல்பட வேண்டுமென்கிற நடைமுறையைச் சொல்லி, அந்த இடத்திலேயே 56 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து உயர்நீதிமன்றத்தின் கிளையை நிறுவுகின்ற ஒரு முறையை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். இவையெல்லாம் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகள்.

*பிற்பகல் 12-15*

அதுமட்டுமல்ல, இந்தத் துறை சிறப்பாகப் பணியாற்றுகிறது என்பதற்குச் சில விவரங்களைச் சொல்லலாம். இதற்கு முன்னால் இருந்த ஆட்சிக் காலத்தில் ஊழல் செய்தவர்களுக்காக தனி நீதிமன்றங்களை அமைத்து அந்த நீதிமன்றங்கள் இப்போது மிகச் சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் அறியாமல் இல்லை. அந்தத் தனி

[திரு. மா. இராமச்சந்திரன்] [2000 ஏப்ரல் 27

நீதிமன்றங்கள் அமைத்ததே தவறு என்றும், அதிலே ஊழல் குற்றச்சாட்டு சாட்டப்பட்டவர்கள், உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் வரையிலே சென்று, அதை முறையாக அரசாங்கம் ஏற்படுத்தவில்லை என்றும், அதிலே தவறு இருக்கிறது என்றும் காரணங்களைச் சொல்லி வழக்காடி, உயர் நீதிமன்றத்திலும், உச்ச நீதிமன்றத்திலும் தோற்றுப்போய் மறுபடியும் அந்தத் தனி நீதிமன்றத்திலே ஊழல் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு தண்டனையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாம் அறியாமல் இல்லை, இதிலே ஒரு பெரிய வெற்றியை இந்த நீதித் துறை பெற்றிருக்கிறது. அதற்குக் காரணம் தனி நீதிமன்றம் அமைத்ததே தவறு என்று சொன்னவர்கள், இப்போது தோல்வியடைந்து இருப்பதை பெரிய வெற்றியாகக் கருதவேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய வழக்கறிஞர் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். அரசு வழக்கறிஞர்களை நியமிப்பதிலே, முறையான வழக்கறிஞர்களை, பயின்ற வழக்கறிஞர்களை, பிரசித்தி பெற்ற வழக்கறிஞர்களை நியமிக்கவில்லை. ஆகையினால்தான் வழக்குகள் சரியாக நடைபெறவில்லை என்ற வாதத்தைச் சொன்னார்கள். இப்போது சரியாக, முறையாக வழக்கறிஞர்களை நாம் நியமிக்கிறோம் என்பதால்தான் தனி நீதிமன்றங்களில் ஊழல வழக்குகளைச் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் தண்டனை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நாடு அறியும். நல்ல வழக்கறிஞர்களைத்தான் இந்த அரசாங்கம் நியமிக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

அதுபோலவே இப்போது நீதி நிர்வாகத்திலே உள்ள சில கஷ்டமான சூழ்நிலைகளை விளக்கிச் சொன்னார்கள். நம்முடைய அரசாங்கம் நீதிமன்றங்களை உருவாக்க முடியும், சட்டங்களை உருவாக்க முடியும். ஆனால் நீதிபதிகள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று சொல்வதற்கு நம்முடைய துறைக்கு அதிகாரம் இல்லை. ஆனால் நீதிபதிகள், சரியாக, முறையாக நடந்துகொள்ள வேண்டுமென்று சொல்லுகின்ற அதிகாரம், உயர் நீதிமன்றத்திற்கு இருக்கிறது. இதிலே உச்ச நீதிமன்றத்திற்கும் உயர் நீதிமன்றத்திற்குமே மாறுபாடான கருத்துகள் சில சமயங்களில் வந்தன. அமர்வு நீதிபதியை உயர் நீதிமன்றம் நீக்கியபோது, அந்த அமர்வு நீதிபதியை நீக்கியது தவறு என்று உச்ச நீதிமன்றம் சொல்லி, எங்களுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது என்ற வாதத்தை வைத்தார்கள். இப்படிப் பல்வேறு காரியங்களிலே நீதிபதிகள் செய்கின்ற தவறுகள் (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒன்றுமே பேசவில்லை. அதற்குள்



2000 ஏப்ரல் 27] [திரு. மா. இராமச்சந்திரன்]

மணியடித்தால் எப்படி? இதுமாதிரி நிகழ்ச்சிகள் வருகின்றபோது நீதிபதிகள் எப்படி நல்லவர்களாக நடந்துகொள்ள வேண்டுமென்ற நடைமுறையை நீதிமன்றங்கள்தான் சொல்ல வேண்டும். ஆனால் அதைக் கண்காணிக்கின்ற பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது; நம்முடைய உள் துறைக்கு இருக்கிறது. ஆனால், மற்ற துறைகளிலே ஒரு தவறு செய்தால், ஊழல் செய்தால், அந்த அதிகாரியைப் பிடித்து, குற்றவாளியாக அங்கேயே கைது செய்து நீதிமன்றத்திலே நிறுத்துகின்ற ஒரு முறை இருக்கிறது. ஆனால் நீதித் துறையிலே மட்டும் தவறு செய்த நீதிபதியைப் பற்றி எழுதலாமே தவிர, அவரைப் பிடித்து ஒப்படைக்கிற ஒரு சூழ்நிலை இல்லை என்பதாலேயே தவறுகள் நடைபெறுகின்றன. அதை மாற்றுகின்ற முறையை உயர் நீதிமன்றமும், உச்ச நீதிமன்றமும் செய்கின்றதா என்பதை நாம் பார்க்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, பல்வேறு வழக்குகளுக்காக உயர் நீதிமன்றத்திலே 42 நீதிபதிகள் செயல்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் 35 நீதிபதிகள்தான் இப்போது இருக்கிறார்கள். உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றில் நீதிபதிகளை நியமிக்கின்றபோது (மணியடிக்கப்பெற்றது) அதிலே ஒதுக்கீட்டின்படி நீதிபதிகளை நியமிக்கின்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நம்முடைய ஜனாதிபதியிடமே நாம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். நம்முடைய தலைவர் அவர்களே அதை வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நீதிமன்றத்தை மதிக்கின்ற ஒரு தலைவர் நம்முடைய முதல்வர் என்பதற்கு ஒரு உதாரணத்தைச் சொல்லலாம். தமிழ்வழிக் கல்வியிலே பல்வேறு வியர்சனங்கள் இந்த நாட்டிலே வந்தன. தமிழ்வழிக்கல்வி அவசியம் என்கிற நடைமுறையை தமிழகம் முழுவதும் தமிழ் அறிஞர்கள் போற்றுகிற அதைச் சொல்கிற நிலை வந்தது. அப்பொழுது உயர் நீதிமன்றத்திலே அந்த நீதிபதி ஒன்றைச் சொன்னார். வெளியிலே, Platform-களிலே விமர்சனம் செய்வதை நிறுத்துங்கள் என்று சொன்னார். அதைச் சொன்னவுடனே, முதலிலேயே அந்தச் சட்டத்தை மதிக்கிற வகையிலே, அந்த நீதிபதியை, நீதிமன்றத்தை மதிக்கிற வகையிலே நடந்துகொண்ட ஒரே முதல்வர், நம்முடைய தலைவர் கலைஞர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட....

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டம், சிறைச்சாலை மானியக் கோரிக்கையிலே பேச எனக்கு வாய்ப்புக் கிடைத்ததற்கு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். மதுரையில் உயர் நீதிமன்றத்தினுடைய கிளையை ஆரம்பிப்பதற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி ஜெயலலிதா ஆகியோர் முழு முயற்சி எடுத்துக்கொண்டார்கள். இப்போது வெற்றிபெற்றிருக்கிறது. ஒரு வருட காலத்திற்குள் இந்தக் கட்டடங்களெல்லாம் கட்டி முடிக்கப்பட்டு, தேங்கிக் கிடக்கும் வழக்குகளை உடனே முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதுமட்டுமல்லாமல், உயர் நீதிமன்றத்தில் 11 நீதிபதி இடங்கள் காலியாக இருக்கின்றன. உங்கள் தோழமைக் கட்சிகளெல்லாம் சேர்ந்து, சாதி வாரியாக எங்களுக்கு நீதிபதி வேண்டுமென்று சொல்வதனாலே நீங்கள் அதை ஒத்திப்போட்டுக் கொண்டே இருக்கிறீர்கள். ஆனால் தேங்கிக் கிடக்கின்ற வழக்குகளை முடிப்பதற்காக அந்த இடங்களில் நீதிபதிகளை உடனடியாக தமிழ்நாடு முழுவதும் நியமிக்க வேண்டும்.....

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சென்னை நீதிமன்றத்திற்கு மொத்த இடங்கள் 42. இப்போது பணி செய்கின்ற நீதிபதிகள் 35. இந்த 42-ல் 32 இடங்கள் நிரந்தப் பணியிடங்கள். இந்த 32 இடங்களுக்கும் நீதிபதிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தற்காலிகமாக உள்ள 10 இடங்களில்தான் இன்னும் சிலர் நியமிக்கப்படவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சில Court-களில் நீதிபதிகளே இல்லை. ஆகையினாலே காலியாக உள்ள இடங்களை எல்லாம் நிரப்புவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க வேண்டும்.

இன்னொன்று, நம்முடைய பாரதப் பிரதமர் ராஜிவ்காந்தி, ஒரு தேசியத் தலைவர். நமக்கெல்லாம் பிரதமராக இருந்தார். அவரை விடுதலைப் புலிகள், நம்முடைய தமிழ்நாட்டிற்கு வந்து கொன்றுவிட்டார்கள். ஆனால், தமிழ்நாடு அமைச்சரவை கூடி, அந்த நளினிக்கு மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டுமென்று சொல்லி, நீங்கள் பரிந்துரை பண்ணினீர்கள். உங்களுக்கு என்ன power இருக்கிறது? மந்திரி சபையிலே மந்திரியை மாற்றுவதற்குத்தான் உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது இந்தப் power-ஐ யார் கொடுத்தார்கள்?



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அதிகாரத்தை உங்களுக்கு யார் கொடுத்தது என்று கேட்கிறார். அமைச்சரவை கூடி ஒரு முடிவைத் தெரிவிக்க வேண்டுமென்று நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். நான் பேசிக் கொண்டிருக்கிறேன். இருங்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Supreme Court-லே ....

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order, Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே நீதிமன்றம் ஆணையிட்டதால்தான், இப்படி அமைச்சரவை கூடிப் பேசியதாகச் சொன்னார்கள். Criminal Procedure Code-லேயே ஒரு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கிய பின்னால், அந்தத் தீர்ப்பையொட்டி அரசாங்கம் கருணைக் காட்டுவதாக இருந்தால் காட்டலாம் என்று, அதற்காக ஒரு தனிப் பிரிவு இருக்கிறது. நீதிமன்றம் ஆணையிடாமலேயே அது வழிமுறைக்கு உண்டு. ஆனால், அதைக் காட்டலாமா, காட்டக்கூடாதா என்று, நளினிக்குக் காட்டியது தவறு என்ற விதத்தில் அவர் பேசிக் கொண்டிருக்கிறார்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி அவர்களை,...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசமைப்புச் சட்டத்திலே, ஆளுநராக இருந்தாலும் சரி, குடியரசுத் தலைவராக இருந்தாலும் சரி, தண்டனை பெற்றவர்களை மன்னிப்பதற்கு அல்லது தண்டனைக் காலத்தைக் குறைப்பதற்கு அரசுக்கு உரிமை இருக்கிறது. அதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்துக் கிடையாது. உங்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று அவர் கேட்கிறார். ஆனால் அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பது இந்த அரசாங்கத்தினுடைய விருப்பத்தைப் பொறுத்தது.

**திரு. இரா. தாமரைக்கனி:** ராஜிவ் காந்தி கொலை வழக்கிலே தமிழக போலீசார் வழக்குப் போடவில்லை. அவர் தேசியத் தலைவர். C.B.I. பல வருடங்களாக விசாரணை செய்து, தனி Court அமைத்து, 26 பேருக்குத் தண்டனை கொடுத்து, 4 பேருக்கு மரண தண்டனை கொடுத்தார்கள். அதை Supreme Court-லே... *(மணியடிக்கப்பெற்றது)* ஏன் மணி அடிக்கிறீர்கள்? *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏன் மணி அடிக்கிறீர்கள் என்று என்னைக் கேட்கக்கூடாது. இந்தப் பிரச்சினை நேற்றே எழுப்பப்பட்டு, போதிய விளக்கத்தை முதலமைச்சர் அவர்கள் கொடுத்துவிட்டார்கள். அதையே திருப்பித் திருப்பி, அரைத்த மாவையே அரைப்பதை விட்டுவிட்டு, அடுத்த point-க்கு வாருங்கள்.

*பிற்பகல் 12-25*

**திரு. இரா. தாமரைக்கனி:** அதாவது, தமிழ்நாட்டிலே, சட்டத் துறையிலே, சட்ட மீறல் நடந்திருக்கிறது என்ற தலைப்பிலே நான் பேசிக்கொண்டிருக்கிறேன். இப்போது தமிழ்நாட்டிலே, சட்டத் துறை செயலிழந்து போய்விட்டது. தேசிய தலைவர் ராஜிவ் காந்தி கொலையிலே குற்றம் சாட்டப்பட்ட நளினிக்குத் தண்டனையை வரிந்து குறைப்பதற்கு ஏற்கெனவே உங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆனால, சட்டத் துறை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்த வழக்கை விசாரித்த நீதிபதியே . . .

**திரு. இரா. தாமரைக்கனி:** சட்டத் துறை எந்த ஆலோசனையையும் ஏன் செய்யவில்லை? சட்டத் துறை ஏன் எந்த ஆலோசனையையும் சொல்லவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தையே நீங்கள் அவமதிக்கிறீர்கள். Supreme Court நீதிபதியை அவமதிக்கிறீர்கள். Supreme Court-ஐ இந்த அரசு அவமதிக்கிறது....*(குறுக்கீடு)*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Cabinet கூடி இதுபற்றி ஒரு முடிவை அறிவிக்க வேண்டுமென்று நீதிமன்றமே கட்டளையிட்டது. இது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியாதது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.



**திரு. இரா. தாமரைக்கனி:** Supreme Court-ன் உத்தரவுப்படி அவர்களுக்குத் தண்டனை கொடுத்திருக்கிறார்கள். High Court-க்கு என்ன உரிமை இருக்கிறது? High level Court-Supreme Court Supreme Court-ஏ.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** High Court-க்கு என்ன உரிமை இருக்கிறது என்பதை அங்கேபோய்க் கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** Supreme Court-லே தண்டனை கொடுத்திருக்கிறார்கள். தண்டனை பெற்றவர்கள் ஜனாதிபதிக்கு மனு கொடுத்திருக்கிறார்கள். High Court, தமிழ்நாடு சர்க்காரைக் கேட்டுக்கொண்டதாம்; உடனே இவர்கள் மந்திரி சபையைக் கூட்டி, ஒரு கட்டைப் பஞ்சாயத்து செய்து... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல அருமையான கருத்துகள். அவருக்குத் தோன்றிய கருத்துகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார். இதை வைத்து அவர் ஒரு வழக்கையே போடலாம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நிச்சயமாக நாட்டு நலன் கருதி, இந்த நாட்டினுடைய பிரஜை என்கிற முறையிலே, இந்த அமைச்சரவை பரிந்துரை செய்ததை எதிர்த்து நானே — சட்டமன்ற உறுப்பினர் — Supreme Court-லே வழக்குத் தொடர இருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** நல்ல விளம்பரம் கிடைக்கும். *(சிரிப்பு)*

**திரு. இரா. தாமரைக்கனி:** கொலைகாரர்களுக்கு ஆதரவு கொடுத்து — விடுதலைப் புலிகளாலே ஒரு பாரதப் பிரதமர் இறந்துவிட்டார் — அவர்களுக்கு மன்னிப்புக் கொடுக்கிற அளவுக்கு, ஒரு கொலையாளிக்கு ஆதரவு கொடுக்கிற இந்த அரசு, விடுதலைப் புலிகளினுடைய ஆதரவாக இருந்து செயல்படுகிறது என்று சொல்லி, உலகமே உங்களைப் பார்த்து சிரிக்கப்போகிறது. . . .

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மன்னிப்புக் கொடுக்கலாம் என்று திருமதி சோனியா காந்தி சொன்ன பிறகு, அவரையே இவர் அவமதிக்கிறாரா?

**திரு. இரா. தாமரைக்கனி:** ஒரு பெண் என்ற மனிதாபிமான அடிப்படையிலே சொன்னதை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி அவர்களுக்கு, நேற்றே இந்த விவாதம் அவையிலே எழுப்பப்பட்டு அதற்கு முதலமைச்சர் தெளிவாகப் பதில் சொல்லிவிட்டார். உங்கள் கட்சித் தலைவியே இதுசம்பந்தமாக என்ன பேசியிருக்கிறார் என்பதை நேற்றே படித்துக் காட்டியிருக்கிறார். அதனால் அந்த point-ஐ விட்டுவிட்டு அடுத்த point-க்கு வாருங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி வந்தாலே, விடுதலைப் புலிகள், அவர்கள் பாட்டுக்குச் சொந்த வீடு மாதிரி வருகிறார்கள்; போகிறார்கள். இலங்கையிலே சண்டை நடந்து கொண்டிருக்கிறது. அங்கே உள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வந்து பார்க்கிறார்கள். பொருள்கள் பூராவும் — பெட்ரோல் பூராவுமே — அங்கே போய்க்கொண்டிருக்கின்றன. நீங்கள் பந்தோபஸ்தாக இருந்து கொள்ளுங்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். இங்கே தேச விரோதச் செயல்கள் இருக்கின்றன; ஊடுருவல்கள் அதிகமாக இருக்கின்றன; விடுதலைப் புலிகளை ஆதரிக்கிற இயக்கங்கள் அதிகமாக இருக்கின்றன. உதாரணமாக, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வைகோ. ஜெனீவா மாநாட்டில், விடுதலைப் புலிகள் மாநாட்டிலோ, தேசிய உரிமை Commission மாநாட்டிலோ கலந்துகொண்டு பேசியிருக்கிறார். அது தேச விரோதச் செயல். அந்த நாட்டிலுள்ள உள் துறை இலாகா, நம்முடைய நாட்டைக் கேட்கிறார்கள்; இந்த மாதிரி நடவடிக்கை எடுங்கள்; இப்படி எங்கள் நாட்டு ஜனாதிபதிக்கு ஆபத்து இருக்கிறது என்று சொல்லியிருப்பதால், ரொம்ப நமக்கு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய நேரம் முடிந்துபோய்விடப்போகிறது. நீங்கள் அடுத்த point-க்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் வை.கோ. என்று ஆரம்பித்தால், மறுப்பு எல்லாம் வரும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஆகவே, இப்படிப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய அந்த அரசியல் கட்சிக்குத் தடை விதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு வருகிறேன். தொகுதிப் பிரச்சினைக்கு வந்தால், பேசுவதற்கு விட்டுவிடுவீர்கள். என் ஊர்.

**மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி:** மாண்புமிகு உறுப்பினர் ஒருவருக்கு நாட்டில் நடக்கிற விஷயங்களே தெரியாமல் இருந்தால் அது ரொம்ப பரிதாபத்திற்குரியது. விடுதலைப் புலிகளுக்குத் தடை விதிக்க



வேண்டுமென்று சொன்னார். ஏற்கெனவே விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குத் தடை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தடை இருக்கிறது. ஆனால் அந்த இயக்கத்திற்கு ஆதரவாக இந்தியாவிலே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வை.கோ., அரசியல் கட்சியிலே இணைத்துக் கொண்டு, கள்ளத் தோணியிலே போவது, பிரபாகரன், மாத்தையா ஆகியோர்கூட wall poster அடித்துக்கொள்வது அவருடைய வீட்டிலே பிரபாகரன் படம் இருக்கிறது; கலிங்கப்பட்டியிலே அந்தப் படம் இருக்கிறது. இந்தமாதிரி செய்து கொண்டு தேச விரோதம் செய்கிற ஆட்கள்கூட கூட்டணி வேறு வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அப்போது நாங்கள் இருக்கும்போது எங்களுக்குத் தெரியாது. இப்போதுதான் Clean ஆக எல்லாம் தெரிகிறது. (சிரிப்பு) ஆகவே இந்த மதிமுக-வைத் தடை செய்ய வேண்டும். அவருடைய M.P. பதவியை இரத்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

அதுமட்டுமல்ல, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியிலே ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் வேண்டுமென்று 4 வருடங்களாக நான் நாய் கத்துகிற மாதிரி கத்திவிட்டேன். (சிரிப்பு) மாண்புமிகு தமிழக முதல்வர் என்ன சொன்னார்? ஐயா, 234 தொகுதிகளும் என் தொகுதி; என்னென்ன கோரிக்கை வேண்டுமோ, எழுதிக் கொடுங்கள்; இனிக்க இனிக்க செய்திகள் சொல்கிறேன் என்று சொன்னார்கள். ஐயையோ, முதலமைச்சர் சொல்லிவிட்டாரே, இனிக்க இனிக்க, என்று சொல்லிவிட்டு, முதலமைச்சர் கையிலே கொடுத்தேன்.

அதற்கு எல்லா M.L.A.-க்களும் பொறாமைப்பட்டார்கள். எல்லாம் அவருக்கே செய்கிறாரே, செய்கிறாரே என்று. ஆனால் பத்திரிகையிலே "சீனி" என்று எழுதி, நக்கின மாதிரி எனக்கு ஒன்றுமே செய்யவில்லை. ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் குறித்து High Courtலே பரிந்துரை செய்திருக்கிறார்கள். முன்னுரிமை கொடுங்கள் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். சட்ட அமைச்சர் என்னமோ தெரியவில்லை, பரிந்துரை பண்ணாததற்கெல்லாம் முன்னுரிமை கொடுத்துக் கட்டடம் கட்டியிருக்கிறார்கள். அதனால் ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, எதிர்க்கட்சித் தொகுதி என்று ஒதுக்காமல்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிலே பேசும்போது என்ன சொல்கிறார்கள்? எதிர்க்கட்சி தொகுதி M.L.A.-க்கள் சொன்னால், நான் உடனே செய்து விடுவேன் என்று

சொல்கிறார்கள். சொல்வது ஒன்று, செய்வது ஒன்று. சொன்னதைச் செய்வோம் என்று இப்படி நிறைய அடுக்கு மொழிகளை டாக்டர் கலைஞர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் ஒன்றும் செயலுக்கு வரமாட்டேன் என்கிறது. இனிக்க இனிக்கப் பேசினால் மட்டும் போதுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. அன்பரசன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** இருங்கள், ஒரேயொரு நிமிடம், முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதியைப் பற்றித்தான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் மானியக் கோரிக்கையை விட்டுவிட்டு வேறு எங்கேயோ போய்ப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். மணி ஆகிவிட்டது.

**திரு. இரா.. தாமரைக்கனி:** நான் வேறு ஏதும் பேசவில்லை. இன்னும் ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கிய 10 நிமிடங்கள் முடிந்து விட்டன.

**திரு. இரா. தாமரைக்கனி:** இருங்கள், இன்னும் ஒரேயொரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** ஜாதிக் கலவரங்கள் சம்பந்தமான வழக்குகள் எல்லாம் வாபஸ் வாங்கப்படும் என்று இந்த அரசும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், அறிவித்தார்கள். ஆனால் எங்கள் ஊரில் உள்ள இரு பிரிவுகளுக்குள் ஏற்பட்ட ஜாதிக் கலவரங்கள் தொடர்பான வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை. Collector குறிப்பு எழுத மறந்து விட்டார். தற்போது Collector எல்லாம் பரிந்துரை செய்திருக்கிறார். இதுசம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்திருக்கிறோம். அமைச்சர் ஆலடி அருணாவிற்கும் அங்கே உள்ள பனை ஏறும் தொழிலாளர்கள் 66 பேரும் வந்து மனு கொடுத்தார்கள். அதில் ஒரு ஆள் செத்தும் போய்விட்டார். சட்ட அமைச்சருக்கு மாலை எல்லாம், வாங்கிவந்து போட்டார்கள், ஏமாற்றிவிட்டுப் போய்விட்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே மனு கொடுத்திருக்கிறோம். அவரும் ஆகட்டும் பார்க்கலாம் என்று பெருந்தலைவர் காமராஜர் பாணியிலே சொல்லி விட்டார்கள். file வருகிறது file வருகிறது என்று சொல்கிறார்கள். அதனால், நீங்கள் அதை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. அன்பரசன்.

* **திரு. சி. அன்பரசன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நீதி நிர்வாகத் துறையில் நீதிமன்றம் என்பது விமர்சனத்திற்கு அப்பாற்பட்டது என்றாலும், சட்டம் என்பது விவாதத்திற்குரிய ஒன்றாகும். சட்டம் என்பது நேற்றையதினம் எழுதப்பட்ட சட்டம், இன்றைய தலைமுறையைக் கட்டுப்படுத்த முடியாது என்று டாக்டர் அம்பேத்கர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அதைப்போல நேரு அவர்களும், எழுதப்பட்ட அரசியல் சட்டம் என்பது முடிவானதும் அல்ல; அது நெகிழக்கூடிய தன்மை உள்ளது இல்லை என்றும் சொல்ல முடியாது என்று சொல்லியிருக்கின்றார்கள். அதைப் போல பேரறிஞர் அண்ணா அவர்கள், இந்தச் சட்டமன்றத்திலே பேசுகின்றபோது, டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய பேச்சை எடுத்துக் கூறினார்கள். அரசியல் சட்டத்தில் சில பிரிவுகள் எரிக்கப்பட வேண்டும் என்று அம்பேத்கர் அவர்கள் கூறினார்கள். அப்போது சில பேர், அண்ணல் அம்பேத்கர் அவர்களைப் பார்த்து, நீங்கள்தானே இந்தச் சட்டத்தை உருவாக்கினீர்கள் என்று கேட்டபோது, நான் எங்கே முழு மனதோடு உருவாக்கினேன், நான் உருவாக்குவதற்கு சூழ்நிலை அமைந்தது என்று அண்ணலார் அவர்கள் கூறியதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தச் சட்டமன்றத்திலே எடுத்து வைத்திருக்கின்றார்கள். எங்களுக்கு உள்ள கவலையெல்லாம் இந்தச் சட்டம் வெகு அதிகமாக வளைந்துவிடக்கூடாது என்பதுதான்.

இங்கே மாண்புமிகு பொதுவுடைமைக் கட்சித் தலைவர் அவர்கள் நிதி குறிலாகவும், நீதி நெடிலாகவும் இருக்க வேண்டும் என்றார். பொருளாதாரக் குற்றத்தைச் செய்துவிட்டு, சிறைக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை வந்தால் தேடிய அந்தப் பொருளையே ஆதாரமாகக் கொண்டு எப்படியாவது வெளியிலே வந்துவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டு இருக்கின்றார்கள் ஜனநாயகத்தைப் பணநாயகத்திற்குப் பலி கொடுத்தவர்கள்; இப்போது ஜனநாயகப் போர்வையிலே, நிரபராதிகளாக வந்துவிடலாமென்று துடித்துக் கொண்டிருக்கிறார்கள். நீதி அவர்களை விரைந்து தண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரையிலே, உயர்நீதிமன்றக் கிளையைத் தொடங்கியதற்கு இந்த அரசுக்கு என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டக் கல்லூரிகளிலே கல்லூரிப் பேராசிரியர்களாக 12 ஆண்டு காலமாக, 28 பேர் பணியாற்றி வருகின்றார்கள். அவர்களுக்கு நிரந்தர ஊதியம் வழங்கப்படவில்லை. அவர்கள் ஆசிரியர் தேர்வாணைக்

குழுவாலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தாலும் தொடர்ந்து தற்காலிக ஊழியர்களாகப் பணியாற்றி வருகின்றார்கள். அவர்களுடைய கோரிக்கையை இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் கி.பி. 21 ஆம் நூற்றாண்டில், நம்முடைய மணிமேகலை அவர்கள், சிறைச்சாலையைச் சீர்திருத்தி, அறச்சாலையாக மாற்றினார்கள். ஆனால் இப்போது சிலபேர் சிறைக்குச் செல்கின்றார்கள். செய்யக்கூடாத தவறுகளைச் செய்துவிட்டுச் செல்கின்றார்கள். சென்றதற்குப் பின்னாலே, அவர்கள் சிறைச்சாலையைச் சீர்திருத்தம் செய்ய வேண்டாம்; ஆனால் சிறைச்சாலையை அவர்கள் நடிப்புப் பல்கலைக்கழகங்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எந்தவிதமாக நடிக்கிறார்கள் என்றால், பாராட்டக்கூடிய அளவிற்கு நடிக்கிறார்கள். Coma stage என்கிறார்கள். படுக்கையிலே வைத்துத் தூக்கி வருகிறார்கள். பத்திரிகைகள் பரிதாபப்படுகின்றன. ஐயையோ, அம்மையாரை இப்படி எல்லாம் இழிவுபடுத்தலாமா, கஷ்டப்படுத்தலாமா, கொடுமைப்படுத்தலாமா, என்றெல்லாம் பத்திரிகைகள்கூட, எழுதுகின்றன. ஆனால் 10 தினங்களுக்குப் பின்னாலே பார்த்தால் அந்த அம்மையார் எந்த Coma stage-லே இருந்தாரோ, அவர் குதித்து எழுந்து, புள்ளி மானைப் போலத் துள்ளி வருகிறார். இது எப்படி என்றுதான் நமக்குப் புரியவில்லை.

நான்கூட டாக்டர் கலைஞரைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய தவ நடிக பூபதி பி.யு. சின்னப்பா அவர்கள் சிறந்த நடிகர். இப்போது யார், யார் பெயரிலோ விருதுகள் வழங்கப்படுகின்றன; தகுதியானவர்கள் பெயரிலே. அதைப்போல எங்களுடைய தவ நடிக பூபதி பியு சின்னப்பா அவர்கள் பெயரிலும் ஒரு விருது வழங்க வேண்டும். அந்த விருதைத் திரைப்படத்திலே மட்டுமல்ல; டிவியிலே மட்டுமல்ல, வேண்டுமென்றால், இதுபோன்ற அரசியல் நாடகங்களிலே நடிக்கின்றவர்களுக்குக்கூட, அந்த விருதை வழங்கலாம்.

இங்கே பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள், வைகோ. அவர்கள் விடுதலைப் புலிக்கு ஆதரவாக இருந்தார் என்று தெரியாமல் இருந்துவிட்டோம் என்று சொன்னார். ஒன்று உண்மைதான், நீங்கள் தெரியாமல் வைத்திருக்கின்ற விஷயங்கள் ஏராளம். தெரிந்தும் தெரியாமல் வைத்திருக்கின்ற விஷயங்கள் அதைவிட ஏராளம். ஆனால், இதுபோன்ற விஷயங்களை நீங்கள் நம்புங்கள். ஆனால், இந்த



நாடு நம்ப வேண்டும் என்று தயவுசெய்து விரும்பாதீர் என்று மட்டும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

சிறுவர்கள் சீர்திருத்தப் பள்ளியைப் பொறுத்தவரையில், சிறுவர்கள் குற்றம் செய்வது மனச் சிதைவின் காரணமாகத்தான், அந்தக் குற்றங்களைச் செய்கிறார்கள். அந்தச் சிறைச்சாலைகளிலே பணிபுரிந்தவர்கள் அங்கே தகுந்த பயிற்சியை எடுத்து, அதே சிறைச்சாலையில் ஆசிரியர்களாக, Carpenter-களாக, இசை வல்லுநர்களாக அங்கே பணிபுரிகின்றார்கள். அந்த அளவிற்கு அங்கே பணிபுரிகின்ற சிறைக் காவலர்களுக்கு, அந்த மனோதத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளும் அந்தப் பயிற்சியும் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் ஊரார் வீட்டுப் பிள்ளையை ஊட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும் என்று கக்கன் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவி செய்தீர்கள்; மறைந்த அமைச்சர் இராமையா அவர்களுடைய குடும்பத்திற்கும் உதவி செய்தீர்கள். அதைப்போல புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள எங்களுக்கு ஒரு பெரிய பெருமை உண்டு; எங்களுடைய மாவட்டம் தென் மாவட்டங்களிலிருந்து கொஞ்சம் வேறுபட்ட மாவட்டம். அங்கே ஜாதிக் கலவரங்கள் ஏற்படுவதில்லை. (மணியடிக்கப்பெற்றது) அதற்குக் காரணம் திராவிட இயக்கத்திலே பணியாற்றிய மூத்த பெருந்தலைவர் அருமை அண்ணன் மறைந்த அமைச்சர் கே.வி.எஸ். அவர்கள். எங்களைப் போன்ற அன்றைய மாணவர்களை நல்ல முறையில் பகுத்தறிவுப் பாசறையின் பக்கம் திருப்புகின்ற அளவிற்குப் பணியாற்றியவர்கள். இன்றைக்கு அந்தக் குடும்பம் காணத் தகுந்தது வறுமைதான். பூணத் தகுந்தது பொறுமைதான் என்ற அளவிலே சிக்கித் தடுமாறிக் கொண்டிருக்கிறது. அவருக்குச் சொந்தமாக இருந்த ஒரு ஒரு நெல் அரைவை ஆலைகூட இப்போது அரசாங்கத்தினாலே ஜப்தி செய்யப்பட்டுவிட்டது. அதன் உள்ளே நான் செல்ல விரும்பவில்லை. அந்தக் குடும்பம் அந்த அளவிற்குப் பரிதாபத்திற்குரிய நிலைமையிலே இருக்கிறது. அந்தக் குடும்பத்தையும் இந்த அரசு காப்பாற்ற வேண்டும். தியாகம் செய்தவர்கள், தூய்மையானவர்கள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கின்றார்கள். எல்லா ஆட்சியிலும் இருக்கின்றார்கள் என்ற உணர்வோடு அவர்களுடைய குடும்பத்திற்கு உதவி செய்ய வேண்டும்.

*பிற்பகல் 12-40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

• **திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று ஒரு சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். அதற்கு முன்னால் நம்முடைய மாண்புமிகு மூத்த உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசுகின்றபோது, நீதித் துறைத் தீர்ப்புகளை விமர்சனம் செய்யக் கூடாது என்ற ஒரு கருத்தை அவர்கள் சுற்றிச் சுற்றி, ஒரு பிரச்சினையை வெளிப்படையாகப் பேசாமல் பேச வந்தார்கள். அது என்ன என்பது நமக்கெல்லாம் தெரிகிறது. அவர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்தத் தீர்ப்பு தவறானது என்று இரண்டு தினங்களுக்கு முன்னாலேதான் Supreme Court தீர்ப்பு வழங்கியிருக்கிறது என்ற செய்தியை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து மன்னிக்க வேண்டும். நான் யாரையும் கருத்தில் கொண்டு பேசவில்லை. நீங்கள் சொல்பவர்களையும் எண்ணிப் பேசவில்லை. அப்படிப் பேசவேண்டிய அவசியமும் இல்லை. பேச வேண்டுமென்றால், வெளிப்படையாகவே பேசிப் பழக்கப்பட்டவன் நான்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** நன்றி. அடுத்து மதுரையிலே உயர்நீதிமன்றக் கிளையை 13-4-2000-ல் ஆரம்பித்து, அன்றே 56.45 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்வதாக முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். விழாவில் கலந்து கொண்ட உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் கூட அதைப் பாராட்டிவிட்டு, நிதியை ஒதுக்கியிருக்கிறீர்கள், இன்னும் ஓராண்டு காலத்திற்குள் இதைக் கட்டி முடியுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். அதை நிச்சயமாகச் செய்து முடிப்பேன் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கூட்டத்திலே தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே திட்டத்தை அறிவிப்பது மட்டுமல்ல; திட்டத்தை நிறைவேற்றுவதிலேயும் நம்முடைய முதல்வர் அவர்கள் முன்னிலையில் நிற்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்; இந்தியாவிலேயே சட்டக் கல்விக்காக ஒரு பல்கலைக்கழகம் இருப்பது, தமிழ்நாட்டிலேதான்; நம்முடைய முதல்வர் அவர்கள்தான் அதை ஆரம்பித்து வைத்தார்கள். நாங்கள் மதிப்பீட்டுக் குழுவில் மகாராஷ்ட்டிர மாநிலத்திற்குச் சென்றபோது அங்கே இருந்த கைத்தறித் துறை அமைச்சரோடு கலந்துரையாடினோம். அவர்கள் எல்லாம் கலந்து



கொண்டார்கள். இறுதியிலே பேசுகின்றபோது நான் ஒரு கருத்தை—அங்கு 2,3 அமைச்சர்கள் இருந்தார்கள்—அவர்களுக்குத் தெரிவித்தேன்.

Dr. Ambedkar may be the son of your soil, but his name is more popular in Tamil Nadu than in your State. Our Hon. Chief Minister Kalaignar has made it so.

என்று சொன்னேன். அவர்களிடத்திலே பேசுகின்றபோது, அம்பேத்கர் உங்கள் மாநிலத்தினுடைய மைந்தனாக இருக்கலாம். ஆனால், அவருடைய பெயர் உங்களுடைய மாநிலத்தைவிட தமிழ்நாட்டில் அதிக புகழுக்குரியது. ஏனென்றால், எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், அவர் பெயராலே சட்டப் பல்கலைக்கழகம் மட்டுமல்ல, அவருக்கு நினைவுச்சின்னமும் அமைத்து இருக்கிறார் என்று சொன்னபோது அவர்கள் எல்லாம் வியப்பால் மகிழ்ந்து கலைஞருக்குப் பாராட்டுத் தெரிவித்தார்கள் என்ற செய்தியையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அப்படிப்பட்ட பல்கலைக்கழகத்தில், நானும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் உறுப்பினராக இருக்கிறேன்; Syndicate உறுப்பினராக இருக்கிறேன். முதல்வர் அவர்கள், தனக்காகக் கட்டப்பட்ட வீட்டைக் கூடப் பல்கலைக்கழகம் வைக்கப்படுவதற்கான அலுவலகமாகத் தந்திருக்கிறார்கள். ஆனால், அந்தப் பல்கலைக்கழகத்திலே இருக்கின்ற துணை வேந்தருக்கும், பதிவாளருக்கும், மற்றவர்களுக்கும் ஓர் இணக்கமான சூழ்நிலை முதலிலேயிருந்து ஏற்படவில்லை. நானும் அதிலே பங்கேற்கின்ற சட்டத் துறைச் செயலாளரும், ,கல்வித் துறைச் செயலாளரும் பலமுறை முயன்றும் இணக்கமான சூழ்நிலை வரவில்லை. அந்தப் பதிவாளர்கூட இப்போது பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். ஆகவே மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இதிலே தலையிட்டு ஒரு நல்ல பல்கலைக்கழகம் நல்லமுறையில் நடப்பதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

இன்னும் நம்முடைய. சட்டக் கல்லூரிக்கு 29 பேராசிரியர்களை Director of Legal Studies நியமித்திருக்கிறார். அவர்கள் தமிழ்நாட்டு Teachers Recruitment Board மூலமாக மீண்டும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது நீண்டகாலமாக நியாயமான கோரிக்கை.

*பிற்பகல் 12-45*

ஒரேயொரு கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். 2 நிமிடங்களுக்குள் முடித்துவிடுகிறேன். இங்கே அரசமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டுமா, ஆய்வு செய்யப்பட வேண்டுமா என்பது பற்றி பல்வேறு கருத்துகளைச் சொல்லுகிறார்கள்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், மற்றவர்கள் எல்லாம் ஏதோ அரசமைப்புச் சட்டத்தையே மாற்றப்போவதாக எண்ணிக்கொண்டு ஒரு தவறான கருத்தைக் கூறுகிறார்கள். அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். முதலிலே Supreme Court-ல் கோலக்நாத் case என்ற ஒரு வழக்கு இருந்தது. அதிலே அரசமைப்புச் சட்டத்தையே திருத்தக் கூடாது என்று ஒரு தீர்ப்பு வழங்கினார்கள். பிறகு கேசவானந்த பாரதி case என்று கேரளாவிலேயிருந்து சென்ற வழக்கு (மணியடிக்கப்பெற்றது) இதை மட்டும் பேசி முடித்துவிடுகிறேன். அந்த வழக்கு Supreme Court-க்குச் சென்றபோது - Supreme Court Full Bench - தீர்ப்பு வழங்குகின்றபோது அடிப்படையை-Basic structure of the Constitution-ஐ மாற்றாமல் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்திக்கொள்ளலாம் என்ற ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலேதான் இப்போது இந்தக் குழு, அதுவும் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த வெங்கடாசலய்யா அவர்களுடைய தலைமையில் நியமிக்கப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றும் தவறில்லை.

இன்னும் ஒன்று. Bar Association of India; நம்முடைய உச்ச நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்கறிஞர் சங்கம், இரண்டு மாத காலத்திற்கு முன்னால் இந்த அரசமைப்புச் சட்டத்தை ஆய்வு செய்து, சில பிரிவுகளை மாற்ற வேண்டுமா என்று அதற்காக இந்தியா முழுவதிலுமிருந்து பல்வேறு கட்சித் தலைவர்கள், பல்வேறு சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்களை எல்லாம் அழைத்து, 4 தினங்களாக மாநாடு போட்டார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டத் துறை அமைச்சரை அனுப்பினார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கலந்துகொள்ள என்னையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், ராஜ்குமார் மன்றாடியார் அவர்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கே அனுப்பினார்கள். நாங்கள் எல்லாம் கலந்துகொண்டு பேசினோம். அதைப்பற்றி கல்கி பத்திரிகையில் மிகவும் பாராட்டி எழுதுகின்றபோது என்ன எழுதினார்கள் என்றால் இப்போது ஒரு மாநிலக் கட்சியாக, திராவிட முன்னேற்றக்



கழகம் இருந்தாலும்கூட— (மணியடிக்கப்பெற்றது) இதோ முடித்துவிடுகிறேன். -இப்படிப்பட்ட ஒரு அகில இந்திய பிரச்சினையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அக்கறை எடுத்துக்கொண்டு தங்களுடைய பிரதிநிதிகளை அனுப்பியிருக்கிறார்கள் பாராட்டுகிறோம். ஆனால் தமிழ் மாநில காங்கிரசும் அ.தி.மு.கவும் இந்த மாநாட்டிற்கு யாரையும் பிரதிநிதியாக அனுப்பவில்லை என்பது வியப்பிற்குரியது என்று எழுதுகிறார்கள். அந்த மாநாட்டிலேகூட பல்வேறு கருத்துகள் எடுத்துச்சொல்லப் பட்டிருக்கின்றன. ஆகவே ஆய்வு செய்வது என்பது ஏதோ ஒரு பஞ்சமா பாதகம் அல்ல. ஆகவே சட்டத்திற்குட்பட்டு basic structure-ஐ மாற்றாமல் செய்வதைப் பற்றி அண்ணா கூறியிருக்கிறார். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே இராஜமன்னார் Commission என்ற ஒரு Commission-ஐ போட்டார்கள். பிறகு அகில இந்திய ரீதியில் சர்க்காரியா Commission போடப்பட்டது. ஆகவே இந்த அடிப்படையிலேதான் மாற்றப் போகிறோமே தவிர வேறு அல்ல என்பதைக் கூறிக்கொண்டு நேரமில்லாத காரணத்தினால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர்.

***திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீதி நிருவாகம், சிறைச்சாலைகள், சுற்றுச்சூழல் ஆகிய மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீதித் துறையைப் பொறுத்தவரையில் சென்ற ஆட்சிக் காலத்திலே நீதிபதிகள் எல்லாம் பல வழிகளிலே மிரட்டப்பட்டார்கள். அதன் வாயிலாகத் தாங்கள் விரும்புகின்ற தீர்ப்புகளைப் பெறுவ்தற்கான முயற்சிகளை எல்லாம் மேற்கொண்டார்கள். ஆனால் இப்போது தமிழக அரசு, திராவிட முன்னேற்ற கழக அரசு பொறுப்பேற்ற பிறகு நீதிபதிகள் எல்லாம் மிகவும் சுதந்திரமான முறையில்—திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கூட ஆயுள் தண்டனை வழங்குகின்ற அளவிற்கு சுதந்திரமாகச்—செயல்படக்கூடிய நிலைமை இப்போது இருக்கிறது என்பதை எண்ணும்போது இந்த அரசை நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

அதேநேரத்தில் கோவை வெடிகுண்டு வழக்கிலே சுமார் 73 பேர் அப்பாவிகள் அந்த வழக்குகளிலே பிணைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை

நான் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அப்படி பிணைக்கப்பட்டவர்களை, அந்த வழக்குகளை மறு ஆய்வு செய்தாவது, விடுதலை செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இல்லையென்று சொன்னால் குறைந்தபட்சம், அவர்களுக்குப் பிணைய விடுப்பாவது வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் தமிழ் மாநில தேசிய லீக்கின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் நான் வேலூர் சிறையில் சென்று பார்த்தபோது, கபீர் என்ற ஒரு கைதி அங்கே அடைக்கப்பட்டிருக்கிறார். அவர் கோவை வெடிகுண்டு வழக்கு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆனால் வழக்குகளில், குற்றப் பத்திரிகையில் அவருடைய பெயரே இல்லை. ஆனால் இரண்டு வருடங்களாக அவர் சிறையில் இருக்கிறார். இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் இருக்கின்றன. காவல் துறையின் கவனக் குறைவினாலோ அல்லது வேறு எந்த முறையினாலோ இப்போது அப்பாவிகள் எல்லாம் பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில் அவை எல்லாம் பல்கலைக்கழகங்கள்; அது திருந்தக் கூடியவர்களுக்கு, திருத்தப்படக் கூடியவர்களுக்கு வாய்ப்பு அளிக்கக் கூடிய ஓர் இடமென்று சொல்லப்படுகின்றது. ஆனால் இப்போது சிறைச்சாலையின் I.G.-யாக நியமிக்கப்படுபவர்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் காவல் துறையைப் பொறுத்தவரையில் அங்கே condemn செய்யப்படக் கூடியவர்கள்தான் இந்தத் துறைக்கு நியமிக்கப்படுகிறார்கள் என்ற ஓர் எண்ணம் இப்போது நிலவிக்கொண்டிருக்கிறது. இந்த நிலையில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் யாரையுமே குற்றவாளி என்ற கண்ணோட்டத்திலே பார்க்கக் கூடியவர்கள்; இவர்களை, குற்றவாளிகளைத் திருத்தக்கூடிய இடத்திலே தலைவராகப் போடுவோம் என்று சொன்னால், நிச்சயமாக அந்த இடத்திலே நல்ல ஒரு முடிவு ஏற்படாது. எனவே சிறைத் துறையைச் சேர்ந்தவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கும்போது அவர்கள் D.I.G. வரைக்கும் வருகிறார்கள். அவர்களை I.G. ஆகவும் பதவி உயர்த்தி அந்த இடத்திலே அமரச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு சிறைச்சாலைகளிலே இப்போது சிறப்புப் பாதுகாப்பு பகுதி என்ற ஒரு பகுதி இருக்கிறது. அந்தப் பாதுகாப்புப் பகுதிகளிலே, அதாவது சிறைக்குள்ளேயே ஒரு சிறையாக, உயர்ந்த சுவர்கள் எல்லாம் வைக்கப்பட்டு அதற்கு மின்சார வேலி எல்லாம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்த



சிறைக்குள்ளாக கம்பி வேலிக்குள்ளே 24 மணி நேரமும் அவர்களை அடைத்து வைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. எனவே, அந்த சுவர்களுக்குள்ளாவது அவர்களை நடமாடுவதற்கு அரசு அனுமதிக்க உத்தரவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அதோடு சிறை வார்டர்களைப் பொறுத்தவரை 10 வருடங்கள் ஆனாலும் 20 வருடங்கள் ஆனாலும் அவர்கள் சிறை வார்டர்களாகவே இருக்கிறார்கள். சில சமயம் அவர்கள் ஓய்வுபெறும் வரைகூட சிறை வார்டர்களாகவே இருந்து ஓய்வுபெறக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, அந்த நிலையை மாற்றி அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்க வேண்டும். 10 வார்டர்களுக்கு ஒரு ஹெட் வார்டர் என்ற நிலைமையிலே அவர்களைப் பதவி உயர்த்தி அமர்த்த வேண்டும். அதுமட்டுமல்லாமல் அவர்களுக்குச் சிறையிலே வழங்கக்கூடிய உணவு-இரவு நேரத்திலே பணிபுரியக் கூடியவர்களுக்கு வழங்கக்கூடிய உணவு—நல்ல முறையிலே வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களுக்கு அதை வழங்க வேண்டும்.

காவல் துறையில் இருக்கக்கூடிய காவலர்களையும், வார்டர்களையும் ஒரே தேர்வாணையத்தின் மூலமாகத்தான் நாம் தேர்வு செய்கிறோம். ஆனால் அவர்களுக்குச் சம்பள விகிதம் என்று பார்க்கும்போது வார்டர்களுக்கு 2,750 ஆகவும் காவலர்களுக்கு 3,050 ஆகவும் இருக்கிறது. எனவே, ஒரே தகுதியின் அடிப்படையிலே தேர்ந்தெடுக்கக்கூடிய வார்டர்களுக்குத் தகுந்தவாறு சமமான அளவிலே ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரே ஒரு வேண்டுகோள். கோவை சிறையிலே வால்மேடு தொகுதி என்று ஒரு சிறைத் தொகுதி (block) இருக்கிறது. அந்தத் தொகுதியிலே சிறப்பு நீதிமன்றம் செயல்படப்போவதாகவும் அன்றைய தினத்திலே அந்தக் கைதிகளைக் கொண்டுபோய் அடைக்கப்போவதாகவும் சொல்கிறார்கள். அந்த வால்மேடு தொகுதி என்ற சிறைத்தொகுதி என்பது மனிதன் வாழ்வதற்கே தகுதியற்ற நிலையில் இருக்கிறது. அந்த இடத்திலே மிருகங்களை விட்டால்கூட அவை வாழமுடியாத சூழ்நிலை அங்கே இருக்கிறது. எனவே அரசு கருணை வைத்து அந்த இடத்திலே கைதிகளுக்கு சிறை விதிகளுக்கு உட்பட்டு காற்றோட்டமான வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டு இந்த வாய்ப்பினைத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதத்தை முடித்து வைப்பவர் திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்புத் தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்திலே நோவா டையிங் என்ற ஒரு சாயப் பட்டறைத் தொழிற்சாலை இருக்கிறது. மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் முதலிலே 3 மாத காலம் மூடியிருந்த அந்த ஆலையை மீண்டும் இப்போது திறந்துவிட்டிருக்கிறார்கள். அந்த ஆலையைத் திறந்ததனால் அந்தக் கழிவுநீர் மீண்டும் அங்கேயிருக்கின்ற முட்டுக்காடு போட் ஹவுசில் வந்து கலப்பதனால் குழந்தைகள் எல்லாம் படகிலே செல்லும்போது கையைத் தண்ணீரிலே வைத்து விளையாடுகிறார்கள். அவர்கள் கை பூராவும் சொறி மாதிரி வந்துவிடுகிறது. ஆகவே அந்தத் தண்ணீர் நிச்சயமாக அங்கே கலக்கக்கூடாத அளவுக்கு என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமோ அதை நிச்சயமாக எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று Kothari Chemicals, I.C.I., Alkaline, Madras Fertilizers, M.R.L., T.N. Petro Chemicals, U.B. போன்றவற்றின் கழிவுநீர் எல்லாம் பழவேற்காடு பகுதியிலே இருக்கின்ற மீனவர்களுக்கு இடையூறாக அந்த ஏரியிலே கலப்பதனால் அங்கே மீன் வளம் குன்றிவிடுகின்றது. அங்கே இருக்கின்ற Alkaline, I.C.I. என்ற இரண்டு நிறுவனங்களுடைய தண்ணீர் ஏறத்தாழ 100 அடிக்கு அங்கே pollute-ஆகி இருப்பதனால் அந்தத் தண்ணீரை ஒரு கையடிப் பம்ப் போட்டு எடுத்தால்கூட அந்தத் தண்ணீர் வெளியே வரும்போது மஞ்சள் நிறத்தோடு நுங்கும் நுரையுமாக வருகிறது. நேற்றுகூட ஒரு மாலைப் பத்திரிகையிலே அங்கே இருக்கின்ற மீனவர்களுக்கு உடல் முழுவதும் சொறி இருப்பதாக எழுதியிருக்கிறார்கள். ஆகவே இதுகுறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அந்தச் சுற்றுச்சூழல் பாதித்து இருக்கின்ற மீனவ குப்பங்களுக்கு நல்ல குடிதண்ணீர் வசதியும், மீன் வளம் குன்றிப்போனதால் அங்கே பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த Kothari Chemicals, I.C.I., Alkaline, Madras Fertilizers, M.R.L., T.N. Petro Chemicals, U.B. மற்றும் மின்சார வாரியத்திலே வேலைவாய்ப்பு கொடுப்பதற்காகவும் ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



உயர்நீதிமன்றத்திலே ஏறத்தாழ 4,36,847 வழக்குகள் இப்போது நடந்துகொண்டிருக்கின்றன. இந்த ஆண்டு மட்டும் வந்த வழக்குகள் 1,04,195 வழக்குகள். பைசல் செய்யப்பட்டவை 95,000 வழக்குகள், நிலுவையிலே 3,20,938 வழக்குகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். வழக்குகளை உடனடியாக பைசல் செய்ய வேண்டும். அது accumulate ஆகிக்கொண்டே போனால் நிச்சயமாக நீதி கிடைக்காது. Delay in enquiry is denying justice என்று சொல்வார்கள். எந்த அளவிற்கு விசாரணை தாமதப்படுத்தப்படுகின்றதோ அப்போது [illegible]ப்பது அவர்களுக்குத் தாமதம் ஆக்கப்படுகின்றது. ஆகவே இந்த வழக்குகள்மீது உடனடியாக விசாரணை நடத்தக் கோருகிறேன். உயர்நீதிமன்றத்திலே எத்தனை நீதிபதிகள் இருக்கிறார்கள்? அங்கே 32 பேர்கள் இருப்பதாகச் சொன்னார்கள். ஏறத்தாழ 45 நீதிபதிகளை நியமிப்பதற்கான நியமனப் பொறுப்பும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களிடத்திலே இருக்கின்றது. உடனடியாக நீதிபதிகளை நியமனம் செய்து அந்த வழக்குகளையெல்லாம் விரைவில் பைசல் செய்ய வேண்டும். ஐயா, நியமனம் செய்யும்போது எங்கள் சிறுபான்மையினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-55*

அடுத்து, சிறைத் துறையைத் பொறுத்தமட்டிலே சிறைத் துறையிலே இருக்கின்ற வேலையாட்களுக்கு, அந்தக் காவலர்களுக்கு சிறைத் துறை வளாகத்திலேயே வீடுகள் கட்டித்தர வேண்டும்.

சிறையிலே இருக்கின்ற கைதிகள் கொடுக்கின்ற புகார்களை விசாரிக்க அங்கே புகார்ப் பெட்டிகள் வைக்கப்படுகின்றன. ஆனால் புகார்ப் பெட்டியை அதிகாரிகளே திறந்து பார்ப்பதனாலே அதிலே எந்தவிதமான நியாயமும் இல்லை. என்ன என் மேலேயே petition எழுதியிருக்கிறாயே என்று சொல்லி உதை உதை என்று உதைக்கிறார்கள். அதனாலே சிறைச்சாலையிலே வைக்கப்படுகின்ற புகார்ப் பெட்டிகளை முதலமைச்சர் அவர்களுடைய நேரடிப் பார்வையிலே இருக்கின்ற C.M. cell-லே இருக்கின்ற அலுவலர்களோ அல்லது நீதிபதிகளை அதற்காக நியமனம் செய்தோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமனம் செய்தோ அதுபோன்ற புகார்ப் பெட்டிகளிலே வருகின்ற புகார்களையெல்லாம் எடுத்து விசாரணை செய்யும்போதுதான் நிச்சயமாக அங்கே ஒரு நியாயமான நிலை ஏற்படும் என்பதை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிறைச்சாலைகள் சிறைச் சட்டத்தின் கரங்களால் கட்டப்பட்டவை என்று சொல்வதுண்டு. சட்டத்தால் சிறைப்படுத்தப்பட்டவன்....

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையிலே இருப்பவர்கள் தங்களுக்கு ஏதாவது தீங்கிழைக்கப்படுமானால் அல்லது குறைகள் இருக்குமானால் அவர்கள் ஏற்கெனவே சிறைச்சாலைக்குள்ளே இருக்கிற பெட்டிகளில் மனுக்களைப் போடலாம். அவற்றை மாதத்திற்கு ஒருமுறை நீதிபதி சென்று பார்க்கிறார்; பரிசீலிக்கிறார்; நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்கிறார்; மேலும், Legal Aid Authority மூலமாகவும் சொல்கிறார்கள். எனவே உள்ளே என்ன குறை இருக்கிறதோ அதை ஒரு சட்ட ரீதியாகவும் நியாய ரீதியாகவும் தீர்ப்பதற்கு எல்லா ஏற்பாடுகளும் ஏற்கெனவே இருக்கின்றன.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள் சட்டத்தின் வாயிலாகக் கட்டப்பட்டவை தான். ஆனால் உள்ளே செல்கின்ற அந்தக் கைதிகளைச் சட்டப்படி நடத்த வேண்டும். மாறாக சிறைச்சாலைகளிலே இருக்கின்ற அதிகாரிகள் எல்லாம் மயானக் கல்லறையிலே இருக்கின்ற ஒரு காவலாளியைப் போன்று நடந்துகொள்கின்றார்கள். அங்கே சிறைச்சாலையிலே இருக்கின்றவர்கள் கைதிகளை பிணங்களைப் போன்றுதான் மதிக்கின்றார்கள். பிணங்ககளை mortuary-யிலே எவ்வாறு இழுத்து இழுத்துப் போடுகின்றார்களோ அந்த மாதிரிதான் அங்கே நடக்கிறது. எல்லோரையும் அடிப்பது, உதைப்பது, இரவு 9 மணிக்கு மேலாக அங்கே இருக்கின்ற குற்றவாளிகளையெல்லாம் குறிப்பாக இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்த குற்றவாளிகளை வெளியிலே இழுத்துச் சென்று அடித்து உதைக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது மிகமிகத் தவறான குற்றச்சாட்டு. இதுபோன்ற குற்றச்சாட்டுகளைப் பலமுறை மாண்புமிகு உறுப்பினர் ஆரூண் அவர்கள் சொல்கிறார்கள். எந்தக் கைதி அடிக்கப்பட்டார், எப்போது அடிக்கப்பட்டார் என்பதற்கான விவரங்களை அவர் தர வேண்டும். ஏனென்றால், சிறைச்சாலைக்குப் பல நீதிபதிகள் செல்கிறார்கள்; மனித உரிமை ஆணையத்தைச் சேர்ந்தவர்கள் செல்கிறார்கள். இதுவரைக்கும் எந்தப் புகாரையும் சிறைச்சாலை நிர்வாகத்தைப்பற்றி அவர்கள் சொன்னதே இல்லை.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுகுறித்து நான் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சருக்கு ஒரு கடிதம்



எழுதியிருக்கின்றேன். குறிப்பிட்ட ஒருவர் பெயரைச் சொல்லியிருக்கிறேன். ஒரு குற்றவாளியை அவர் பொட்டுவைத்தால்தான் விடுவோம் என்று அடி அடியென்று அடித்திருக்கிறார்கள். நான் அதைச் சட்டமன்றத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து சொல்லியிருக்கிறேன். அதற்குப்பிறகு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்த நிலை இல்லை. ஆனால் கொண்டுபோய் நிர்வாணமாக நிற்க வைத்து உதை உதை என்று உதைக்கிறார்கள். இது என்ன ஐயா நியாயம்? இதைக் கேட்கக் கூடாதா? இதைச் சட்டமன்றத்திலே கேட்காமல் மக்கள் மன்றத்திலேயா போய்க் கேட்க முடியும்? இதை இங்கேதான் கேட்க முடியும் எங்கே உரிமை இருக்கின்றதோ அங்கேதான் கேட்க முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்றார்கள். அவர்களுடைய கருணையான பார்வைக்கு இதைக் கொண்டு வருவதாலே அவர்களுக்கு ஒரு நியாயம் கிடைக்கும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

சிறைச்சாலைகளிலே ஏறத்தாழ 18,335 கைதிகள் இருக்கின்றார்கள். ஆனால் சிறைச்சாலையிலே 4,196 அதிகாரிகள் இருக்கிறார்கள். இவர்களில் எத்தனைபேர் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று உங்களால் சொல்ல முடியுமா? ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த கைதிகள் செல்லும்போது அவர்களுக்கு அங்கே முழுமையாக பாதுகாப்புக் கிடைக்கின்றது. பல்சுவை உணவு கிடைக்கின்றது. ஆனால் எங்களுடைய சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது குற்றம் செய்தான் என்பதற்காக உள்ளே செல்கின்றான் என்றால் அவனைத் துன்புறுத்துவதும் அவனை மிகவும் கேவலப்படுத்துவதும் அன்றாட வாடிக்கையாகிவிட்டது. இதுகுறித்து மனித உரிமை Commission கூட நிறைய ஆய்வுகள் நடத்தி இந்தப் புகார்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நளினிக்கு...(மணியடிக்கப்பெற்றது). சார், இப்போதுதான் பேசவிட்டீர்கள், என்ன சார் இது? கொஞ்சம் அதிக நேரம் கொடுங்கள்;

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

*பிற்பகல் 1-00*

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** நான் பேச ஆரம்பித்து 2 minutes, 3 minutesதான் ஆகிறது; என்னை disturb பண்ணாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன 2 minutesதான் ஆகிறதா? 8 நிமிடங்கள் ஆகின்றன.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பரிந்துரை செய்திருக்கிறது நளினியினுடைய விடுதலைக்கு. அதேபோன்று ஏறத்தாழ ஆயிரக்கணக்கான சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த கைதிகள் இருக்கிறார்கள். அவர்களையும் கருணை அடிப்படையிலே விடுவிக்க வேண்டும். சில பேருக்கு 2 வருடங்கள் ஆகியும் அவர்களை வெளியிலே விடவில்லை. 6 வருடங்களாக தடா கைதியாக உள்ளே இருக்கிறான். மாண்புமிகு பிரதம மந்திரியாக திரு. நரசிம்மராவ் அவர்கள் இருந்தபோது நாங்கள் டெல்லி மாநகரத்திலே சிறுபான்மைக் காங்கிரசின் சார்பிலே ஒரு கூட்டத்தை நடத்தி Those who are having proven specific charges can be retained. Those who are not having any specific proven charges should be released immediately. என்று ஒரு கோரிக்கை வைத்தபோது ஏறத்தாழ 27,000 பேரை விடுதலை செய்தார்கள். அதேபோன்று இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சில பேருக்கு release order கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் இன்னும் சிலருக்கு ஜாமீன் கொடுக்கப்படமாட்டாது என்று மிரட்டுவதால் அவர்கள் ஜாமீனில் வெளியே வரமுடியாமல் இருக்கிறார்கள். இரண்டு வருடங்களாக இருக்கிறான். 3 வருடங்களாக இருக்கிறான். இதனை நிச்சயமாகக் கருணையோடு கவனிப்பார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. நிச்சயமாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்களைப் பொறுத்தமட்டில் காவல் நிலையச் சாவுகள்-இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது காவல் நிலையச் சாவுகள் குறைந்திருக்கின்றன என்று - குறையவில்லை. இப்போதுகூட மாதவரம் பகுதியைச் சார்ந்த திரு. முத்தையா என்பவர் ஏப்ரல் 11-ஆம் தேதி கொண்டுபோகும்போது வழியிலே மர்மமான முறையிலே இறந்திருக்கிறார். சிறைச்சாலையிலே கொடுமை நடக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம். ஜெயிலர்கள், டெபுட்டி ஜெயிலர்கள் அந்தஸ்த்திலே இருக்கின்றவர்கள் எல்லாம் பெரிய தனவந்தர்களாக ஆகிவிட்டார்கள். காரணம் அங்கே சாப்பாடு எல்லாம் போடுவதற்கு வேண்டிய பொருட்களை food products வாங்குகிறார்கள். முறையான



சாப்பாட்டு வசதிகள் அவர்களுக்கு செய்து தரப்படுவதில்லை. மிகப்பெரிய அளவிலே அதிலே அவர்கள் கொள்ளை அடிப்பதாக, அதிகாரிகள் கொள்ளையடிப்பதாகச் செய்திகள் வருகின்றன. இதுகுறித்து கருணையோடு பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* சார் ஒரு நிமிடம் சார்.

தொடர்ந்து நம்முடைய அருமைக்குரிய சகோதரர் திரு. அ.லெ. சுப்பிரமணியன் அவர்கள் சட்ட மந்திரியினுடைய எந்த மானியமாக இருந்தாலும் பேசுவார், இந்த மானியத்திலும் பேசினார். இப்போது அவர் சொல்கிறபோது சொன்னார். அந்த 29 பேரை, 12 ஆண்டு காலமாகப் பணியிலே இருக்கக்கூடியவர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து பணி நிரந்தரம் செய்ய வேண்டும், 1996 ஆம் ஆண்டு பணி நிரந்தரம் செய்வதாக G.O. போட்டார்கள். 1998 ஆம் ஆண்டு interview வைத்தார்கள். இதுவரையிலே அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை.

அதேபோல அம்பேத்கர் பல்கலைக்கழகம் என்பது ஒரு அதிகாரமில்லாத பல்கலைக்கழகமாக இருக்கிறது. ஐந்து சட்டக் கல்லூரிகள் இருந்தும்கூட அந்தச் சட்டக் கல்லூரிகளின் முழுப் பொறுப்பு அந்த அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்குள் வரவில்லை. அவற்றை உடனடியாக அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்குக் கொண்டு வரவேண்டும். அங்கே இருக்கிற Vice-Chancellor அவர்களுக்கும் - Director of Legal Studies-க்கும் ஒரு மிகப்பெரிய பனிப் போரே நடந்து கொண்டுவருகிறது. அதற்கு உடனே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இல்லையென்றால் Director of Legal Studies என்ற ஒரு பொறுப்பே அவசியமற்றது. அதை நீக்கிவிட வேண்டுமென்று சொல்வதோடு மட்டுமல்லாமல் (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு விஷயம், முடித்துக்கொள்கிறேன். கோவையிலே......

**மாண்புமிகு திரு. ஆவடி அருணா:** இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் தவறான ஒரு கருத்தைச் சொல்கிறார். அங்கே இருக்கிற பிரச்சினை Vice-Chancellor-க்கும் Registrar-க்கும் தான். Director of Legal Studies-க்கு எந்த பிரச்சினையும் கிடையாது. அதை உங்களிடம் யாரோ தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.லெ. சுப்பிரமணியனும் அதைத்தான் சொன்னார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உட்காருங்கள். நேரம் இல்லை. அவரே பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், அங்கே பிரச்சினையே Vice-Chancellor-க்கும் Registrar-க்கும் மட்டும்தான் என்று சொல்கிறார்கள்.

Director of Legal Studies-க்கும் Vice-Chancellor-க்கும் கடும் பனிப் போர் நெடுநாட்களாக நடந்து co-ordination இல்லாமல் அந்தச் சட்டப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டதன் நோக்கமே நிறைவேற்றப்படாமல் இன்னும் பிரச்சினைகள் வளர்ந்து கொண்டே போய்க் கொண்டிருக்கின்றன. அதற்கான ஒரு தீர்வை அமைச்சர் அவர்கள் மறைக்காமல் உடனடியாக எடுக்க வேண்டும் என்பதைத்தான் எங்களுடைய உறுப்பினர் இங்கே வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விளக்கத்தை முடியுங்கள், நேரமாகிவிட்டது. இன்னும் 2 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** கன்னியாகுமரி மாவட்டத்திலே நிறைய போலி வக்கீல்கள் இருப்பதாகச் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதைப் போலவே கோவையிலே காணாமல் போனவர்கள் (Missing) என்று அறிவிக்கப்பட்டு 20 பேர் இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களை உடனடியாக ஒன்று தேடிக் கண்டுபிடித்துக் கொடுங்கள்; இல்லையென்றால் அந்தக் குடும்பத்திற்கு மானியம் கொடுங்கள் அல்லது வேலைவாய்ப்புக் கொடுங்கள். அவர்கள் கோவை கலவரத்தில் காணாமல் போனவர்கள் என்று இந்த அரசால் அறிவிக்கப்பட்டது.

அதேபோன்று கோவையிலே 25 நடைபாதை வியாபாரிகள்; இதற்கு முன்னாலே அவர்கள் மீது ஒரு 75 Case கூடக் கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து அந்த நடை பாதை வியாபாரிகளை அவர்கள் மேல் போடப்பட்டுள்ள Case-லிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாடுத் துறை அமைச்சர்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** தொகுதியைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, 14 நிமிடங்கள் ஆகிவிட்டன.

*பிற்பகல் 1-05*

***மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டுக்கான சுற்றுப்புறச்சூழல் துறையின் மானியக் கோரிக்கைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு பதிலளிக்கும் வாய்ப்பினை வழங்கிய வணக்கத்திற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன் அவர்கள், திரு. கே. சுப்பராயன் அவர்கள், திரு. அப்துல் லத்தீப் அவர்கள், திரு. ஆரூண் ரஷீத் அவர்கள் தங்களுடைய அரிய கருத்துகளை வழங்கினார்கள். அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நமது அண்டத்தில் எத்தனையோ கோள்களும், நட்சத்திரங்களும் அமைந்துள்ளன. மனித அறிவுக்கு எட்டிய வரையில் இன்றளவும் பூமிப்பந்து மட்டுமே உயிரினங்கள் வாழத் தகுதியுள்ள கோளாக விளங்கிக்கொண்டிருக்கிறது.

உயிரினம் வாழத்தக்க சூழ்நிலைகளைக் கொண்ட பூமியில் ஒரு செல் உயிரினமாகத் தோன்றி, ஊர்வன, பறப்பனவாக மாறி, பரிணாம வளர்ச்சியில் இப்போது நாம் மனிதனாக உருவெடுத்திருக்கின்றோம்.

நெடிய மனிதகுல வரலாற்றில் இயற்கையோடு மனிதன் இணைந்து வாழ்ந்த காலத்தில் இணக்கமான சுற்றுச்சூழல் நிலைமை இருந்தது. கடந்த நூற்றாண்டில் வளர்ச்சி என்ற பெயரில் உலக நாடுகள், ஒன்றோடொன்று போட்டி போட்டுக்கொண்டு பல்வேறு தொழிற்சாலைகளை அமைத்தன.

மக்கள்தொகைப் பெருக்கம், மக்களின் வளரும் தேவைகள், அவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில் நிகழ்ந்த விஞ்ஞான வளர்ச்சி, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றால் ஏற்படும் சூழலின் மாற்றங்கள் சென்ற நூற்றாண்டின் படைப்புகள் என்றால் மிகையாகாது. இவ்வகையில் சமூகப் பொருளாதார வளர்ச்சியும், சுற்றுச்சூழலும் இரு வேறு திசைகளிலே பயணிக்கும்போது விரும்பத்தகாத சுற்றுச்சூழல் விளைவுகள் பல ஏற்படுவதைக் காண்கிறோம்.

இப்புவியில் ஐம்பூதங்களில் நிலம், நீர், காற்று மற்றும் ஆகாயம் ஆகிய நான்கு வாழ்க்கை ஆதாரங்களும் இப்போது மாசுபட்டுள்ளன. பசுமைக் குடில் வாயுக்களின் வெளிப்பாட்டினால் உலகில் நிகழ்ந்துவரும் தட்பவெட்ப நிலை மாற்றங்கள், ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டையின் காரணமாக மனித குலத்திற்கு ஏற்படுகின்ற கேடுகள், தேசிய எல்லைகளைக் கடந்து, தொழிற்சாலை வாயுக் கழிவுகள் அண்டை நாடுகளில் அமில மழையாகப் பொழிதல் ஆகியவை அஞ்சத்தக்க விளைவுகள்.

பல சமுதாயப் பொருளாதாரக் காரணங்களுக்காக நகர்ப்புறங்களை நாடிச் செல்லும் மக்கள்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. விஞ்ஞான வளர்ச்சி மூலம் சில வல்லரசு நாடுகளுக்கிணையான தொழில் வளர்ச்சியை நாம் அடைந்துள்ளோம். இவையெல்லாம் துடிப்பான வளர்ச்சிப் பாதையில் முன்னேறிவரும் ஒரு நாட்டில் நிகழக்கூடிய அம்சங்கள் என்றாலும் இதனால் சுற்றுப்புறத்திற்கு ஏற்படும் விளைவுகள் தீவிரமடையாமல் பாதுகாப்பது அரசின் கடமையாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடந்த மாதம் இந்தியாவிற்கு வருகை புரிந்த அமெரிக்க அதிபர் திரு. பில் கிளிண்டன் அவர்களேகூட சுற்றுப்புறச்சூழலைப் பேணிக்காப்பதன் அவசியத்தை எடுத்துக்கூறி, சுமார் 200 கோடி ரூபாயைச் சுற்றுப்புறச்சூழல் மேம்பாட்டிற்காக ஒதுக்கியிருக்கிறார்கள்.

சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் தயாரிக்கப்படும் பொருட்கள் மட்டுமே சர்வதேசச் சந்தையில் இனி வாங்கப்படும் என்ற நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகவே சுற்றுச்சூழல் பொருந்திய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும். அதற்கு ISO 14000 என்ற தரக்கட்டுப்பாட்டுச் சான்றிதழ் இனிமேல் வாங்கினால்தான் வெளிநாட்டுச் சந்தைகளிலே நமது பொருட்கள் எல்லாம் விலை போகும் என்ற நிலை உருவாகி வருகிறது. இதனால நமது அரசு தொழில் வளர்ச்சி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த சில ஆண்டுகளுக்கு முன்பே பல்வேறு சட்ட திட்டங்களை இயற்றி மாசுக் கட்டுப்பாடு வாரியத்தை தமிழ்நாட்டிலே 1982 ஆம் ஆண்டு அமைத்தது; 1974 ஆம் ஆண்டு நீர்ச் சட்டம், 1981 ஆம் ஆண்டு காற்றுச் சட்டம், 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் சட்டம் ஆகிய பல்வேறு சட்டங்களை இயற்றியது.



இந்த வாரியம் சென்னையைத் தலைமையிடமாகக்கொண்டு 5 மண்டல அலுவலகங்களுடனும் 20 மாவட்ட அலுவலகங்களுடனும் 13 சுற்றுச்சூழல் ஆய்வகங்களுடனும் செயல்பட்டு வருகிறது.

சுற்றுப்புறச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தும்பொருட்டு சுற்றுப்புறச்சூழல் துறைக்கு இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டு 1996 ஆம் ஆண்டு முதல் இத்துறையை ஏற்படுத்திச் செயல்பட்டு வருகிறது.

நடப்பாண்டு வரை சுற்றுப்புறச்சூழல் துறையின் மூலமாக 20,526 தொழிற்சாலைகளுக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இசைவாணை வழங்கியிருக்கின்றது. சுற்றுப்புறத்தினை அதிக அளவில் பாதிக்கக்கூடிய தோல் பதனிடும் தொழிற்சாலைகள், சலவை, சாயத் தொழிற்சாலைகள் மற்றும் இரசாயனத் தொழிற்சாலைகள் நமது மாநிலத்தில் அதிகமாக அமைந்துள்ளன. இத்தகைய தொழிற்சாலைகள் திரவக் கழிவுகள், திடக் கழிவுகள் மற்றும் வாயுக் கழிவுகளை நீர் ஆதாரங்கள், நிலப்பரப்பு மற்றும் காற்றுமண்டலத்தில் வெளிப்படுத்துவதால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது.

சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை உணர்ந்து தொழில் முனைவோர் மாசுக் கட்டுப்பாடு சட்டங்களுக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுவதோடு, மாசுத் தடுப்பு மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை நடவடிக்கைகளைத் தாமே முன்வந்து மேற்கொள்வார்களேயானால் மாநிலத்தின் இயற்கை ஆதாரங்கள் பாதிக்கப்படுவதைக் குறைக்க முடியும். இதனை வலியுறுத்தும் விதமாக மாசுக் கட்டுப்பாடு மற்றும் சுற்றுச்சூழல் சட்டங்களை டாக்டர் கலைஞர் அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது. அதிகமாக மாசினை ஏற்படுத்தக்கூடிய தொழிற்கூடங்களைக் கூர்ந்தாய்வு செய்து தொடர்ந்து கண்காணித்து வருவதுடன் இத்தகைய தொழிற்சாலைகள் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் வாயுக் கழிவுத் தடுப்புச் சாதனங்களை அமைக்க வலியுறுத்தி வருகின்றோம்.

பிற்பகல் 1-10

நாட்டின் சமூக, பொருளாதார நோக்கங்கள் நிலைத்து நிற்கும் வளர்ச்சி (Sustainable Development) எனும் வட்டத்திற்குள் அமையும் விதத்தில் நமது மாநிலத்தின் அபிவிருத்தித் திட்டங்களைச் சுற்றுச்சூழலுக்கு இணக்கமான முறையில் திட்டமிட்டுச் செயல்படுத்த உறுதியாக இருக்கிறோம்.

தொழிற்சாலைகள், மாசின் அளவினைப் பொறுத்து சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என்று மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவினை இடத்தைப் பொறுத்தும், இயங்குவதற்கான இசைவினை, தேவையான மாசுக் கட்டுப்பாடு முறைகளை அமைத்த பின்பும் வாரியம் வழங்குகிறது.

அதிக அளவில் மாசுபடுத்தும் (Highly polluting) 29 வகையான தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசிடமிருந்து இசைவாணை பெறவேண்டும். இத்தகைய தொழிற்சாலைகள் குறித்து மக்களுடைய கருத்தைக் கேட்பதற்காக, மாவட்டங்களில் கேட்புக் குழுக்களை இந்த அரசு அமைத்துள்ளது. இந்தக் கேட்புக் குழுக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையின்கீழ் இயங்கி வருகின்றன. இதுவரை ஏறத்தாழ 81 தொழிற்சாலைகளுக்குத் தடையில்லாச் சான்றிதழ்கள் இந்த கேட்புக் குழுக்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலே தோல் பதனிடும் தொழிற்சாலைகள், சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள், சவ்வரிசித் தொழிற்சாலைகள் ஆகியவை அதிகமாக மாசினை ஏற்படுத்துகின்றன. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அமைக்கும் முன் இத்தொழிற்சாலைகள் எல்லாம் சுத்திகரிக்கப்படாத கழிவு நீரை வெளியேற்றியதால் மாநிலத்தில் மாசுப் பிரச்சினை ஏற்பட்டது. வாரியம் அமைத்தபின் இத்தகைய தொழிற்சாலைகளில் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வலியுறுத்தப்பட்டது. மேலும் வேலூர் மக்கள் நலக் குழு, மாசுப் பிரச்சினை குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி மாநிலத்தில் உள்ள பெருவாரியான தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் சாயத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. அதன்பின்னர் இத்தகைய தொழிற்சாலைகள் தனியாகவோ அல்லது பொதுவாகவோ கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க முற்பட்டன. இதற்கு மாநில மற்றும் மத்திய அரசுகள் ஒவ்வொன்றும் பொதுக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான மதிப்பீட்டில் 25 சதவீதம் மானியமாக வழங்குகின்றன. இதுவரை 2,626.50 இலட்சம் ரூபாய் மானியமாக மாநில அரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் திட்டமிடப்பட்ட பொதுக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏறத்தாழ 26 உள்ளன. அதிலே 12 சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டிமுடிக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. அதேபோல திட்டமிடப்பட்ட பொதுக் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள்—சலவை



மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்கான தேவை 28. அதிலே 17 நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுத் தனியாக இயங்கி வருகின்றன. தனியார் தொழிற்சாலைகளில் கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் 951 கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

காவிரி, தாமிரபரணி, பாலாறு மற்றும் வைகை ஆகிய ஆறுகளில் 25 இடங்களிலும் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஏரிகளிலும் நீருடைய தன்மையினை வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. மேலும் தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் காவிரியாற்றில் குமாரபாளையத்திற்கும் திருச்சிக்கும் இடைப்பட்ட தூரத்தில் 12 இடங்களில் நீரின் தன்மையை ஆய்ந்து இந்த வாரியம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், கடல் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் கழிவுகள் வெளியேற்றப்படும் ஏழு இடங்களைக் கண்டறிந்து அவற்றின் தன்மையினையும் கண்காணித்து வருகிறது. தொழிற்சாலைகள், உள்ளாட்சிகள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய அலுவலர்களுக்குப் பயிற்சியளிக்க டென்மார்க் நாட்டிலிருந்து வாரியம் 4 கோடி ரூபாயை நிதியாகப் பெற்று சுற்றுச்சூழல் பயிற்சிகளை அளித்து வருகிறது. 1999-2000 ஆண்டில் 28 பயிற்சி வகுப்புகளை நடத்தி, 513 பேர்களுக்கு இவ்வாரியம் பயிற்சி அளித்துள்ளது; இது தவிர, வாரியத்தில் பணிபுரியும் பொறியாளர்கள், விஞ்ஞானிகள் மற்றும் அலுவலர்களுக்குக் கழிவுநீர் சுத்திகரிப்பு, நச்சுக் கழிவு மேலாண்மை மற்றும் காற்று மாசுக் கட்டுப்பாடு போன்ற துறைகளில் வெளிநாடுகளில் பயிற்சிகள் அளித்துக்கொண்டிருக்கிறது. இதுவரை வாரியத் தலைவர் உள்ளிட்ட 3 அலுவலர்கள், 27 பொறியாளர்கள் மற்றும் 10 விஞ்ஞானிகள் வெளிநாட்டுப் பயிற்சிகளைப் பெற்றிருக்கின்றனர்.

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மாநிலத்தின் நதிகளான காவிரி, வைகை மற்றும் தாமிரபரணியில் கலக்காதவாறு தடுத்து அதனைச் சுத்திகரிப்புச் செய்ய தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக, ஈரோடு, குமாரபாளையம், பவானி, பள்ளிபாளையம் மற்றும் திருச்சி ஆகிய ஐந்து நகரங்களில் மத்திய அரசு நிதி உதவியோடு ரூ. 3820 இலட்சம் செலவில் மாசுத் தடுப்புப் பணிகளைப் பத்தாண்டுத் திட்டமாகச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்திற்கென மார்ச் 2000 வரை (இதுவரை) ரூ.764.30 இலட்சம் வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் மூலமாகப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகளைத் தொடர்ந்து, விரைவாக மேற்கொள்ள 2000-2001 ஆம் ஆண்டுக்கு ரூ.500 இலட்சம் நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, இந்த ஆண்டு காவிரியின் உபநதிகளின் கரையில் அமைந்துள்ள கரூர், மேட்டுப்பாளையம், சத்தியமங்கலம், கோயம்புத்தூர், திருப்பூர், திருவரங்கம், கும்பகோணம் மற்றும் மயிலாடுதுறை, வைகை ஆற்றின் கரையில் அமைந்துள்ள மதுரை மற்றும் தேனி, தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ள திருநெல்வேலி ஆகிய 11 நகரங்களுக்கும் இத்தகைய திட்டங்கள் தீட்டப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு, மைய அரசின் நிதி ஆதாரத்துடன் சிறப்புறச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-15

அடுத்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வுப் பணிகள்; மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் சுற்றுச்சூழல் நிலை அறிக்கைகள் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டு, இதுவரை 19 மாவட்டங்களுக்கு இறுதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. மாநில சுற்றுச்சூழல் நிலை அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இளைய சமுதாயத்தினரிடம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்த ஆறு மாவட்டங்களில் மாணவர் சுற்றுச்சூழல் மையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. 2000-2001 ஆம் நிதியாண்டில் மேலும் 10 மாவட்டங்களில் சுற்றுச்சூழல் மையங்கள் தொடங்கப்படவுள்ளன.

மூன்று கடற்கரை நகரங்களான மாமல்லபுரம், இராமேஸ்வரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களிலும் இரண்டு மலைப்பகுதி நகரங்களான உதகமண்டலம், கொடைக்கானல் ஆகிய இடங்களிலும் சுற்றுலாப் பயணிகளின் நடவடிக்கைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளைக் குறைப்பதற்குத் தேவையான சுற்றுச்சூழல் மேலாண்மை மற்றும் விழிப்புணர்வுப் பணிகளைத் தன்னார்வ நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து சுற்றுச்சூழல் துறை இந்த ஆண்டு செயல்படுத்தும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மேலாண்மை, விழிப்புணர்வுப் பணிகளில் ஆக்கபூர்வமாக ஈடுபட்டு வரும் அரசுசாராத் தன்னார்வத் தொண்டு



அமைப்புகள், கல்வி-ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனி நபர்களின் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும்வண்ணம் சுற்றுச்சூழல் விருதுகள் வழங்கப்படவுள்ளன. இத்திட்டம் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

அடுத்து கடற்கரை மண்டலங்கள் மேலாண்மை; மாநிலத்தின் கடற்கரைப் பகுதிகளில் பல்வேறு மனித நடவடிக்கைகளைக் கண்காணித்து முறைப்படுத்தவும் அப்பகுதிகளில் சுற்றுச்சூழல் மாசு ஏற்படாதவாறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தவும் உருவாக்கப்பட்ட தமிழ்நாடு கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுமத்தின் (Tamilnadu State Coastal Zone Management Authority) பணிகளை இத்துறை கவனித்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள 12 கடற்கரை மாவட்டங்களுக்கு கடற்கரைப் பகுதி மேலாண்மைத் திட்டங்கள் வரையப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பழவேற்காடு ஏரி முகத்துவாரம் முதல் பாலாறு முகத்துவாரம் வரையுள்ள 110 கி.மீ. நீளம் கடற்கரைப் பகுதியில், உச்ச அலைக்கோட்டை (High Tide Line) நிர்ணயிக்கும் பணி ரூ. 54 இலட்சம் செலவில் மத்திய அரசின் முதன்மை Hydrographer மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

சிலவகையான அனல் மின் நிலையத் திட்டங்களுக்கு மாநில அரசின் சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது தொடர்பாக அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பணிகளை இத்துறை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தி வருகிறது.

சில அறிவிப்புகள்: A B C ஆறுகள் என்று அழைக்கப்படுகின்ற, அடையார், பக்கிங்காம் கால்வாய், கூவம் மற்றும் ஓட்டேரி ஓடை ஆகிய நான்கு பெரிய நீர்வழிகளையும் இந்த நீர்வழிகளுடன் இணைந்த வாய்க்கால்களையும் சேர்த்து மொத்தம் சென்னையில் 68 கி.மீ. நீளமுடைய நீர்வழிப் பாதைகள் உள்ளன.

அரைகுறையாகச் சுத்திகரிக்கப்பட்ட வடிகால் கழிவுநீர், ஏறத்தாழ 737 இடங்களில் வணிக வளாகங்களில் இருந்தும், தொழிற்சாலைகளில் இருந்தும் வெளியேற்றப்படுகிறது. கடந்த 30 ஆண்டுகளாக இந்த நிகழ்வுகள் சென்னையில் நடந்து வருகின்றன.

தமிழக அரசு எடுத்து வந்த தொடர் முயற்சியின் காரணமாக இந்தத் துறை சென்னையின் நீர் ஆதாரங்களின் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கான திட்டத்தைத் தீட்டி, ரூ. 1,700 கோடி மதிப்பீட்டில், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின்பேரிலும் வணக்கத்திற்குரிய மேயர்

அவர்களுடைய ஆலோசனையின்பேரிலும் தயாரிக்கப்பட்டு இந்த மாபெரும் திட்டம் தற்போது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு இப்போது மத்திய அரசினுடைய நிதி நிறுத்தப்பட்டுவிட்டதாகச் சொன்னார்கள். *31-3-1999* அன்று மத்திய அரசு இதுபோன்ற ஓர் அறிக்கையை வெளியிட்டது. ஆனால் மீண்டும் முதல்வர் அவர்களும் இந்தத் துறையும் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லி அதன் மூலமாக நிலுவையில் உள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகளை நிறைவேற்ற புது இடங்களில் பொதுச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு மத்திய அரசு இப்போது அனுமதியை மீண்டும் வழங்கியுள்ளது. அதற்காக மத்திய அமைச்சர், நமது சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்களுக்கு இந்த மன்றத்தின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பசுமைப் போர்வை: நகர்ப்புறங்களில் ஏற்பட்டுள்ள நீர் மற்றும் காற்று மாசினைக் குறைத்து; நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கோடு மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை பசுமைப் போர்வை எனும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. இதன் நோக்கம் மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மாசினைக் கட்டுப்படுத்தி சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்துவதாகும்.

*பிற்பகல் 1-20*

மத்திய அரசினுடைய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம், தமிழகத்திலுள்ள மாநகரங்களான சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 6 மாநகரப் பகுதிகளில் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக ரூபாய் 4 கோடியை நிதியாக வழங்கியுள்ளது. தமிழக அரசும் இத்திட்டத்திற்கு ரூபாய் 56 இலட்சம் அனுமதித்துள்ளது.

மாசுபடுத்துபவரே மாசினைக் களையவேண்டும் என்ற நியதியின் அடிப்படையில் தொழில் நிறுவனங்களின் உதவியோடு தமிழகத்திலுள்ள பிற 102 நகராட்சிப் பகுதிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது. இதன்படி இந்நகராட்சிகளில் உள்ள தொழிற்சாலைகள் வனத் துறை மூலம் மரக்கன்றுகளைப் பெற்று அவற்றை நட்டு ஓராண்டுக்குப் பராமரித்த பிறகு அந்தந்த நகராட்சிகளிடம் ஒப்படைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



சில தொழிற்சாலைகளை அமைக்கும்பொழுது சரியான இடங்களைத் தேர்வு செய்யாமல் கட்டுப்பாடற்ற வகையில் தொழிற்சாலைகளை அமைப்பதால் சுற்றுப்புறச்சூழல் பாதிப்பு அதிகரிக்கிறது.

மேலும் முறையற்ற வகையில் தொழிற்சாலைகளை அமைப்பதைத் தவிர்த்தால் மாசினால் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம். இதற்காக தொழிற்சாலைகளை அமைப்பதற்குப் பொருத்தமான இடங்களைத் தேர்வு செய்யவும் நில உபயோக வகைகளைப் பிரிக்கவும் மாவட்ட வாரியாக நிலப்பட வரைபடங்களை, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மற்றும் ஜெர்மன் நாட்டு அரசு அமைப்பின் (GTZ) உதவியுடன் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தயாரித்து வருகிறது.

தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வங்காள விரிகுடாக் கடலுக்குக் கொண்டு செல்லுதல்: வேலூர் மாவட்டத்திலுள்ள சுமார் 600 தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுநீரைச் சுத்திகரிக்க, பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மற்றும் தனியாக அமைக்கப்பட்ட சுத்திகரிப்பு நிலையங்கள் உள்ளன. இருந்தபோதிலும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை வெளியேற்றுவது பிரச்சினையாக இருக்கிறது. இதனைக் கருத்தில்கொண்டு வேலூர் மாவட்டத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் சுத்திகரிக்கப்பட்ட 250 இலட்சம் லிட்டர் கழிவுநீரை வங்காள விரிகுடாக் கடலுக்குக் கொண்டுசெல்லும் திட்டம் தீட்டப்பட்டு உள்ளது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இப்பொழுது அது மத்திய அரசினுடைய ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தினால் வேலூர் மாவட்டத்தில் முக்கிய நீர் ஆதாரமான பாலாற்றுப் படுகையின் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்கலாம்.

கடற்கரையோரக் கட்டுப்பாட்டுப் பகுதிகள்: சென்னையிலிருந்து கடலூர் வரை செல்லும் கிழக்குக் கடற்கரைச் சாலைக்கு மத்திய அரசு சுற்றுச்சூழல் துறை அனுமதி வழங்கியபோது எதிர்காலத்தில் கிழக்குக் கடற்கரைச் சாலையின் கடற்புறப் பகுதியில் தொழிற்சாலைகளோ, உணவு விடுதிகளோ அமைக்கக் கூடாது என்ற நிபந்தனை விதித்திருந்தது. அந்நிபந்தனையின் காரணமாக கடந்த பல ஆண்டுகளாக ஏராளமான சுற்றுலா ஹோட்டல்கள் வரத் தடை இருந்தது. இந்நிபந்தனையைத் திருத்தி அமைக்க தமிழக அரசு மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க

மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், வளர்ச்சித் திட்டங்கள் அமைப்பதற்கு இருந்த தடையினை இப்பொழுது நீக்கியிருக்கிறது. கடற்கரை மண்டல ஒழுங்குமுறை அறிவிக்கைக்குட்பட்டு நாளொன்றுக்கு 10,000 லிட்டர் நிலத்தடி நீருக்கு மிகாமல் பயன்படுத்தக்கூடிய வளர்ச்சித் திட்டங்களை அனுமதித்துள்ளது. இதனால் அநேக சுற்றுலாத் திட்டங்கள் கிழக்குக் கடற்கரைச் சாலையின் கடலோரப் பகுதிகளில் வர வாய்ப்புள்ளன.

அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு கிளிண்டன் அவர்கள் வருகைக்குப் பின்னால் இப்பொழுது நமது வாரியத்திற்குப் பல்வேறு உதவிகளைச் செய்யவிருக்கிறது. அதிகரித்துவரும் நகர திடக்கழிவுகளை வரைமுறையின்றிக் கையாளுவதால் சுகாதாரமற்ற தன்மையும் சுற்றுப்புறச் சீர்கேடும் ஏற்படுகிறது. இவ்வகையில் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளைப் போக்குவதற்கு நகர திடக்கழிவுகளை முறையாகப் பிரித்து அறிவியல் பூர்வமாகக் கையாண்டு வெளியேற்றுவதற்கான வழிமுறைகளை உருவாக்க வேண்டும். இதற்கென மாதிரி அமைப்பினை, உதகமண்டலம், கொடைக்கானல், பழனி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், மாமல்லபுரம் மற்றும் குற்றாலம் ஆகிய முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு மக்கள் அதிக அளவில் வருவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பினைக் கருத்தில்கொண்டு இந்நகரங்களில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் தயாரிக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இணையம் போன்ற நவீன உத்திகளைப் புகுத்துவதற்கும் மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஏற்பாடு செய்துள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களை மிகவும் மதிப்புமிக்கவையாக ஏற்று அவற்றின்பேரில் நடவடிக்கை எடுக்க இருக்கின்றோம். ஆகவே தங்கள் வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் காப்பியத்தைப் படைக்கும்போது இறைவனுக்கு வழிபாடு சொல்லி அதன் மூலம் தங்களுடைய காப்பியத்தை அல்லது இலக்கியத்தைப் படைப்பார்கள்.



ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோ அடிகள், கடவுள் வாழ்த்துப் பாடாது

திங்களைப் போற்றுதும், திங்களைப் போற்றுதும்,
ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்,
மாமழைப் போற்றுதும், மாமழைப் போற்றுதும்

என்று சொல்லி இயற்கையை வழிபட்டு தன்னுடைய இறவாத இலக்கியத்தைப் படைத்தார். இயற்கைதான் மனிதனுக்கு அடித்தளமாக, மனித வாழ்வுக்கு மையமாக இருந்திருக்கிறது. ஆனால் அந்த இயற்கையை வளப்படுத்துவதும் ஆட்டிப்படைப்பதும் வேறு எந்த சக்தியும் அல்ல, மனித சக்தியாகும். அணுசக்தி, மின்சக்தி, ஓம்சக்தி, அது எந்தச் சக்தியாக இருந்தாலும் சரி, இந்தச் சக்திகளுக்கெல்லாம் உயர்ந்த சக்தி எது என்றால் மனித சக்திதான். நான் மனித சக்தி என்று சொல்வது அறிவை, ஆற்றலை, திறமையைச் சொல்கிறேன். அந்தத் திறமை மனிதரிடத்திலே இருக்கும்போது அந்த மனிதர்கள்தான் நமக்குத் தெய்வங்களாக விளங்குகிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இளங்கோ அடிகள் பாணியில்

பெரியார் போற்றுதும், பெரியார் போற்றுதும்,
பேரறிஞர் அண்ணா போற்றுதும், பேரறிஞர் அண்ணா போற்றுதும்,
டாக்டர் கலைஞர் போற்றுதும், டாக்டர் கலைஞர் போற்றுதும்

(மேசையைத் தட்டும் ஒலி)

என்று கூறி என்னுடைய வாழ்த்துரையை நல்கி, வணக்கம் தெரிவித்து, என்னுடைய பதிலுரையை நான் தொடங்குகின்றேன்.

இந்த மானியத்தின்மீது, நீதித் துறையைப் பொறுத்தமட்டில் 84-க்கு மேற்பட்ட வெட்டுத் தீர்மானங்கள், சிறைத் துறையைப் பொறுத்தமட்டில் 75-க்கு மேற்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 10 மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். அத்தனை வெட்டுத் தீர்மானங்களையும் படித்தேன். தெளிவாகப் படித்தேன். உங்களுக்கு இந்தத் துறையின்மீது எவ்வளவு அக்கறை இருக்கிறது. தங்கள் தொகுதியிலே இருக்கின்ற சிறைக்கூடமாக இருந்தாலும் சரி, நீதிமன்றமாக இருந்தாலும் சரி, அவை எல்லாம் ஒழுங்காக இருக்க வேண்டும், முறையாக இருக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தோடு அந்த வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் கொடுத்திருக்கிறீர்கள். அதன் அடிப்படையிலே வாய்ப்புக் கிடைத்தவர்கள் அரிய கருத்தைச் சொல்லியிருப்பதற்காகவும் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தவர்களுக்கும் இங்கே பேச வாய்ப்புக்

கிடைத்த அத்தனை பேருக்கும் உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத் துறை எவ்வளவு பெரிய வரலாற்றைப் படைத்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். நீதிமன்றங்களைத் திறந்தோம், புதிய கட்டடங்களைக் கட்டினோம் என்பதையெல்லாம் நான் பெரிதாகக் கருதவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1996-97-ல் நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கின்றபோது, சட்ட மேதை டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு இப்போது இந்தியாவிலே ஒரே சட்டப் பல்கலைக்கழகம் என்றால் அது கலைஞரால் படைக்கப்பட்ட டாக்டர் அம்பேத்கர் பல்கலைக்கழகம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற வரலாற்றை திராவிட முன்னேற்றக் கழக அரசு உருவாக்கியிருக்கிறது.

அடுத்து கடந்த தமிழ்ப் புத்தாண்டு அன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், இந்திய துணைக் கண்டத்தினுடைய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் அவர்களும் மதுரை மாநகரத்திற்குச் சென்று — உங்களுக்கெல்லாம் தெரியும் — 56 கோடி ரூபாய் செலவு செய்கிற அளவுக்கு ஒரு உயர் நீதிமன்றத்தின் கிளையை அமைத்தார்கள். இது சாதாரணமான சரித்திரமல்ல. இவற்றை எளிதாக எண்ணிவிட முடியாது. தென் மாவட்டங்களைச் சார்ந்தவர்கள் 30 ஆண்டு காலமாக வாதாடினார்கள், போராடினார்கள். ஆனால் அதைச் சாதித்துக்காட்டிய சரித்திர நாயகன் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதிலே இன்னொரு முக்கியம் என்னவென்றால் திராவிட மாநிலங்களில், தமிழகம், புதுவை, ஆந்திரா, கேரளா, கர்நாடகம் ஆகிய 5 திராவிட மாநிலங்களில் புதியதாக ஒரு உயர் நீதிமன்றத்தின் கிளை அமைக்கப்பட்டு இருக்கிறதென்றால் அது தமிழ்நாட்டில்தான் என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அளவுக்கு ஒரு சரித்திரச் சாதனையை இந்த அரசு நிகழ்த்திக் கொண்டிருக்கிறது.

இங்கே பேசிய நண்பர்கள் சிலர் நீதிமன்றம் வேண்டுமென்று கேட்டார்கள்; சிலர் அவ்வாறு வேண்டுமென்று கேட்டு தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களிலே கொடுத்திருக்கிறார்கள். உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லையே என்பதற்காக நான் வருந்துகிறேன்.



உங்களுடைய கோரிக்கைகள் நியாயமானவை என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஒரு உண்மையை மறந்துவிடக் கூடாது.

கடந்த நான்கு ஆண்டுகளில், இந்த ஆண்டு நீங்கலாக மட்டும் 102 நீதிமன்றங்களை இந்த அரசு தொடங்கி இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் 1991-லேயிருந்து 1996 வரை செல்வி . . .

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் நாற்பத்து நான்கு நீதிமன்றங்கள்தான் தொடங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இப்போது இந்த நான்கே ஆண்டுகளில் 102 நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) இதை எண்ணிப் பார்க்க வேண்டும். வரலாறு முடிந்துவிடவில்லை. இன்னும் தொடர்கிறது. இப்போதும் நீதிமன்றம் வேண்டுமென்று கேட்டார்கள். பாகம்-2 திட்டத்தின்கீழ் சங்கரன்கோவிலுக்கு ஒரு சார்பு நீதிமன்றம் கொடுக்கப்படுகிறது. அதேபோன்று பள்ளிப்பட்டில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் மன்றம் கொடுப்பதற்கும் ஏற்கெனவே அமைச்சரவை ஒப்புதல் அளித்திருக்கிறது.

நான் நேற்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்து, போதாது, இன்னும் கொஞ்சம் கருணை காட்டுங்கள், 56 கோடி ரூபாய் அள்ளிக் கொடுத்தீர்கள். இன்னும் தரக்கூடாதா? என்று கேட்டேன். ஏதோ என்னுடைய வேண்டுகோளை ஏற்று, அதிகம் தரமுடியாவிட்டாலும், நீங்கள் மனநிறைவு கொள்ளாவிட்டாலும், நான் மனநிறைவு கொள்கின்ற வகையில் மேலும் இரண்டு நீதிமன்றங்களுக்கு இப்போது அனுமதி அளித்திருக்கிறார்கள்.

பொள்ளாச்சியிலே சார்பு நீதிமன்றம் வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜு அவர்கள் பலமுறை வற்புறுத்தினார்கள். வழக்கறிஞர் சங்கத்தின் சார்பிலேயும் சொன்னார்கள். அங்கு பொள்ளாச்சியில் சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று பரமக்குடியிலும் சார்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் நம்முடைய திரு. கிருட்டிணன் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அதேபோன்று

திரு. சுப. தங்கவேலன் அவர்களும் அருமை நண்பர் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் திரு. திசைவீரன் அவர்களும் பலமுறை வற்புறுத்தினார்கள். அந்த பரமக்குடிக்கும் இந்த ஆண்டு முதல் ஒரு சார்பு நீதிமன்றம் கொடுக்கப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெளிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த முறை இந்த மானியக் கோரிக்கையிலே அருமை நண்பர் திரு. சொக்கர் அவர்கள் பேசும்போது - இப்போது இங்கே இல்லை - முனியம்மாவின் கதையைச் சொல்லி ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் செய்தவள்மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று வருத்தத்தோடு சொன்னார்கள். இப்போது முதல் வரிசையிலே அவருடைய இடத்தைப் பிடித்துக்கொண்ட எனது இனிய நண்பர் ஞானசேகரன் அவர்கள், அவர் இந்த மன்றத்திலே பேசும்போதும், கடந்த மானியக் கோரிக்கையிலே பேசும்போதும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 3, உட்பிரிவு I-ன்படி, நம்முடைய தமிழகத்தில் 46 வழக்குகள் முன்னாள் முதலமைச்சர், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் — ஏற்கெனவே முறைகேடாகச் சொத்து சேர்த்தது குறித்த வழக்குகள் இருக்கின்றன; மூன்று வருடங்கள் ஓடிவிட்டன; நம்முடைய முதலமைச்சர் அவர்கள்கூடச் சில இடங்களில் கொஞ்சம் தைரியமாக நடவடிக்கை எடுக்கவில்லையோ என்ற அச்சம் எங்களுக்கு உண்டு என்று சொன்னார்கள். நீதி எப்போதுதான் கிடைக்கப்போகிறது. அவர்களுக்கு எப்போதுதான் நீங்கள் தண்டனையை வாங்கிக் கொடுக்கப்போகிறீர்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்றவர்களும் முடிவு செய்ய வேண்டும்; சட்டம் கொஞ்சம் வேகமாகச் செயல்பட்டு, கூடியவரையில் தவறு இழைத்தவர்களுக்கு தண்டனை - பெனாசிர் புட்டோவுக்கு உடனடியாகத் தீர்ப்பு வழங்கியதைப்போல - இவர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று சிம்மக்குரல் கொடுத்தார் அருமைச் சகோதரர் திரு. ஞானசேகரன் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன இருந்தாலும் அது பெருந்தலைவர் காமராஜரின் தமிழ் மாநில காங்கிரசின் குரல் — இப்போது எதிர்க்கட்சியின் குரல் — அதை மதித்தாக வேண்டும். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஏற்றாக வேண்டும். அதை நடைமுறைப்படுத்தியாக வேண்டும் என்பதற்காகத்தான் நம்முடைய தனி நீதிமன்றங்களை எல்லாம் வேகப்படுத்தி, விரைவுபடுத்தி, இப்போது உங்களுடைய உள்ளமெல்லாம் குளிர்கின்ற வகையில் (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டுமக்கள் எல்லாம் வரவேற்கின்ற வகையில் இப்போது ஏழு வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டு, அதில் ஒரே ஒரு வழக்கில்தான் விடுதலை. அதற்கும் நாங்கள் மேல்முறையீடு செய்திருக்கிறோம்.



ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. அரசியலில் சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்கைத் தொடுத்து விசாரணைக்குக் கொண்டுவருவது என்பது சாதாரணமானது அல்ல. அதற்கு எப்படிப்பட்ட உத்திகளையெல்லாம் கையாள்வார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். 1987-ல் போஃபர்ஸ் ஊழல் குறித்து நாடாளுமன்றத்திலே சொல்லப்பட்டது. 1987-லே சொல்லப்பட்டதற்கு ஒரு வருடம் நாடாளுமன்றத்திலே விவாதம் நடந்து 1988-ல்தான் F.I.R. போடப்பட்டது. 1988-ல் F.I.R. போடப்பட்டு, 1999-ல்தான் Charge sheet file ஆகியிருக்கிறது. ஒரு பெரிய அரசியல்வாதிமீது குற்றப்பத்திரிகை சுமத்தி, அதை நிரூபிப்பதற்கு ஒரு அரசாங்கத்திற்கு எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள். ஆனால் இந்த அரசாங்கம் 46 வழக்குகளைத் தொடுத்து, இந்த நான்கு ஆண்டுக்குள் இதை நிரூபித்துக் காட்டியிருக்கிறது என்றால் இது எவ்வளவு பெரிய சாதனை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-35

டான்சி தொடர்பாக இருந்த வழக்குத்தான் முக்கியமான வழக்கு என்பது உங்களுக்குத் தெரியும்; முதுகெலும்பான வழக்கு என்பது தெரியும்; மகுடத்தைப் பறிக்கிற வழக்கு என்பது உங்களுக்குத் தெரியும். அந்த டான்சி வழக்குக்கு இருந்த தடைகள்கூட தகர்த்து எறியப்பட்டுவிட்டன; (மேசையைத் தட்டும் ஒலி) விரைவிலே தீர்ப்புக் கிடைக்கும் என்பதையும் இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் சட்டத் துறையைப் பொறுத்தவரையில் உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம் இரண்டு துறைகளில், அகில இந்திய அடிப்படையிலேயே இந்த சட்டத் துறை ஒரு சாதனையைப் புரிந்து இருக்கிறது என்பதை நான் இங்கே நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் மத்திய அரசு ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தது. அந்தத் திருத்தம் வழக்கறிஞர்களால் ஏற்கப்படவில்லை. வழக்கறிஞர்களால் ஏற்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றத்தைப் புறக்கணித்தார்கள்; போராடினார்கள்; பெரிய அமளி துமளி ஏற்பட்டது. நீதிமன்றங்களையே இந்தியா பூராவிலும் ஸ்தம்பிக்க வைத்துவிட்ட இந்தச் சூழ்நிலையில், இதை முடிவிற்குக் கொண்டுவர வேண்டும் என்று பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதிய முதல் முதலமைச்சர் டாக்டர் கலைஞர்

(மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கடிதத்தில் முக்கியமான ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

One of the prime demands of the various Lawyers' Associations throughout the country is to defer the Notification till the Government of India finds a solution to the best of the satisfaction of both the Lawyers and litigants என்று அந்தக் கடிதத்திலே குறிப்பிட்டு இருந்தார்கள். அவர்களைக் கூப்பிட்டுப் பேசுங்கள்; அதற்குப் பிறகு இந்தச் சட்டத்தை நீங்கள் அமலாக்குங்கள் என்று கலைஞர் அவர்கள் சொன்னார்கள். அதனால்தான் பெருமகன் திரு. வாஜ்பாய் அவர்களும், திரு. ராம்ஜெத்மலானி அவர்களும் தடுத்து, அதை அமல்படுத்தாமல், இப்போது வழக்கறிஞர்களை அழைத்துப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். தமிழகம் இந்தியாவிற்கே வழிகாட்டியாக விளங்குகிறது; மறந்துவிடாதீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம், இந்தியாவினுடைய பிரச்சினைக்கே தீர்வு காண்பதற்குக் கருத்துகளைச் சொல்லிக் கொண்டிருக்கிறது என்பதையும் உங்களுக்கு நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இதைவிட ஒரு பெரிய சாதனை, அதை உங்களுக்கு நான் நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய தலையாய கடமையாகும். கடந்த 4 ஆம் தேதி மாண்புமிகு முதல்வர் அவர்கள்.....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** I am not yielding. I can reply to you later.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்த பிறகு கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைவிட ஒரு பெரிய சாதனை என்று நான் எதைச் சொல்ல விரும்புகிறேன் என்றால் கடந்த 4 ஆம் தேதி மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மாமன்றத்தில் நம்முடைய நிதிநிலை அறிக்கைக்கு விடை அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்ததன் காரணமாக அவர்கள் மத்திய மாநில அரசுகளுடைய நிலைக் குழுக் கூட்டத்திற்குச் செல்ல முடியவில்லை; என்னை அனுப்பி வைத்தார்கள். அவர்கள் உரையை எனக்குத் தந்தார்கள்; அந்த உரை அங்கே வாசிக்கப்பட்டது; அங்கே சமர்ப்பிக்கப்பட்டது. அந்த உரையிலே ஒரு கருத்தைச் சொல்லி



இருந்தார்கள். ஒரு மசோதா, ஒரு சட்டமுன்வடிவு இங்கு நிறைவேற்றப்பட்டு, அதற்கு ஒப்புதல் அளிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது; எவ்வளவு நாளைக்கு ஆளுநர் அதை வைத்துக்கொள்ளலாம் என்ற விவரம் எல்லாம் இல்லாமல் இருக்கிறது; எனவே, இதுதொடர்பாக அரசமைப்புச் சட்டத்தில் ஒரு திருத்தம் தேவை என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்களுடைய உரையிலே இதைக் குறிப்பிட்டார்கள். இது சம்பந்தமான விவாதம் வந்தபொழுது, நான்தான் எழுந்து அதற்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தேன். ஏன் இந்த மாற்றம் எங்கள் முதல்வர் சொன்னார் என்பதற்கு அங்கே விளக்கம் சொல்லும்பொழுது நான் அவர்களிடத்திலே தெளிவாகச் சொன்னேன்: இப்போது இருக்கின்ற அரசமைப்புச் சட்டத்தின் 200-வது பிரிவும், 201-வது பிரிவும் பாகுபாட்டோடு இருக்கிறது. இந்த மன்றத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்தால், ஆளுநர் அதற்கு ஒப்புதல் அளிக்கலாம் அல்லது அதை அப்படியே வைத்து இருக்கலாம்; withhold செய்து இருக்கலாம்: அல்லது அவர் குடியரசுத் தலைவருக்கு அனுப்பலாம்: அல்லது திருப்பி அனுப்பலாம்; எவ்வளவு நாளைக்கு வைத்து இருக்கலாம்? Constitution is very silent. அரசமைப்புச் சட்டம் எதையும் சொல்லவில்லை. எந்தச் சட்டத்தை எல்லாம் திருப்பி அனுப்பலாம்? அதையும் அரசமைப்புச் சட்டம் சொல்லவில்லை. ஆனால் ஆளுநர் அதைத் திருப்பி இங்கே அனுப்பினால், மறுபடியும் நாம் இங்கே நிறைவேற்றினால், அதற்கு அவர் ஒப்புதல் கொடுத்தாக வேண்டும் என்று சட்டம் சொல்கிறது, 200-வது பிரிவு சொல்கிறது. இதே நிலைமை குடியரசுத் தலைவருக்கு உண்டா என்றால் அவர் ஒரு திருத்தத்தைச் சொல்லி, நாம் ஏற்றோ ஏற்காமலோ அந்தச் சட்டத்தை நிறைவேற்றி மீண்டும் அவருக்கு அனுப்பினால், அவர் அந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் அளித்தாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஏன் இந்த பாரபட்சம்? எங்களுடைய சட்டமன்றத்திற்குச் சட்டம் இயற்றும் உரிமை இல்லை என்று கருதுகிறீர்களா என்று கேட்டு, எவ்வளவு காலம் நீங்கள் வைத்து இருக்கலாம்; இதை வைத்திருக்க ஒரு குறிப்பிட்ட காலம் இல்லாமல் வைத்து இருப்பது நியாயமா என்பதை எடுத்துச் சொல்லி, அமெரிக்காவில் ஒரு சட்டத்திற்கு 10 நாட்களுக்குள் குடியரசுத் தலைவர், ஒன்று ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது திருப்பி அளிக்க வேண்டும்: இல்லாவிட்டால், கிடப்பிலே போட்டால், அந்தச் சட்டம் நிறைவேற்றியதாகவே கருதப்படும். இதேமாதிரிதான் அயர்லாந்திலும் என இதுபோன்ற விவரங்களை எல்லாம் சொன்னவுடன் என்னுடைய கருத்தை — நீங்கள் மிகவும் ஆச்சரியப்படுவீர்கள் — காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த, காங்கிரஸ் மாநிலத்தைச் சார்ந்த, மத்தியப் பிரதேசத்தைச் சார்ந்த

திரு. திக்விஜய் சிங் ஆதரித்தார். I extend my support to the Law Minister of Tamil Nadu என்று open-ஆக எழுந்து நின்று சொன்னார். இது வரவேற்கத்தக்கது என்று சொன்னார். இது உண்மையிலேயே ஏற்றுக்கொள்ள வேண்டியது; மத்திய அரசு, மாநில அரசு சட்டமுன்வடிவுகளை யாரும் காலவரையின்றி வைத்துக்கொள்ளக் கூடாது; அதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் உண்டு, இல்லை என்று சொல்லித் திருப்பி அனுப்ப வேண்டும் என்று அந்த விவாதத்திலே முடிவு வந்தது. என்ன முடிவு என்றால் அது ஒரு சரித்திரபூர்வமான முடிவு. அதனால்தான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்த மன்றத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்படுமானால் ஆளுநர் ஒரு மாதத்திற்குள் ஒன்று ஒப்புதல் அளிக்க வேண்டும் அல்லது திருப்பியனுப்ப வேண்டும். ஒரு மாதம்தான் அவர் வைத்திருக்கலாம். அதுதான் Time frame. அதேமாதிரி குடியரசுத் தலைவரைப் பொறுத்தமட்டில் நான்கே மாதம்தான் வைத்திருக்கலாம். சரி, ஒரு மாதத்திற்குள் இவர் அனுப்பவில்லை, 4 மாதத்திற்குள் அவர் அனுப்பவில்லை என்றால் அந்தச் சட்டமுன்வடிவு நிறைவேறியதாகவே கருதப்படும் என்று நாங்கள் அந்தக் குழுவிலே முடிவெடுத்திருக்கிறோம் என்று இப்போது அரசாங்கத்திற்கு எங்களுக்கு தகவல் வந்திருக்கிறது. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் எவ்வளவு வேகமாக எத்தகைய அரசியல் அடிப்படையிலே இந்தத் துறை பெரிய சாதனைகளையெல்லாம் புரிந்துகொண்டு வருகிறது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். இது சிலருக்குச் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் இது சம்பந்தமாக கடந்த காலத்தில் முடிவெடுக்க யாரும் முன்வரவில்லை என்பதைத்தான் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். நாங்கள் இப்போது அரசமைப்புச் சட்டத்தினை மறுபரிசீலனை செய்ய ஏன் விரும்புகிறோம் என்றால் இதுபோன்ற பிரச்சினைகளை மையமாக வைத்துத்தான், மத்தியிலே கூட்டாட்சி, மாநிலத்திலே சுயாட்சி வர வேண்டுமானால் அரசமைப்புச் சட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டாக வேண்டும். அன்றைக்கு அரசமைப்புச் சட்டத்தை ஏறத்தாழ 89 முறைக்கு மேலே திருத்தியவர்கள் இப்போது அது கூடாது, கொடியது என்று சொல்லிக்கொண்டு வாதிட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-40*

இப்போது என்ன சொல்கிறார்கள்? நீங்கள் அரசமைப்புச் சட்டத்தினை மறு ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறீர்கள்; அடிப்படையை மாற்றம் செய்வீர்களா என்று கேட்டார்கள். பாரதப் பிரதமர் அவர்கள் அடிப்படை



மாற்றம் செய்யப்பட மாட்டாது, கேசவாநந்தா பாரதி வழக்கிலே தீர்ப்பு எதுவோ, கோலக்நாத் வழக்கிலே தீர்ப்பு எதுவோ, மினர்வா வழக்கிலே தீர்ப்பு எதுவோ, அதன் அடிப்படையில் அடிப்படை அம்சங்களை எல்லாம் மதித்துத்தான் இந்தக் குழு பரிசீலிக்கும் என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். எனக்கிருக்கிற சந்தேகம் எல்லாம், இப்படிச் சொன்ன பிறகும்கூட இந்த வாக்குறுதி கொடுத்து அதன் அடிப்படையில் நிபுணர் குழு — சுவரன்சிங் குழுவைப் போன்ற தனி நபர் குழு அல்ல, அரசியல்வாதிகளைக் கொண்ட குழு அல்ல — அமைக்கப்பட்டிருப்பதை, அப்படி அமைக்கப்பட்ட ஒரு குழுவைக்கூட வரவேற்க நமக்கு மனம் இல்லையென்று சொன்னால் கிடைக்கிற வாய்ப்பை நாம் நழுவவிடுகிறோம் என்றுதான் அதற்குப் பொருள். அதை நாம் மறந்துவிடக் கூடாது. அரசமைப்புச் சட்டத்தினை மறு ஆய்வு செய்வது என்று தற்போது கிடைத்துள்ள வாய்ப்பு அடிக்கடி வரக்கூடியதல்ல. இதை நாம் நழுவ விடக்கூடாது. Basic Structure மாற்றப்படக் கூடாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. ஆனால் உண்மையிலேயே Basic Structure மாற்றப்படக்கூடாது என்ற கொள்கைமீது காங்கிரஸ் கட்சிக்கு நம்பிக்கை உண்டா என்றால் நூற்றுக்கு நூறு கிடையாது. இந்த மாமன்றத்தில் நான் பகிரங்கமாகச் சொல்கிறேன். தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய நிலை எனக்குத் தெரியாது. சில நேரங்களிலே அவர்கள் காங்கிரஸ் என்கிறார்கள். சில நேரங்களில் காங்கிரஸுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்கிறார்கள். உறவு மட்டுந்தான் என்கிறார்கள். அது வேறு விவகாரம். அவர்களுக்கு நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் கோலக்நாத் வழக்கில் தீர்ப்புச் சொல்லப்பட்டவுடன் அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளை மாற்றக் கூடாது, திருத்தக் கூடாது, அப்படித் திருத்துவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது என்று அதை எதிர்த்து வாதிட்டவர்கள், அதை எதிர்த்துப் பேசியவர்கள், அதனை எதிர்த்து நாடாளுமன்றத்திலே மசோதாவைக் கொண்டு வந்தவர்கள், ஆதரித்தவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

பெருமதிப்பிற்குரிய நாத்பாய் அவர்கள் ஒரு தனி நபர் மசோதாவைக் கொண்டு வந்தார்கள். அதை காங்கிரஸ் ஆதரித்தது. ஆதரித்தது மட்டுமல்ல; அதனை Joint Parliamentary Committee-க்கு அனுப்பியது. அனுப்பியதோடு மட்டுமல்லாமல் அதை நிறைவேற்ற வேண்டுமென்று துடித்தது. நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் அந்த நேரத்தில் இந்தியாவின் துணைப் பிரதமராக காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இருந்த

மொரார்ஜி தேசாய் அப்போது என்ன சொன்னார் தெரியுமா? We would have liked to move such bill ourselves. But, Nothpai brought that first and we decided to support that — நாங்கள் இதைச் செய்ய நினைத்தோம். நாத்பாய் முந்திக்கொண்டார், அதை நாங்கள் ஆதரிக்கிறோம் — என்று சொன்னார். அந்த அளவிற்கு அரசமைப்புச் சட்டத்தில் எந்த பாகத்தைத் திருத்தலாம் என்று நாத்பாய் சொன்னார்; நாத்பாய் கொண்டு வந்தார். அதை அன்றைக்கு ஆதரித்தவர்கள், அதற்கு அன்று ஒத்துழைப்புக் கொடுத்தவர்கள் அடிப்படை அமைப்பில் Basic Structure-ல் தங்களுக்கு நம்பிக்கை இருப்பதாகச் சொல்கிறார்கள்.

நான் இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பண்டிதர் ஜவஹர்லால் நேரு அவர்கள் காலத்தில் அரசமைப்புச் சட்டத் திருத்தம் என்ற பெயராலே 7-வது திருத்தம் என்பதன் பெயராலே பல திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். அதை நாம் மறந்துவிடக்கூடாது. திருத்தம் என்பதன் பெயராலே மறுபரிசீலனை செய்யப்பட்டிருக்கிறது. 1956 ஆம் ஆண்டு செய்யப்பட்ட 7-வது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தில் 29 பிரிவுகள்; அந்த அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 29; அதிலே அரசமைப்புச் சட்டத்தில் மாற்றி substitute பண்ணப்பட்டவை 64 பிரிவுகள்; சேர்க்கப்பட்டவை 2. ஆக மொத்தம் அதிலே உள்ள திருத்தம் எத்தனை என்றால் 124 திருத்தங்கள். பெருமதிப்பிற்குரிய பண்டிதர் ஜவஹர்லால் நேரு காலத்தில் செய்யப்பட்ட திருத்தம்; அதற்குப் பிறகு அன்னை இந்திரா காந்தி காலத்தில் 1976-ல் 42 ஆம் திருத்தச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட திருத்தம் 78 திருத்தங்கள்; நீங்கள் ஒரே சட்டம் என்று நினைத்துவிடக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர்களே, நான் அமெரிக்க அரசியல் சட்டத்திலுடைய படியைக் கையிலே வைத்திருக்கிறேன். திருத்தச் சட்டம். மொத்தமே 3 பக்கம்தான். அதற்குமேலே கிடையாது. 211 ஆண்டுகள் ஆகியும் அந்தச் சட்ட த்தினுடைய திருத்தமே அவ்வளவுதான். ஆனால் நம்முடைய நிலையைப் பாருங்கள். இது நம்முடைய அரசமைப்புச் சட்டம்; இது நம்முடைய அரசமைப்புச் சட்டம்.

(மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அவையில் சிறிய புத்தகம் ஒன்றை காண்பித்தார்).

இது நம்முடைய அரசமைப்புத் திருத்தச் சட்டம். (மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அவையில் பெரிய புத்தகம் ஒன்றைக் காண்பித்தார்) திருத்தச் சட்டம் மட்டும் இவ்வளவு பெரிதாக இருக்கிறது. அரசமைப்புச் சட்டம் இப்படிச் சிறிதாக இருக்கிறது.



பிற்பகல் 1-45

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் என்ன Point of order கேட்கப் போகிறீர்கள், சரி.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே புத்தகத்தினுடைய size எல்லாம் காட்டி சொல்லிக் கொண்டிருக்கிறார். திருத்தம் அந்த அளவுக்கு வரவில்லை. Commentary-களோடு இருப்பதைக் காட்டியிருக்கலாமே ஒழிய புத்தகம் இவ்வளவு பெரியதாக இருக்கிறது, புத்தகம் இவ்வளவு பெரியதாக இருக்கிறது என்று...

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இந்தச் சட்டத் திருத்தத்திலேயே எல்லாச் சட்ட திருத்தங்களும் இல்லை. இதுவே 56 திருத்தங்கள்தான். இது bare Act தான்; இவ்வளவும் bare Act தான். நீங்கள் நினைப்பதுபோல Commentary-களோடு உள்ளது அல்ல; விமர்சனத்தோடு அல்லது வழக்குகளோடு உள்ளது அல்ல; வெறும் bare Act தான், அதற்காகத்தான் நான் சொல்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய பட்டிமன்றத்தை அப்புறம் வைத்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தளவில் நாங்கள் மறு ஆய்வை ஏன் ஆதரிக்கிறோம் என்று சொன்னால்....

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒன்றை மறந்துவிட்டுப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் அத்துணையும் அரசமைப்புச் சட்டத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களால், ஜனநாயகக் கட்டமைப்புக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் மட்டுமே கொண்டுவரப்பட்டவை. ஆனால் இப்போது B.J.P. அரசு கொண்டு வந்திருப்பது; ஒரு குழுவை அதற்காகப் போட்டுவிட்டு ஜனநாயக மரபுகளை எல்லாம் மாற்றியமைத்துவிட்டு இப்போது நாடாளுமன்றத்தையே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள், நான் சொல்கிறேன். நீங்கள் வக்கீல்மாதிரி பேச வேண்டும். நீங்கள் வக்கீலாக இல்லாவிட்டாலும்கூட உங்கள் வாதத்தை ஏற்றுக்கொள்ளலாம். எந்தத் திருத்தம் கொண்டுவந்தாலும் நாடாளுமன்றத்திற்குத்தான் வரவேண்டும். (குறுக்கீடு) அதனால் என்ன? யார் எந்த Committee போட்டாலும் நாடாளுமன்றத்திற்குத்தான் வரவேண்டும். அதை, கடைசியாக அங்கு வராமல், செய்ய முடியாது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிப்படைப் பிரச்சினைகளை மாற்றுவதற்குக் குழு போட்டிருக்கிறார்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறான தகவலைச் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன் உட்காருங்கள். தவறான தகவலைச் சொல்கிறீர்கள். Basic structure-ஐ மாற்ற முடியாது என்று உறுதிமொழி கொடுத்தால்தான் நான் தலைவராக இருப்பேன் என்று former Chief Justice சொல்லித்தான் அதன் தலைவராக இருக்கிறார். ஆகவே நீங்கள் இப்படித் தவறான தகவலைச் சொல்லக்கூடாது. Basic structure-ஐ மாற்ற முடியாது என்று சொல்லித்தான் அவர் அந்தத் தலைமையை ஏற்று இருக்கிறார். அமைச்சர், சீக்கிரம் உரையை பேசி முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 42-வது அரசமைப்புச் சட்டத் திருத்தம் சுவரண்சிங் தனி நபர் குழுவினுடைய அறிக்கையை மையமாகக் கொண்டு நிறைவேற்றப்பட்ட திருத்தம். ஆனால் இப்போது பெருமதிப்பிற்குரிய வாஜ்பாய் அவர்கள்.....

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மை என்றாலும்கூட B.J.P.யை இயக்கிக்கொண்டிருக்கிற ஆர்.எஸ்.எஸ். அரசமைப்புச் சட்டத்தை முழுமையாக மாற்ற வேண்டுமென்றுதான் தொடர்ந்து வலியுறுத்தி இருக்கிறது. இப்போதும் வலியுறுத்துகிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அமைச்சருக்கு ஒன்றைச் சொல்கிறேன். இது நம்முடைய சட்டத் துறை பற்றிய மானியம் அதனால் நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.



**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுஆய்வு எதற்காக வேண்டும் என்பதற்கு ஒரே ஒரு காரணத்தை நான் சொல்ல விரும்புகிறேன். What is basic structure? Basic structure என்றால் என்ன என்பதற்கு அரசமைப்புச் சட்டத்தில் இப்போது வரைமுறை இல்லை. நீதிமன்றமே முடிவு செய்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே பல்வேறு முடிவுகளை அது சொல்லியிருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. அது நமக்குச் சாதகமாகவும் இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் நிரந்தரப் பாதுகாப்பு இருக்க வேண்டுமானால் அரசமைப்புச் சட்டத்தில் basic structure என்றால் என்ன என்பதற்கு ஒரு விளக்கம், விதி சேர்க்கப்பட்டாக வேண்டும். மாநிலத்திலே சுயாட்சியும், மத்தியிலே கூட்டாட்சியும் அமையக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும். எனவேதான், இந்த நல்ல சந்தர்ப்பத்தை நாம் நழுவவிடக் கூடாது. தமிழ் மக்கள் அத்தனைபேரும் ஒன்றாகச் சேர்ந்து, தமிழ் மாநில காங்கிரஸ் என்று பெயர் வைத்துக்கொண்டு தமிழர்களின் உரிமையை, நலனைக் காக்க, கிடைக்கின்ற சந்தர்ப்பத்தை நீங்கள் நழுவவிடக்கூடாது என்ற அடிப்படையில் சொல்கிறேனே தவிர வேறு எந்த நோக்கத்தோடும் நான் இதைச் சொல்ல விரும்பவில்லை.

பிற்பகல் 1-50

**THIRU M. ABDUL LATHEEF:** This is a very important question; a Constitutional question. Therefore, if the Hon. Minister is interested to study the entire issue in depth, we are prepared. But there should be a time allotted for this special purpose and not at this time when he is replying for the debate, so that....

**HON. THIRU ALADI ARUNA:** I would like to inform the Hon. Member that it is left to the option of the Chair. I cannot decide about it.

**THIRU M. ABDUL LATHEEF:** This is not the occasion. The basic question is to be taken up for discussion; But this is not the time. You fix up a time.

**HON. THIRU ALADI ARUNA:** I have a right to utilise the time. It is an issue....

**THIRU M. ABDUL LATHEEF:** We are prepared to discuss this matter. (The gong was sounded) This is a very important question. If you decide and say 'alright we will have a discussion on it', We are prepared to face. (Interruption) We are prepared to face it.

**HON. THIRU ALADI ARUNA:** We accept the challenge. (Interruption) We accept the challenge (Interruption) I will accept the challenge. It is left to the Chair.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** திரு. லத்தீப் அவர்கள் விரும்பினால் நானே இந்தப் பட்டிமன்றத்தை கலைவாணர் அரங்கத்திலே ஏற்பாடு செய்து தருகிறேன். அதிலே கலந்து கொண்டு பேசலாம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அதுதானே, right. அதனால் இப்போது உட்காருங்கள் (குறுக்கீடு) அதனால் இப்போது உட்காருங்கள்.

**HON. SPEAKER:** I want to give my ruling. As the Hon. Member Mr. Latheef had a right to say what he thought, the Hon. Minister for Law is entitled to say his opinion. You may agree with it or not agree with it. But you cannot question it.

**THIRU M. ABDUL LATHEEF:** But he has taken up the time. We have to be given time.

**HON. SPEAKER:** You have been given the time to speak.

**THIRU M. ABDUL LATHEEF:** This is not the occasion for this discussion.

**HON. SPEAKER:** That is not your decision. It is mine. I do not agree with what you say.

**THIRU M. ABDUL LATHEEF:** We will also participate in the discussion. You allot a separate time. We are prepared to face.

**HON. SPEAKER:** Please sit down.

**THIRU M. ABDUL LATHEEF:** I am just expressing myself.



**HON. SPEAKER:** Alright. Please sit down.

**THIRU M. ABDUL LATHEEF:** This is not the occasion.

**HON. SPEAKER:** You are not entitled to say.

**THIRU M. ABDUL LATHEEF:** You must have it separately.

**HON. SPEAKER:** No. I will not give separate time. The Hon. Minister will continue.

**HON. THIRU ALADI ARUNA:** I am going to conclude. (Interruption) I am going to conclude. It is unfortunate that Hon. Member Mr. Latheef is not able to understand what I am arguing.

***THIRU J. HEMACHANDRAN:** Hon. Speaker sir, I rise on a point of order.

**HON. SPEAKER:** I am not permitting any point of order (Interruption) No.

**THIRU J. HEMACHANDRAN:** When you are permitting the Law Minister to speak about all these things, you give opportunity to us also.

**HON. SPEAKER:** The Law Minister is only replying to your discussion.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற விதிமுறைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் மதித்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் பதில் அளிக்கிறார். ஒருவேளை அவர் சொல்கிற கருத்தில் உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். உடன்பாடு இருக்கிறதா இல்லையா என்பது முக்கியம் அல்ல. அந்தக் கருத்தைச் சொல்ல அவருக்கு உரிமை உண்டு. ஆனால் இன்றைக்கு அந்தக் கருத்தைச் சொல்லி இந்த மானியம் முடிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலே அவர் பேசி முடித்தாலும் இந்த எண்ணங்களுக்கு முடிவு கிடையாது. என்றைக்கும் உங்களுடைய கருத்து உங்களுக்கு உண்டு. இந்தச் சட்டமன்றமும் நீண்ட காலம் இருக்கும். உறுப்பினர்களும் திரும்ப வருவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். ஆகவே இந்தக் கருத்து இன்றைக்கே முடிக்கப்பட்டுவிடுகிறது என்று எண்ணுவதும் ஆகவே எங்களுக்கு வாய்ப்பில்லை என்று பேசுவதும் சட்டமன்ற மரபுக்கே ஏற்றதல்ல.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் A.L.S. அவர்கள் இது சம்பந்தமாகக் குறிப்பிட்டார்கள். அதை மையமாக வைத்துத்தான் அரசு சார்பில் உள்ள கருத்தைச் சொன்னேன். பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசும்போதுகூட

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இந்தப் பிரச்சினையை முடியுங்கள். நான் உங்களுக்கும் உத்தரவு கொடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு உறுப்பினர்கள் சிறைத் துறையைப் பற்றி பல்வேறு விஷயங்களை இங்கே சொன்னார்கள். நான் அவர்களுக்கெல்லாம் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். சிறைத் துறையைப் பொறுத்தவரையில்

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை -. எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடினார். இப்படிப் பாடியதாலே சிறைச்சாலை மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக இருக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. இலட்சியவாதிகள், சிறைச்சாலையில் சிரமம் இருந்தாலும் நெருக்கடிகள் இருந்தாலும் விதிமுறைகள் இருந்தாலும் கட்டுப்பாடு இருந்தாலும் இந்தக் கட்டுப்பாடு, இவை எல்லாம் எங்களுக்குச் சாதாரணம், இது மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை என்று மனத் துணிவோடு இலட்சிய உணர்வோடு இருக்கிறார்கள் என்று பொருள்.

நம்மைப் பொறுத்தவரையில் இந்தச் சிறைச்சாலையை மனித உரிமைகளுக்குக் கட்டுப்பட்டு நியாயமான முறையில்தான் நடத்திக் கொண்டு இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய தேசிய Human Rights Commission தலைவர் பெருமதிப்பிற்குரிய கார்த்திகேயன் அவர்கள், பல சிறைகளுக்குச் சென்றிருக்கிறார்கள். சென்று பார்வையிட்டு அங்கு எப்படி இருக்கிறது என்பதைச் சொல்லியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-55*

The hygienic aspect is very good. The quality of the food is good. The correct quantity is being supplied to all prisoners. Cares have been taken to receive the vegetables on the basis of good quality. Various skills are being taught besides the general education. The



administration of the prison is good due to the special interest taken by Thiru K. Murthy, the Superintendent. He deserves compliments and encouragement என்று அகில இந்திய மனித உரிமைகள் ஆணையத்தினுடைய தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். அதேபோன்று நம்முடைய மாநில ஆணையத்தினுடைய உறுப்பினர் திருச்சி சிறைக்குச் சென்றபோது சொல்லியிருக்கிறார்.

I visited this prison after prior information. The prison is very curt and maintained. The Superintendent deserves compliments and encouragement for efficiently and properly running this prison. There is scope for further improvement in certain areas in this well-managed prison. The State Human Rights Commission is satisfied that the prison has practically no case of violation of human rights. The Superintendent and staff have to be complimented for the present good state of this prison என்று. இதற்கு மேலே நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. எதிர்பாராதவிதமாகக் கடந்த ஆண்டு ஒரு அசம்பாவிதம் சென்னை சிறையிலே நடந்துவிட்டது. அதுசம்பந்தமான எல்லா விசாரணைகளும் முடிகின்ற கட்டத்தில் இருக்கின்றன. வருகின்ற ஆகஸ்ட் மாதத்தில் அதுசம்பந்தமான அறிக்கைகள் எல்லாம் கிடைக்கும்.

சிறையைப் பொறுத்த அளவில் நேர்மையாகவும், ஒழுங்காகவும், நடத்துவோம்; முறையாக நடத்துவோம், மனித உரிமைகளுக்கு மதிப்புக் கொடுப்போம். யாரையும் பழிவாங்க மாட்டோம். நம்முடைய உறுப்பினர் திரு. நாசர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல யாராவது நிரபராதியாக இருப்பார்களானால் அதைப் பரிசீலிக்கவும் தயாராக இருக்கிறோம். அதே நேரத்தில் அவர்களே நீதிமன்றத்திற்குச் சென்று வாதிடவும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

பெருமதிப்பிற்குரிய சுப்பராயன் அவர்கள் ஆயுள் தண்டனையை 8 ஆண்டாகக் குறைக்க முடியுமா என்று கேட்டார்கள். அதை ஆலடி அருணா நிர்ணயிக்க முடியாது. அமைச்சரவைதான் நிர்ணயிக்க வேண்டும் என்று சொல்லி வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்று நீங்கள் மானியக் கோரிக்கைகளை முழுமனதோடு நிறைவேற்றித்தர வேண்டுமென்று எல்லோரையும் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(இ) கோரிக்கை எண் 37—சுற்றுச்சூழல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 37, சுற்றுச்சூழல், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்.

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சுற்றுச்சூழல் பற்றிய 37-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 8,86,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாடுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13, நீதி நிர்வாகம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.



**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர் சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"நீதி நிருவாகம் பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 141,55,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14, சிறைச்சாலைகள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ஆர்.ஆர். சேகரன், இருக்கையில் இல்லை. திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு ஏ.வி.ஏ. நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.வி.ஏ. நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. எ. தெய்வநாயகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி. ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு ஜே. எம். ஆரூண் ரஷீத்.



**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ். வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சிறைச் சாலைகள் பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 55,87,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. மீண்டும் பேரவை நாளை (28-4-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-00 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

152. 1997-98 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

147. மானியக் கோரிக்கை எண் 13, நீதி நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

148. மானியக் கோரிக்கை எண் 14—தமிழ் நாட்டில் சிறைகள் நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

149. மானியக் கோரிக்கை எண் 37—சுற்றுச்சூழல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

150. மானியக் கோரிக்கை எண் 37-ன் கீழ் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001. (தமிழ், ஆங்கிலம்)

151. சுற்றுச்சூழல் பற்றிய செயல்முறைத் திட்டம், 2000-2001. (ஆங்கிலம்)

152. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பனிரெண்டாவது அறிக்கை. (1999-2000).

153. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதிமூன்றாவது அறிக்கை. (1999-2000)

154. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினான்காவது அறிக்கை. (1999-2000)

155 பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினைந்தாவது அறிக்கை. (1999-2000)

156. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று பதினாறாவது அறிக்கை. (1999-2000)



## இணைப்பு-I

*(354 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

### கோரிக்கை எண் 13—நீதி நிருவாகம்
### கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

**1. தமிழ்நாட்டில் நீதி நிருவாகம்**

நீதி நிருவாகம் மாநில அரசின் முக்கியப் பணிகளில் ஒன்றென காலந்தொட்டு கருதப்பட்டு வருகிறது. சட்டத்தின்படி நீதியை நிருவகிப்பது மாநில அரசின் தொடர் பணியாகும்.

இம்மாநில அரசு நீதி நிருவாகத்திற்கு முன்னுரிமை அளித்து வருவதால் உள்ளமைப்பு மற்றும் செயல்பாட்டு முறையில் இம்மாநிலத்தில் நீதி நிருவாகம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது. நீதி நிருவாகம் செவ்வனே நடைபெற, நிதிவள ஆதாரங்கள் பற்றாக்குறையாக இருப்பினும் நீதி நிருவாகத்திற்குத் தேவையான கட்டடங்கள், பணியாளர்கள் மற்றும் பிற உள்கட்டமைப்புகளுக்கு அரசு வசதிகளைச் செய்து தருகிறது.

**II. வள ஆதாரங்கள் ஒதுக்கீடு**

*அ. நிதி*

| வருடம் | செலவினம் | வரவு |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| 1989-1990 | 29.70 | 28.57 |
| 1990-1991 | 37.25 | 26.16 |
| 1991-1992 | 40.19 | 25.65 |
| 1992-1993 | 45.25 | 28.07 |
| 1993-1994 | 56.05 | 32.62 |

| | | |
|---|---|---|
| 1994-1995 | 64.95 | 38.34 |
| 1995-1996 | 73.14 | 43.04 |
| 1996-1997 | 86.74 | 45.96 |
| 1997-1998 | 104.45 | 48.45 |
| 1998-1999 (கணக்குகள்) | 141.28 | 52.46 |
| 1999-2000 (திருத்திய மதிப்பீடு) | 147.54 | 76.93 |
| 2000-2001 (வரவு-செலவு திட்ட மதிப்பீடு) | 164.41 | 72.68 |

உயர்நீதிமன்றம் மற்றும் நொடித்தவர் சொத்தாட்சியர், அவரின் பணியாளரமைப்பு ஆகியவைகளுக்கான செலவினம் "சாட்டிய செலவினம்" தலைப்பிலும், பிற நீதி நிருவாகச் செலவினங்கள் "அனுமதிக்கப்பட்ட செலவினம்" தலைப்பிலும் கையாளப்படுகின்றன.

## (ஆ) நீதிமன்றங்கள்

1999-2000 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட நீதிமன்றங்களை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

| வ. எண் | திட்ட விவரம் | தொடரும் செலவினம் (ரூபாய் இலட்சத்தில்) | தொடரா செலவினம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | இராமேஸ்வரத்தில் ஒரு மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் | 15.92 | 4.00 |
| 2. | காட்டுமன்னார் கோயிலில் ஒரு உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் | 15.92 | 4.00 |
| 3. | போச்சம்பள்ளியில் ஒரு மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்தல் | 16.52 | 3.50 |
| 4. | ரவி என்கிற வெள்ளை ரவி மற்றும் சேரா என்கிற சேரன் தலைமையிலான சமூக விரோதக் கும்பலின் வழக்குகளை விசாரிக்க சென்னையில் கூடுதல் அமர்வு நீதிமன்றம் ஒன்றை அமைத்தல் | 13.55 | 1.35 |





## (இ) கட்டடங்கள்

1993-94-ஆம் ஆண்டு முதல் நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக மைய அரசு அளிக்கும் 50 விழுக்காடு நிதி உதவியுடன் மாநில அரசு நிதி ஒப்பளிப்பு வழங்கி வருகிறது. இதுவரைக்கும் ரூ. 71.48 கோடி மொத்தச் செலவில் 94 கட்டடப்பணிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதற்காக மைய அரசு இதுவரைக்கும் ரூபாய் 22.66 கோடி நிதியுதவி அளித்துள்ளது.

## (ஈ) 2000-2001 ஆம் ஆண்டிற்கான பகுதி - 2 செயற்குறிப்புகள்

2000-2001 ஆம் ஆண்டில் உள்துறையைப் பொறுத்தமட்டும் ரூபாய் 60.64 இலட்சம் செலவில் எட்டு புதிய திட்டங்களுக்கும், சட்டத்துறையைப் பொறுத்தமட்டும் ரூபாய் 16.50 இலட்சம் செலவில் மூன்று புதிய திட்டங்களுக்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திட்ட விவரங்கள் கீழ் வருமாறு:—

| வ எண் | திட்ட விவரம் | தொடரும் செலவினம் | தொடரா செலவினம் | 2000-2001-ல் செலவினம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1 | திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஒன்றை அமைத்தல் | 20.34 | 4.66 | 21.81 |
| 2 | திருநெல்வேலி மாவட்டம், தென்காசியிலிருந்து இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றத்தை மாற்றி சங்கரன் கோவிலில் சார்பு நீதிமன்றம் ஒன்றை அமைத்தல் | 11.23 | 2.66 | 11.96 |
| 3 | மாநிலத்திலுள்ள மாவட்ட நீதிமன்றங்களுக்கு தொலைப் பதிவு இயந்திரம் (Fax) வாங்குதல் | 1.25 | 11.46 | 11.95 |
| 4 | குற்ற வழக்குகள் தொடர்வு இயக்ககத்திற்கு இணைய தொடர்புடன் கணினி வாங்குதல் | 0.20 | 1.29 | 1.49 |
| 5 | குற்ற வழக்குகள் தொடர்வு இயக்ககத்திற்கு சட்ட மென் பொருட்களை CD ROM-ல் வழங்குதல் | 0.10 | 0.70 | 0.80 |
| 6 | மாநில தலைமை வழக்கறிஞர் அலுவலகத்திற்கு கணினி, அச்சு இயந்திரம் மற்றும் மரச்சாமான்கள் வாங்குதல் | .. | 2.25 | 2.25 |



| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 7 | சென்னை உயர்நீதிமன்ற குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகத்திற்கு கணினி, அச்சு இயந்திரம் மற்ற துணைப் பொருட்கள் வாங்குதல் | — | 4.00 | 4.00 |
| 8 | சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்குரைஞர் அறைக்கு சீர்வளிசாதனம் வழங்குதல் | — | 0.50 | 0.50 |
| | மொத்தம் .. | **33.12** | **27.52** | **54.76** |
| | **சட்டத் துறை** | | | |
| 9 | மாநிலத்திலுள்ள 5 அரசு சட்டக் கல்லூரிகளின் நூலகங்களுக்குப் புத்தகங்கள் வாங்குதல் | — | 5.00 | 5.00 |
| 10 | சட்டக்கல்வி இயக்ககம் மற்றும் 4 அரசு சட்டக் கல்லூரிகளை கணினிமயமாக்குதல் | — | 3.50 | 3.50 |
| 11 | சட்டப் பொருளாதாரம் மற்றும் அறிவுசார்ந்த சொத்து உரிமைகள் குறித்து சட்டப் பல்கலைக்கழகம் தொடர்ந்து ஆராய்ச்சி வளர்ச்சித் திட்டங்களை நடத்துவதற்காக மானியம் | — | 8.00 | 8.00 |
| | மொத்தம் .. | — | **16.50** | **16.50** |

**(உ) பதினொன்றாவது நிதிக் குழுமம்**

கீழ்க்கண்ட திட்டங்களுக்கான நிதி உதவி வேண்டி மாநில அரசு பதினொன்றாவது நிதிக்குழுமத்திற்கு செயற்குறிப்புகளை அனுப்பி வைத்தது.

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1) | **கணினிமயமாக்குதல்** | |
| | (அ) உயர்நீதிமன்றம் | 90.14 |
| | (ஆ) சார்பு நீதிமன்றங்கள் | 4167.90 |

[2000 ஏப்ரல் 27

| | | |
|---|---|---|
| 2) | மாவட்ட நீதிமன்றங்களுக்கு நூலகம் | 405.00 |
| 3) | கழிப்பறை வசதிகள் | 71.38 |
| 4) | நீதிமன்றக் கட்டடங்கள் கட்டுதல் | 815.00 |
| 5) | நீதித்துறை அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல் | 1545.00 |
| 6) | விசாரணைக் கைதிகள் அறை, பதிவறை மற்றும் ஓய்வு அறை வசதி | 1140.00 |
| | மொத்தம் .. | **8234.42** |

**(ஊ) 1999-2000 ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட பிற வசதிகள்:**

1. சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மைக் கட்டடத்தில் கூடுதல் ஒளி வசதிக்காக ரூ. 1.36 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது

2. குண்டுவெடிப்பு வழக்குகளை மட்டும் விசாரிக்கும் கூடுதல் அமர்வு நீதிமன்றம் செயல்பட கோயம்புத்தூர் வ.உ.சி. பூங்கா சாலையிலுள்ள அருங்காட்சியகக் கட்டடம் மற்றும் நூலகக் கட்டடம் ஆகியவற்றை மறு சீரமைப்பு செய்வதற்காக ரூ. 22.40 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. சென்னை உயர்நீதிமன்றத்தை மேலும் கணினி மயமாக்க ரூ. 1.09 கோடி செலவிற்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

4. 2000-2001 ஆம் ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு படிப்படியாக 443 நீதித்துறை அலுவலர்களின் குடியிருப்புகளில் தொலைபேசி வசதி செய்து தருவதற்கான திட்டத்தை அமல்படுத்த அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

## III. நீதி நிருவாகம் :

### (அ) நிருவாக அமைப்பு முறை:

புதுடில்லியில் உள்ள உச்ச நீதிமன்றம் நமது நாட்டின் உச்சநிலை நீதிமன்றமாகும். மாநிலத்தில் இயங்கும் அனைத்து உயர்நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன.



2000 ஏப்ரல் 27]

மாநில நீதித் துறையின் படிநிலை அமைப்பு வருமாறு

உயர்நீதிமன்றம், சென்னை

| உரிமையியல் | | குற்றவியல் | |
|---|---|---|---|
| சென்னை மாநகர் | வெளியூர் | சென்னை மாநகர் | வெளியூர் |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | அமர்வு நீதிமன்றங்கள் |
| சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | சார்நிலை நீதிமன்றங்கள் | | மாவட்டக் கூடுதல் நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல்/ குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | | |

### (ஆ) உயர்நீதிமன்றம், சென்னை:

சென்னை உயர்நீதிமன்றம் 35 நீதிபதிகளுடன் இயங்கிவருகின்றது. எனினும் சென்னை உயர்நீதிமன்றத்திற்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 42 ஆகும்.

### (இ) தமிழ்நாட்டில் நீதிமன்றங்கள்:

சென்னை மாநகரில் மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள், சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் மற்றும் பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழிலாளர் நல நீதிமன்றம், தொழில் நடுவர் மன்றம், மற்றும் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் மற்றும் போதைப் பொருட்கள் மற்றும் மனமயக்கம் தரும் பொருட்கள் தடைச் சட்டங்களின் கீழ் சிறப்பு நீதிமன்றங்கள் சென்னை மாநகரில் செயல்பட்டு வருகின்றன.

சென்னை மாநகரில செயல்பட்டு வரும் நீதிமன்றங்களின் விவரங்கள் இணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்டங்களில் 24 மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள், 7 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள், 23 கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், தருமபுரியில் ஒரு கூடுதல் மாவட்ட மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், பல்வேறு சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்டுள்ள 18 சிறப்பு நீதிமன்றங்கள், 91 சார்பு நீதிமன்றங்கள், 150 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள், 59 மாவட்ட உரிமையியல் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள், 176 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்நீதிமன்றங்களின் மாவட்ட வாரியான பட்டியல் இணைப்பு 2-இல் கொடுக்கப்பட்டுள்ளது.

சாலைப் போக்குவரத்து தொடர்பான குற்றங்களை விசாரிக்க 4 நடமாடும் நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் 2, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் தலா ஒரு நடமாடும் நீதிமன்றங்கள் உள்ளன. சென்னை மாநகருக்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள மேலும் நான்கு நடமாடும் நீதிமன்றங்கள் விரைவில் செயல்படத் தொடங்கும்.

சென்னையில் 3, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலத்தில் தலா ஒன்றுமாக மொத்தம் 6 குடும்ப நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

1993-ஆம் ஆண்டு மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தில் (மத்திய சட்டம் எண் 10/94) குறிப்பிட்டுள்ளதற்கிணங்க, சென்னை உயர்நீதி மன்றத்தின் இசைவுடன் இம்மாநிலத்தில் உள்ள அனைத்துக் கூடுதல் மாவட்ட நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதிபதிகள், சென்னையில் உள்ள இரண்டாவது கூடுதல் அமர்வு நீதிபதி மற்றும் உதகமண்டலம் அமர்வு நீதிபதி ஆகியோரை மனித உரிமைகள் நீதிமன்றமாக இம்மாநில அரசு குறிப்பிட்டுள்ளது.

1997-ஆம் ஆண்டு தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குகளை விசாரிப்பதற்கென சென்னையில் ஒரு தனி நீதிமன்றம் செயல்பட்டு வருகின்றது. நிதி நிறுவனங்கள் மோசடி குறித்த வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக ஒரு கூடுதல் காவல்துறை இயக்குநர் தலைமையின்கீழ் 1000 காவலர்களைக்



கொண்ட ஒருதனிப் பிரிவு, அதாவது பொருளாதாரக் குற்றங்கள் பிரிவு-2 (நிதி நிறுவனங்கள்) 1999-ஆம் ஆண்டு டிசம்பரில் உருவாக்கப்பட்டது.

**(ஈ) நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகள்**

சார்நிலை நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, சென்னை உயர்நீதிமன்றத்தால் முன்னோடித் திட்டம் என்ற சிறப்புத் திட்டம் படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 66 நீதிமன்றங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள நீதிமன்றங்களில் 34 நீதிமன்றங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன.

தங்கள் வழக்குகளுக்காக நீண்ட தொலைதூரத்திற்குச் செல்ல அவதிப்படும் வழக்காடும் மக்களின் நலன் கருதி மாவட்டங்களில் உள்ள சார்நிலை நீதிமன்றங்கள் பரவலாக்கப்பட்டுள்ளன.

உயர்நீதிமன்றத்திலுள்ள கணினி பிரிவு தற்பொழுது 3 சர்வர்கள், 62 டெர்மினல்கள் மற்றும் 32 பிரிண்டர்கள் மற்றும் பிற தேவையான துணைக் கருவிகளுடன் இயங்கிவருகிறது.

நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளை விரைந்து முடிக்கவும் மற்றும் நீதிமன்றத் தீர்ப்பு ஆணைகளின் நகல்களை உடனுக்குடன் வழக்காடும் மக்களுக்கு வழங்குவதற்காகவும் நீதி நிர்வாகத்தை முழுமையாக கணினி மயமாக்க சென்னை உயர்நீதிமன்றமும் அரசும் முனைந்துள்ளன.

தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம் இணைப்பு 4-ல் தரப்பட்டுள்ளன.

**(உ) தமிழ்நாட்டில் சட்ட அலுவலர்களின் அமைப்பு**

நமது மாநிலத்தில் சட்ட அலுவலர்கள், குறிப்பிட்ட கால அடிப்படையிலும் மற்றும் காலமுறை ஏற்றச் சம்பளம் பெறும் அரசுப் பணி அடிப்படையிலும் நியமிக்கப்படுகின்றனர். அரசால் நியமிக்கப்பட்ட சட்ட அலுவலர்களின் பதவித் தரங்கள் விவரம் வருமாறு:

[2000 ஏப்ரல் 27

### சட்ட அலுவலர்கள்
### மாநில அரசு தலைமை வழக்குரைஞர்
### கூடுதல் மாநில அரசு தலைமை வழக்குரைஞர்

| வ. எண் | சென்னை மாநகரம் | வெளியூர் |
|---|---|---|
| | உரிமையியல் | உரிமையியல் |
| 1. | அரசு உரிமையியல் வழக்குரைஞர் | அரசு உரிமையியல் வழக்குரைஞர் |
| 2. | அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | அரசு உரிமையியல் கூடுதல் வழக்குரைஞர்கள் |
| 3. | அரசு உரிமையியல் தனி வழக்குரைஞர்கள் | அரசுப் பணிகளை ஆற்றும் அரசு உரிமையியல் வழக்குரைஞர்கள் |
| 4. | அரசு வழக்குரைஞர்கள் | - |
| | குற்றவியல் | குற்றவியல் |
| 1. | அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் வழக்குரைஞர்கள் |
| 2. | அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் கூடுதல் வழக்குரைஞர்கள் |
| 3. | அரசு குற்றவியல் தனி வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் தனி வழக்குரைஞர்கள் |
| 4. | மாநகரக் குற்றவியல் வழக்குரைஞர்கள் | அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் நிலை-1 நிலை-2 |
| 5. | அரசு குற்றவியல் சிறப்பு வழக்குரைஞர்கள் | - |
| 6. | அரசு குற்றவியல் உதவி வழக்குரைஞர்கள் நிலை-1 நிலை-2 | — |

உச்ச நீதிமன்றத்திலுள்ள வழக்குகளில் அரசுத் தரப்பில் வாதாட 4 வழக்குரைஞர்கள் உள்ளனர்.



2000 ஏப்ரல் 27]

## IV. அரசு வழக்குகள் துறை

தமிழ்நாடு அரசின் தலைமை வழக்கறிஞரைத் துறைத் தலைவராகக் கொண்டு கூடுதல் தலைமை வழக்கறிஞர், அரசு உரிமையியல் வழக்கறிஞர், குற்றவியல் வழக்கறிஞர் ஆகியோரின் அலுவலகங்களை உள்ளடக்கிய அரசு வழக்குகள் துறை இயங்கி வருகிறது.

## V. தமிழ்நாடு மாநில சட்டப்பணி அதிகார மன்றம்

1987 ஆம் ஆண்டு சட்டப்பணிகள் அதிகார மன்றச் சட்டத்தின் கீழ் மாநில/மாவட்டச் சட்டப்பணி அதிகார மன்றம் மற்றும் வட்டச் சட்டப் பணிக்குழுக்கள் ஆகியவை அரசால் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது 25 மாவட்டச் சட்டப்பணி அதிகார மன்றங்கள், 125 வட்டச் சட்டப் பணிக்குழுக்கள், 45 பெண்களுக்கான ஆலோசனை மையங்கள், 65 சமரச மையங்கள் மற்றும் 150 ஆலோசனை மையங்கள் ஆகியவை பின்வரும் வகையில் செயல்பட்டு வருகின்றன.

1) மத்திய சட்டப்பணி அதிகார மன்றத்தின் கொள்கைகள் மற்றும் உத்தரவுகளை நடைமுறைப்படுத்துதல்.
2) சட்டப்பணி வழங்குதல்.
3) உயர்நீதிமன்ற வழக்குகளுக்கான மக்கள் நீதிமன்றம் உட்பட மக்கள் நீதிமன்றம் அமைத்திடல்.
4) தடுப்பு மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சட்ட உதவித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

மக்கள் நீதிமன்றங்களை அமைக்க மாநில, மாவட்டச் சட்டப்பணி அதிகார மன்றங்கள்/வட்டச் சட்டப்பணிக் குழுக்கள் ஆகியவற்றிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மக்கள் நீதிமன்றம் கீழ்வரும் நேர்வுகளில் தகராறுகள் குறித்து இரு பிரிவினர்களுக்கிடையே சமரசம் செய்தல் அல்லது தீர்வு காணுதல் ஆகிய அதிகார வரம்புகளைக் கொண்டுள்ளது:

(அ) யாதொரு நீதிமன்றத்திலும் நிலுவையாக இருக்கும் யாதொரு வழக்கு (அல்லது)

(ஆ) மக்கள் நீதிமன்றம் தோற்றுவிக்கப்பட்டு நீதிமன்றத்தின் முன் எடுத்துச் செல்லப்படாத யாதொரு நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் வரும் யாதொரு வழக்கு.

[2000 ஏப்ரல் 27

தமிழ்நாடு சட்டப்பணி அதிகார மன்றம் நில எடுப்பு வழக்குகளில் மக்கள் நீதிமன்றங்களை நிறுவி திறம்பட நடத்தி வருகின்றது. 1999 ஆம் ஆண்டில் நில எடுப்பு தொடர்பாக பெறப்பட்ட தொகையான ரூ. 11,30,73,360-ல் நெய்வேலியில் பெறப்பட்ட தொகை மட்டும் ரூ. 10,55,41,153 ஆகும். இம்மாதிரி மக்கள் நீதிமன்றங்கள் நில எடுப்பு குறித்து பெருமளவில் அமைக்கப்படுமாயின், பாதிக்கப்பட்ட மக்கள் நியாயமான இழப்பீட்டினை குறுகிய காலத்திற்குள் பெறமுடியும்.

தமிழ்நாடு மாநிலச் சட்டப்பணி மன்றத்தால் 1999 ஆம் ஆண்டு வரை 3931 மக்கள் நீதிமன்றங்கள் நடத்தப்பட்டுள்ளந. இவ்வழக்குகளின் 1998 மற்றும் 1999-ஆம் ஆண்டிற்கான விவரங்கள் இணைப்பு 3-ல் தரப்பட்டுள்ளன.

## VI. குற்ற வழக்கு தொடர்வு இயக்குநர்

குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம், குற்றவியல் வழக்குகளை திறம்பட நடத்தி நிர்வகிக்கவும், மாநிலத்தில் உள்ள பெருநகர குற்றவியல் நீதிமன்றங்கள், குற்றவியல் நீதிமன்றங்கள் மற்றும் தலைமை குற்றவியல் நீதிமன்றங்களில் பணியாற்றும் சட்ட அலுவலர்கள் மற்றும் குற்றவியல் வழக்குரைஞர்கள் ஆகியோரின் பணிகளைக் கண்காணித்து கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டுமென்ற முக்கிய நோக்கத்தோடும் தொடங்கப்பட்டது.

இந்நோக்கத்தை நிறைவேற்ற இணை இயக்குநர், துணை இயக்குநர்கள், கூடுதல் அமர்வு மற்றும் குற்றவியல் தலைமை நீதிமன்றங்களில் பணியாற்றும் கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர்கள், உதவி இயக்குநர்கள், உதவி குற்றவியல் வழக்குரைஞர்கள், தரம்-1 மற்றும் தரம்-2 ஆகியோர் குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநருக்கு உதவி புரிகிறார்கள்.

1999 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு: –



2000 ஏப்ரல் 27]

| மாதம் | தீர்வு செய்யப்பட்டவை |
|---|---|
| ஜனவரி | 8064 |
| பிப்ரவரி | 8233 |
| மார்ச் | 9361 |
| ஏப்ரல் | 8973 |
| மே | 7619 |
| ஜூன் | 8413 |
| ஜூலை | 8876 |
| ஆகஸ்ட் | 8998 |
| செப்டம்பர் | 7880 |
| அக்டோபர் | 8177 |
| நவம்பர் | 8958 |
| டிசம்பர் | 8913 |
| மொத்தம் | 102465 |

பிடியாணைகள் நிறைவேற்றத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1999-ல் 37,000 பிடியாணைகள் சார்வு செய்யப்பட்டன. 31-8-1996 அன்று 52,083 ஆக நிலுவையில் இருந்த பிடியாணைகளின் எண்ணிக்கை 31-12-1999 அன்று 30,631 ஆகக் குறைக்கப்பட்டுள்ளன. திரும்பப் பெறுவதற்கான பிடியாணைகள் 16,000 கண்டறியப்பட்டுள்ளது. 7,500 பிடியாணைகள் மீது நடவடிக்கைகள் முடிவுற்றுள்ளது.

1997, 1998 மற்றும் 1999 ஆகிய ஆண்டுகளில் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் எண்ணிக்கையும் காட்டும் வரைபடங்கள் இணைப்பு 4-க்குப் பின்னர் சேர்க்கப்பட்டுள்ளன.

## VII. சட்டக் கல்வித் துறை

சட்டக் கல்வித் துறையின் கீழ் சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய 5 இடங்களில் அரசு சட்டக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. வேலூரில் புதிதாக ஒரு சட்டக் கல்லூரி தொடங்கப்படவுள்ளது.

[2000 ஏப்ரல் 27

1999-2000 ஆம் கல்வி ஆண்டில் சட்டக்கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | சட்டக்கல்லூரியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி, சென்னை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | 3353 |
| 2 | மதுரை சட்டக்கல்லூரி, மதுரை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | 1830 |
| 3 | திருச்சி சட்டக்கல்லூரி, திருச்சி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப்படிப்புகள்) | 1258 |
| 4. | கோவை சட்டக் கல்லூரி, கோவை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்) | 1043 |
| 5 | திருநெல்வேலி சட்டக்கல்லூரி, திருநெல்வேலி (இளநிலை சட்டப் படிப்பு) | 480 |
| | **மொத்தம்** | **7964** |

மாநிலத்தில் அனைத்து நிலைகளிலும் தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற அரசின் கொள்கைக்கேற்ப தமிழ்மொழியிலும் சட்டப்பாடங்கள் போதிக்கப்பட்டு வருகின்றன. தமிழில் சட்டம் பயிலும் மாணவர்களுக்கு ஓராண்டிற்கு ரூபாய் 400 பயிற்சி உதவித் தொகையும் வழங்கப்படுகிறது.

திருநெல்வேலி சட்டக்கல்லூரி தவிர, ஏனைய 4 சட்டக் கல்லூரிகள் தற்போது, அரசுக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.



2000 ஏப்ரல் 27]

**VIII. சட்டப் பல்கலைக்கழகம்.**

நாட்டின் முதல் சட்டப் பல்கலைக்கழகத்தினை டாக்டர் அம்பேத்கர் பெயரில் இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

"ஜீவா"-வின் பெயரில் தமிழக அரசு ரூ.25,00,000/-ஐ அளித்து இப்பல்கலைக்கழகத்திற்காக ஓர் அறக்கட்டளையை உருவாக்கியுள்ளது. சட்டப் படிப்பில் முதன்முறையாக மற்றும் சிறப்பாக வெளிவரும் மாணவர்களுக்காக இந்த அறக்கட்டளையில் இருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

தகவல் தொழில்நுட்பம் சட்டப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சஞ்சிகைகள் மற்றும் சட்டப் புத்தகங்கள் பற்றிய அடிப்படைப் புள்ளிவிவரங்கள் அறிய கணிப்பொறி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரையில் முடிவுற்ற உச்ச நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்புகள் பற்றிய விவரம் அடங்கிய குறுந்தகடு (CD-ROM) நூலகத்திற்காகப் பெறப்பட்டுள்ளது. வழக்குரைஞர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், இதனை உபயோகித்துப் பயன்பெறும் வகையில் வைக்கப்பட்டுள்ளது. வருமான வரி ஆயத்த கணக்கீடு முறை பற்றிய குறுந்தகடு (CD) ஒன்றும் நூலகத்தில் உள்ளது.

இப்பல்கலைக்கழகம் குறித்த விவரங்கள் அடங்கிய CD-ROM-AMLAW, 99, 06.09.1999 அன்று வெளியிடப்பட்டது. இந்திய அரசியல் சாசன உருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகித்தவரும், கீழ்நிலையில் உள்ள மக்களின் மேம்பாட்டிற்கென உழைத்தவருமாகிய அம்பேத்கரின் பெயரில் இப்பல்கலைக்கழகம் அமைந்துள்ளமையால், இக்குறுந்தகட்டில் அவரது வாழ்க்கைக் குறிப்பு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகத்திற்கென ஒரு வலைப் பக்கத்தை (Web page) சென்னை, தரமணியில் உள்ள கணித அறிவியல் சேவையகம் வடிவமைத்து, உருவாக்கி, வெளியிட்டுள்ளது. "http:www.omsc emet.in/~ tandalau" என்ற முகவரி உடைய இவ்வலைப் பக்கம், உலக சட்ட வலைமனையாகிய "FINDLAW"-விலும் இடம் பெற்றுள்ளது. மேலும் யாஹூ, (yahoo) அல்டாவிஸ்டா, (Altavista) லைகாஸ், (Lycos) ஹாட்பாட் (Hotbot) போன்ற தேடல் இயந்திரங்களின் உள்ளடக்க வரிசையிலும் இவ்வலைமனை (Web site) இடம் பிடித்துள்ளது.

[2000 ஏப்ரல் 27

வரும் கல்வியாண்டில் ஐந்து முதுகலை மற்றும் ஆய்வுத் துறைகள தொடங்கப்பட உள்ளன. தொலைத் தொடர்பு கல்வித் துறை பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் தொடங்கப்படவுள்ளன.

## IX. சட்டத் துறையிலுள்ள (சட்ட) ஆட்சிமொழிப் பிரிவு

ஆட்சிமொழி (சட்டப்) பிரிவானது சட்டத் துறையின் ஓர் அங்கமாகும். மத்திய சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் தமிழில் மொழி பெயர்ப்பதே இதன் முக்கிய பணியாகும்.

இதுவரை, 60 மத்திய சட்டங்கள் மொழி பெயர்க்கப்பட்டு, அச்சிடப்பட்டு இந்திய குடியரசுத் தலைவரால் ஒப்புதல் பெறப்பட்டு புத்தக வடிவில் அச்சில் உள்ளன. குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக 30 மத்திய சட்டங்கள் மொழி பெயர்க்கப்பட்டு, அச்சிடப்பெற்று மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும், 15 மத்திய சட்டங்கள் மொழி பெயர்க்கப்பட்டு மாநில அரசின் மைய அச்சகத்தில் அச்சிடப்பெற்று வருகின்றன. சில சட்டங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு வருகின்றன.

அரசின் ஒப்புதல் பெற்ற 4 மாநிலச் சட்டங்களின் தமிழ் வடிவம் அரசின் மைய அச்சகத்திற்கு அச்சிடப்படுவதற்காக அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், திருத்தங்களுடன் கணினி மென்பொருள் தகட்டில் (Compact Disc) மத்திய அரசால் வெளியிடப்பெற்றுள்ளதால், இதனைத் தமிழில் கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறுகள் ஆய்வில் உள்ளன.

## X. தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆணையம்

சட்டத் திருத்தத்தின் முக்கியத்துவத்தையும் சட்ட விதிகளையும் பிற சட்டங்களையும் காலத்திற்கேற்ற வகையில் புதுப்பிக்க வேண்டிய சமுதாயத் தேவைகளையும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 246 ஆம் பிரிவின் விதித் துறைகளின் பொருட்செறிவிறகுக் குறையேதும் ஏற்படாமல், மாநிலத்தின் பல்வேறு அங்கங்களுக்கு இடையோன தொடர்பினையும், செயல் விளைவுகளையும் மேம்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து தமிழ்நாடு அரசு மாநிலச் சட்ட ஆணையத்தை அமைத்தது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட ஒவ்வொரு சட்டத்தையும் அதற்குப் பின்பு இயற்றப்பட்ட சட்டங்களையும் பரிசிலனை செய்வதும், அவை இன்றைய கால சூழ்நிலைக்கு ஏற்றவையா, இல்லையா



2000 ஏப்ரல் 27]

என்பது குறித்து கருத்து தெரிவிப்பதும், தேவையானால் அந்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்து அரசுக்குப் பரிந்துரைப்பதும் சட்ட ஆணையத்தின் பணிகளாகும். மேலும், சட்ட ஆணையம் மேற்சொன்ன சட்டங்கள் அனைத்தும் உச்ச நீதி மன்றத்தின் மற்றும் உயர்நீதி மன்றங்களின் பல்வேறு முடிவுகளுக்கு இணங்க உள்ளனவா என்பது குறித்து ஆராய்ந்து அந்தந்தச் சட்டங்களில் செய்யப்பட வேண்டிய மாற்றங்கள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறும். மேலும், இந்தச் சட்ட ஆணையம்—

(1) தற்போது இருந்துவரும் சட்டங்களுக்குத் தக்க மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் குறித்து கருத்துத் தெரிவிக்குமாறும்

(2) பொருத்தமான, சமுதாய-பொருளாதார சட்டமியற்றும் நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைக்குமாறும்

(3) பன்மாநில உறவுகளுக்கும், மைய-மாநில உறவுகளுக்குமான வழிவகைகளைக் கூறுமாறும்

(4) நீதி நிர்வாகச் சீர்திருத்தங்கள் குறித்து, செம்மையாகவும், விரைவாகவும், மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றி கருத்துரைகளையும், பரிந்துரைகளையும் வழங்குமாறும்

(5) மாநிலச் சட்டங்களுக்கு மட்டுமல்லாமல், இந்த மாநிலத்திற்கும் பொருந்துகின்ற மத்திய சட்டங்களுக்கும்கூட மாற்றங்கள் பற்றி கருத்துரைகளைத் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆணையம் நீதிமன்றக் கட்டணங்கள் குறித்த தனது நான்காவது அறிக்கையை 28-12-1999 அன்று மாண்புமிகு முதலமைச்சரிடம் வழங்கியுள்ளது.

## XI. மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைத்தல்

மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைப்பது, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி முதலிய தென் மாவட்டங்களிலிருந்து வரும் வழக்காடும் மக்களுக்கு நலம் பயப்பதாக இருக்கும். தேவையான உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற நிபந்தனையுடன் மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைப்பதற்கு சென்னை உயர்நீதிமன்றம் இசைவளித்துள்ளது. சென்னை உயர் நீதிமன்ற ஆயம் ஒன்றை மதுரையில்

நிறுவுவதற்காக மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், உலகநேரி கிராமத்தில் 33.00.0 ஹெக்டேர் நிலம் சென்னை உயர்நீதிமன்றப் பதிவாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் 30.12.5 ஹெக்டேர் நிலம், நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் கையகப்படுத்தப்பட்டது. எஞ்சியுள்ள 2.87.5 ஹெக்டேர் நிலம் புறம்போக்கு நிலமாகும். மதுரை உயர்நீதிமன்ற ஆயத்திற்கான கட்டடப் பணிக்கு ரூபாய் 56.45 கோடி செலவு அனுமதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

மதுரையில் உயர்நீதிமன்ற நிரந்தர ஆயம் அமைக்க, மைய அரசிற்கு மாநில அரசு தனது இசைவினைத் தெரிவித்துள்ளது. மதுரையில் உலகநேரியில் புதிய நீதிமன்ற வளாகத்திற்கான கட்டுமானப் பணிக்கான அடிக்கல் 13-4-2000-ல் நிறுவப்பட்டது.

மதுரையில் உயர்நீதிமன்ற ஆயம் அமைக்கப்பட்ட பின் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் பெருமளவில் குறைக்கப்படும்.

## XII. முடிவுரை

இந்த அரசு மக்களுக்கான சமூக நல அரசாக இருப்பதால், வழக்காடுவோர் பெரிய நபராகவோ அல்லது சிறியவராகவோ, ஏழையாகவோ இருப்பினும் பேதம் பாராது ஒன்றாகக் கருதி நியாயமான, சமமான, விரைவான தீர்ப்பினை சட்டப்படி வழக்காடும் மக்களுக்கு கிடைக்கச் செய்வதில் நீதித் துறைக்கு தொடர்ந்து முழு ஒத்துழைப்புக் கொடுப்பதில் உறுதியாக உள்ளது. "தாமதமான தீர்ப்பு மறுக்கப்பட்ட தீர்ப்பு" என்ற கோட்பாட்டினை மனதில் நிறுத்தி வழக்குகளின் தீர்வில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க தேவையான எல்லா வசதிகளையும் நீதிமன்றங்களுக்கு அளிப்பதில் கடந்த காலத்தைப்போலவே இந்த அரசு சுணக்கம் காட்டாமல், நிலைமைக்கேற்ப உறுதியான நடவடிக்கையினை எடுக்கும்.



சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்களின் பட்டியல்

| தொடர் எண் | நீதிமன்றங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி பதவித் தரம் | துணை நீதிபதி பதவித் தரம் | மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித் தரம் |
|---|---|---|---|---|
| 1. | மாநகர் உரிமையியல் நீதிமன்றம் | 16 (a) | 18 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றம் | 1 | 8 | 8 |
| 3. | பெருநகர் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் | 3 (a)(a) | 6 | 17 |
| 4. | தொழிலாளர் நீதிமன்றங்கள் | 3 | - | - |
| 5. | தொழில் நடுவர் மன்றம் | 1 | - | - |
| 6. | இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின்கீழ் தனி நீதிமன்றம் | 1 | - | - |
| 7. | என்.டி.பி.எஸ். சட்டத்தின் கீழ் தனி நீதிமன்றம் | 1 | - | - |
| 8. | அரசு சொத்து தலைமை பொறுப்பாட்சியர் | 1 | - | 1 |
| 9. | தலைமை பதிப்பாசிரியர், தமிழ் சட்ட வெளியீடு, உயர்நீதிமன்றம், சென்னை | 1 | - | - |
| 10. | இணைப் பதிப்பாசிரியர், தமிழ் சட்ட வெளியீடு, உயர்நீதிமன்றம், சென்னை | - | 1 | - |
| 11. | உதவி பதிப்பாசிரியர், தமிழ் சட்ட வெளியீடு, உயர்நீதிமன்றம், சென்னை | - | - | 2 |
| | **மொத்தம் ..** | **28** | **33** | **29** |

[2000 ஏப்ரல் 27

@ VIII ஆம் கூடுதல் நீதிபதி தனியார் கல்லூரிகள் மேல்முறையீட்டு நடுவர் மன்றமாகவும், IX, X ஆம் கூடுதல் நீதிபதிகள் மத்திய புலனாய்வுத் துறை வழக்குகளுக்கான தனி நீதிபதிகளாகவும் செயல்படுகிறார்கள். தமிழ்நாடு வைப்பீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) நலன் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் விசாரிக்க ஒரு தனி நீதிபதி செயல்படுகிறார்.

@@ பொருளாதாரக் குற்றங்களின் விசாரணைக்கான பெருநகர கூடுதல் தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இரண்டும் இதில் அடங்கும்.



2000 ஏப்ரல் 27]

## மாவட்டங்களில் இயங்கிவரும் நீதிமன்றங்கள் மற்றும் நடுவர் தீர்ப்பாயங்கள்

| மாவட்டங்கள் | மாவட்ட நீதிபதி பதவித்தாரம் | | | | | | | மாவட்ட உரிமையியல் நீதிபதி பதவித்தாரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மாவட்ட நீதிபதிகள் | கூடுதல் நீதிபதி-தலைமைக் குற்றவியல் நடுவர் | தொழிலாளர் நீதிமன்றங்கள் | சிவில் உரிமைகள் பாதுகாப்புச் சட்ட வழக்குகள் | இன்றியமையாப் பொருட்கள் சட்ட வழக்குகள் | மத்திய புலனாய்வுத் துறை வழக்குகள் | துணை நீதிபதிகள் | மாவட்ட உரிமையியல் நீதிபதிகள் | மாவட்ட உரிமையியல் - குற்றவியல் நடுவர்கள் | குற்றவியல் நடுவர்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1. செங்கல்பட்டு | 1 | 1 | - | - | - | - | 7 | 9 | 5 | 13 |
| 2. கடலூர் | 1 | 1 | 1 | - | - | - | 5 | 6 | 3 | 8 |
| 3. கோயம்புத்தூர் | 2 | 1 | 1 | - | 1 | 1 | 6 | 7 | 4 | 14 |
| 4. தருமபுரி | 2 | 2 | - | - | - | - | 4* | 3 | 6 | 5 |
| 5. திண்டுக்கல் | 1 | 1 | - | - | - | - | 3 | 5 | 2 | 5 |
| 6. விருதுநகர் | 1 | 1 | - | - | - | - | 3 | 3 | 3 | 6 |
| 7. கன்னியாகுமரி | 1 | 1 | - | - | - | - | 4 | 9 | 1 | 7 |

[2000 ஏப்ரல் 27

| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8. | கரூர் | 1 | 1 | - | - | - | - | 2 | 3 | - | 4 |
| 9. | மதுரை | 2 | 1 | 1 | 1 | 1 | 1 | 8** | 7 | 3 | 11 |
| 10. | நாகப்பட்டினம் | 1 | 1 | - | - | - | - | 4 | 8 | - | 8 |
| 11. | நீலகிரி | 1 | - | - | - | - | - | 1 | 1 | 3 | 1 |
| 12. | பெரம்பலூர் | 1 | 1 | - | - | - | - | 1 | 4 | - | 3 |
| 13. | வேலூர் | 1 | 1 | 1 | - | - | - | 4 | 8 | 4 | 14 |
| 14. | சிவகங்கை | 1 | 1 | - | - | - | - | 2 | 4 | 2 | 3 |
| 15. | ஈரோடு | 2 | 1 | - | - | - | - | 5 | 9 | 2 | 9 |
| 16. | புதுக்கோட்டை | 1 | 1 | - | - | 1 | - | 1 | 3 | 2 | 3 |
| 17. | இராமநாதபுரம் | 1 | 1 | - | - | - | - | 1 | 3 | 3 | 3 |
| 18. | சேலம் | 3 | 1 | 1 | - | 1 | - | 6 | 10 | 2 | 16 |
| 19. | தூத்துக்குடி | 1 | 1 | - | - | - | - | 2 | 5 | 2 | 5 |
| 20. | தஞ்சாவூர் | 1 | 1 | - | 1 | 1 | - | 5*** | 7 | 2 | 6 |
| 21. | திருச்சிராப்பள்ளி | 1 | 1 | 1 | 1 | - | - | 4 | 7 | 1 | 9 |
| 22. | திருநெல்வேலி | 2 | 1 | 1 | 1 | - | - | 5 | 10 | 4 | 9 |
| 23. | திருவண்ணாமலை | 1 | 1 | - | - | - | - | 3 | 7 | 3 | 5 |
| 24. | விழுப்புரம் | 1 | 1 | - | - | - | - | 5 | 12 | 2 | 9 |
| | **மொத்தம்** | **31** | **24** | **7** | **4** | **5** | **2** | **91** | **150** | **59** | **176** |

தருமபுரி - துணை நீதிபதி (குற்றவியல்) பதவித் தரத்தில் கூடுதல் தனி நீதிபதி

• மதுரை - துணை நீதிபதி (குற்றவியல்) பதவித் தரத்தில் ஒரு கூடுதல் தனி நீதிபதி

* தஞ்சாவூர் - துணை நீதிபதி (குற்றவியல்) பதவித்தரத்தில் ஒரு கூடுதல் தலைமைக் குற்றவியல் நீதிபதி



2000 ஏப்ரல் 27]

**குடும்ப நீதிமன்றங்கள்**

சென்னையில் மூன்று நீதிமன்றங்களும், மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் தலா ஒரு நீதிமன்றமும் ஆக ஆறு நீதிமன்றங்களும் உள்ளன. குடும்ப நீதிமன்ற நீதிபதிகள் 5 ஆண்டுகாலத்திற்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுகின்றனர். அவர்கள், முறையான நீதித்துறைப் பணிகளிலிருந்து வாராதவர்கள்.

மதுரையில் மாவட்ட நீதிபதியின் தலைமையின்கீழ் இனக் கலவரங்கள் குறித்த வழக்குகளை விசாரிப்பதற்கென ஓர் அமர்வு நீதிமன்றம் இயங்குகிறது.

[2000 ஏப்ரல் 27

தமிழ்நாடு மாநிலச் சட்டப் பணிகள் அதிகாரமன்றத்தால் 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையைக் காட்டும் விவர அறிக்கை

| தொ. எண் | விவரம் | 1998-ல் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 1999-ல் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சட்ட உதவி அளித்து நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளில் முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 6017 | 7837 |
| 2. | நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படாமல் இணக்கப் பணி மையங்கள், ஓய்வூதிய இணக்கப் பணி மையங்கள், ஆலோசனை மையங்கள் ஆகியவற்றின் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 1007 | 1031 |
| 3. | சட்ட ஆலோசனைக்குப் பிறகு முடிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 887 | 1110 |
| 4. | மக்கள் நீதிமன்றங்கள்: | | |
| | மோட்டார் வாகன விபத்து உரிமை கோரிக்கை வழக்குகள் | 11308 | 9598 |
| | சிவில் வழக்குகள் | 3034 | 3380 |
| | குடும்பத் தகராறுகள் | 226 | 48 |
| | குற்ற வழக்குகள் | 329 | 233 |
| | மொத்தம் | **22808** | **23267** |



2000 ஏப்ரல் 27]


**தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங்களில் நிலுவையாக உள்ள வழக்குகளின் எண்ணிக்கை பற்றிய விவர அறிக்கை**

| தொ. எண் | நீதிமன்றம் | சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாநிலத்திலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் நிலுவையாக இருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை | | | | | 1999 ஆம் ஆண்டில் சென்னை உயர் நீதிமன்றத்திலும், சார்நிலை நீதிமன்றங்களிலும் தொடரப்பட்ட வழக்குகள் முடிவு அடைந்த வழக்குகள் மற்றும் நிலுவையில் உள்ள வழக்குகள் பற்றிய விவரங்கள். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 | இந்த ஆண்டு தொடரப்பட்ட வழக்குகள் | ஒரு வகைக்கு உரிய வழக்குகளின் மொத்த எண்ணிக்கை | இந்த ஆண்டு முடிக்கப்பட்டவை | ஆண்டு இறுதியில் நிலுவையாக இருந்தவை |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| அ. உரிமையியல் வழக்குகள். | | | | | | | | | | |
| 1. | உயர் நீதிமன்றம், சென்னை | 2,94,800 | 2,75,175 | 2,89,473 | 3,04,286 | 3,12,652 | 1,04,195 | 4,16,847 | 95,889 | 3,20,958 |
| 2. | மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை | 65,223 | 68,960 | 77,551 | 78,175 | 79,303 | 52,592 | 1,31,895 | 57,237 | 74,658 |
| 3. | சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை. | 13,480 | 15,490 | 16,391 | 16,417 | 35,306 | 41,460 | 76,766 | 36,094 | 40,672 |
| 4. | மாவட்ட நீதிமன்றங்கள் | 14,327 | 13,904 | 18,760 | 20,893 | 23,281 | 57,899 | 81,180 | 58,019 | 23,161 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5. | மாவட்டக் கூடுதல் நீதிபதி நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | — | — | 4,734 | 4,761 | 7,095 | 16,024 | 23,119 | 14,760 | 8,359 |
| 6. | சார்பு நீதிமன்றங்கள் | 1,62,648 | 1,54,513 | 1,37,040 | 1,68,391 | 1,70,455 | 1,82,469 | 3,52,924 | 1,73,112 | 1,79,812 |
| 7. | மாவட்ட முன்சீப் நீதிமன்றங்கள் | 3,16,624 | 3,42,115 | 2,67,857 | 2,61,613 | 2,91,070 | 2,86,363 | 5,77,433 | 2,22,768 | 3,54,665 |
| | **மொத்தம்(அ)** | **8,67,102** | **8,70,157** | **8,11,806** | **8,60,536** | **9,19,162** | **7,41,002** | **16,60,164** | **6,57,879** | **10,02,285** |
| ஆ. | குற்றவியல் வழக்குகள்: | | | | | | | | | |
| 1. | உயர் நீதிமன்றம், சென்னை | 16,014 | 22,206 | 21,177 | 22,333 | 28,717 | 39,356 | 68,073 | 33,649 | 34,424 |
| 2. | செஷன்ஸ் நீதிமன்றங்கள் | 6,969 | 5,889 | 5,502 | 5,692 | 3,965 | 7,784 | 11,749 | 6,231 | 5,518 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 46,332 | 48,073 | 44,737 | 48,457 | 53,802 | 1,80,369 | 2,34,171 | 1,84,264 | 49,907 |
| 4. | மாவட்டக் கூடுதல் நீதிபதி நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2,06,309 | 2,05,447 | 1,55,152 | 1,69,251 | 1,72,679 | 5,17,771 | 6,90,450 | 5,14,900 | 1,75,550 |
| | **மொத்தம்(ஆ)** | **2,75,624** | **2,81,615** | **2,26,568** | **2,45,733** | **2,59,163** | **7,45,280** | **10,04,443** | **7,39,044** | **2,65,399** |
| | **பெரு மொத்தம்(அ)+(ஆ)** | **11,42,726** | **11,51,772** | **10.38,374** | **11,06,269** | **11,78,325** | **14,86,282** | **26,64,607** | **13,96,923** | **12,67,684** |




1997, 1998 மற்றும் 1999 ஆண்டுகளில் முடிக்கப்பட்ட வழக்குகள்




| | ஜனவரி | பிப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1997 | 7364 | 7864 | 8112 | 7442 | 6475 | 6459 | 7486 | 7352 | 7839 | 7875 | 8173 | 8383 |
| 1998 | 7394 | 6805 | 8119 | 7230 | 6836 | 7183 | 8062 | 7710 | 7798 | 8070 | 8413 | 8398 |
| 1999 | 8064 | 8233 | 9361 | 8973 | 7619 | 8413 | 8876 | 8998 | 7880 | 8177 | 8958 | 8913 |

குற்ற வழக்கு தொடர்வு இயக்ககம், சென்னை - 3.

[2000 ஏப்ரல் 27




| | ஜனவரி | பிப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1997 | 14553 | 16820 | 14712 | 12297 | 11672 | 13394 | 17101 | 15323 | 17714 | 17453 | 18392 | 18349 |
| 1998 | 12382 | 10912 | 17706 | 13069 | 12034 | 13353 | 17615 | 15988 | 15417 | 16935 | 18916 | 15853 |
| 1999 | 16989 | 21738 | 21594 | 19060 | 16298 | 19604 | 24881 | 21632 | 16862 | 19050 | 20327 | 20017 |



2000 ஏப்ரல் 27]

# இணைப்பு-II

***(354 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)***

## கோரிக்கை எண் 14—சிறைகள்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2000-2001

## தமிழ்நாட்டில் சிறைகள் நிருவாகம்

### I. முன்னுரை:

குற்றவியல் நீதி நிருவாக முறையில், சிறை நிருவாகம் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. சிறைவாசிகளை நடத்தும் முறையில் அக்கறையும் மனிதாபிமான அணுகுமுறையும் இருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அரசு நன்கு அறிந்துள்ளது. தற்போதைய சிறைவாசிகளின் நலன் மற்றும் சிறைவாசிகளின் மறுவாழ்வுத் திட்டத்தின் தேவைக்கேற்ப சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்து மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன. தனிமனிதன் தேவைகள், சமூக கடப்பாடுகள், குடும்பப் பொறுப்புகள் ஆகியவற்றை நிறைவேற்ற சிறைவாசிகளுக்கு உதவிசெய்யும்பொருட்டு, வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பல்வேறு வாழ்க்கைத் தொழில் வகுப்புகள், யோகாசனம் மற்றும் தியான வகுப்புகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

2. சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ், அடிப்படை வசதிகள், பாதுகாப்புத் தேவைகள், சிறைவாசிகளின் வாழ்க்கை நிலைமைகள் ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் அரசு கணிசமான அளவுக்கு முதலீடு செய்துள்ளது.

### II. நிறுவன அமைப்பு முறை:

3. சிறைத் துறையின் அமைப்பு முறை பற்றிய விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. சிறை நிருவாகத்தின்கீழ், மொத்தம் 134 சிறைகள் உள்ளன. இவற்றில் 9 மத்திய சிறைகள், 114 கிளைச் சிறைகள், 6 தனி கிளைச் சிறைகள், மகளிர் தனிச் சிறைகள் இரண்டு, திறந்த வெளிச் சிறை ஒன்று, சேலம் மத்திய சிறையுடன் இணைந்த பண்ணைச் சிறை ஒன்று, புதுக்கோட்டையிலுள்ள இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி ஒன்று ஆகியவை அடங்கும். இவை சிறைத் துறைத் தலைவரால் நிருவகிக்கப்படுகின்றன. தற்போது முதுநிலை இந்தியக் காவல் பணி அதிகாரி ஒருவர் இப்பதவியை வகிக்கிறார். இவருக்கு உதவியாக

[2000 ஏப்ரல் 27

தலைமைஅலுவலகத்தில் சிறைத் துறைத் துணைத் தலைவர் (தலைமையிடம்) ஒருவரும், சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை ஆகிய நான்கு இடங்களில் நான்கு சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களும் உள்ளனர். மத்திய சிறைகள் சிறைக் கண்காணிப்பாளர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்குகின்றன. சிறைத் துறையில் உள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை 4,196 ஆகும். அனைத்து சிறைகளிலும் அடைக்கத்தக்க அனுமதிக்கப்பட்ட சிறைவாசிகளின் எண்ணிக்கை 18,335 ஆகும்.

**புழலில் உள்ள மத்திய சிறை :**

4. புழலிலுள்ள மத்திய சிறை, முதற்கட்டமாக, சென்னை மத்திய சிறையில் இருந்து மாற்றப்பட்ட 200 சிறைவாசிகளுடன் 26-01-2000 ஆம் நாளிலிருந்து செயல்படத் தொடங்கியது. பாதுகாப்பு மற்றும் ஏனைய வசதிகளை மேம்படுத்துவதற்குரிய சில கூடுதல் பணிகள் முடிக்கப்பட்டதும் முழுவசதிகளுடன் கூடிய சிறையாக இது விரைவில் செயல்படும்.

**மகளிருக்கான தனிச் சிறை :**

5. பெண் சிறைவாசிகளை மட்டும் அடைத்து வைப்பதற்காக வேலூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் மகளிருக்கான இரு தனிச் சிறைகள் அமைந்துள்ளன. இவ்விரு சிறைகளும் முற்றிலும் மகளிர்களாலேயே நிருவகிக்கப்படுகின்றன.

**தனி கிளைச் சிறை, பூவிருந்தவல்லி :**

6. கோயம்புத்தூர் தொடர் வெடிகுண்டு வெடிப்பு வழக்கு தவிர, ஏனைய பல்வேறு வெடிகுண்டு வெடிப்பு வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை விசாரணை செய்வதற்குரிய சிறப்பு நீதிமன்றம் ஒன்று, 02-07-1999 ஆம் நாளிலிருந்து பூவிருந்தவல்லி கிளைச் சிறை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

**திறந்த வெளிச் சிறை :**

7. 100 சிறைவாசிகளை அடைத்து வைக்கும் இடவசதியுள்ள திறந்தவெளிச் சிறை ஒன்று கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூரில் செயல்படுகிறது. இச்சிறையில், வேளாண்மை அதிகாரி ஒருவரின் உதவியுடன் நவீன வேளாண்மை முறைகளில் சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.



2000 ஏப்ரல் 27]

**புதுக்கோட்டை இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி :**

8. இப்பள்ளியில் 16—23 வயதுத் தொகுதியைச் சேர்ந்த வளரிளம் பருவத்திலுள்ள இளங் குற்றவாளிகள் தங்க வைக்கப்படுகின்றனர். இங்குள்ளவர்கள் இங்கிருந்து விடுதலை பெற்றுச் சென்ற பின்னர் அவர்களுக்கு உதவியாக இருக்கும் வகையில் பல தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**நன்னடத்தைப் பிரிவு :**

9. நன்னடத்தைப் பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் தலைமையில் நன்னடத்தை அலுவலர்களையும், வட்டார நன்னடத்தை அலுவலர்களையும் கொண்டுள்ளது. நன்னடத்தை அலுவலர்கள், குற்றவாளிகளின் நடத்தை, அவர்களின் வாழ்க்கை நிலைமைகள் ஆகியவை தொடர்பாக விசாரிக்கின்றனர். சிறைவாசிகள் விடுதலையான பிறகு, அவர்களின் புதுவாழ்விற்காக, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சிறைவாசிகள் நிதியுதவி பெறுவதற்கு நன்னடத்தை அலுவலர்கள் ஏற்பாடு செய்கின்றனர்.

**III. சிறை நிருவாகத்தை மேம்படுத்துதல், மத்திய சிறைகளில் அதிக பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு வகைசெய்தல் மற்றும் புதிய திட்டங்கள் :**

10. சிறைச்சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசின் நிதியுதவி மற்றும் மாநில அரசின் இணை மானியம் ஆகியவற்றைக் கொண்டு சிறைகளை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. உயர் அலை தகவல் தொடர்புச் சாதனங்கள், சிறைவாசிகளைக் கண்காணிக்க வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்தத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (CCTV), மின்கம்பி வேலி அமைத்தல், விளக்கு வசதிகள், வெடிகுண்டு கண்டுபிடிப்புச் சாதனங்கள், வாக்கி-டாக்கிகள் (Walkie-Talkies), நவீன ஆயுதங்கள் ஆகியவற்றை வழங்குதல், பதிவு செய்யும் வசதிகள் செய்து கொடுத்தல் முதலியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள மூன்று மத்திய சிறைகளில் கூடுதல் பாதுகாப்பு வேலிகள் கட்டப்பட்டுள்ளன. சிறைகளின் பாதுகாப்பைக் கவனிப்பதற்காக, சிறைப் பணியாளர்களுக்கு ரூபாய் 22.27 இலட்சம் மதிப்புள்ள நவீன சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிறைகளைப் பழுதுபார்த்தல்,

[2000 ஏப்ரல் 27

புதுப்பித்தல், சிறைவாசிகளுக்கு மருத்துவ வசதிகள், சுகாதார வசதிகள் செய்து கொடுத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுவதற்காக பத்தாவது நிதிக் குழு ரூ.747 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தது. இத்தொகை முழுமையாக செலவிடப்பட்டுவிட்டது.

சிறைகளில் தண்ணீர் வழங்குதல், சுகாதார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ரூ.2585 இலட்சம் அளவிற்கான திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு கோரி பதினோராவது நிதிக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

11. புழல் மத்திய சிறைக்கு, 2000-2001 ஆம் ஆண்டுக்கான பகுதி-II திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது:-

| | திட்டத்தின் பெயர் | மொத்த செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கணினி மற்றும் துணைப் பாகங்களுக்கு வகை செய்தல் | 5.00 |
| 2. | பைனாகுலர்கள் வாங்குதல் | 0.50 |
| 3. | உயர் அலைச சாதனங்கள் வழங்குதல் | 1.50 |
| 4. | மீ உயர் அலைச் சாதனங்கள் வழங்குதல் | 2.00 |
| 5. | வெடிகுண்டு கண்டுபிடிப்புச் சாதனம் அதாவது உள்ளிப்பாகச் சோதனை செய்வதற்கு மெட்டல் டிடெக்டர், கூடித வெடிகுண்டு கண்டுபிடிக்கும் கருவி, எக்ஸ்டென்ஷன் கண்ணாடி, சுழல் விளக்கு (Search light) ஆகியவற்றை வாங்குதல் | 2.20 |
| | மொத்தம் | 11.20 |



2000 ஏப்ரல் 27]

## IV. மனித வள மேம்பாடு

### பயிற்சிகள்

#### சிறைக் காவலர்கள் பயிற்சி மையம், வேலூர்

12. இரண்டாம் நிலைக் காவலர்களுக்கு உயர்பயிற்சி ஒழுங்குமுறை, நிருவாகம் மற்றும் சீர்திருத்த முறைகள் குறித்த பயிற்சிகள் இங்கு பயிற்றுவிக்கப்படுகின்றன. சிறைவாசிகளின் மனித உரிமைகள் குறித்த பயிற்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நவீன ஆயுதங்களை கையாளும் முறை குறித்தும் கற்றுத் தரப்படுகிறது. இதனைத் தவிர தலைமைக் காவலர்கள் மற்றும் முதல் நிலைக் காவலர்களுக்கு புத்தாக்கம் நினைவு கூற பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

#### குற்றவாளிகள் சீர்திருத்த மண்டல பயிற்சி நிலையம், வேலூர்

13. இந்த நிறுவனம் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு தென் மாநில சிறை அதிகாரிகளுக்கு குற்றங்களைத் தடுத்தல் மற்றும் குற்றவாளிகளை நடத்துதல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கிறது. இந்தப் பயிற்சியின் பாடத் திட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் சீர்திருத்த முறைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த நிறுவனத்தின் செலவினத்தை நான்கு தென் மாநிலங்களுக்கும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன.

#### செயல் ஊக்கமளித்தல்-பதக்கங்கள்

14. தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைப் பணிப் பதக்கம் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள், தேர்ந்தெடுக்கப்பட்ட 10 சிறைப் பணியாளர்களுக்கு அவர்களின் தலைசிறந்த பணிக்காக வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம் ஒவ்வொரு வருடமும், பொங்கல் திருநாளன்று தேர்ந்தெடுக்கப்பட்ட 20 காவலர்களுக்கு அவர்களின் கடமை உணர்வு மற்றும் தியாக உணர்வுக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படுகிறது.

சென்னை மத்திய சிறையில் 17-11-1999 அன்று ஏற்பட்ட கலவரத்தின்போது, உயிரோடு கொளுத்தப்பட்டு இறந்த துணை சிறை அலுவலர் திரு. எஸ். ஜெயக்குமாருக்கு முதலமைச்சரின் வீரதீரப் பதக்கம் மரணத்திற்குப் பின்னர் வழங்கப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 27

15. மைய அரசு, சீர்திருத்தப் பணிகளில் உள்ள பணியாளர்களின் சிறப்பு மிக்க சேவையை அறிந்து பாராட்டும் வகையில் கீழ்க்கண்ட பதக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளது:

**1. நற்பணிப் பதக்கம்:**

(அ) சிறப்பான சீர்திருத்தப் பணிக்கான குடியரசுத் தலைவரின் பதக்கம்.

(ஆ) பாராட்டுக்குரிய சீர்திருத்தப் பணிக்கான பதக்கம்.

**2. வீரதீரப் பதக்கம்:**

(அ) சீர்திருத்தப் பணிகளில் வீரதீரச் செயல்களுக்கான குடியரசுத் தலைவரின் பதக்கம்.

(ஆ) வீரதீரச் செயல்களுக்கான சீர்திருத்தப் பணி பதக்கம்.

இந்தப் பதக்கங்கள் ஆண்டுதோறும் இரண்டு முறை, குடியரசு தினம் மற்றும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படுகிறது.

சீர்திருத்தப் பணிக்களுக்கான குடியரசுத் தலைவரின் வீரதீரப் பதக்கம் பெறுபவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 100/-படியாகவும், சீர்திருத்தப் பணிக்கான பதக்கம் பெறுவோருக்கு மாதந்தோறும் ரூபாய் 60/- படியாகவும் அனைத்து நிலை பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது.

**கருணைத்தொகை**

16. பணியில் இருக்கும்பொழுது இறந்துவிடும் பணியாளர்களின் குடும்பங்களுக்கும், நிரந்தரமாக ஏலாமை உற்றவர்கள் மற்றும் செயல் திறனற்ற சிறைத்துறை பணியாளர்கள் ஆகியோருக்கும் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. சிறைப் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு பணியாளர் இறுதியாக பெற்ற ஊதியம், அவர் பணி மூப்பில் ஓய்வு பெறும் நாள் வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னர் தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

17. அரசு அண்மைக் காலத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து சிறைப் பணியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு கருணைத் தொகையினை அளித்துள்ளது:



2000 ஏப்ரல் 27]

| | |
|---|---|
| சென்னை மத்திய சிறையில் 17-11-1999 அன்று நடைபெற்ற கலவரத்தில் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்ட திரு. எஸ். ஜெயக்குமார், துணைச் சிறை அலுவலர். | ரூ. 5 இலட்சம். |
| மேற்படி கலவரத்தில் இறந்த திரு. ஆர். நடராஜன், முதல் நிலைக் காவலர். | ரூ. 3 இலட்சம். |
| கோயம்புத்தூர் சரக சிறைத் துணைத் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற குண்டுவெடிப்பின்போது இறந்த திரு. எஸ். பூபால், இரண்டாம் நிலைக் காவலர். | ரூ. 2 இலட்சம். |
| மதுரை மத்திய சிறையில் ஏற்பட்ட கலவரத்தின்போது இறந்த திரு. எல். வீரபத்திரன், இரண்டாம் நிலைக் காவலர். | ரூ. 2 இலட்சம். |

18. தற்காலிக பெண் வழித்துணைக் காவலரின் தினசரி ஊதியம் ரூ.40/-லிருந்து 60/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இரண்டாம் நிலைக் காவலர் முதல் துணைச் சிறை அலுவலர் வரை வழங்கப்படும் இடர்படி ரூ.40/- லிருந்து ரூ.50/- ஆகவும், சிறை அலுவலர் முதல் கண்காணிப்பாளர் வரை வழங்கப்படும் இடர்படி ரூ.50/- லிருந்து ரூ.60/- ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

19. சேலம், வேலூர் மற்றும் கடலூர் மத்திய சிறைகளில் பணியாற்றும் சிறை பணியாளர்களுக்காக 100 குடியிருப்புகள் கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மத்திய சிறைகளில் இரவு நேர பணியில் இருக்கும் காவலர்களுக்கு இரவு நேர உணவு மற்றும் காலை தேநீர் வழங்கப்படுகிறது.

**V. சிறைவாசிகளின் நலத் திட்டங்கள்**

20. நல்ல சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட சிறந்த உணவு குறிப்பிட்டுள்ள தரத்தில் அளிக்கப்படுகிறது. தகுயான நேர்வில் சிறைவாசிகளுக்கு, பால், ரொட்டி, முட்டை ஆகியன மருத்துவ அலுவலரின் பரிந்துரையின்பேரில் வழங்கப்படுகிறது. படுக்கையும், உடுக்கையும் அளிக்கப்படுகிறது. சிறைவாசிகளுக்குத் தேவையான மருத்துவ

வசதிகள் செய்து தரப்படுகின்றன. கண் சிகிச்சை முகாம்கள் நடத்தப்படுகின்றன. பற்களுக்கான சிகிச்சையும் அளிக்கப்படுகிறது. தொழுநோயால் பாதிக்கப்பட்ட சிறைவாசிகள் தனிப்பட்ட சிகிச்சையின் மூலம் கவனித்துக் கொள்ளப்படுகின்றனர். மன நோயால் பாதிக்கப்பட்ட சிறைவாசிகளுக்குத் தேவையான சிகிச்சை அளிக்கப்படுகிறது. அனைத்து மத்திய சிறைகளுக்கும் நோயாளர் ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும், எடுத்துச் செல்லக்கூடிய நுண்கதிர் கருவிகள் மற்றும் ஈ.சி.ஜி. சாதனங்களுடன் கூடிய மருத்துவப் பரிசோதனை நிலையம் உள்ளது. துப்புரவு வசதிகள் நல்ல முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

21. சிறைவாசிகளுக்கு நேர்காணல் வசதிகள் உள்ளன. செய்தித் தாள்கள் மற்றும் குறித்த கால வெளியீடுகள் வழங்கப்படுகின்றன. கல்வி மற்றும் இலக்கியத் தரம் வாய்ந்த நூல்கள் சிறைவாசிகள் உபயோகத்திற்காக சிறை நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

சிறைவாசிகள் கைப்பந்து, கபடி மற்றும் வலைப்பந்து ஆகிய விளையாட்டுகள் விளையாட வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

22. சிறைவாசிகளுக்குக் கல்வி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. கல்வி மற்றும் பயிற்சிக்கான பொருட்கள் சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகின்றன. தகுதி வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. சிறைவாசிகளை படிப்பறிவு மற்றும் எழுத்தறிவு திறன் கொண்டவர்களாய் மாற்றம் செய்வதற்காக முதியோர் கல்வித் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சில சிறைவாசிகள் முதுகலை பட்டப் படிப்பு மற்றும் தொழில் சார்ந்த படிப்புகளை அஞ்சல் வழிக் கல்வி மூலம் கற்று வருகின்றனர். இந்தக் கல்விக்கான செலவினை அரசே ஏற்றுக் கொள்கிறது. இந்திரா காந்தி திறந்தவெளிப் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் மத்திய சிறையில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகளைத் தொடங்கியுள்ளது.

1. உணவு மற்றும் ஊட்டச்சத்துச் சான்றிதழ் படிப்பு;

2. இளங்கலைத் தொடக்கப் பயிற்சி

3. கணினி பயற்சியில் சான்றிதழ் படிப்பு

4. முதுகலை கணினி பயிற்சிப் படிப்பு



## மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கல்வித் திட்டம்

23. மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் சிறைவாசிகளுக்கு மட்டும் அறிமுகப்படுத்தியுள்ள இளங்கலை மற்றும் முதுகலை பட்டப் படிப்பிற்கான முன்னோடி கல்வித் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். நாட்டில் முதல்முறையாக தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் வருகின்ற கல்வியாண்டு முதல் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டங்கள் இக்கல்வி முறைத் திட்டத்திற்கும் ஏற்கப்பட்டு ஆண்டு முழுவதும் சிறைவாசிகள் இக்கல்வித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். பல்வேறு சிறைகளிலிருந்து 124 சிறைவாசிகள் இத்திட்டத்தின் கீழ் இளங்கலை மற்றும் முதுகலை படிப்பில் சேர்வதற்காகப் பதிவு செய்துள்ளனர்.

## சிறைச்சாலைத் தொழில்கள்

24. சிறைகளில் சிறைவாசிகளுக்கு வேலையளிக்கும் முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கான பல்வேறு வாழ்க்கைத் தொழில்கள் மற்றும் தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன. தச்சுத் தொழில், கருமார் தொழில், செங்கல் தயாரிப்புத் தொழில், குழாய் இணைப்பு வேலை, மின்கம்பி இணைப்புத் தொழில், நெசவு, புத்தகம் கட்டுதல், தையல் வேலை, சாயம் தோய்த்தல், கூர்நாடா தயாரித்தல், மெழுகு, ஷூக்கள், பினைல், பேட்புகள், சோப்பு, கம்பளி, துட்டை பைல்கள், கூடாரங்கள் ஆகியவற்றைத் தயாரித்தல் போன்ற தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகின்றது. சிறிய அளவிலான வாழ்க்கைத் தொழில்களில் சிறைவாசிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சி முடிந்தவுடன், பயிற்சி முடித்ததற்கான சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இவற்றுடன் ஸ்கிரீன் பிரிண்டிங், சாதாரண இரசாயனப் பொருட்கள் தயாரித்தல், உணவு செய்முறைப்படுத்தல், பிளாஸ்டிக் பூக்கள் செய்தல் போன்ற தொழில்களிலும் பயிற்சியளிக்கப்படுகின்றது.

25. கோயம்புத்தூர் மத்திய சிறையில், நெசவுப் பிரிவு, சாயம் தோய்க்கும் பிரிவு ஆகியவற்றுடன் துணி ஆலை ஒன்றும் சிறைவாசிகளால் நடத்தப்படுகிறது.

26. சிறைத் துறை, "பணித் துறையாக" அறிவிக்கப்பட்டுள்ளது. சிறைத் துறையில் எழுதுபொருட்கள் தயாரிக்கப்பட்டு அரசின் ஏனைய துறைகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. சிறைத் தொழிற்பிரிவுகளின்

ஆண்டு சராசரி உற்பத்தி மதிப்பு சுமார் ரூபாய் நான்கு கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

27. அனைத்து மத்திய சிறைகள், புதுக்கோட்டையிலுள்ள இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி, வேலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள மகளிருக்கான தனிச் சிறைச்சாலைகள் ஆகியவற்றில் சிறைவாசிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயலில் உள்ளது.

28. சிறைவாசிகளின் ஊதிய நிர்ணயக் குழு ஏற்படுத்துவதை எதிர்நோக்கி, இடைக்கால நடவடிக்கையாக சிறைவாசிகளுக்கான ஊதிய விகிதத்தை அரசு பின்வருமாறு திருத்தியமைத்துள்ளது :—

| | | |
|---|---|---|
| பணித்திறன் பெற்றவர் | - | ரூ. 10 |
| ஓரளவு பணித்திறன் பெற்றவர் | - | ரூ. 6 |
| பணித்திறன் பெறாதவர் | - | ரூ. 3 |

29. சிறைவாசிகளின் ஊதிய வீதத்தை திருத்தியமைத்து பரிந்துரை செய்வதற்காக, உள்துறையின் 02-03-2000 ஆம் நாளிட்ட 238 ஆம் எண் அரசாணையில் ஊதிய நிர்ணயக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

30. சிறைவாசிகள் தங்கள் குறைகளை, புகார்களாக தெரிவிக்கும் பொருட்டு சிறைகளில் முத்திரையிட்ட மூடி வைக்கப்பட்ட புகார் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளில் இந்தப் புகார் பெட்டிகள் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதியால் திறக்கப்பட்டு இத்தகைய புகார்கள் தகுந்த நடவடிக்கைகளுக்காக அரசுக்கும் சிறைத் துறைத் தலைவருக்கும் அனுப்பப்படுகின்றன.

தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக் குழு சிறைவாசிகளுக்கு இலவச சட்ட உதவிகளைச் செய்து வருகிறது.

**பேரறிஞர் அண்ணா பிறந்த தினத்தை முன்னிட்டு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு**

31. மனித நேயத்தின் பேரிலும், நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டும் 110 ஆயுள் சிறைவாசிகளுக்கு தண்டனைக் காலக் குறைப்பு வழங்கப்பட்டு 15-09-1999 அன்று விடுதலை செய்யப்பட்டனர்.



**அலுவல் மற்றும் அலுவல் சாரா சிறைப் பார்வையாளர்கள்**

32. நல்ல நிருவாகத்தினை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு அலுவல் சார்ந்த பார்வையாளர்கள் அவ்வப்போது சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்கள் சிறைக்கு வருகை தந்து சிறைவாசிகளுக்கான அடிப்படைத் தேவைகள் மற்றும் சிறைவாசிகளை ஒழுங்காக நடத்துதல் ஆகியவற்றினை உறுதி செய்து கொள்கின்றனர்.

33. பொது மக்களில், முக்கியமாக சமூகப் பணியாளர்கள், உள நோய் மருத்துவர்கள், உள நூல் வல்லுநர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் அலுவல் சாரா பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் சிறைகளை ஒழுங்காக நிருவகிப்பது, விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளைச் செயல்படுத்துவது ஆகியன குறித்து அறிவதற்காக சிறைகளுக்கு வருகை தருகின்றனர். அலுவல் சாரா சிறைப் பார்வையாளர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் ஆகும்.

**யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சிகள்**

34. சிறைவாசிகளின் உடல்நலம் மற்றும் மனநலத்தினை மேம்படுத்துவதற்காக, யோகாசனம் மற்றும் தியானப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. 'விபாசனத்' தியானப் பயிற்சி வகுப்புகள், இராஜயோகப் பயிற்சி மற்றும் போதைப் பொருள் அடிமைப் பழக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கான பயிற்சி வகுப்புகள் ஆகியவை நடத்தப்படுகின்றன. இப்பயிற்சி வகுப்புகளை சிறைவாசிகள் சிறப்புற வரவேற்கின்றனர். மக்கள் தொடர்பு சாதனங்கள் இதனைப் பெரிதும் பாராட்டுகின்றன. இவற்றின் பலன்கள் ஊக்கம் அளிப்பவையாக உள்ளன.

**தமிழ்நாடு விடுதலைபெற்ற சிறைவாசிகள் உதவிச் சங்கம்**

35. விடுதலையாகும் சிறைவாசிகள் புதுவாழ்வைத் தொடங்க உதவுவதே இச்சங்கத்தின் நோக்கமாகும். சிறு தொழில்கள் தொடங்குவதற்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் இச்சங்கம் உதவியளிக்கிறது. இச்சங்கம், சட்ட உதவி அளிப்பதுடன், தேவைப்படுபவர்கள் முதியோர் உதவித்தொகை பெறுவதற்கும், ஆடைகள், மூக்குக்கண்ணாடிகள் முதலியவற்றைப் பெறுவதற்கும் உதவுகிறது.

**மனித உரிமைகள்**

36. சிறந்த வாழ்க்கைத்தரத்தை உறுதி செய்வதற்காக, அனைத்துச் சிறைகளிலும் அடிப்படை வசதிகளும், அவசியமாகத் தேவைப்படும் பொருட்களும் வழங்கப்படுகின்றன. சிறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களிடையே, அதிக விழிப்புணர்வை உருவாக்க திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புதுதில்லி, என்.ஐ.சி.எப்.எஸ். (N.I.C.F.S) / பி.பி.ஆர். அண்டு டி. (B.P.R.& D.) நிறுவனத்தால் நடத்தப்படும் மனித உரிமைகள் குறித்த பயிற்சி வகுப்புகளுக்கு, சிறை அதிகாரிகள் அனுப்பப்படுகின்றனர்.

சிறைவாசிகளின் அடிப்படைத் தேவைகள், நியாயமான குறைகள் ஆகியவற்றைக் கேட்டு செயல்பட வேண்டுமென்பதை அவர்கள் போதிய அளவிற்கு உணர வேண்டுமென்பதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

37. தேசிய மனித உரிமைகள் ஆணையம் மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாண்புமிகு நீதியரசர்களும், தமிழ்நாட்டிலுள்ள சிறைகளுக்குச் சென்று பார்வையிட்டு, சிறைகளின் நிருவாகத்தைப் பாராட்டியுள்ளனர்.

மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

38. சிறைகளில் போதிய இடவசதியின்றி சிறைவாசிகள் அதிக அளவில் வைக்கப்பட்டிருப்பது குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் அவ்வப்போது கவலை தெரிவித்துள்ளது. நிவாரண நடவடிக்கையாக, மத்திய சிறையின் நெருக்கத்தைக் குறைக்கும் பொருட்டும், மாவட்ட அளவில் அதிக வசதிகள் செய்துகொடுக்கும் பொருட்டும் சிறைவாசிகளை வேறு சிறைகளுக்கு அழைத்துச்செல்வதைத் தவிர்க்கும் பொருட்டும் கிளைச் சிறைகளை, மாவட்ட சிறைகளாக நிலை உயர்த்த அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.

**முகாம் நீதிமன்றங்கள்**

39. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் முகாம் நீதிமன்றங்கள் அமைப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. சிறைவாசிகள் காவலில் வைக்கப்படும் கால அளவை எப்பொழுதெல்லாம் நீட்டிக்க வேண்டிய அவசியம் எழுகிறதோ



அப்பொழுதெல்லாம் நீட்டிக்க இது உதவும். இத்திட்டத்தின்படி சிறைவாசிகளுக்கு விரைந்து நீதி வழங்கப்படும். சிறைவாசிகளை வெளியே அழைத்துச் செல்லும்பொழுது முறைகேடுகள் நடப்பதையும்/ சிறைவாசிகள் தப்பிச் செல்வதையும் இது தடுக்கும். புழல் மத்திய சிறையில் முகாம் நீதிமன்றம் அமைப்பதற்கான செயற்குறிப்பு குறித்து சிறைவாசிகளின் காவல் கால அளவை நீட்டிப்பதற்காக வாரம் ஒரு முறை புழல் மத்திய சிறைக்குச் செல்லுமாறு அருகிலுள்ள மாஜிஸ்டிரேட்டுக்குத் தக்க அறிவுரைகள் அளிக்கும்படி சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். உயர்நீதிமன்றத்தின் கருத்துக்களை கேட்டபின்னர் இப்பொருள் குறித்து மேற்கொண்டும் பரிசீலிக்கப்படும்.

**சிறைவாசிகள் நீதிமன்றங்கள்**

40. தேசிய மனித உரிமைகள் ஆணையம் பரிந்துரைத்ததைத் தொடர்ந்து சிறைவாசிகள் நீதிமன்றங்கள் நடத்துவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. அனைத்து மத்திய சிறைகளிலும் 'சிறைவாசிகள் நீதிமன்றம்' அமைப்பது குறித்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இம்முறையின் மூலம் சிறிய மற்றும் அற்ப வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்களும் தங்கள் குற்றங்களை ஒப்புக்கொள்ளத் தயாராகவுள்ளவர்களுமான சிறைவாசிகளுக்கு தண்டனை வழங்கி அல்லது விடுதலை செய்து உத்தரவிடவும், தேவைப்படும்பொழுது, சிறைவாசிகளின் தண்டனைக் கால அளவை நீட்டிக்கவும், சம்பந்தப்பட்ட மாஜிஸ்டிரேட்டு சிறையை பார்வையிடலாம். சென்னை உயர்நீதிமன்றத்தின் கருத்துரையைப் பெறுவதன்பேரில், இதுகுறித்து மேற்கொண்டும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**வீடியோ மூலம் விசாரணை செய்தல்**

41. சிறைவாசிகளின் விசாரணையை விரைவுபடுத்தும் பொருட்டு, வெளிநாடுகளில் நடைமுறையில் இருப்பதுபோன்று, வீடியோ மூலம் விசாரணை செய்யும முறை பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி, சிறைகளும், நீதிமன்றங்களும் இணைக்கப்பட்டு; சிறைவாசிகள் அழைத்து வரப்படாமலேயே, நவீன சாதனங்கள் வாயிலாக விசாரணை நடத்தப்படலாம். இந்த ஏற்பாடானது சிறைவாசிகளை அழைத்துச் செல்வதற்கு மேற்கொள்ளப்படும் செலவையும் பாதுகாப்பு இடர்பாடுகளையும் குறைக்கும். தேவையான சட்ட நடைமுறைகளை ஆராய்ந்தபின்னர் இந்த ஏற்பாடு குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

[2000 ஏப்ரல் 27

## VI. தகவல் தொழில் நுட்பவியல் - கணினிமயமாக்குதல்

42. மத்திய சிறைச்சாலைகள் அனைத்திற்கும் கணினி வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. சிறைச்சாலை ஆவணங்களைக் கணினி மயமாக்குவது முன்னுரிமைப் பணிகளில் ஒன்றாகும். தேசிய தகவல் மையத்தின் (N.I.C.) உதவியுடன் சிறைவாசிகளின் தகவல் அமைப்பு முறை குறித்த மென்பொருள் தயாரிக்கப்பட்டு, ஏறத்தாழ 20,000 சிறைவாசிகளின் பதிவேடுகள் இதுவரை கணினிமயமாக்கப்பட்டுள்ளன. சிறையில் சிறைவாசிகளின் சேர்க்கை விவரமும் விசாரணை சிறைவாசிகள், தண்டனை சிறைவாசிகள், தடுப்புக்காவல் சிறைவாசிகள் ஆகியோர் பற்றிய விவரமும் அவற்றைப் பயன்படுத்தும் முறைபற்றிய விவரமும் இம்மென்பொருளில் அடங்குகின்றன. அம்மென்பொருள் மூலம் பின்வரும் அறிக்கைகளைத் தயாரிக்கலாம்:

(1) காவல் சிறைவாசிகள், விசாரணை சிறைவாசிகள், தண்டனை சிறைவாசிகள், தடுப்புக் காவல் சிறைவாசிகள் ஆகியோருக்கான சேர்க்கைப் படிவம்.

(2) நீதிமன்றங்களின் மூலம் ஆஜர்படுத்தப்படுவதற்காக சிறைவாசிகளின் தேதிவாரியான, நீதிமன்றவாரியான பட்டியல்.

(3) 60/90 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகைத் தாக்கல் செய்யப்படாத சிறைவாசிகளின் பட்டியல்.

(4) சிறைவாசிகளின் பெயர் விவரப்பட்டியல்.

சிறை நடவடிக்கைகளில் மேலும் பல்வேறு இனங்களை உள்ளடக்கி, சிறை ஆவணங்களைக் கணினிமயமாக்க இயலும் வகையில் பின்வரும் மென்பொருளைத் தயாரிக்கும் பணியை தேசிய தகவல் மையம் (N.I.C.) மேற்கொண்டுள்ளது:

(1) தண்டனைக் காலத்தைக் குறைத்தல், நோ[illegible]னல், சிறைவாசியின் முழுமையான விவரமடங்கிய சீட்டு, விடுதலை நாளைக் கணக்கிடுதல்.

(2) சிறைவாசிகளை மறைமுகமாகக் கண்காணித்தல், மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறைவாசிகளை கவனிப்பதற்கான நேர்வுகள், சிறைவாசிகள் வைத்துள்ள ரொக்கம், சிறையின் தொகுதி, அறை பராமரிப்பு, காவல் நிலை, உடல்நலம் பற்றிய விவரம்.



2000 ஏப்ரல் 27]

மேற்சொன்ன மென்பொருளை உருவாக்குவதன் மூலம் சிறைத் துறைக்குப் பயனளிக்கும் வகையில் சிறையில் பதிவேடுகளுள் பெரும்பான்மையானவை கணினிமயமாக்கப்படும். சென்னையிலுள்ள சிறைத் துறைத் தலைவர் அலுவலகத்திலிருந்தே இம்மாநிலத்திலுள்ள அனைத்துச் சிறைச்சாலைகளிலுள்ள சிறைவாசிகளைப் பற்றிய விவரங்களை, ஒரே இடத்திலிருந்து எளிதாகப் பெறுவதை உறுதிசெய்வது பதிவேடுகளை கணினிமயமாக்குவதன் முக்கிய நோக்கமாகும். இயற்கைச் சீற்றங்கள் அல்லது ஏனைய காரணங்களினால், குறிப்பிட்ட ஒரு சிறைச்சாலையிலுள்ள பதிவேடுகள் முழுமையாக தொலைந்துபோவது இனிமேல் இருக்காது.


## VII. முடிவுரை

43. சிறைகளின் நிருவாகம் குறித்து அரசு மிக முன்னுரிமை அளித்துள்ளது. சிறைவாசிகளின் அனைத்து வகை நல நடவடிக்கைகளையும், அடிப்படை இன்றியமையா வசதிகளையும் மேம்படுத்துவதற்காக ஒருமித்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிறைகளின் பாதுகாப்பையும் நலனையும் வலுப்படுத்தும்போது, சிறைச்சாலைகளில் நீதிமன்றங்களை நடத்துதல், முகாம் நீதிமன்றங்களை ஏற்படுத்துதல், வீடியோ மூலம் சிறைவாசிகளை விசாரணை செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளக் கருதுவதன் மூலம், சிறைகளில் நிருவாக மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. சிறைவாசிகளுக்கு விரைவாக நீதி வழங்குவதற்கு இது புரட்சிகரமான நடவடிக்கையாக அமையும். மாண்புமிகு நீதிபதி திரு. மு.மு. இஸ்மாயில் அவர்கள் சிறைச்சாலைகள் சீர்திருத்தம் குறித்து அளித்த பெரும்பான்மையான பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மத்திய சிறையில் 17-11-1999 அன்று நடைபெற்ற சம்பவங்கள் குறித்து தற்பொழுது விசாரணை நடத்திவரும் மாண்புமிகு நீதிபதி திரு. ஐ. டேவிட் கிறிஸ்டியன் ஆணையத்திடம் சிறைகளை மேம்படுத்துவதற்கும், சிறை நிருவாகத்தை மேம்படுத்துவதற்குமான கருத்துரைகளைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. சிறைத் துறையை சீரமைக்கவும், சீர்திருத்தவும் சீர்திருத்த நிருவாகக் கோட்பாடுகளை சிறைத்துறை மனதிற்கொண்டு செயல்படுவதில் தமிழ்நாடு அரசு மிகவும் ஆர்வமுடன் உள்ளது.

[2000 ஏப்ரல் 27

(இனம் II-ஐக் காண்க)

**சிறைத் துறையின் நிருவாக அமைப்பு**




1. சிறைத் துறைத் தலைவர்.
2. சிறைத் துறைத் துணைத் தலைவர், (தலைமையிடம்).
3. சிறைத் துறைத் துணைத் தலைவர், சென்னை சரகம்.
4. சிறைத் துறைத் துணைத் தலைவர், திருச்சிராப்பள்ளி சரகம்.
5. சிறைத் துறைத் துணைத் தலைவர் கோயம்புத்தூர் சரகம்.
6. சிறைத் துறைத் துணைத் தலைவர், மதுரை சரகம்.
7. தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளர்.
8. மத்திய சிறை, சென்னை, வேலூர், மகளிர் தனிச்சிறை, வேலூர், கிளைச் சிறைகள், காஞ்சிபுரம்/திருவள்ளூர்/வேலூர்/திருவண்ணாமலை மாவட்டங்கள், ஆண்கள் பிற்காப்பு இல்லம், புழல், சிறைக் காவலர் பயிற்சிப் பள்ளி, வேலூர்.



2000 ஏப்ரல் 27]

9. தலைமையிட அலுவலகம்.
10. மத்திய சிறை, திருச்சிராப்பள்ளி, கடலூர்/தனிக் கிளைச் சிறை/மகளிர் தனிச்சிறை, திருச்சிராப்பள்ளி/கிளைச் சிறைகள், கரூர்/பெரம்பலூர்/புதுக்கோட்டை/கடலூர்/விழுப்புரம்/தஞ்சாவூர்/நாகப்பட்டினம்/திருவாரூர்/திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள், இளம் குற்றவாளிகள் சீர்திருத்தப்பள்ளி, புதுக்கோட்டை.
11. மத்திய சிறை, கோயம்புத்தூர், சேலம்/திறந்த வெளிச்சிறை, சிங்காநல்லூர்/தனிக் கிளைச் சிறைகள், கோயம்புத்தூர், சேலம்/கிளைச் சிறைகள், கோயம்புத்தூர்/சேலம்/ஈரோடு/நாமக்கல்/தருமபுரி/ நீலகிரி மாவட்டங்கள்
12. மத்திய சிறை, மதுரை, பாளையங்கோட்டை / தனிக் கிளைச் சிறை, கொக்கிரக்குளம் / கிளைச் சிறைகள், மதுரை /இராமநாதபுரம் / விருதுநகர் / தேனி / சிவகங்கை /திருநெல்வேலி / திண்டுக்கல் / தூத்துக்குடி / கன்னியாகுமரி மாவட்டங்கள்.
13. வட்டார நன்னடத்தை அலுவலர்கள்.
14. நிருவாகம்.
15. கணக்குகள் மற்றும் தணிக்கை.
16. சிறைத் துறைத் தலைவரின் நேர்முக உதவியாளர்கள்.
17. கணக்கு அலுவலர்.
18. நன்னடத்தை அலுவலர்கள்.

[2000 ஏப்ரல் 27

# இணைப்பு - III

*(355 ஆம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண். 37 - சுற்றுச்சூழல்**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001**

## 1.0 முகவுரை

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவைகள் உணவு, உடை மற்றும் உறைவிடம் ஆகியவைகளாகும். இதேபோன்று, தூய்மையான காற்றும், பாதுகாக்கப்பட்ட குடிநீரும் அத்தியாவசியத் தேவைகள் என்பதை கருத்திற்கொண்டு சமுதாயம் பயன்பெறும் வகையில் இயற்கை வளங்களையும், சமூக பொருளாதாரத்தை மேம்படுத்தும் தொழில் வளங்களையும் பாதுகாத்து, தொழில் வளர்ச்சியால் ஏற்படும் மாசினைக் கட்டுப்படுத்தும் சீரிய நோக்கோடு இந்த அரசின் சுற்றுசூழல் துறை செயல்பட்டு வருகிறது.

காட்டுவளமே ஒரு நாட்டுவளமும் ஆகும். மழையால் வனவளம் பெருகும்; வனவளத்தால் மழைவளம் பெருகும். எனவே, வனவளம் பெருக்கி, அதன் மூலம் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் நற்பணிகளை நிறைவேற்றுவதில் முனைந்து நிற்கிறது இந்த அரசு. தொழிற்சாலைகள், பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பு போன்றவை. அதேபோல் சில தொழிற்சாலைகள் மூலம் வெளிப்படும் கழிவுகள் மக்கள் நலத்தைக் குலைப்பவையாக உள்ளன. இதை நன்குணர்ந்தே

1. நாட்டின் முக்கிய நதிகளான காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய நதிகளைப் பாதுகாக்க உரிய திட்டங்களை வகுத்து, தேசிய நதிநீர் பாதுகாப்பு இயக்ககத்தின் மூலம் செயல்படுத்துவது;
2. சென்னைப் பெருநகரின் முக்கிய நீர் வழிகளான கூவம், அடையாறு மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றில் ஏற்படும் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரச் சீர்கேட்டினை அகற்றித் தூய்மைப்படுத்துவது;
3. தமிழ்நாட்டில் உள்ள சென்னைப் பெருநகரப் பகுதி மற்றும் ஏனைய ஐந்து மாநகராட்சிகளில் பசுமைப்பகுதியை ஏற்படுத்துவதன் மூலம், காற்று மற்றும் நீரில் கலக்கும் மாசினைக் கட்டுப்படுத்துதல், ஏனைய நகராட்சிகளில் தொழிற்சாலைகளின் பங்கேற்போடு மரக்கன்றுகள் நட்டு பசுமைப்பகுதியை விரிவாக்குவது;



2000 ஏப்ரல் 27]

4. வாகனங்களால் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுக்கட்டுப்பாடு குறித்து மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவது;
5. பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து, தொழிற்சாலைகளில் மாசு கண்காணிப்பு மேற்கொள்வது;
6. தமிழகத்தில் நீண்ட கடற்கரைப் பகுதிகளில் பல்வேறு வகையான மேலாண்மை நடவடிக்கைகளைச் செயல்படுத்துவது; மற்றும்
7. சுற்றுச்சூழல் நிலவரங்களைக் கருத்தில் கொண்டு, தமிழகத்தில் இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் இரசாயனக் கிடங்குகளை அமைக்க ஏற்ற இடங்களைத் தெரிவு செய்யும் வகையில், மண்டல வரைபடம் (Zoning Atlas) தயாரித்து அளிப்பது

போன்ற பல திட்டங்களை நிறைவேற்றுவதிலும், நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் இந்த அரசு மிகக் கவனத்தோடு முனைந்து நிற்கிறது.

## 1.1 தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்

தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம் 1982 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. மாநிலத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து, கீழ்க்காணும் சட்டங்கள் மற்றும் விதிகள் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன:

- *1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் (1978 மற்றும் 1988 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது).*
- *1977 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச்சட்டம் (1991 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது).*
- *1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் . கட்டுப்பாடு) சட்டம் (1987 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது).*
- *1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்.*
- *1989 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுப் பொருட்கள் (நிர்வகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகள்.*
- *1989 ஆம் ஆண்டு அபாயகரமான இரசாயனப் பொருட்களைத் தயாரித்தல், சேகரித்தல் மற்றும் இறக்குமதி விதிகள்.*
- *1991 ஆம் ஆண்டு பொது மக்கள் காப்புறுதிச் சட்டம்.*

[2000 ஏப்ரல் 27

* *1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க் கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.*

தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு சென்னை, மதுரை, வேலூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இணைத் தலைமைச் சுற்றுச்சூழல் நலப் பொறியாளர்கள் தலைமையில் 5 மண்டல அலுவலகங்களுடன், சென்னை, தாம்பரம், அம்பத்தூர், வேலூர், கடலூர், ஓசூர், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, வாணியம்பாடி, திருநெல்வேலி, தூத்துக்குடி, கரூர் மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் நலப் பொறியாளர்கள் தலைமையில் 18 மாவட்ட அலுவலகங்களுடனும், உதக மண்டலம் மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் உதவி சுற்றுப்புறச் சூழல் நலப் பொறியாளர்கள் தலைமையில் 2 மாவட்ட அலுவலகங்களுடனும் இயங்கி வருகிறது.

சென்னை, சேலம், மதுரை ஆகிய 3 இடங்களில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், அம்பத்தூர், வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஓசூர் ஆகிய 9 இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும், மணலி மற்றும் தூத்துக்குடி ஆகிய 2 இடங்களில் நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஏற்படுத்தியுள்ளது.

### 1.2 மற்ற துறைகளுடன் கலந்தாலோசனை

நகர் மற்றும் ஊரத் திட்ட இயக்குநரகம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், பொதுப்பணித் துறை (நிலத்தடி நீர் மற்றும் பாசனம்), தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், போக்குவரத்துத் துறை, இந்திய வானிலை ஆராய்ச்சித் துறை, மீன் வளத் துறை, மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம், தேசிய சுற்றுச்சூழல் நலப் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனம், தேசிய வளர்ச்சிக் குழு மற்றும் பிற முன்னணி கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தனது நடைமுறைப் பணிகளுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக ஒருங்கிணைந்த செயலினை மேற்கொள்வதற்காக கலந்தாலோசனை செய்கிறது. மேலும், தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் திறமைகளை மேம்படுத்த அமெரிக்கச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு, அமெரிக்க-ஆசிய சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்புக் குழுமம், ஜெர்மானியத் தொழில்



2000 ஏப்ரல் 27]

நுட்பக் கூட்டமைப்பு, உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி ஆகியவற்றுடன் தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம் கலந்தாலோசிக்கிறது.

நகர திடக் கழிவு மேலாண்மை குறித்து, நகராட்சிகளுக்கு வாரியம் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவியினை அளித்து, திடக் கழிவு மேலாண்மைக்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது.

### 2.0 இசைவாணை வழங்கும் நடைமுறை

தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், அவற்றை இயக்குவதற்கும், நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின் கீழ், இரண்டு கட்டமாக இசைவாணைகளை வாரியம் வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை கட்டுமானப் பணிகளை தொடங்குவதற்கு முன், அது அமையவிருக்கும் இடத்தின் தகுதியைப் பொறுத்து வழங்கப்படுகிறது. வாரியத்தில் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களை தொழிற்சலை அமைத்த பின்னர் உற்பத்தியைத் தொடங்கும் முன் தொழிற்சாலையை இயக்குவதற்கு வாரியம் இசைவாணையை வழங்குகிறது. நீர் மற்றும் காற்றுச் சட்டங்களில் நிர்ணயிக்கப்பட்ட வரையறைகளை இசைவாணை வழங்கும் பொழுது வாரியம் குறிப்பிடுகின்றது.

1994 ஆம் ஆண்டு முதல் 31-12-1999 வரை, நீர்ச் சட்டத்தின் கீழ் 2,221 இசைவாணைகள் மற்றும் காற்றுச் சட்டத்தின் கீழ் 2,154 இசைவாணைகள், தொழிற்சாலைகள் அமைப்பதற்கு வாரியம் வழங்கியுள்ளது. 1982 ஆம் ஆண்டு முதல் 31-12-1999 வரை நீர்ச் சட்டத்தின் கீழ் 17,242 இசைவாணைகள் மற்றும் காற்றுச் சட்டத்தின் கீழ் 14,542 இசைவாணைகள், தொழிற்சாலைகள் இயங்குவதற்கு வாரியம் மூலம் வழங்கப்பட்டிருக்கிறது.

### 2.1 புகார்கள் மற்றும் சட்ட நடவடிக்கை

மாவட்ட அளவில் நன்கு அமைக்கப்பட்டுள்ள கள அமைப்பின் உதவியுடன் குறைபாடுகள் பெறப்பெற்ற 24 மணி நேரத்திற்குள் அதனை விசாரணை செய்யும் நிலையில் வாரியம் வேகமாகச் செயல்பட்டு வருகிறது. 1985 ஆம் ஆண்டிலிருந்து 31-12-1999 வரை மாசுக்கட்டுப்பாடு சட்டங்களை மீறிய தொழிற்சாலைகள் மீது 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 321 வழக்குகளையும், 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் 134 வழக்குகளையும் வாரியம் தொடுத்துள்ளது. 1993 ஆம் ஆண்டிலிருந்து

31-12-1999 வரை வாரியத்தின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத 13,948 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர விளக்கம் கேட்கப்பட்டுள்ளதோடு 2,838 தொழிற்சாலைகளுக்கு அவற்றை மூடுவதற்கான ஆணையும் வாரியம் மூலம் அளிக்கப்பட்டுள்ளது.

### 3.0 காற்றின் தன்மையினைக் கண்காணித்தல்

நகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக் கழிவுகளினாலும் மற்றும் நாளொரு மேனி பொழுதொருவண்ணம் அதிகரித்து வரும் வண்டி வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினாலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை மிகவும் பாதிப்படைகிறது. 1981 ஆம் ஆண்டு காற்றுச் சட்டத்தின்படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தினை மாநிலம் முழுவதிலும் செயல்படுத்த முடிகிறது.

### 3.1 சுற்றுப்புறக் காற்றின் தன்மையைக் கண்காணித்தல்

தேசிய சுற்றுப்புறக் காற்றின் தன்மையைக் கண்காணிக்கும் திட்டத்தின் கீழ் சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய பெருநகரங்களில் தலா மூன்று இடங்களிலும், சேலத்தில் ஓர் இடத்திலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மையை வாரியம் ஆழ்ந்து கண்காணிக்கிறது.

சென்னை மாநகரத்தில், சென்னை சுற்றுப்புறக் காற்று தரக் கண்காணிப்புத் திட்டத்தின் மூலம் அமைத்து சுற்றுப்புறக் காற்றின் தன்மையினைக் குடியிருப்பு, வர்த்தகம் மற்றும் நுட்பப் பகுதிகளில் கண்காணிக்கிறது. இந்தக் கண்காணிப்பில் கண்டறியப்படும் காற்றுத்தர அளவுகள் ஒவ்வொரு வாரமும் நாளிதழில் வெளியிடப்படுகின்றன. திருச்சிராப்பள்ளியில், நான்கு இடங்களில், சுற்றுப்புறக் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்களை வாரியம் அமைத்துள்ளது.

கடலூரில் அமைந்துள்ள 'சிப்காட்' தொழிற்பேட்டை மற்றும் தூத்துக்குடியில் அமைந்துள்ள தொழில் வளாகம் ஆகிய இடங்களில், தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள காற்று மாசுக்கட்டுப்பாடு சாதனங்களின் செயல்முறையினை மதிப்பீடு செய்வதற்காகவும் மற்றும் நிர்ணயித்த தரத்தினை விட மாசு அதிகமாகும்போது காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்தவும், 1996-97 ஆம் ஆண்டு தொடர் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்களை 80 இலட்சம் ரூபாய் செலவில் இவ்வாரியம் அமைத்துள்ளது. உலக வங்கியின் உதவியுடனான



"தொழிற்சாலை மாசு கட்டுப்பாடு திட்டத்தின்கீழ்" சென்னையில் ராயபுரம் மற்றும் கத்திவாக்கம் ஆகிய இடங்களில் இரண்டு தொடர் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்களை வாரியம் 1999-2000 ஆம் ஆண்டில் அமைத்துள்ளது.

மேலும் ராணிப்பேட்டையில் ஒரு தொடர் காற்று தரக் கண்காணிப்பு நிலையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. நகர்ப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுப்புறக் காற்றுத் தன்மை கண்காணிப்பு நிலயங்களின் மூலம் கண்டறியப்படும் மாசு, பெரும்பாலும் வாகனப் போக்குவரத்தினால்தான் உண்டாகிறது. இதனைக் கட்டுப்படுத்த போக்குவரத்து மற்றும் காவல் துறையினர் மாநிலப் போக்குவரத்துக் கழகங்கள், எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் பொது வாகன ஓட்டுநர்கள் ஆகியோருக்கு மாசினை குறைக்கும் வழிமுறைகளை வாரியம் அறிவுறுத்துவதோடு, விழிப்புணர்வு முகாமினையும் அவ்வப்போது நடத்தி அதற்கான நடவடிக்கைகளும் அவ்வப்போது எடுத்து வருகிறது.

முக்கியத் தொழிற் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தொடர் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்களில் காற்று மாசின் அளவுகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன. மாசின் அளவு, நிர்ணயிக்கப்பட்ட அளவினை விட காற்றில் அதிகரிக்கும்பொழுது, மாசின் தன்மையினைப் பொறுத்து அதனை ஏற்படுத்தும் தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அவை நிறுவியுள்ள காற்று மாசு தடுப்புச் சாதனங்களைச் சீரிய முறையில் இயக்க உத்திரவிடப்படுகிறது. உத்திரவினை மீறும் தொழிற்சாலைகள் மீது சட்டப்படியான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

### 3.2 வாகனப் புகைக் கண்காணிப்பு

நகர்ப் பெருக்கம் மற்றும் தொழிற் வளர்ச்சியின் காரணமாகவும், வாகனப் போக்குவரத்து அதிகரித்ததன் காரணமாகவும், வாயுக் கழிவுகளும், நச்சுப் புகையின் அளவும் அதிகமாகி, சுற்றுப்புறத் தூய்மை கெடும் வாய்ப்புகளும் இதனால் அதிகரித்துள்ளன. வாகனப் புகை கண்காணிப்பினை 1-5-1992 முதல் சரக்குப் போக்குவரத்து வாகனங்களுக்காகச் சென்னை மாநகரில் மூன்று இடங்களில் வாரியம் செயல்படுத்தி வருகின்றது.

வாகனப்புகை கண்காணிப்பு நிலையங்களை மாவட்ட அளவிலும் வாரியம் ஏற்படுத்தியுள்ளது. திண்டுக்கல், பழனி, உதகமண்டலம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களில் வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்கள்

ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1998-99 ஆம் ஆண்டில் 42,184 வாகனங்களை ஆய்வு செய்ததில் 1,473 வாகனங்கள் அரசு நிர்ணயித்துள்ள தர அளவினைப் பூர்த்தி செய்யவில்லை. 1999-2000 ஆம் ஆண்டில் 31-12-1999 வரை 29,892 வாகனங்களை ஆய்வு செய்ததில் 496 வாகனங்கள் அரசு நிர்ணயித்துள்ள தர அளவினைப் பூர்த்தி செய்யவில்லை.

### 4.0 நீரின் தன்மையினைக் கண்காணித்தல்

"நீரின்றி அமையாது உலகு" என்கிறோம் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த தண்ணீரின் தரம் கெடலாகாது என்பதில் தமிழக அரசு மிகவும் அக்கறை கொண்டுள்ளது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத மற்றும் பகுதியாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீராலும், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத வடிகால் கழிவுநீராலும் மாநிலத்தின் பெரிய நதிகள் மாசுபடுகின்றன. மாசுபடுத்துவோர், அவ்வாறான நிலையைத் தவிர்க்க சரியான வழிமுறைகளை மேற்கொள்ள அறிவுறுத்தும் பொருட்டு நீர் மாதிரிகளை வாரியம் தொடர்ச்சியாகச் சேகரித்துக் கண்காணித்து வருகிறது.

பெருமபாலான உள்ளாட்சி நிறுவனங்கள் நிதிப் பற்றாக்குறையினால் சுத்திகரிப்பு நிலையங்களை அமைப்பதில்லை. தொழிற்சாலைகளைப் பொறுத்த அளவில் வெளியேற்றப்படும் கழிவுநீர், வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடையும் வகையில் சுத்திகரிப்பு நிலையங்களைத் தனியாகவோ அல்லது பொதுவான முறையிலோ அமைப்பது அந்தந்தத் தொழிற்சாலைகளின் பொறுப்பாகும்.

### 4.1 நீரின் தரக் கண்காணிப்புத் திட்டங்கள்

உலகச் சுற்றுப்புறச் சூழல் கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் மேட்டூர், பள்ளிப்பாளையம், முசிறி ஆகிய இடங்களில் காவிரி ஆற்றுப்படுகைகளிலும் முசிறியில் நிலத்தடி நீரிலும், நீரின் தரத்தினை வாரியம் கவனத்தோடு கண்காணிக்கிறது.

இதுபோல் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் காவிரி (16 இடங்கள்) தாமிரபரணி (7 இடங்கள்), பாலாறு (1 இடம்) மற்றும் வைகை (1 இடம்) ஆகிய ஆறுகள் மற்றும் உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு ஆகிய இடங்களில் உள்ள மூன்று முக்கிய ஏரிகளில் உள்ள நீரின் தரத்தையும் இவ்வாரியம் கண்காணித்து வருகிறது.



### 4.2 சென்னை மாநகர நீர்வழிகள் சுத்திகரிப்புத் திட்டம்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் செய்முறைக் கழிவு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வெளியேறும் நகரக் கழிவு ஆகியவற்றால், நீர்வழிகளில் ஏற்படும் மாசினைத் தடுக்கும் வகையில் சென்னை நகர நீர்வழிகளின் நீரின் தரத்தினை வாரியம் கண்காணிக்கிறது. வாரியம், ஒரு விரிவான ஆய்வினை நடத்தி மார்ச் 1994 வரையிலும் சென்னை மாநகர நீர் வழிகளில் 766 கழிவுநீர் வெளியேற்றும் அமைப்புகளைக் கண்டறிந்தது. இந்த வெளியேற்றும் அமைப்புகளில் சில அடைக்கப்பட்டதனால் அவை 708 ஆகவும், தொழிற்சாலைக் கழிவு நீர் வெளியேற்றும் அமைப்புகள் 65 லிருந்து 29 ஆகவும் குறைந்துள்ளன. நீர் வழிகளில் நீர் மாதிரிகளைச் சேகரித்து வாரியம் ஆய்வு செய்து வருகின்றது. இம்மாதிரிகள் செப்டம்பர், 1991 லிருந்து குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சேகரிக்கப்பட்டு வருகின்றன. வாரியம், உரிய அரசு நிறுவனங்களுடனும் ஒருங்கிணைந்து, அந்நிறுவனங்களும் இதன் தொடர்பாகத் தத்தமது பணியினை மேற்கொள்ள வலியுறுத்தி வருகின்றது.

### 5.0 தொழிற்சாலை மாசு கண்காணிப்பு

தமிழ்நாட்டில் அங்கிங்கெனாதபடி எங்கும் மிக வேகமாகப் பெருகிவரும் தொழிற்சாலைகளின் காரணமாக - தொழிற்சாலை மூலம் ஏற்படும் மாசினைத் தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. மாசினை உண்டாக்கும் எல்லாத் தொழிற்சாலைகளும் வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடைவதற்காகக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், காற்று மாசு தடுப்புச் சாதனங்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை அமைப்புகள் ஆகியவற்றை அவசியம் அமைக்க வேண்டும்.

### 5.1 17 வகையான அதிக மாசு உண்டாக்கும் தொழிற்சாலைகள்

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளைக் கண்காணிக்கும் பொருட்டு, ஒரு சிறப்புக் கண்காணிப்பு பிரிவைக் கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் நலப் பொறியாளரின் கீழ், வாரியம் அமைத்துள்ளது. அதிக அளவில் மாசுபடுத்தும் 17 வகையான தொழில்களின் கீழ், 201 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அவை தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

### 5.2 பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் மாசு உண்டாக்கும் சிறு தொழிற்சாலைகள் மாசினைக் கட்டுப்படுத்தும் வகையில், பல்வேறு இடங்களில் கூட்டாகப் பொதுக்

[2000 ஏப்ரல் 27

கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் தீவிர திட்டத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முக்கிய பங்கினை வகிக்கிறது. இத்தகைய பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் திட்டத்திற்கு தமிழகம் இந்தியாவிலேயே ஒரு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் நம்முடைய தமிழ்நாட்டில் தான் அதிக அளவில் ஏற்படுத்தப்பட்டு சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன.

இதுவரை திட்டமிடப்பட்டு பல்வேறு நிலைகளில் உள்ள 51 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களைப் பற்றிய விவரம் வருமாறு:

(1) தோல் பதனிடும் தொழிற்சாலை - 23 திட்டங்கள்

(2) சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் - 26 திட்டங்கள்

(3) உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் - 1 திட்டம்

(4) மருத்துவமனைகள் - 1 திட்டம்
(64 மருத்துவமனைகளுக்காக)

மேற்கண்ட திட்டங்களில் 620 தோல் தொழிற்சாலைகளுக்காக, பம்மல், சிட்கோ (இராணிப்பேட்டை), வாணியம்பாடி, உதயேந்திரம், இராணிப்பேட்டை, ஆம்பூர் (துத்திப்பேட்டை), ஆம்பூர் (மளிகைத் தோப்பு), பேரணாம்பட்டு (பகாணப்பள்ளி), மேல்விசாரம், திண்டுக்கல், மாதவரம் மற்றும் திருச்சிராப்பள்ளி (இராம்ஜி நகர்) ஆகிய 12 இடங்களில் பொதுக கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

திருப்பூர் பகுதியில் வீரபாண்டி, சின்னக்கரை, காசிபாளையம், குன்னங்கல்பாளையம், ஆண்டிப்பாளையம், மன்னரை, அங்கேரி பாளையம் மற்றும் மாணிக்கப்புரம்புதூர் ஆகிய எட்டு இடங்களிலும், கரூர் பகுதியில கருப்பம்பாளையம், அமராவதி நகர், திருமாநிலையூர் மற்றும் சுக்காலியூர் ஆகிய நான்கு இடங்களிலும், அய்யம் பேட்டையிலும், சேலம் பகுதியிலும் சேர்ந்து 547 சலவை மற்றும் சாயப்பட்டறை தொழிற்சாலைகளுக்காக 14 பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

சேலத்தில் 64 மருத்துவமனைகளிலிருந்து வெளியேறும் நுண்ணுயிர் மற்றும் மருத்துவ கழிவுகளுக்கான பொது எரிப்பானும், கொடைக்கானலில் 90 உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்கான ஒரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் 124 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக வேலூரில் ஒன்பது இடங்களிலும், 19



2000 ஏப்ரல் 27]

தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக திருச்சிராப்பள்ளியில் இரண்டு இடங்களிலும், 262 சலவை மற்றும் சாயப்பட்டறை தொழிற் சாலைகளுக்காக கரூரில் நான்கு இடங்களிலும், 27 சலவை மற்றும் சாயப்பட்டறைத் தொழிற்சாலைகளுக்காக சேலத்தில் ஒரு இடத்திலும் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்காகத் தமிழக அரசு, திட்ட மதிப்பில் 25 சதவீதம் அல்லது ரூபாய் 50 இலட்சம், இவற்றில் எது குறைவோ அதை மாநில அரசு மானியமாக வழங்குகிறது.

திருப்பூர் மற்றும் கரூர் பகுதியில் பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மேலும் காலதாமதமின்றி அமைக்கப்பட வேண்டுமென்ற உயர்நீதிமன்றத்தின் பசுமை தீர்வாயத்தின் 29-4-1998 நாளிட்ட ஆணையினால் அப்பகுதி நெசவு-சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்கு ஏற்பட்ட இக்கட்டினை கருத்தில் கொண்டு, 7-5-1998 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தொழிற்சாலைகள், தொழிற்சங்கங்கள் மற்றும் மனுதாரர்கள் ஆகியோருடன் முத்தரப்புக் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் திருப்பூர் மற்றும் கரூர் பகுதி பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு மாநில அரசின் மானியத்தை உச்சவரம்பின்றி 25 சதவீதம் வரை வழங்க முடிவெடுக்கப்பட்டது. ஒவ்வொரு பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் முன்னேற்றத்தினைப் பொறுத்து, அரசிடமிருந்து பெறும் மானியத் தொகையினைப் பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் வழங்குகிறது. வாரியம் இதுவரை 38 பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்காக ரூ.19.49 கோடி மானியத் தொகையைப் பெற்று, அதில் 31-12-1999 வரை 35 பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூ.15.72 கோடி மானியத் தொகையினை விடுவித்துள்ளது.

தமிழக அரசு 'டால்கோ' மூலமாக ஒன்பது பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூ.6.77 கோடி மானியத் தொகையினை மாநில அரசு மானியமாக உச்சவரம்பின்றி திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் வரை வழங்கியுள்ளது.

உலக வங்கி உதவியுடன் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு அளிக்கப்பட்ட மானியம் வழங்கும் திட்டம் 31-3-1999 முதல் முடிவடைந்து விட்டதால், இத்திட்டத்தை நீட்டிக்க இயலாது என மத்திய

அரசு அறிவித்துள்ளது. இந்நிலையில், ஏனைய திட்டத்தின்கீழ் மைய அரசின் மானியத்தைத் தொடர்ந்து வழங்குமாறு வலியுறுத்தி மத்திய அரசுக்குக் கடிதம் மூலம் நினைவூட்டப்பட்டது. தமிழக அரசின் தொடர் முயற்சியினால், இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தற்பொழுது அறிவித்துள்ளது.

### 5.3 அபாயகரமான கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகள்

பதினெட்டு வகையான அபாயகரமான கழிவுகளின் சேமிப்பு, போக்குவரத்து, பெறுதல், சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றல் ஆகியவற்றை வாரியம் மிகவும் திறம்படக் கண்காணிக்கிறது. 31-12-1999 வரை 1989 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளின்கீழ், 1100 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, 1,088 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அபாயகரமான கழிவுப் பொருட்களைச் சுத்திகரித்து வெளியேற்றுவதற்காகத் தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் எட்டு இடங்களை வாரியம் தெரிவு செய்துள்ளது. திருவள்ளூர் மாவட்டம் மணலூர கிராமத்தில் ஓர் இடத்திலும், காஞ்சிபுரம் மாவட்டம் சிறுசேரி கிராமத்தில் ஓர் இடத்திலும், நிலையங்களைத் தேர்வு செய்வதற்கான சுற்றுச்சூழல் தாக்கம் மற்றும் அபாய நேர்வு மதிப்பீடு ஆய்வு, தேசியச் சுற்றுச்சூழல் பொறியியல் ஆராய்ச்சிக் கழகத்தினரால் முடிக்கப்பட்டுள்ளது.

சிறுசேரியில் உள்ள இடத்திற்கு அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2000-2001-ல், பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தாலுகா கொலக்கானத்தம் கிராமத்தில் உள்ள ஓர் இடத்திலும் வேலூர் மாவட்டம் - குடியாத்தம் தாலுகா சேவூர் கிராமத்தில் உள்ள ஓர் இடத்திலும் சுற்றுச் சூழல் தாக்கம் மற்றும் அபாய நேர்வு மதிப்பீடு ஆய்வு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சுற்றுப்புறச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 இன்கீழ் மத்திய அரசு குறிப்பிட்டுள்ளபடி 25 அபாயகரமான இரசாயனப் பொருட்களின் தனிப்பட்ட சேமிப்புக் கிடங்குகளை வாரியம் கண்டறிந்துள்ளது. வாரியத்தின் கண்காணிப்பினால் பொது உடைமைக் காப்புச் சட்டம், 1991 இன்கீழ் 73 தொழிற்சாலைகள் அபாய நேர்வு காப்பீடுகளை எடுத்துள்ளன.



### 5.4 உயிரின மருத்துவக் கழிவுகள்

மைய அரசு, 1998 ஆம் ஆண்டு உயிரின மருத்துவக் கழிவுகள் (நிர்வகித்தல் மற்றும் கையாளுதல்) விதிகளை 20-7-1998 அன்று மைய அரசிதழ் அறிவிக்கை மூலம் வெளியிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இவ்விதிகளைச் செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவரை உரிய அலுவலராகத் தமிழக அரசு நியமித்து ஆணையிட்டுள்ளது.

### 5.5 பொதுமக்கள் கேட்புக் குழு

1994-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையினை இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் 1986 ஆம் ஆண்டு சுற்றுசூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் வெளியிட்டுள்ளது. இவ்வறிக்கையின்படி, அதில் குறிப்பிட்டுள்ள 29 தொழிற்சாலைகள்/திட்டங்களும் இந்திய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதியினைப் பெற வேண்டும். 10-4-1997 இல் வெளியிடப்பட்டுள்ள 1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு திருத்த அறிவிக்கையின்படி, தமிழ்நாடு அரசு அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள 29 வகை தொழிற்சாலைகள்/திட்டங்களுக்கு இசைவினை வழங்கும் வகையில், பொதுமக்கள் கேட்புக் குழுவினை அமைக்க ஆணை பிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட தொழிற்சாலைகள்/திட்டங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களுக்காகப் பொதுமக்கள் ஆலோசனைகள் மே, 1998-லிருந்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றன. பொதுமக்கள் கேட்புக் குழுவிடமிருந்து விவரங்கள் பெறப்பட்டவுடன் வாரியம் அதனை ஆராய்ந்த பின்னர், தடையில்லாச் சான்றிதழ் வழங்குவதற்கு முடிவெடுக்கும். 31-12-1999 வரை இவ்வகையான 84 தொழிற்சாலைகள்/திட்டங்களுக்குப் பொதுமக்கள் ஆலோசனை பெறப்பட்டுள்ளது.

### 6.0 ஒலி மாசினைக் கட்டுப்படுத்தல்

அன்றாட வாழ்வில் போக்குவரத்து, கட்டடத் தொழில், ஒலிப்பெருக்கி, பட்டாசு வெடித்தல் போன்றவைகளால் ஒலி மாசு ஏற்படுகிறது. அவ்வாறு ஏற்படும் ஒலி மாசின் ஆபத்தான பின் விளைவுகளைப் பற்றிய விழிப்புணர்வு பொதுமக்களிடம் குறைவாகவே உள்ளது.

வாகனங்களால் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுகளால் சுகாதார ரீதியிலான பின் விளைவுகளை எண்ணி அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து, உள் துறைச் செயலர் தலைமையில்

[2000 ஏப்ரல் 27

இரு பெரும் கூட்டங்கள் முறையே டிசம்பர் 1999 மற்றும் மார்ச் 2000-ல் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து இம்மாசுகளைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய கீழ்க்கண்ட சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து தொடர் நடவடிக்கை பல்வேறு துறைகளால் மேற்கொள்ளப்பட இருக்கிறது:

1. உபயோகத்திலுள்ள டீசல்/பெட்ரோல் எரிபொருளால் இயங்கும் வாகனங்கள் கேட்டலிடிக் கன்வெர்ட்டர்கள் பயன்படுத்த சட்டரீதியான நடவடிக்கை.
2. எரிபொருள் கலப்படத்தைத் தவிர்க்க வழிமுறைகள்.
3. புகை சோதனை சான்றிதழ் பெற்றிருப்போருக்கு மட்டுமே டீசல்/பெட்ரோல் வழங்க பெட்ரோல் பங்குகளுக்கு ஆணையிடுதல்.
4. போக்குவரத்து சிக்னலுக்கு அருகாமையில் பேருந்து நிறுத்துமிடங்கள் இருப்பதால் வாகன போக்குவரத்து தடைபடுகிறது. எனவே, பேருந்து நிறுத்துமிடங்களை நெரிசல் மிக்க சந்திப்புகளுக்கு அப்பாற்பட்டு அமைத்தல்.
5. டீசல் மற்றும் பெட்ரோல் எரிபொருளுக்கு மாற்றாக மின்கலன்களால் இயங்கும் வாகனங்களை அறிமுகப்படுத்துதல்.
6. மும்பை, புதுதில்லி போன்ற மாநகரங்களில், பேருந்துகளில் இயற்கை வாயுவை (சி.என்.ஜி.) பயன்படுத்துவதுபோல சென்னை மாநகர அரசு பேருந்துகளில் இயற்கை வாயுவைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
7. ஆய்வு மற்றும் பராமரிப்பு சான்றிதழ் அளிக்கும் திட்டத்தை உபயோகத்தில் உள்ள வாகனங்களுக்கு அறிமுகப்படுத்த சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல்.
8. சென்னை மாநகரில் அமைதிப் பகுதிகளை அறிவிக்கை செய்யப்பட்டு அப்பகுதிகளில் ஒலிப்பெருக்கிகள் மற்றும் காற்று ஒலிப்பான்களை பயன்படுத்துவதை தடை செய்தல்.
9. சென்னை மாநகரில் மாசு மற்றும் ஒலி உறிஞ்சக்கூடிய மரக்கன்றுகளை சாலை ஓரங்களிலும் குடியிருப்புப் பகுதிகளிலும், நடுவதற்கான நடவடிக்கை எடுத்தல், மற்றும்



2000 ஏப்ரல் 27]

10. அங்கீகரிக்கப்படாத ஒலிப்பான்களை வாகனங்களில் பயன்படுத்துவதை தவிர்க்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்தல்.

முன்னோடியாக, சென்னை மாநகரிலிருந்து இந்த கட்டுப்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாநில முழுமையும் விரிவாக்கம் செய்யப்படும். மேலும் மைய அரசால் சுற்றுசூழல் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட ஒலி மாசு (ஒழுங்குபடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்) விதிகள் 2000 இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட உள்ளது.

### 6.1 கடற்கரைப் பகுதிகளில் சுற்றுச்சூழல் நிர்வகித்தல்

தமிழ்நாடு சுமார் 1000 கி.மீ. தொலைவிற்கு மிகவும் நீண்ட அழகிய கடற்கரையைக் கொண்டுள்ளது. சில மனித நடவடிக்கைகளின் காரணமாக உயிரின வாழ்க்கைச் சூழல் பாதிப்படைவது இப்பகுதிக்கு உகந்ததல்ல. இப்பகுதியில் வளர்ச்சிப் பணிகள் சிலவற்றைக் கட்டுப்படுத்தி, மிக அதிக அளவிற்குப் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்கும் பொருட்டு, கடற்கரையோரப் பகுதிகள் முறைப்படுத்தப்பட்ட கடற்கரை மண்டலம் 1, 2 மற்றும் 3 என வகைப்படுத்தப்பட்டு உள்ளது. வாரியம், கடற்கரையோரக் கழிவு வெளியேற்றும் அமைப்புகளையும், எண்ணூர், காசிமேடு, கூவம் ஆறு கடலில் சேருமிடம், கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் தாமிரபரணி ஆறு கடலில் சேருமிடம் ஆகிய ஏழு மிக முக்கிய இடங்களையும் கடலோரப் பகுதிகளில் கண்டறிந்துள்ளது.

இப்பகுதிகளில் எல்லாம், கடலில் வெளியேற்றப்படும் மாசின் அளவினை மதிப்பிடவும், அவற்றைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தொடர்ந்து கண்காணிக்கப்படுகின்றன.

## 7.0 வாரியத்தின் மற்ற பணிகள்

### 7.1 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை நாட்டு மக்களிடையே நல்லவண்ணம் ஏற்படுத்த, சென்னையில் உள்ள பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மைய வளாகத்தில், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அரங்கை வாரியம் அமைத்துள்ளது. சுற்றுச்சூழல் சம்பந்தமான ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி ஆகியவற்றின் மூலமும், ஒளி, ஒலி சாதனங்கள் கொண்டு சிறுசிறு திரைப்படங்கள் வெளியிடுவதன் மூலமும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. மேலும், தலைமை

அலுவலகத்தில், மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையத்தினையும் அமைத்துள்ளது.

## 7.2 அரசு சாரா அமைப்புகளின் பிரிவு

அரசு சாரா அமைப்புகளின் பிரிவு, வாரியத் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மாநில மாசு கட்டுப்பாடு வாரியங்கள் மற்றும் மத்திய மாசுக்கட்டுப்பாடு வாரியம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் அரசு சாரா அமைப்புகளிடையே தொடர்பினையும் விழிப்புணர்வினையும் ஏற்படுத்தும் ஓர் அமைப்பாகவும் இப்பிரிவு செயல்படுகிறது.

## 7.3 சுற்றுச்சூழல் பயிற்சி மையம்

தொழிற்சாலைப் பணியாளர்கள், வாரிய ஊழியர்கள், உள்ளாட்சித் துறை ஊழியர்கள் மற்றும் அரசு சாரா அமைப்பைச் சார்ந்தவர்கள் ஆகியோரின் தேவைக்கேற்ப மாசுத் தடுப்பு மற்றும் சுத்திகரிப்பு உத்திகள் குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்குவது மற்றும் மாசினைக் கட்டுப்படுத்துவதில் திறமை அடைவது ஆகிய நோக்கத்திற்காக, டென்மார்க் நாட்டின் 4 கோடி ரூபாய் நிதியுதவியுடன் சுற்றுச்சூழல் பயிற்சி மையத்தை, தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அமைத்துள்ளது.

டிசம்பர் 1995 முதல் 31-12-1999 வரை சுற்றுச்சூழல் பயிற்சி மையம் 138 பயிற்சிகளை நடத்தி 2,627 அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்துள்ளது.

## 7.4 அவசர உடனடி செயல் மையம்

அபாயகரமான இரசாயனங்களைப் பயன்படுத்தும் முறைகள் மற்றும் கையாளுவது ஆகியவை நம் நாட்டில் பெருகிவருவதால் விபத்துகள் நடைபெறும் சாத்தியங்கள் பல உள்ளன. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவசர நிலை உடனடி செயல் மையத்தின் மைய அறையினைத் தலைமை அலுவலகத்திலும் செயல் அறையினை மணலியிலும் அமைத்துள்ளது.

## 7.5 ஓசோன் கண்காணிப்புப் பிரிவு

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள ஓசோன் கண்காணிப்பு பிரிவு தமிழ்நாட்டில் ஓசோன் சிதைக்கும் பொருட்களை உற்பத்தி செய்கின்ற மற்றும் உபயோகிக்கின்ற



தொழிற்சாலைகளைக் கண்டறிந்து, அவற்றின் இன்றைய தேவைகளையும், எதிர்கால அளவினையும் கணக்கிடும் ஆய்வினை மேற்கொண்டது.

1276.28 டன் ஓசோன் சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் 55 தொழிற்சாலைகளை வாரியம் கண்டறிந்து, அவை மாற்றுப் பொருட்கள் உபயோகிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைக் கொண்டு ஓசோனைச் சிதைக்கும் பொருட்களுக்கு மாற்று அறிவதற்கு அடிப்படையாக இப்பிரிவின் கண்டுபிடிப்புகள் அமையும்.

## 7.6 சுற்றுப்புறச் சூழல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு

மாசினைக் குறைக்கும் தூய்மையான தொழில்நுட்பத்தினை உருவாக்கும் பணியில் ஈடுபடும் பொருட்டு, வாரியம் சுற்றுச்சூழல் மற்றும் அபிவிருத்திப் பிரிவினை, சென்னையிலுள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் அமைத்துள்ளது.

கனிம, கரிம மற்றும் டேனின் ஆகிய மாசுப் பொருட்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவு நீரில் எந்த அளவுக்கு குறைகிறது என்பதை ஆராயும் பொருட்டு இப்பிரிவு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனையுடன், நுண்ணுயிரிகளைக் கொண்டு தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளைச் சுத்திகரிப்புச் செய்வது பற்றிய ஆய்வறிக்கையினைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தினைச் செவ்வனே செயல்படுத்துவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோல் பதனிடும் தொழிற்சாலைகள் சில கண்டறியப்பட்டுள்ளன.

## 8.0 உலக வங்கி உதவி

உலக வங்கி, தொழிற்சாலைகள் மாசு கட்டுப்பாடு திட்டத்தின்கீழ், மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் மூலம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வகங்களைப் பலப்படுத்துவதற்கான உதவியினை அளித்து வருகிறது. இத்திட்டத்தின்படி பகுதி-1-ன்கீழ் ரூபாய் 71.88 இலட்சம் மதிப்புள்ள உபகரணங்கள்/கருவிகளையும், பகுதி-2-ன்கீழ் ரூபாய் 707.21 இலட்சம் மதிப்புள்ள உபகரணங்களையும் வாரியம் பெற்றுள்ளது.

[2000 ஏப்ரல் 27

## 9.0 ஆண்டு திட்டங்கள்

வாரியம் தனது நிதியின் மூலம் 1998-99 ஆம் ஆண்டில் திருப்பூரில் ரூபாய் 37.51 இலட்சம் மதிப்பில் மாவட்டச் சுற்றுப்புறச் சூழல் ஆய்வகத்தினை ஏற்படுத்தும் ஆண்டுத் திட்டத்தினைச் செயல்படுத்தியுள்ளது.

வாரியம், 1999-2000 ஆம் ஆண்டில்

(அ) வாரியத்தின் கள அலுவலகங்களை ரூபாய் 12.00 இலட்சம் மதிப்பில் கணினி மயமாக்கல்.

(ஆ) ஈரோடு மாவட்ட சுற்றுப்புறச் சூழல் ஆய்வகத்தினை ரூபாய் 38.90 இலட்சம் மதிப்பில் ஏற்படுத்துதல்.

போன்ற ஆண்டுத் திட்டங்களை தனது நிதி மூலம் செயல்படுத்தியுள்ளது.

வாரியம் 2000-2001 ஆம் ஆண்டில், சேலத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் ரூபாய் 19.32 இலட்சம் மதிப்பில் நீரின் உயிரியல் தரக் கண்காணிப்புப் பிரிவை ஏற்படுத்தும் திட்டத்தினைச் செயல்படுத்த உத்தேசித்துள்ளது.

இப்பிரிவு, செயற்கை முறை நிலத்தடி களத்தினை உருவாக்கி, அதன் மூலம் நீர் நிலைகளின் உயிரியல் தரத்தை மதிப்பீடு செய்யும். இதன் மூலம் கண்டறியப்படும் விவரங்கள், நன்னீர் உயிரின வாழ்க்கை சுழற்சியில் மாசினால் ஏற்படும் திடீர் தாக்கத்தினாலான விளைவுகள் மற்றும் மாறுதல்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்ய உதவும். தொடக்கத்தில், இத்திட்டத்தின் மூலம் காவிரி ஆற்று நீரின் தரம் கண்காணிக்கப்படும்.

## 10.00 சுற்றுச்சூழல் இயக்ககம்

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தும் பொருட்டு, 1995-ல் சுற்றுப்புறச் சூழல் துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை பெரிய திட்டங்களான காவிரி ஆறு, தமிழ்நாட்டின் நகர்ப்புற ஏரிகள் மற்றும் சென்னை நகரின் நீர்வழிகளில் மாசுத் தடுப்புப் பணிகளைச் செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது.

இவற்றைத் தவிர தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் செயல்படுத்தப்படாத சுற்றுச்சூழல் பணிகளையும் தொய்வின்றி இத்துறை செய்து வருகிறது. இத்துறையானது, 22-3-1996 முதல் சென்னையில் இயங்கி வருகிறது.



2000 ஏப்ரல் 27]

### 10.1 1999-2000-க்கான பகுதி-2 திட்டங்கள்

பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.15 இலட்சங்கள் செலவில் திருவள்ளூர், ஈரோடு மாவட்டங்களுக்கான சுற்றுச்சூழல் மேலாண்மை ஆதார வரைபடம் தயாரிக்கும் பணியும், தூத்துக்குடி பகுதிக்கான வளர்ச்சிப் பணிகளின் தாக்கத்தைத் தாங்கும் சக்தியைக் கணக்கிடுதல் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்ள, பகுதி-2 திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் ரூ.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்லூரி மற்றும் பள்ளிகளில் சுற்றுச்சூழல் மையங்கள் ஏற்படுத்துதல், சுற்றுச்சூழல் கல்வி ஆதார மையங்கள் ஏற்படுத்துதல், சுற்றுச்சூழல் விருதுகள் வழங்குதல் உள்ளிட்ட விழிப்புணர்வுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 10.2 தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

நகராட்சிகளிலிருந்தும், பேரூராட்சிகளிலிருந்தும் வெளியேற்றப்படும் திரவக் கழிவுகள் தமிழ்நாட்டில் உள்ள பெரும் நதிகளான காவிரி, வைகை மற்றும் தாமிரபரணியில் கலக்காமல் தடுத்து, அதனைச் சுத்திகரிப்பு செய்ய தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், முதற்கட்டமாகக் காவிரி ஆறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. காவிரி ஆற்றுநீர் அதிகம் மாசடைந்துள்ள பகுதிகளான பவானி, குமாரபாளையம், ஈரோடு, பள்ளிப்பாளையம் மற்றும் திருச்சிராப்பள்ளி பகுதிகளில் மாசினைக் கட்டுப்படுத்தும் திட்டம் ரூபாய் 38.20 கோடி செலவில் 1997 ஆம் ஆண்டு முதற்கொண்டு பத்தாண்டு திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1999-2000-ம் ஆண்டிற்கான மதிப்பீட்டில் இப்பணிகளுக்காக ரூ.200.00 இலட்சங்கள் கோரப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பல்வேறு பணிகளைத் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின் செயலாக்கம் சுற்றுச் சூழல் துறையினால் கண்காணிக்கப்படுகிறது. இது தவிர, காவிரி மற்றும் அதன் உப நதிகள் கரையிலுள்ள கோவை, திருப்பூர், கரூர், சத்தியமங்கலம், திருவரங்கம், மேட்டுப்பாளையம், கும்பகோணம், மயிலாடுதுறை ஆகிய நகரங்களுக்கும் வைகை நதியின் கரையிலுள்ள மதுரை, தேனி ஆகிய நகரங்களுக்கும், தாமிரபரணி நதியின் கரையிலுள்ள திருநெல்வேலி

நகரத்திற்கும் இத்தகைய திட்டங்கள் வரையப்பட்டு மைய அரசு நிதியுதவியுடன் சிறப்புறச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு உத்தேசித்துள்ளது.

### 10.3 சென்னைப் பெருநகர நீர்வழிகளைச் சீரமைத்து மேம்படுத்தும் திட்டம்

சென்னை மாநகர முக்கிய நீர்வழிகளான கூவம், அடையாறு மற்றும் பிற கால்வாய்களைத் தூய்மைப்படுத்த நிரந்தரத் தீர்வாக குடிசை மாற்று வாரியம், சென்னை மாநகராட்சி, குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து மாநகர நீர்வழிகளின் சுற்றுச்சூழலை மேம்படுத்த ஒரு விரிவான திட்டம் ரூ. 1700 கோடி மதிப்பீட்டில் தீட்டப்பட்டது. நடுவண் அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் மற்றும் மையத் திட்டக்குழு முன்பாக இத்திட்டம் பற்றி ஒளிப்படம் மூலம் விளக்கிக் காட்டப்பட்டு, உரிய நிதி ஒதுக்கீடு கோரி மைய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 10.4 கடற்கரைப் பகுதிகளில் பல்வேறுபட்ட நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல்

10.4.1 தமிழ்நாட்டில் நீண்ட கடற்கரைப் பகுதிகளில் பல்லுயிர் பாதுகாப்பு குறித்த நடவடிக்கைகளைக் கண்காணித்தல், ஒழுங்குபடுத்துதல், முறைப்படுத்துதல், அப்பகுதியில் தொழில் முனைவோரின் திட்டங்களை சுற்றுச்சூழல் மாசுபடாதவாறு செயல்படுத்துவது குறித்து பரிசீலித்தல் போன்ற பணிகளுக்காகத் தமிழ்நாடு கடற்கரை மண்டலக் குழுமம் இயங்கி வருகிறது. கடற்கரை மண்டலப் பகுதிகள் பிரிவு 1, 2 மற்றும் 3 என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

கடற்கரைப் பகுதியில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டக் கருத்துருக்களை மாநிலக் குழுமம் பரிசீலித்து உரிய பரிந்துரையுடன் மைய கடற்கரை மண்டலக் குழுமத்தின் சுற்றுச்சூழல் அனுமதிக்காக அனுப்பி வைக்கிறது

10.4.2 தமிழகத்தின் பழவேற்காடு ஏரி முதல் கன்னியாகுமரி வரையிலான உள்ள 12 கடலோர மாவட்டங்களில் கடற்கரைப் பகுதிக்கான 31 கடற்கரை மண்டல மேலாண்மைத் திட்டங்கள் சம்பந்தப்பட்ட வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. அவை தமிழ்நாடு மாநில கடற்கரை குழுமத்தினால் பாங்குற பரிசீலனை செய்யப்பட்டு மைய அரசின் கடற்கரை மண்டல மேலாண்மைக் குழுமத்தின் மேலான ஒப்புதலுக்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

10.4.3 கடற்கரை உச்ச அலைக் கோட்டிலிருந்து 500 மீட்டர் தொலைவை



நிர்ணயிக்கும் பணி, சென்னை பழவேற்காடு கடற்கரைப் பகுதியிலிருந்து கன்னியாகுமரி வரை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காகத் தமிழக அரசு ரூ. 2.5 கோடி ஒதுக்கியுள்ளது.

முதல் கட்டமாக சென்னை, பழவேற்காடு ஏரியிலிருந்து பாலாறு முகத்துவாரம் வரையிலான 110 கி.மீ. வரையுள்ள கடற்கரைப் பகுதியில் அளவீடு செய்யும் பணிக்காக ரூ. 54 இலட்சங்கள் அங்கீகரிக்கப்பட்டு அதில் ரூ. 42.45 இலட்சங்கள் இப்பணியைச் சீரிய முறையில் செயலாற்ற மைய அரசின் முதன்மை ஹைட்ரோகிராபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இது தொடர்பாக மற்ற பணிகள் மீதத் தொகை ரூ. 11.55 இலட்சத்தில் திருவள்ளூர், சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட அலுவலர்கள் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகின்றன.

### 10.5 அனல் மின் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் வல்லுநர் குழு

பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் தாக்கத்தை மதிப்பிட்டு, 1986 சுற்றுச்சூழல் (பாதுகாப்பு சட்டத்தின்கீழ்) திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு, மைய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் சில விதிமுறைகளை நிர்ணயித்துள்ளது.

1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்கத்தின் மதிப்பீடு அறிவிக்கையின் மீது 1997 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்த அறிவிக்கையின்படி, சுற்றுச்சூழலில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய புதிய திட்டங்கள் வரையும்போது, அத்திட்டங்களால் சுற்றுச்சூழலில் ஏற்படும் விளைவுகள் பற்றி, பொதுக்கேட்பு மூலம் விரிவாக ஆலோசிக்கப்பட வேண்டும் என்ற வரன்முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இத்திருத்த அறிவிக்கையின் மூலம் சிலவகை அனல் மின் நிலையத் திட்டங்களுக்குச் சுற்றுச்சூழல் அனுமதி வழங்கும் அதிகாரம் மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரத்தைச் செயல்படுத்த 1997 ஆம் ஆண்டு திருத்த அறிவிக்கையில் கண்டவாறு, தமிழ்நாடு அரசு சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை ஒரு வல்லுநர் குழுவை 29-12-1998-ல் அமைத்தது. இக்குழுவில் சுற்றுச்சூழல் மேலாண்மை, மாசு கட்டுப்பாடு, நீர்வள மேலாண்மை, நிலப் பயன்பாடு, உயிரினப் பாதுகாப்பு, சமூக அறிவியல், திட்ட மதிப்பாய்வு, சுற்றுச்சூழல் சுகாதாரம் ஆகிய பிரிவுகளின் வல்லுநர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். சுற்றுச்சூழல் துறை இயக்குநர், இக்குழுவின் உறுப்பினர்-செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டு,

இரு அனல் மின் நிலையத் திட்ட கருத்துருக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.6 நகர்ப்புற சுற்றுச்சூழல் மேம்பாடு திட்டம்**

பசுமைப் பகுதியை உருவாக்குவதன் மூலம் காற்று, நீர் ஆகியவற்றிலுள்ள மாசினைக் கட்டுப்படுத்த, "நகர்ப்புறச் சுற்றுச்சூழல் மேம்பாடு திட்டம்" சென்னை மாநகராட்சி உள்ளிட்ட பெருநகர வளர்ச்சிக் குழுமப் பகுதிகளிலும், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிகளிலும் மத்திய, மாநில அரசு இணைந்து ரூபாய் 4.56 கோடி செலவில் செயல்படுத்தப்படும். மேலும், தேசிய நதிநீர்த் திட்டத்தினால் பயனடையும் திருச்சி மாநகராட்சி, ஈரோடு, குமாரப்பாளையம், பவானி, பள்ளிப்பாளையம் ஆகிய நகர்ப்பகுதிகளிலும் இத்திட்டம் தனியே செயல்படுத்தப்படும்.

இதற்காக ஆகும் செலவினம் முழுவதையும் மத்திய அரசே ஏற்கும். நகராட்சிப் பகுதிகளில் உள்ள முக்கியச் சாலைகளின் இருமருங்கிலும் பிற இடங்களிலும் சிறப்பு வகையான மரக்கன்றுகள் நட்டுப் பராமரிக்கப்படும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிப் பகுதிகளுக்கும் இத்திட்டம் படிப்படியாக விரிவுப்படுத்தப்படும். நகராட்சிகள், தொழில் நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியவை கூட்டு முயற்சியாகத் தாமாகவே முன்வந்து முழுப் பொறுப்பையும் ஏற்று இதனை ஒரு மக்கள் இயக்கமாகவே செயல்படுத்த உறுதி பூண்டுள்ளனர்.

**11.0 2000-2001 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசித்துள்ள சிறப்பு மிக்க செயல்பாடுகள்**

*11.1* காவிரி ஆற்றில் மாசு தடுப்புப் பணிகள் 2000-2001 ஆம் ஆண்டில் ரூ. 500 இலட்சங்கள் திட்ட மதிப்பீட்டில் மைய அரசின் திட்டமாகத் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் செயல்படும் ஐந்து நகரங்களில் காவிரி ஆற்றின் தரத்தைக் கண்காணிக்கும் பணிக்காக ரூ.7.79 இலட்சத்திற்கு மைய அரசினால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஏற்கெனவே இப்பணி தொடங்கப்பட்டு 2000-2001 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படவுள்ளது.

*11.2* சுற்றுச்சூழல் துறையை வலுப்படுத்த 2000-2001 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் மூலம் ரூ.23.50 இலட்சங்கள் மதிப்பீட்டில் சுற்றுச்சூழல் விழிப்புணர்ச்சிப் பணிகள், ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் துறையை வலுப்படுத்தும் நடவடிக்கை ஆகியவை மேற்கொள்ளப்பட உள்ளன. சுற்றுச்சூழல் மேம்பாட்டைப் பொறுத்தவரையில் அரசு ஏராளமான ஆக்கப் பணிகளை நிறைவேற்றியுள்ளது; இவை மேலும் தொடரும்.





**மானியக் கோரிக்கை 37-க்குத் தொடர்புடைய தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்**

**கொள்கை விளக்கக் குறிப்பு 2000-2001**

பொருளாதார தாராள மயமாக்கல் மற்றும் பொருளாதாரச் சீர்த்திருத்தங்களை நமது நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளாக அறிமுகப்படுத்தியதன் மூலம் நமது நாட்டின் பொருளாதார அமைப்பு நவீனப் படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டுள்ளது. இச் சீர்திருத்தத்தின் முக்கிய குறிக்கோள்கள் உற்பத்தி உயர்வு, வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதலாகும். இம்முன்னேற்றக் கொள்கைகளாலும் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற பேரார்வத்தாலும் நமது எரிசக்தியின் தேவை தொடர்ந்து உயர்ந்து கொண்டே இருக்கின்றது. நாம் நமது தேவைக்கு நிலக்கரி, எண்ணெய், இயற்கை வாயு, விறகு போன்ற பல தரப்பட்ட எரிசக்தி ஆதாரங்களை உபயோகப்படுத்துகிறோம். மின்சாரம் என்பது ஒரு வகை எரிசக்தி. நமது தேவைக்கேற்ற அளவிற்கு, தேவைப்பட்ட இடத்திற்கு கொண்டு சென்று நாம் உபயோகிக்கக்கூடியது. உலகம் முழுமையும் தற்போது மின்சார உற்பத்தி பெருமளவு நிலக்கரியைச் சார்ந்தே உள்ளது. வரும் ஆண்டுகளிலும் நிலக்கரி மற்றும் எண்ணெய் மூலம் மின் உற்பத்தி செய்வது நிலையாக தொடர்ந்து கொண்டே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இவற்றை அடிப்படையாகக் கொண்டு மின் உற்பத்தி செய்வதால் நமக்கு ஏற்படும் பல இடர்பாடுகளையும், அதாவது வேகமாகக் குறைந்து வரும் நிலக்கரி இருப்பு, நிலக்கரியின் தரக்குறைவு, நிலக்கரி மற்றும் எண்ணெய் விலைகளில் ஏற்படும் உயர்வு, போக்குவரத்து செலவினம் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு போன்ற நிலைமைகளையும் நாம் சமாளித்தாக வேண்டும்.

இத் தருணத்தில் புதுப்பிக்கக்கூடிய மரபு சாரா எரிசக்தி வளங்கள் மரபு சார்ந்த எரிசக்தி வளங்களுக்கு ஓர் முக்கியமான மாற்று ஆதாரமாக விளங்கும் நிலையில் உள்ளது. புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதன் வாயிலாகத் தூய்மையான எரிசக்தி பெறலாம். மேலும் இவ்வளங்கள் உலகின் முதன்மையான ஆதார சக்தியான சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், இவை என்றென்றும் நமக்குக் கிடைத்துக் கொண்டேயிருக்கும் இவ்வளங்கள் குறைவதே இல்லை.

தமிழ்நாடு அரசு மேற்கண்ட காரணங்களைக் கருத்திற்கொண்டு 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் என்ற அமைப்பை

மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவிக்கவும், மேம்படுத்தவும் அதற்கான திட்டங்களைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தவும் ஏற்படுத்தியுள்ளது. இந்நிறுவனம் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி தொடர்பான மாநில திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும் இந்திய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்தின் சார்பு அமைப்பாக மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்துகின்ற திட்டங்களையும் இந்நிறுவனம் செயல்படுத்துகின்றது.

தொடக்கத்திலிருந்தே, தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் காற்று சக்தி, சூரிய சக்தி, உயிரியல் சக்தி ஆகியவற்றைச் சார்ந்த பல்வேறு முன்னோடித் திட்டங்களைப் போற்றத்தக்க வகையில் சிறப்பாகச் செயல்படுத்தி வந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட இடையறாத முயற்சிகளால் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்கள் பற்றிய அடிப்படைக் கருத்து இம்மாநிலத்தில் நன்கு வேரூன்றிக் கீழ்க்கண்ட பலன்களை அடைந்துள்ளது:

அ. புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி ஆதாரங்களைக் கொண்டு தரமான மின் உற்பத்தி செய்வதற்கு முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. அதில் பெருமளவு முன்னேற்றமும் செய்யப்பட்டுள்ளது.

ஆ. சூரிய ஒளி சுடுநீர் அமைப்புகள், சூரிய ஒளி இறைப்பான்கள், சூரிய ஒளி விளக்குகள், சூரிய ஒளி தெரு விளக்குகள், சூரிய சக்தி மூலம் காற்றைச் சூடாக்கும் அமைப்புகள், சாண எரிவாயு கலன்கள், தாவர எரிவாயு இயந்திரங்கள் மற்றும் நீர் இறைக்கும் காற்றாலைகள் போன்ற சாதனங்களின் உபயோகத்தினை ஊக்குவிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இ. ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மலைப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவை மூலம், கிராமப் பகுதிகளில் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி பற்றிய கருத்தையும் பயன்களையும் பிரச்சாரம் செய்ய தனிக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் தற்போது முனைந்து செயல்படுத்தும் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தித் திட்டங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:



## சூரிய வெப்ப சாதனங்கள்

### சூரிய வெப்ப சுடுநீர் அமைப்புகள்

சூரிய வெப்ப சுடு நீராக்கி தொழில் நுட்பம் நன்கு வளர்ந்து வாணிபச் சந்தையில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பயன்படுத்துவோரின் தேவைக்கேற்ப பல வடிவ அமைப்புகளிலும் கொள்ளளவுகளிலும் இவ்வமைப்புகள் தயாரிக்கப்படுகின்றன.

மாநில மற்றும் மைய அரசுகளின் பல்வேறு மானியத் திட்டங்களின் கீழ் இதுகாறும் 2,888 வீட்டு உபயோகத்திற்கான சுடு நீர் அமைப்புகளும், 333 பெரிய அளவிலான சுடுநீர் அமைப்புகளும் நிறுவப்பட்டுள்ளன. பெரிய அளவிலான சூரிய சுடுநீர் அமைப்புகள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், தொழிற்சாலைகளில் உள்ள சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றில் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய சூரிய சுடுநீர் அமைப்புகளை மாநில அரசின் மருத்துவமனைகளிலும், மாணவர்கள் தங்கும் விடுதிகளிலும் நிறுவ தமிழ்நாடு அரசு 100 விழுக்காடு நிதி உதவி வழங்கி தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் நிறுவி வருகிறது. இதுகாறும் இத்தகைய சுடுநீர் அமைப்புகள் 11 மாநில அரசு மருத்துவமனைகளிலும், 7 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் விடுதிகளிலும் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வமைப்புகளிலிருந்து பெறப்படும் சுடுநீர் மருத்துவமனை நோயாளிகளுக்கும், விடுதி மாணவர்களுக்கும், பெரிதும் பயனளிக்கிறது. இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2000-20001 ஆம் ஆண்டில் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்புகள் நிறுவக் கீழ்க்கண்ட மானியங்கள் வழங்கப்படும்:

1. தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் பெரிய அளவிலான 1,000 எல்.பி.டி. 8 கலெக்டர்களுடன் சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ.20,000 வீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.
2. வீட்டு உபயோகத்திற்கான சூரிய வெப்ப சுடுநீர் அமைப்பு ஒன்றிற்கு ரூ. 3,000 வீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.

### சூரிய வெப்ப சுடுகாற்று அமைப்புகள்

சூரிய வெப்ப சுடுகாற்று அமைப்புகளைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளில் தேயிலை, பழங்கள், தானிய வகைகளை உலர வைப்பதில் தமிழ்நாடு முதன்மை வகிக்கிறது. சூரிய வெப்ப சுடுகாற்று

[2000 ஏப்ரல் 27

அமைப்புகள் சூரிய சக்தியை உறிந்து, அதனை வெப்ப சக்தியாக மாற்றி காற்றின் வெப்பத்தை 65-70 டிகிரி வரை அதிகரிக்கச் செய்கின்றது. இத்தகைய அமைப்புகள் காற்றின் வெப்பத்தை சூரிய சக்தி மூலம் அதிகரிப்பதால் 25 விழுக்காடு எரிபொருள் சிக்கனத்திற்கு வழி வகுக்கிறது. தமிழ்நாட்டில் இதுவரையில் 14 சூரிய வெப்ப சுடுகாற்று அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன.

## சூரிய ஒளி மின் சாதனங்கள்

சூரிய ஒளி மின் தொழில்நுட்பத்தில் சிலிகான் செல்கள் மூலமாக சூரிய ஒளியிலிருந்து நேரடியாக டி.சி. மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த டி.சி. மின்சாரத்தை நீர்ப்பாசனத்திற்காகத் தண்ணீர் இறைக்கப் பயன்படுத்தலாம். அல்லது சூரிய ஒளியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட டி.சி மின்சாரத்தை மின் கலங்களில் சேமித்து ஏ.சி. மின்சாரமாக மாற்றி விளக்குகளையும், மின் விசிறிகளையும் இயக்க உபயோகிக்கலாம். சூரிய ஒளி மின் தொழில்நுட்பம் மூலம் மின்சாரத்தை அதிக அளவில் தயாரித்து மின் வாரியக் கட்டமைப்பில் செலுத்தலாம். எனவே சூரிய ஒளி மின் சாதனங்களின் உபயோகம் எதிர்காலத்தில் சிறந்து விளங்கும். சூரிய ஒளி மின் நீரேற்றிகள், லாந்தர்கள், தெருவிளக்குகள், சிறிய அளவிலான மின்சக்தி ஜெனரேட்டர்கள் ஆகிய சாதனங்கள் வர்த்தக ரீதியில் தற்போது பல இடங்களில் விற்கப்படுகின்றன.

## சூரிய ஒளி மின் பம்பு

சூரிய ஒளி மின் பம்பு என்பது சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரித்து பம்பை இயக்கித் தண்ணீரை இறைக்கக்கூடிய ஒரு சாதனம். 900 வாட் திறன் உள்ள ஒரு பம்பு ஒரு நாளைக்கு 50,000 லிட்டர் தண்ணீரை மொத்தம் 30 அடி உயரத்திற்கு இறைக்கவல்லது. அது ஒன்றிலிருந்து இரண்டு ஏக்கர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சும்.

தமிழ்நாட்டில் மொத்தம் 4,80,000 விவசாயிகள் பம்புகளுக்கு மின்சாரம் பெற காத்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டிற்கு 40,000 பம்புகளுக்கு மட்டுமே மின் இணைப்பு வழங்குகிறது. ஆண்டுதோறும் மிக அதிக அளவில் புதிய பம்பு செட்டு இணைப்பிற்கான விண்ணப்பங்கள் மின் வாரியத்தால் பெறப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் சூரிய ஒளி பம்புகள் சிறு விவசாயிகளுக்கு நம்பகமான ஒரு மாற்றாக அமையும்.

சூரிய ஒளி பம்புகள் நிறுவுவதை ஊக்கப்படுத்துவதற்காக மைய அரசும் மாநில அரசும் கணிசமான அளவில் மானியங்களை வழங்குகின்றன.



2000 ஏப்ரல் 27]

900 வாட் திறனுள்ள பம்பின் விலை ரூ.2.24 லட்சம். மைய அரசின் நிறுவனமான இந்திய புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் ஒரு வாட்டுக்கு ரூ.125 வீதம் ரூ.1,12,500 மானியமாக வழங்குகிறது. மாநில அரசு ஒரு பம்புக்கு ரூ.59,000 மானியமாக வழங்குகிறது. எனவே பயனாளியின் பங்குத் தொகை ஒரு பம்பிற்கு ரூ.52,500 ஆகும்.

விவசாயத்திற்காக நமது மாநிலத்தில் இதுவரை 195 சூரிய ஒளி பம்புகள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் 72 பம்புகளும், கோயம்புத்தூரில் 24 பம்புகளும், கடலூர் மாவட்டத்தில் 6 பம்புகளும், சேலம் மாவட்டத்தில் 9 பம்புகளும், ஈரோடு மாவட்டத்தில் 10 பம்புகளும், மீதியுள்ளவை மற்ற 14 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆண்டில் 1,000 வாட் திறனுள்ள 107 பம்புகள் நிறுவிட உலக வங்கி கடன் இரடா (IREDA) மூலமாகப் பெறப்பெற்று மற்றும் தமிழ்நாடு அரசின் கடன் உதவியுடன் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனமும் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனமும் இணைந்து செயல்பட உள்ளது. சூரிய ஒளி மின் பம்பின் விலை சற்று அதிகமாக இருந்தாலும் அவை மிகவும் எளிய சாதனமாக உள்ளதால் இத்திட்டத்தை விரிவுபடுத்தி பெரிய அளவில் சூரிய ஒளி மின் பம்புகள் மாநிலமெங்கும் நிறுவுவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன.

## சூரிய ஒளி விளக்கு

சூரிய ஒளி விளக்கு 60 வாட் பல்பு கொடுக்கக்கூடிய வெளிச்சத்தைத் தரக் கூடிய ஒரு சாதனமாகும். இதைத் தேவைப்படும் இடங்களுக்கு எடுத்துச் சென்று பயன்படுத்தலாம். ஒரு நாளைக்கு 4 மணி நேரம் எரியும். எளிதாக எடுத்துச் செல்ல முடிவதால் இதனை வீட்டு உபயோகத்திற்கும் வெளி உபயோகத்திற்கும் எடுத்துச் செல்லலாம். இது மின் வசதி செய்யப்படாத இடங்களிலும் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படக்கூடிய இடங்களிலும் மிகவும். உபயோகமாக இருக்கும்.

ஒவ்வொரு ஆண்டும் மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் தனி நபர்களுக்கும், வணிகம் சாராத நிறுவனங்களுக்கும் மானியத் திட்டத்தின்கீழ் சூரிய ஒளி விளக்குகளை விற்க இலக்கு நிர்ணயம் செய்கிறது. ஒரு விளக்கின் விலை ரூ.4,000. மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் வழங்கும் மானியம் ரூ.1,500.

[2000 ஏப்ரல் 27

மாநிலம் முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இதுவரை 5,238 சூரிய ஒளி விளக்குகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1999-2000-ல் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் தமிழ்நாட்டிற்கு 1000 விளக்குகளுக்கான இலக்கு ஒதுக்கீடு செய்தது. 1999-2000-ல் மத்திய அரசு மான்யத்துடன் கூடுதலாக ரூ.500 மாநில அரசு மான்யம் வழங்கி, 1000 லாந்தர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

### சூரிய ஒளி தெரு விளக்குகள்

11 வாட் திறனுள்ள சிறிய குழல் விளக்கினை உடைய சூரிய ஒளி தெரு விளக்கு தனித்து இயங்கக் கூடியது. இது 12 மணி நேரம் எரியும். இது 35 வாட் திறன் கொண்ட இரண்டு சூரிய ஒளி மாட்யூல்கள், 11 வாட் திறன் உள்ள சிறிய குழல் விளக்கு மற்றும் மின்னணு சுற்றுக்களை உடையது. ஒரு விளக்கின் விலை சுமார் ரூ.30000. தமிழ்நாடு அரசு ஒரு விளக்கிற்கு ரூ.12000 மானியமாக வழங்குகிறது. 1997-98-ல் தமிழ்நாடு அரசு 20 சூரிய ஒளி தெரு விளக்குகளுக்கு ஒப்பளிப்பு வழங்கியது. அனைத்து 20 விளக்குகளும் நிறுவப்பட்டுவிட்டன.

1999-2000-ல் ஒவ்வொரு சூரிய ஒளி தெரு விளக்கிற்கும் ரூ.12000 வீதம் மான்யம் வழங்கி 40 சூரிய ஒளி தெரு விளக்குகள் நிறுவ ஒப்பளிப்பு வழங்கியது. அதில் 37 விளக்குகள் நிறுவப்பட்டுவிட்டன. மேலும் மத்திய அரசு திட்டத்தின்கீழ் 80 விளக்குகள் நிறுவப்பட உள்ளன. இதுவரை மொத்தம் 1100 சூரிய ஒளி விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு மின்வாரிய கட்டமைப்புடன் இணைந்த சூரிய ஒளி மின் நிலையங்கள்

மின் வாரியக் கட்டமைப்பில் இணைந்த சூரிய ஒளி மின் நிலையங்கள் தமிழ்நாட்டில் முன்னோடித் திட்டங்களாக நிறுவப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் கயத்தாறில் ரூ.44.75 இலட்சம் செலவில் 15 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின் நிலையம் ஒன்றை நிறுவி உள்ளது. இது 1995 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தமிழ்நாடு மின் வாரியக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் தென்னிந்தியாவிலேயே இவ்வகையில் முதலாவதாகும். 100 கிலோ வாட் திறன் கொண்ட மின் கட்டமைப்புடன் இணைந்த மற்றொரு மின் நிலையம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை அருகில் நல்லூர்பாளையத்தில் ஒரு தனியார் நிறுவனத்தால் நிறுவப்பட்டுள்ளது.

மைய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் இத்தகைய மின் நிலையங்களை நிறுவுவதற்கு மான்யம் அளிக்கிறது. ஒவ்வொரு 25



2000 ஏப்ரல் 27]

கிலோவாட் திறனுள்ள நிலையம் நிறுவ, திட்ட மதிப்பீட்டில் மூன்றில் இரண்டு பங்கை (அதிக பட்சம் ரூ.50 இலட்சம்) மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொன்றும் 25 கிலோவாட் திறன் கொண்ட இரண்டு மின் கட்டமைப்புடன் இணைந்த மின் நிலையங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில், எல்.ஜி. பாளையம் மற்றும் எஸ்.என்.பாளையம் ஆகிய இடங்களில் தனியார் நிறுவனம் மூலம் நிறுவியுள்ளார்கள். இத்திட்டத்தை இந்நிறுவனமே சொந்தமாக இயக்கி வருகிறது.

### சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம்

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் 4 கி.வாட் திறன் கொண்ட ஒரு சூரிய ஒளி மின் நிலையத்தினை ரூ.17.80 லட்சம் செலவில் தனது சென்னை அலுவலகத்தில் நிறுவியுள்ளது. இது பிப்ரவரி 1999 முதல் செயல்பட்டு வருகிறது. தினமும் 4 மணி நேரத்திற்கும் அதிகமாக அலுவலக விளக்குகள் மற்றும் மின் விசிறி இதன் மூலம் செயல்பட்டு வருவதுடன், இது மின்சார வாரிய மின் விநியோகத்திற்கு ஒரு மாற்றாகவும் செயல்படுகிறது.

## காற்று சக்தி

### காற்று சக்தி மின் உற்பத்தி

தமிழ்நாடு, காற்று சக்தி மூலம் மின் உற்பத்தி செய்வதில் இந்தியாவில் முதன்மையாக விளங்குகின்றது. மாநில அரசு அறிவித்துள்ள தெளிவான கொள்கைகள், வழங்கி உள்ள சலுகைகள் மற்றும் மாநிலத்தில் பரவலாக உள்ள காற்று சக்தி மிகுந்த பகுதிகள் ஆகியவற்றால் காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் காற்றாலைப் பண்ணைகள் தமிழ்நாட்டில் பெருகி வருகின்றன. இதன் மூலம் தமிழ்நாட்டில் காற்று மூலம் மின் உற்பத்தி செய்வது தொழில் நுட்ப மற்றும் பொருளாதார ரீதிகளில் சாத்தியமானது என்று நன்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. குறிப்பிடத்தக்க அளவில் தமிழ்நாடு அடைந்துள்ள சாதனைகளில் சில கீழே தரப்பட்டுள்ளன:

(அ) தமிழ்நாட்டில் 31-1-2000 நாள் வரை அரசு செயல் விளக்கத் திட்டங்கள் மூலம் 19.355 மெகா வாட் திறன் கொண்ட 120 மின் காற்றாலை இயந்திரங்களும், தனியார் துறையின் மூலம் 827.530 மெகா வாட் திறன் கொண்ட 2736 மின் காற்றாலை இயந்திரங்களும் நிறுவப்பட்டு இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

(ஆ) நாட்டிலேயே முதலாவது தனியார் துறை காற்றாலைப் பண்ணை தமிழ்நாட்டில் 1990 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

(இ) காற்றாலைப் பண்ணை மூலம் மின் உற்பத்தி செய்வதில் நாட்டின் மொத்த உற்பத்தியில் 81 சதவிகிதம் தமிழ்நாட்டின் பங்காகும்.

(ஈ) நாட்டிலேயே மிகப் பெரிய அளவில் 394.715 மெகா வாட் திறன் அளவில் தனியார் காற்றாலைப் பண்ணைகளின் ஒரு பெரிய தொகுப்பு தமிழ்நாட்டில் மட்டுமே நிறுவப்பட்டுள்ளது. இது அமெரிக்காவில் கலிபோர்னியாவில் உள்ள காற்றாலைப் பண்ணைகளின் தொகுப்புக்கு அடுத்ததாக உள்ளது.

(உ) தமிழ்நாட்டில் உள்ள காற்றாலைப் பண்ணைகள் 31-1-2000 வரை 5568.114 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்து தமிழ்நாடு மின் கட்டமைப்புக்கு அளித்துள்ளன. தமிழ்நாட்டில் காற்றாலைகள் மூலம் மின் உற்பத்தி செய்வதை ஊக்குவிப்பதற்கு மைய அரசும், மாநில அரசும் அளிக்கின்ற பல்வேறு சலுகைகள் கீழே தரப்பட்டுள்ளன:

**மைய அரசின் சலுகைகள்**

(அ) மின் உற்பத்தி காற்றாலை இயந்திரங்கள் வெளியில் பொது உரிம திட்டத்தின்கீழ் எளிய முறையில் இறக்குமதி செய்யலாம். நான்கு முக்கியமான உதிரி பாகங்களை இறக்குமதி வரியின்றி இறக்குமதி செய்யலாம்.

(ஆ) 100 சதவிகிதம் தேய்மான வருமான வரிச் சலுகை.

(இ) திட்டத் தொகையில் 75 சதவிகிதம் வரை கடன் வசதி.

**தமிழக அரசின் சலுகைகள்**

(அ) தனியார் நிறுவனத்தினர் தங்களது காற்றாலைகள் மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை தமிழ்நாடு மின் வாரிய கட்டமைப்பின் மூலம் செலுத்தி தமிழ்நாட்டிலுள்ள தங்களது தொழிற்சாலைகளின் தேவைகளுக்குப் பயன்படுத்தலாம். அந்த மின்சாரத்தில் இரண்டு விழுக்காடுகள் மட்டும் மின் வாரியத்திற்குக் கமிஷனாகச் செலுத்த வேண்டும்.





(ஆ) உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை மின் வாரியத்தின் வாயிலாக சேமித்துக் கொள்ளலாம். சேமிக்கும் மின்சாரத்தில் 2 விழுக்காடுகள் மட்டுமே மின் வாரியத்துக்கு கமிசனாக செலுத்த வேண்டும்.

(இ) தனியார் நிறுவனத்தினர் உற்பத்தி செய்யும் காற்றாலை மின்சாரத்தை மின் வாரியம் 1-12-95 முதல் ஒரு யூனிட்டுக்கு ரூ.2.55 வீதம் வாங்குகிறது. இந்த விலை ஆண்டிற்கு 5 விழுக்காடுகள் வீதம் 5 ஆண்டுகளுக்குக் கூடும்.

(ஈ) மின் உற்பத்தி காற்றாலை இயந்திரங்கள் வாங்க விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல்.

நம் நாட்டில் காற்றாலை தொழில் நுட்ப உள்ளமைப்பை வலுவுடையதாக்க இந்திய அரசு காற்று சக்தி தொழில் நுட்ப மையம் என்ற அமைப்பை சென்னையிலும் அதனைச் சார்ந்த மின் காற்றாலை ஆய்வு நிலையம் ஒன்றினை தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறிலும் அமைத்திட முடிவெடுத்துள்ளது. தமிழக அரசு சென்னை மற்றும் கயத்தாறில் இந்நிலையங்கள் அமைத்திட நிலங்களை அளித்திட முன்வந்துள்ளது. இம்மையம் இந்தியாவிலேயே காற்று சக்தி தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்கான ஒரே ஒரு தொழில் நுட்ப மையமாக இருக்கும். காற்று சக்தி தொடர்பான ஆராய்ச்சி, காற்று வள மதிப்பீடு, அமைப்பு ஒப்புதல், இயந்திர சான்றிதழ் வழங்கல், பயிற்சி அளிப்பு ஆகிய பணிகளை இம்மையம் மேற்கொள்ள உள்ளது. ஆகையால் இம்மையம் காற்று சக்தித் துறையைச் சார்ந்த தொழில் முனைவோருக்கும் முதலீட்டாருக்கும், காற்றாலை உரிமையாளர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் பெரிதும் உதவிகரமாய் அமையும்.

**நீர் இறைக்கும் காற்றாலைகள்**

காற்று மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டங்களுடன் தமிழக அரசு நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவவும் ஊக்கமளித்து வருகின்றது. 1999-2000 முடிய தமிழ்நாட்டில் மொத்தம் 869 நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. தமிழக அரசு 1999-2000 ஆம் ஆண்டில் நான்கு நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவ தலா ரூ.20,000 மானியம் அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

[2000 ஏப்ரல் 27

**உயிரியல் மற்றும் தாவர சக்தி**

கால்நடை மற்றும் விவசாயக் கழிவுப் பொருட்கள் மூலம் சாண எரிவாயு தயாரித்து அதனை எரிபொருளாக உபயோகிப்பது தொழில் நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் இயலும் என்று அறியப்பட்டுள்ளது. இது தவிர ஆய்வுகளின் அடிப்படையில் சர்க்கரை ஆலைகளில் உபயோகமற்றதெனக் கருதப்பட்ட கரும்பு வீழ்படிவு மூலமாகவும் சாண எரிவாயு தயாரிக்க இயலும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மைய மற்றும் மாநில அரசுகளின் மானிய உதவிகளோடு சர்க்கரை ஆலைகளில் கரும்பு வீழ்படிவுகளை உபயோகித்து பணியாளர்களின் உணவு விடுதி மற்றும் தங்கும் விடுதி ஆகியவற்றின் பயன்களுக்காக எரிவாயுக் கலன்களை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகிறது. 1999-2000 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசின் மானியமாக ரூ.75000 ஒவ்வொரு கலனுக்கும் வழங்கி 60 கன மீட்டர் அளவு கொண்ட 2 கலன்கள் தலா ஒரு கூட்டுறவு தனியார் சர்க்கரை ஆலைகளில் நிறுவப்படுகிறது.

முதல் கட்ட நடவடிக்கையாக வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள பத்து தாலுக்காக்களில் உபரியாகக் கிடைக்கும் தாவர மற்றும் விவசாயக் கழிவுகளைப் பற்றிய மதிப்பீடு ஆய்வு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் ரூ.10.00 இலட்சங்கள் செலவில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு மார்ச் 1997 இல் முடிவடைந்தது. பின்னர் 1998-99 இல் மேலும் ஏழு தாலுக்காக்களில் ஆய்வு செய்து திட்ட அறிக்கை ரூ.7.00 இலட்சங்கள் செலவில் முடிக்கப்பெற்றது. 1999-2000 ஆண்டில் 10 தாலுக்காக்களில் ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு 2 தாலுக்காக்களில் ஆய்வறிக்கை முடியப்பெற்றது. இதர எட்டு தாலுக்காக்களில் ஆய்வறிக்கை தயாரிக்கும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. இவ்வாய்வு அறிக்கைககளின் துணை கொண்டு உபரியாகக் கிடைக்கும் தாவரக் கழிவுப் பொருட்களிலிருந்து மின் உற்பத்தித் திட்டங்கள் நிறுவிட தனியார் முதலீட்டாளர்கள் அவர்களாகவே முன்வர இயலும். மேலும் இத்திட்டங்களுக்கு மைய அரசால் வழங்கப்படும் வட்டி மானியம் பெற இவர்கள் தகுதி பெறுவார்கள். இத்திட்டத்தின் கீழ் தொழில் முனைவோர்களுக்கு உதவிடும் நோக்கத்தில் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ள ஏதுவாக 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தால் தொழில் அபிவிருத்திக் கருத்தரங்குகள் இரண்டு முறை நடத்தப்பட்டன.



2000 ஏப்ரல் 27]

சேலம் தர்மபுரி மாவட்டங்களில் மிகுதியாகக் காணப்பெறும் ஜவ்வரிசி உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளிலிருந்து வெளிப்படும் கழிவுகளால் சுற்றுப்புற சூழ்நிலைக்கு ஏற்படும் தீங்குகளைக் கட்டுப்படுத்தவும் அக்கழிவு நீரிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யவும் செயல் விளக்க முறையில் ரூ.1.00 லட்சம் செலவில் மாநில அரசின் நிதியுதவியுடன் அமெரிக்காவிலுள்ள நியூஜெர்சி பல்கலைக்கழகத்தின் உதவியுடன் ஒரு திட்ட ஆய்வறிக்கை 1997-98 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டது. ஆய்வறிக்கைகளினை அடிப்படையாகக் கொண்டு தருமபுரி மாவட்டத்தில் ஒரு தனியார் தொழில் முனைவர் 0.500 மெகா வாட் மின் உற்பத்தி செய்யும் கலன் ஒன்றை நிறுவ முன் வந்ததின்பேரில் அவரது கருத்துரு மத்திய அரசின் ஏற்பளிப்புக்கு சிபாரிசு செய்து அனுப்பப்பட்டதின் பேரில் தற்சமயம் மத்திய அரசு அதனை ஏற்றுச் செயல் முறை விளக்கத் திட்டத்தின் கீழ் அனுமதி அளித்துள்ளது. அதற்கான திட்ட நடைமுறைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1998-99 ஆம் ஆண்டில் மாநகர மற்றும் நகரங்களில் வெளிப்படும் அன்றாடக் கழிவுகளை மதிப்பீடு ஆய்வு செய்யவும், அவைகளிலிருந்து மின் உற்பத்தி செய்யவும் முதல் கட்ட நடவடிக்கையாக சம்பந்தப்பட்ட துறைகளின் துணையுடனும் மைய அரசின் நிதி உதவியுடனும் (50 சதவிகிதம்) தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தால் சேலம் மாநகராட்சிக்கான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு அதனடிப்படையில் தேசிய அளவிலான ஒப்பந்தப் புள்ளிகள் தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1999-2000 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாநகராட்சிகளுக்கான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இவ்வறிக்கைகளின் துணை கொண்டு தனியார் நிறுவனங்கள் நகர கழிவுகளைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யும் திட்டங்களை நிறுவ முன் வரலாம்.

சர்க்கரை ஆலைகளில் இணை மின் உற்பத்தி செய்யும் திட்டங்களைப் பெரிய அளவில் நிறைவேற்ற மாநில மற்றும் மைய அரசுகள் ஊக்கம் அளித்து வருகின்றன. இதனால் கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்யலாம். இது சம்பந்தமாக சர்க்கரை ஆலைகளில் உள்ள கொதிகலன் மற்றும் இதர உபகரணங்களின் திறனை மேம்படுத்தி இணை மின் உற்பத்தி செய்து, தமிழ்நாடு மின் வாரியத்திற்குக் கூடுதல் மின்சாரம் தயாரித்து வழங்க இவ்வாலைகள் வலியுறுத்தப்பட்டுள்ளன. இத்திட்டங்களுக்கு மைய அரசு

[2000 ஏப்ரல் 27

கூட்டுறவு ஆலைகளுக்கு ஒரு மெகாவாட் மின் உற்பத்திக்கு ரூ. 2.00 கோடி வரையிலும், தனியார் ஆலைகளுக்கு வட்டி மானியமும் வழங்குகிறது.

1998 மார்ச் வரையில் தமிழ்நாட்டிலுள்ள 36 சர்க்கரை ஆலைகளில் ஒன்பது சர்க்கரை ஆலைகளில் 137.10 மெகாவாட் மொத்தத் திறன் கொண்ட இணை மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்பட்டு (2 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் 15.00 மெகாவாட் மற்றும் 7 தனியார் சர்க்கரை ஆலைகள் 122.10 மெகாவாட்) மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் இன்னும் கூடுதலாக சுமார் 20.24 மெகாவாட் திறன் நிறுவப்படலாம். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 500 மெகாவாட் மின் உற்பத்தி குறியீட்டை அடையமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1997-98 ஆம் ஆண்டில் 50,000 கிலோ திறன் கொண்ட 8 சமையல் எரிவாயு இயந்திரங்கள் தமிழ் நாட்டில் உள்ள 8 சிறைச்சாலை விடுதிகளில் ரூ.6.95 லட்சம் செலவில் சமையல் வேலைக்காக நிறுவப்பட்டது. இதன் பயனாக விடுதிகளின் விறகு எரிபொருளின் செலவினம் 50 சதவிகித அளவில் குறைந்துள்ளது.

மேற்கண்ட திட்டத்தின் செயல்பாடுகளைப் பொறுத்து வரும் நிதியாண்டில் மேலும் பல தனியார் மற்றும் பண்ணைகளில் நிறுவ ஏற்பாடு செய்யப்படும். மேலும் தமிழ்நாட்டில் எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்துக்கு 50,000 கிலோ காலன் கொள்ளளவுள்ள தாவர எரிவாயு ஒன்று ஊட்டியில் உள்ள ஆதி திராவிட மாணவர் விடுதியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பயன்பாட்டைப் பொறுத்து மற்ற விடுதிகளிலும் நிறுவ ஏற்பாடு செய்யப்படும்.

**ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணி**

தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் பல்வேறு குறிக்கோள்களில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை ஊக்குவிப்பதும் ஒன்றாகும். அதன் அடிப்படையில் 1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடனும், தொழில் நுட்ப நிலையங்களுடனும் இணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மரபு சாரா எரிசக்தித் திட்டங்களின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளைக் கீழ்க்கண்ட பிரிவுகளில் மேற்கொண்டுள்ளது. தமிழக அரசு இப்பணிக்காக 1998-99 ஆம் ஆண்டிற்காக ரூ.2.00 லட்சம் ஒதுக்கியுள்ளது.



2000 ஏப்ரல் 27]

கோழி எச்சத்தைப் பயன்படுத்தி சோதித்தல் முறையில் மின் உற்பத்தி செய்யச் செயல் விளக்க முறையில் கலன் நிறுவி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம்**

தமிழ்நாட்டில் 21 தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் மூலம் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் கிராம மக்களின் சமையல், விளக்கு வெளிச்சம், குடிநீர் ஆகிய அடிப்படைத் தேவைகளுக்குப் பயன்படும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள எரிசக்தி உபகரணங்களை அவர்களின் தேவைக்கேற்ப மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றது. இத்திட்டத்தில் பணியாளர்களுக்கான சம்பள செலவினத்தை இந்திய அரசும், திட்ட செலவினத்தை தமிழக அரசும் ஏற்கின்றது. கீழ்க்கண்ட எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் 25 முதல் 100 விழுக்காடுகள் வரை மானியமாக இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன.

1. மேம்படுத்தப்பட்ட மண் அடுப்புகள் (100 விழுக்காடு மானியம்)
2. உராய்வு குறைவான புட்வால்வுகள் (75 விழுக்காடு மானியம்)
3. நீர் இறைக்கும் காற்றாலைகள் குடிநீர் தேவைக்காகப் பொது கிணறுகளில் அமைத்தல் (80 விழுக்காடு மானியம்)
4. பிறவகையான எரிசக்தி சேமிப்பு உபகரணங்கள் (25 விழுக்காடு மானியம்)

**விளம்பரம்**

மரபு சாரா எரிசக்தி வளங்களைப் பற்றியும் அது தொடர்பான பல்வேறு உபகரணங்களின் பயன்களை மக்களிடையே பிரபலப்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் பல கருத்தரங்குகளை நடத்தி வருகிறது. பிற நிறுவனங்கள் நடத்தும் கண்காட்சிகளிலும் பங்கேற்று வருகிறது. தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்திடம் இருக்கும் ஒரு விளம்பர ஊர்தியில் மரபு சாரா எரிசக்தி உபகரணங்களின் மாதிரிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஊர்தி பொருட்காட்சிகள், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சமத்துவபுரம் மற்றும் நமக்கு நாமே திட்டம் போன்ற அரசு திட்டங்களின் தொடக்க விழாக்கள் மற்றும் கருத்தரங்குகள் நடைபெறும் சமயங்களில் எடுத்துச் செல்லப்பட்டு உபகரணங்களின் பயன்கள் மக்களுக்கு விளக்கப்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் மரபு சாரா எரிசக்தி வளங்கள் பற்றிய விளம்பர நடவடிக்கைகளுக்காக ரூ.5.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 2000-2001 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டப் பணிகள் விவரப் பட்டியல்

| தொடர் எண் | திட்டப் பணிகளின் விபரம் | இறுதி நிலைச் செலவு: தொடர் செலவு | தொடராச் செலவு | மொத்தம் | 2000-2001ல் செலவு: வருவாய்க் கணக்கில் செலவு | மூலதனக் கணக்கில் செலவு | கடன் கணக்கில் செலவு | மொத்தம் | நிலைநிதிக் குழுவின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | | | | |
| | **எரிசக்தித் துறை** | | | | | | | | |
| | தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் | | | | | | | | |
| | ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் | | | | | | | | |
| 1 | மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்தின் காற்று ஆதார மதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காற்று அளவிடும் 6 நிலையங்களை ஏற்படுத்துதல் | - | 1.20 | 1.20 | 1.20 | - | - | 1.20 | ஏற்பளிக்கப்பட்டது |
| 2 | 300 வீட்டு உபயோக மற்றும் 6 தொழிற்சாலை உபயோக சூரிய வெப்ப சுடுநீர் சக்தி அமைப்புகள் நிறுவ வகை செய்தல். | - | 12.10 | 12.10 | 12.10 | - | - | 12.10 | ஏற்பளிக்கப்பட்டது |
| 3 | மருத்துவமனைகள்/விடுதிகள், ஆலைகள் ஆகியவற்றிற்கு சூரிய வெப்பத்தால் நீரைக் கொதிக்க வைக்கும் சாதனம் வழங்குதல் | - | 15.00 | 15.00 | 15.00 | - | - | 15.00 | ஏற்பளிக்கப்பட்டது. |
| 4 | விளம்பரத்தின் மூலம் பொது மக்களிடம் விழிப்பு உணர்வு ஏற்படுத்துதல். | - | 5.00 | 5.00 | 5.00 | - | - | 5.00 | ஏற்பளிக்கப்பட்டது. |
| 5. | சூரிய வெப்ப இயந்திரங்களை மதிப்பிடல் | - | 1.20 | 1.20 | 1.20 | - | - | 1.20 | ஏற்பளிக்கப்பட்டது. |
| | மொத்தம்-திட்டப்பணிகள் | - | 34.50 | 34.50 | 34.50 | - | - | 34.50 | |
| | பெருமொத்தம்-எரிசக்தித் துறை | - | 34.50 | 34.50 | 34.50 | - | - | 34.50 | |

அரசு மைய அச்சகம், சென்னை-79.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.